பிரேமா™
பிரசுரம்


ஸ்ரீ திரியம்பகேஸ்வரர்


ஸ்ரீ கேதாரேஸ்வரர்


ஸ்ரீ விஸ்வேஸ்வரர்

பன்னிரு ஜோதிலிங்கத் தல புராணம்


ஸ்ரீ ஓங்காரேஸ்வரர்


ஸ்ரீ சோமேஸ்வரர்


ஸ்ரீ மகாகாளேஸ்வரர்



பன்னிரு ஜோதிலிங்கத் தல புராணம்

தயாரிப்பு:

ரவி ராமநாதன்

எழுதியவர்:

டாக்டர். சிவப்பிரியா

(தமிழ்த்துறைத் தலைவர்
தயால்சிங் மாலைக் கல்லூரி, தில்லி.)

பிரேமா ™


பிரசுரம்

59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 24800325, 24833180, 24811755

E-mail : aruram@md2.vsnl.net.in
Website : www.premapirasuram.com

பிரேமா பிரசுரம் - 373

முதற்பதிப்பு : நவம்பர் 2005
மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 2010



விலை ரூ. 40/-

கணிப்பொறி வடிவமைப்பு : ஏ.ஆர். எண்டர்பிரைசஸ், சென்னை - 24.
அச்சிட்டோர் : காரிஸ் ஆப்செட் பிரஸ், சென்னை - 29

உ

சர்வம் சிவமயம் சிவசிவ சர்வம் சிவமயம்

ஜோதிலிங்கத் துதி



பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படர் ஒளிப் பரப்பே
நீர்உறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின் அருள் வெள்ளச்
சீர்உறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந்துறை உறை சிவனே
யார் உறவு எனக்கு இங்கு யார் அயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்கும் என் சோதி!

(திருவாசகம்)

எல்லா உலகங்களுமாகி, வானவெளி முழுதும் படர்ந்த ஒளியுமாகி, நீரிலும் இருக்கும் நெருப்புமாகி, மனதாலும் அறிய முடியாத தூயவனுமாகி, உன் கருணைப் பெருக்கினால் தெளிந்த உள்ளத்தில் எழுந்த இன்பத்தேனுமாகிய என் ஈசனே இவ்வுலகில், உறவினர், அந்நியர் என்ற வேற்றுமையை அகற்றி என்னை ஆனந்தமயமாக்கிய சோதி.

பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்கள்

<table>
<tr>
<td>12.
இராமேஸ்வரம்
தமிழ்நாடு</td>
<td>1.
திரியம்பகேஸ்
வரம்
மகாராஷ்டிரம்</td>
<td>2.
காசி
உத்திரப்
பிரதேசம்</td>
<td>3.
சோமநாதம்
குஜராத்</td>
</tr>
<tr>
<td>11.
டாகனி
மகாராஷ்டிரம்</td>
<td rowspan="2" colspan="2"></td>
<td>4.
உஜ்ஜயினி
மத்தியப்
பிரதேசம்</td>
</tr>
<tr>
<td>10.
பரலி
மகாராஷ்டிரம்</td>
<td>5.
ஓங்காரேஸ்
வரம்
சத்தீஸ்கர்</td>
</tr>
<tr>
<td>9.
ஔண்டா
மகாராஷ்டிரம்</td>
<td>8.
ஸ்ரீ சைலம்
ஆந்திரப்
பிரதேசம்</td>
<td>7.
கிராணேஸ்வரம்
(குஷ்மேஸ்வரம்)
மகாராஷ்டிரம்</td>
<td>6.
கேதாரம்
உத்ராஞ்சல்</td>
</tr>
</table>

முன்னுரை...

பாரதம் என்றால் ஞானம் என்று பொருள். கோடிக்கணக்கான ஆண்டுகளாக மெய்ஞானபூமியாக விளங்குவது பாரதம். இந்தப் புண்ணிய பூமியின் ஆத்மாவாக விளங்குவது பரம்பொருளை வழிபடுகின்ற சிவபக்தியே. மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் பகை கொண்டு போர் புரிந்த காலத்திலும் மக்களை ஒன்றாக்கி வாழ வைத்தது பக்தியுணர்வே. வடகோடியிலிருந்து தென்கோடி வரை சமஸ்கிருதத்திலும் தமிழிலும் தோன்றிய வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் போன்ற தெய்வ நூல்களும் கடவுளின் திருவருளைப் பொழியும் திருத்தலங்களும் முனிவர்களும் யோகிகளும் சித்தர்களும் அருளாளர்களும் கோடிக்கணக்கான ஆண்டுகளாக மக்களை ஒன்றுபடுத்தி நாட்டைக் காத்து வந்துள்ளனர்.

பாரதத் திருநாட்டின் ஒற்றுமை, புனிதம், பெருமை, தேசப்பற்று, கல்வி, கலை, பண்பாடு, சமூகம், தானதர்மம், வரலாறு, மெய்ஞானம், விஞ்ஞானம் என எல்லாவற்றுக்கும் ஆணிவேராகவும் அஸ்திவாரமாகவும் தூண்களாகவும், திகழ்பவை ஆலயங்களே. இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள எண்ணற்ற அருள் ஆலயங்கள், எல்லாம் இந்தக் கலியுகத்திலே சென்ற இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளாக எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக் கொண்டு பாரதத் தாயை தலை நிமிர்ந்து நிற்கச் செய்துள்ளன. அவற்றுள் பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்கள் என்பவை வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே இந்து மகாசமுத்திரம் வரை பாரதம் முழுவதும் பரவியுள்ளன. ஆதலால் இந்தப் பன்னிரண்டு தலங்களையும் சென்று தரிசனம் செய்து வழிபட்டு வந்தால் பாரதத் திருநாடு முழுவதும் உள்ள எல்லாத் திருக்கோயில்களுக்கும் சென்று வந்ததற்கு ஒப்பாகும்.

இன்னது என்று சுட்டிக் கூறுவதற்கு அப்பாற்பட்ட லிங்கப் பரம்பொருள் எழுந்தருளி அருள்பாலிக்கும் இந்தப் பன்னிரண்டு ஜோதிலிங்கத் திருத்தலங்களையும்

நாற்பது வயதிற்குள் சென்று தரிசித்து வழிபடும் பெரும் பாக்கியம், எனக்குக் கிடைத்தது எல்லோருக்கும் இறைவனான எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருளே. யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்று திருமூலர் காட்டிய உண்மையான பொதுநல மரபுப்படி நான் அடைந்த பேரின்பத்தை, பெறுதற்கு அரிய பெரும் பாக்கியத்தை எல்லோரும் பெற்று இன்புற வேண்டும் என்பதற்கேற்ப இந்த நூலை எழுத முற்பட்டேன். மெய்யுணர்வைத் தந்து கடவுள் பக்தியையும் தேசப்பற்றையும் ஒற்றுமையையும் வளர்க்கின்ற பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களுக்கும் அனைவரும் சென்று வழிபட்டு மனிதப் பிறவிபெற்ற பெரும்பயனை அடையவேண்டும். ஜோதிலிங்கத்தை மனதில் நினைந்து லிங்கோற்பவரின் திருநாமத்தை நாவால் சொல்லி ஈசன் திருவுருவை மனதில் பதித்து வருபவர்களுக்கு வாழ்வில் எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பூமகனும் திசைமுகன்தானும் பொற்பு அமர்
வாமனன் அறிகிலா வண்ணம் ஓங்கு எரியாம் என
உயர்ந்தவன் அணி கருக்குடி
நா மனனில் வர நினைதல் நன்மையே (சம்பந்தர்)

4.11.2005 *டாக்டர். சிவப்பிரியா*

தில்லி



பொருளடக்கம்

பகுதி 1

பகுதி 2

பகுதி 3

பகுதி 1

1. எல்லா நாட்டவர்களுக்கும் இறைவன்

பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களில் இறுதியாகத் தோன்றியது இராமன் சிவபூஜை செய்து வழிபட்ட இராமேஸ்வரமே. பன்னிரண்டு திருத்தலங்களும் தோன்றிய காலத்தில் இந்தப் பார் முழுவதும் பரம்பொருளை வழிபடுகின்ற சைவத் திருநெறி மட்டுமே இருந்தது. துவாபர யுகத்தின் இறுதியான கண்ணன் காலம் வரையிலும் விஷ்ணுவும் மகாவிஷ்ணுவின் அவதாரங்களும் சிவ பக்தர்களாக விளங்கியதை இராமாயணம், மகாபாரதம், மற்றும் புராணங்கள் எல்லாம் எடுத்துக் கூறுகின்றன. கண்ணபிரான் உபமன்னியு முனிவரிடம் சிவதீட்சை பெற்று நியமப்படி நாள்தோறும் நெற்றியில் நமசிவாய மகாமந்திரம் ஓதித் திருநீறு அணிந்து சிவபூஜை செய்து வாழ்ந்தான் என்று மகாபாரதம் விளக்குகின்றது. இராமாயண மகாபாரத மாந்தர்களின் பெயர்கள் எல்லாம் சிவநாமங்களாகவே உள்ளன. பலப்பல தலங்களில் சிவபூஜை செய்து நல்வாழ்வு பெற்ற இராமனும் கண்ணனும் மட்டுமன்று ஜனகர், கௌதமர், வசிஷ்டர், விசுவாமித்திரர், குகன், வாலி, சுக்கிரீவன், ஜடாயு, சம்பாதி, ஹனுமான், இராவணன், வண்டோதரி, பாண்டவர்கள், கர்ணன், கௌரவர்கள் என எல்லோரும் சிவபூஜை செய்யும் சைவர்களே. இராமனுக்கு முற்பட்ட பரசுராமர், ஜமதக்கினி ஆகியவர்கள் எல்லோரும் சிறந்த சிவனடியார்கள். அசுரர்கள், முனிவர்கள், நாகம், மிருகம், பறவை, பாம்பு என எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சிவ பக்தர்களாக விளங்கியுள்ளனர். வாமனனும் மகாபலியை ஏமாற்றிய பாவமும் பழியும் நீங்குவதற்காக சிவபூஜை செய்து வழிபட்ட சைவனே. நரசிம்மர் சிவபூஜை செய்த திருத்தலமே சிங்கப்பூர் எனப்படும் சிங்கபுரி. நரசிம்மரை அழித்து விஷ்ணுவை வெளிப்படுத்தி வைகுண்ட வாழ்வை அருளிச் செய்வதற்காக மெய்ப்பொருள் கொண்ட வடிவமே

சரபமூர்த்தி. ஆமை மற்றும் பன்றியாக அவதாரம் எடுத்த திருமாலுக்கு மறக்கருணை காட்டி ஆமை ஓட்டினையும் பன்றிப்பல்லையும் பரப்பிரும்மம் அணிந்து கொண்டதைப் புராணங்களும் கடவுளை நேரில் கண்டு மெய்ஞானம் பெற்றுப் பாடிய நால்வரின் தெய்வீகத் திருமுறைகளும் தெரிவிக்கின்றன.

ஆறு சமயமும் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவன் அலன் (திருமந்திரம்)

என மதங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்ட செம்பொருளை வழிபடும் செம்மையான நெறியாதலால் சைவம் எனப்பட்ட இயற்கைத் திருநெறி மட்டுமே துவாபர யுகம் வரையிலும் உலகத்தில் இருந்த ஒரே நெறியாகத் திகழ்ந்துள்ளது. சிவாலயங்களில்தான் சிவபக்தர்களான மகாவிஷ்ணுவிற்கும் மகாலட்சுமிக்கும் பிள்ளையார், முருகன், பராசக்தி, சூர்யன், சந்திரன் போன்று சந்நிதிகள் இருந்தன. பழங்காலத்தில் இந்த தெய்வங்களுக்கு எல்லாம் தனியே கோயில்கள் இல்லை. இன்றும் பெரும்பாலான சிவாலயங்களில் விஷ்ணுவிற்கும் லட்சுமிக்கும் சந்நிதிகள் இருப்பதைக் காணலாம். மகாவிஷ்ணு மற்றும் விஷ்ணுவின் அவதாரப் பெயர்களை இன்றும் சைவக் குடும்பங்களிலே பரவலாகக் காணலாம். இவ்வாறு சிவபக்தராகவே வணங்கப்பட்டு வந்த விஷ்ணு தெய்வ வழிபாடு கலியுகத்தில் தனியே பிரிந்து சென்று வைணவம் என்ற சமயமொன்று தோன்றியது. வடநாட்டில் பிறந்து வளர்ந்த இராமன், கண்ணன் போன்ற சிவபக்தர்களைக் கடவுள் என்று கூறும் வைணவம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. இவ்வாறு பிறவி உட்பட மூன்று மலமும் உள்ளவர்களைக் கடவுள் என்று கூறுவதைப் பசுஞானம் என்று ஆகமங்கள் தெரிவிக்கின்றன. அதற்குப் பிறகு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு புத்தன் மகாவீரன் ஆகியோர்களை தெய்வம் என்று கூறும் பௌத்தமும் சமணமும் வட இந்தியாவில் தோன்றின. சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு நானக் என்பவரை வழிபடும் சீக்கியம் உண்டானது. சமண மதத்தில் ஸ்வேதாம்பரர் என்ற

சாதியினர் பிராம்மணர்களைப் போன்று சைவ உணவு உண்ணும் கருணைவாதிகள். ஆனால் திகம்பரம் என்பது புத்தம் சீக்கியம் போன்று மாமிசம் உண்ணும் புலைச்சமயமாக விளங்கியது. இந்த திகம்பரமே தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்த சமண மதமாகும். புலால் உண்ணும் பௌத்த சமணர்களின் புலையர் பண்பினைத் தமிழ் நூல்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

நெடுங் குண்டர் சாக்கியர்கள் புலையானார் (சம்பந்தர்)

புலையறமாகி நின்ற புத்தரொடு சமணம் (திருமாலை)

என்று சிவவாக்காக வந்த சம்பந்தர் தேவாரமும், தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமாலை என்ற பாடலும் பௌத்த சமணர்களின் மாமிசவாதத்தைக் காட்டுகின்றன.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த ஏசு கிருஸ்துவை வழிபடும் கிருஸ்துவம் தோன்றியது. ஏசுவிற்கு எதிராக அவரது சகோதரனான ஜீடோ என்பவனால் உண்டாக்கப்பட்டது யூதமதம். பின்னர் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த முகம்மது நபி முகம்மதியத்தை உண்டாக்கினார். இந்த மூன்று வெளிநாட்டு மதங்களும் உலக மக்கள் அனைவருக்கும் பால் வழங்கி உணவு தரும் லோகமாதாவாகிய பசுமாடுகளையும் கொன்று உண்ணும் புலைச்சமயங்களாகும். இவ்வாறு கலியுகத்தில் ஒன்றன் பின் ஒன்றாக உலகத்தின் பல பகுதிகளிலும் மனிதனை மனிதனுக்கு அடிமையாக்கும் தனி மனித வழிபாட்டு மதங்கள் தோன்றுவதற்கு முன்பு கோடிக்கணக்கான ஆண்டுகளாக தோற்றம் அவதாரம் பிறப்பு போன்ற மாசு மலங்கள் எல்லாவற்றையும் கடந்துள்ள தூய்மையான செம்பொருளை வழிபடும் சைவ அருள்நெறி மட்டுமே உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் இருந்து வந்தது. உலக மக்கள் அனைவரும் சைவர்களாகவே விளங்கினர். சிவ பக்தர்களாகவே சிறப்படைந்துள்ளனர். இந்த உண்மையை வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், கடவுளின் திருக்காட்சி பெற்று ஜீவன் முக்தி அடைந்த

நால்வர் அருளிய தேவாரம் திருவாசகம் முதலான பன்னிரு திருமுறை, நாலாயிர திவ்விய பிரபந்தம் மற்றும் தலபுராணங்கள், பலப்பல காவியங்கள், பிற இலக்கியங்கள் யாவும் புலப்படுத்துகின்றன. இது மட்டுமின்றி உலகத்தின் பலபகுதிகளிலும் கண்டு எடுக்கப்பட்ட புதைபொருட் சான்றுகளும் உலக நாடுகளின் பெயர்களும் எல்லா நாடுகளிலும் சைவம் மட்டுமே இருந்து வந்ததை வலியுறுத்துகின்றன.

இலக்கியச் சான்றுகள்

இன்றுவரையிலும் எந்த ஒரு மதத்தையும் தோற்றுவிக்காத தென்னிந்தியர்களின் சிவவழிபாடுதான் உலகம் முழுவதிலும் சிறந்த திருநெறியாக இருந்து வருகிறது.

தென்னாடு உடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்று இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மெய்ஞான வாசகர் அருமையாகப் பாடியுள்ளார். விஸ்வேஸ்வரன், சர்வேஸ்வரன் என்ற திருப்பெயர்களும் ஈசன் உலகத்துக்கெல்லாம் இறைவனாக எல்லோருக்கும் கடவுளாக இருந்ததை வலியுறுத்துகின்றன. பாரத நாடு ஜம்புத் தீவின் ஒரு பகுதி என்று வடமொழி சுலோகம் உரைக்கின்றது. ஜம்புத் தீவினை நாவலம் தீவு என்று தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அதாவது இன்றைய ஆசியாவும் ஐரோப்பாவும் சேர்ந்த பகுதியே (யூரேஷியா) அன்றைய ஜம்புத் தீவாக விளங்கியது. அரபு நாடான குவைத் என்ற ஊரில் பலப்பல சிவாலயங்கள் பெருகியிருந்தன. குவைத் நாட்டில் இருந்த திருக்கோயில்களில் எழுந்தருளியிருந்த பரப்பிரும்மத்தை

குவைப்பதி மலிந்த கோவே போற்றி

என்று ஓங்காரம் உணர்ந்த மாணிக்க வாசகர் போற்றுகின்றார். உலகமக்கள் அனைவரும் தோற்றமும்

முடிவும் ஊரும் பேரும் இல்லாத பரமேஸ்வரனை வழிபடுகின்ற தூய நெறியில் நின்று மகாதேவன் ஒருவனையே வழிபட்டு வந்தனர் என்பதை

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

என்று பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் ஆகியோர்களின் நண்பரான திருமூலமுனிவர் தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்று வடமொழி சுலோகமும் உரைக்கின்றது. உலகிலுள்ள மனித இனம் மட்டுமன்று பறவை மிருகம் தேவர் அசுரர் பாம்பு என எல்லாவிதமான ஜீவ ராசிகளும் காசிபர் என்ற தந்தைக்கு வெவ்வேறு தாயின் மூலம் பிறந்தவர்கள் என்று விளக்குகின்ற புராணங்களும் உலகம் முழுவதும் ஒரே குலமே என்பதை வலி யுறுத்துகின்றன. அகஸ்தியர் ஆலயா என்பது இன்று ஆஸ்திரேலியா என்று வழங்கப்படுகின்றது. மக்கீஸ்வரம், மத்தீஸ்வரம் என்பவை முறையே மக்கா மதினா என்று வழங்கப்படுகின்றன. அயனீஸ்வரம் என்னும் திருத்தலம் அயர்லாந்தாக மாறியுள்ளது. உலகப் புகழ் பெற்று இருந்த இந்த ஈஸ்வரத் திருக்கோயில்களை யெல்லாம்

குக்குடேச்சுரம் மக்கீச்சுரம் கூறுங்கால்

ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம் அயனீச்சுரம்

மத்தீச்சுரம் சித்தீச்சுரம் தண்காணல்

ஈடு திரை இராமேச்சுரம் என்று என்று ஏத்தி

இறைவன் உறை சுரம் பலவும் இயம்புவோமே

என்று ஈசன் அருளால் செந்தமிழிசை பாடும் ஞானம் பெற்ற திருநாவுக்கரசர் போற்றியுள்ளார். மக்கி என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு ஈ என்று பொருள். தமிழ்நாட்டில் ஈங்கோய்மலை திருக்கோயில் போன்று சௌதி அரேபியாவில் மக்கிஸ்வரம் புகழ்பெற்ற சிவாலயமாக சிறப்படைந்து இருந்தது. இன்றும் கூட மக்காவிற்குச் செல்லும் முகம்மதியர்கள் அங்கு உள்ள ஏழடி உயரமான லிங்கப் பரம்பொருளையே சைத்தான்

என்று சொல்லி கல்லெறிந்து விட்டு வருகின்றனர். முகம்மது நபி காலத்தில் மக்கீஸ்வரம் கோயில் இடிக்கப்பட்டு மசூதியாக்கப்பட்டது.

தமிழகத்திலுள்ள ஊரான திருமால்பேறு போன்று அமெரிக்காவிலுள்ள பேறு என்ற இடம் திருமால் சிவபூஜை செய்த தலமாகும். பராசக்தி மயிலாக வந்து சிவபூஜை செய்த மயிலாபுரி போன்று நரசிம்மர் சிவபூஜை செய்த இடம் சிங்கபுரி. இத்தலங்கள் ஆங்கில வழக்கில் மயிலாப்பூர் சிங்கப்பூர் என்று சிதைந்துள்ளன.

கங்கை யமுனை சரசுவதி சிந்து நர்மதை கோதாவரி காவிரி என்ற ஏழு புண்ணிய நதிகளின் கரைகளில் பலப்பல சிவாலயங்கள் உள்ளன. ஏழு நதிகளும் சிவாலயங்களை வலம் வருவதை

காவிரி நல்யமுனை் கங்கை சரசுவதி
பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோவியொடு
குமரி வுரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தைக்
கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே

என்று தமிழர்த் திருநெறியை செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர் போற்றுகின்றார். இலங்கைக்கு அப்பால் கன்னி, குமரி, காவிரி போன்ற ஒன்பது நதிகளும் ஏழு மலைகளும் கொண்ட மகேந்திரமலை என்ற திருத்தலத்தில் வேதங்களும் ஆகமங்களும் தோன்றி வளர்ந்து சிவமணம் கமழ்ந்து இருந்தன. ஈசன் அருளிச் செய்த புண்ணிய வேத ஆகமங்கள் தோன்றிய தென்னகம் உலகிலேயே மிகவும் புனிதமான திசை என்று வடநாட்டிலிருந்து வந்து தமிழ்த்தொண்டு புரிந்த திருமூலர் போற்றியுள்ளார்.

வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்தம் மிக்கு உள்ள வெற்பு ஏழுள்
பேறான வேத ஆகமமே பிறத்தலால்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே (திருமந்திரம்)

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
(திருவாசகம்)

என்று தெய்வத் திருமுறைகள் தென்னாட்டு வேதங்களையும் ஆகமங்களையும் போற்றுகின்றன. திருக்கேதீஸ்வரம், திருகோண மலை ஆகிய இலங்கைத் திருக்கோயில்களை தேவாரப் பதிகங்கள் துதி செய்கின்றன. ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்ற ஆரிய மொழி வேதங்களை சோநகரை (ரஷ்யா) வடகரையில் கொண்டிருந்த சரஸ்வதி நதிக்கரையிலும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற தமிழ்மொழி வேதங்களை இலங்கைக்கு அப்பால் இருந்த மகேந்திரமலை என்ற மலைத்தலத்திலும் சர்வேஸ்வரன் அருளிச் செய்ததைத் தமிழ் நூல்களும் வடமொழி நூல்களும் உரைக்கின்றன.

முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கு (கல்லாடம்)
சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் (திருமந்திரம்)
பண்டு நால்வர்க்கு அறம் உரைத்தருளி
பண்டு இருக்கு நீர் ஒரு நால்வர்க்கு உரை செய்ததே
(சம்பந்தர்)
அருமறையோடு அங்கம் ஆய்ந்துகொண்டு
பாடினார் நால்வேதம் (அப்பர்)

என்று தெய்வத் திருஅருளாளர்கள் போற்றியுள்ளனர்.

ஆமூர், வாய்மூர் போன்ற தமிழ்நாட்டுத் திருத்தலங்களைப் போன்றே தைமூர் என்றதலம் ரஷ்யாவில் இருந்ததை இன்றும் வழங்குகின்ற இப்பெயர் எடுத்துக்காட்டுகின்றது. உக்கிர பாண்டியனுக்கும் உத்திரப்பிரதேசத்திலுள்ள கல்யாணபுரத்து இளவரசிக்கும் நடைபெற்ற திருமணத்தில் சீனா, சோவியத் ஆகிய நாடுகளிலிருந்தும் அரசர்கள் வந்ததைத் திருவிளையாடற்புராணங்கள் தெரிவிக்கின்றன. ஜாவா, சிங்கப்பூர், மலேசியா, கம்போடியா (காம்போதி) மற்றும்

பிற கிழக்குத் தீவுகளில் சிவ வழிபாடு சிறப்பாக விளங்கியது. ஜாவக நாட்டு மக்கள் தமிழ்நாட்டு அடியார் பெருமக்களைப் போற்றி வணங்கியதை மதுரைக் காஞ்சி என்ற சங்க காலத்துத் தனிப்பாடல் தெரிவிக்கின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில் புரியும் பரமசிவனைப் பிரம்மன் விஷ்ணு ருத்திரன் ஆகிய மூன்று தெய்வங்களும் ஒன்றாக வந்து பூஜை செய்து தத்தமக்கு உரிய உலகங்களையும் வாழ்க்கையையும் பதவியையும் பெற்றுக் கொண்ட திருத்தலமே திரியம்பகேஸ்வரம். இவ்வாறு மூன்று மூர்த்திகளும் ஒன்றாக வந்து மும்மூர்த்தி நாயகனைப் பூஜை செய்த திருத்தலம் அமெரிக்காவில் உள்ள திரிநாடு (த்ரிநாட்). இவ்வாறு இலக்கியச் சான்றுகளைப் போன்றே உலகம் முழுவதும் நமக்கு கிடைத்துள்ள புதை பொருட்சான்றுகளும் நாடுகளின் பெயர்களும் உலக நாடுகள் அனைத்தும் சிவபரம்பொருளை வழிபட்டு வந்ததை உரைக்கின்றன.

புதைபொருட் சான்றுகள்

வடஅமெரிக்காவில் கொலரடா என்ற ஆற்றங்கரையின் ஆருகேயுள்ள குன்றின் மீது பத்தாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த சிவாலயம் கண்டறியப்பட்டுள்ளது. இத்தாலியில் ஐயாயிரம் ஆண்டுகள் தொன்மையான சிவலிங்கம் கண்டு எடுக்கப்பட்டு அங்கு உள்ள பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அலெக்சாண்டிரியாவில் நூற்று இருபத்தொன்பது அடி உயரம் உள்ள லிங்கப் பரம்பொருள் உள்ளது. கிரேக்க நாட்டில் லிங்கப் பரம்பொருள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. ஸ்காட்லாந்து அயர்லாந்து (அயனீச்சுரம்) ஆகிய இடங்களிலும் சிவாலயங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கிழக்கு பாரதத்தில் உள்ள நாகளேச்சுரம் நாகாலாந்து என்று பெயர் மாற்றப்பட்டவாறே அயனீச்சுரம் என்பது அயர்லாண்டு என்று ஆக்கப்பட்டது. பாபிலோனியாவிலுள்ள களிமண் பட்டயங்களில் சிவன்

என்ற திருநாமம் காணப்படுகின்றது. சிவன் என்ற இந்தத் தமிழ்ப்பெயர் ஒரு மாதத்தின் பெயராகவும் இருந்தது. சிவநாமங்களில் எல்சடை என்ற பெயர் இங்கு புகழ்பெற்று விளங்கியது. எல் என்ற தமிழ்ச்சொல்லுக்கு இருள் என்று பொருள். சடை என்பது ஜடா என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ்வடிவம், எல்சடை என்றால் கரியசடையுடையவன் என்று பொருள். எகிப்து நகரத்தில் லிங்கம் நந்தி பாம்பு புலி சிங்கம் ஆகியவற்றுடன் கூடிய சிவாலயம் புகழ்பெற்று இருந்ததால் அந்த நகரம் சிவன் என்றே அழைக்கப்பட்டது. சிறிய ஆசியாவிலும் சிவன் என்ற பெயரில் ஒரு நகரம் உள்ளது. அழிந்து போன இந்த நகரத்தின் எஞ்சியுள்ள பகுதிகள் லிங்கப் பரம்பொருளும் நந்தியும் இங்கு வழிபடப்பட்டதைக் காட்டுகின்றன. சிரியா நாட்டின் ஒரு நாணயத்தில் சிவவடிவம் உள்ளது. ஜப்பானில் சந்திகளிலும் சதுக்கங்களிலும் சிவாலயங்களை நிர்மாணித்து வழிபட்டு வந்துள்ளனர். திபெத், சீனா, பூட்டான், மெக்ஸிக்கோ, ஆகிய நாடுகளிலும் சிவ வழிபாடு சிறந்து விளங்கியுள்ளது. போர்னியா நாட்டுக் குகைகளிலிருந்து ஈசன் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சுமத்திராவில் பெரிய அளவிலான லிங்கப்பரம் பொருளும் அர்தநாரீஸ்வர வடிவமும் கிடைத்துள்ளன. ஓசையொலிக்கும் இயக்கத்திற்கும் மூல காரணமான நடராஜர் திருவுருவம் மலேசியாவில் கிடைத்துள்ளது. சேரம் என்ற ஊரில் ஆடல் நாயகனும் தங்கத்தாலான லிங்கப்பரம்பொருளும் கிடைத்துள்ளன. தங்க லிங்கங்களை அரசர்கள் வழிபடுவர் என்று திருமந்திர ஆகமம் கூறுகின்றது. ஹரப்பா மொகஞ்சோதரா பகுதிகளில் சிறியனவும் பெரியனவுமாக எண்ணற்ற லிங்கப்பரம்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிறிய லிங்கங்கள் வீட்டில் வைத்துப் பூசை செய்யப்படும் கிரியை வழிபாட்டிற்கு உரியவை. பெரிய லிங்கங்கள் சரியை எனப்படும் கோயில் வழிபாட்டிற்கு உரியவையாக விளங்கின. இவை மட்டுமன்றி வலதுகால் தூக்கி நின்றாடும் பொன்னம்பலேசர் திருவுருவமும் இடது கால் தூக்கியாடும் மதுரை வெள்ளியம்பலவாணர் திருவுருவங்களும் நந்தியும் திருவிழாக்களைக் காட்டும்

முத்திரைகளும் பல்வேறு காணிக்கைப் பொருட்களும் வேள்விச் சாலைகளும் புரோகிதர் மண்டபங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முகம் அஞ்சு ஓதரன் அதாவது ஐந்து முகங்களால் ஓதுபவன் என்பதே மொகஞ்சோதரா என்று ஆயிற்று. ஐந்து தொழில் புரியும் ஐந்தெழுத்து நாயகன் ஐந்து முகங்களால் ஆகமங்கள் ஓதி அருளினார்.

மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்று அவை தன்னை மகேந்திரத்து இருந்து
உற்ற ஐம்முகங்களால் பணித்து அருளியும்

என்று பழம்பெரும் திருவாசகம் ஆகமங்களை ஓதிய மொகஞ்சோதரனைப் போற்றுகின்றது. ஹர என்ற வடமொழிச் சொல்லும் அப்பா என்ற தமிழ்ச்சொல்லும் சேர்ந்து ஹரப்பா என்றாயிற்று. வேத ஆகமங்களை ஓதியருளியதால் விஸ்வேஸ்வரனுக்கு ஓதீஸ்வரர் என்று பெயர். இம்முறையில் உலகம் எங்கும் கிடைத்துள்ள புதைபொருட் சான்றுகள் மட்டுமன்று உலக நாடுகளின் பெயர்களும்கூட தென்னாட்டுச் சிவபெருமான் எல்லா நாட்டவர்களுக்கும் இறைவனாக விளங்கியதை எடுத்துரைக்கின்றன.

மொழிச்சான்றுகள்

உலக நாடுகளின் பெயர்கள் எல்லாம் ஆரியம், தமிழ் என்ற இரண்டு மொழிகளின் சிதைந்துபட்ட சொற்களாகவே உள்ளன. ஒரு காலத்தில் உலகம் முழுவதும் சமஸ்கிருதம் தமிழ் என்ற இரண்டு மொழிகள் மட்டுமே பேசப்பட்டு வந்தன என்பதையும் இவை எடுத்துக் காட்டுகின்றன. ஹரப்பா, மொகஞ்சோதரா என்ற இரண்டு இடங்களின் பெயர்களும் சமஸ்கிருதம் தமிழ் என்ற இரண்டு மொழிச் சொற்களின் சேர்க்கையாகும். கனடா என்பது மேலை நாட்டு ஊர். இது தென்னிந்திய இசையின் ஒரு ராகப்பெயர். அமெரிக்காவில் உள்ள உருகுவே என்ற ஊரின் பெயர் ஒரு தமிழ்ச்சொல். ஈரான் என்பது இரட்டைப் பசு என்று பொருள் தரும் செந்தமிழ்ச்

சொல். இவ்வாறே ஈராக் என்பதற்கு (ஈராக்கை) இரப்டையுடல் என்று பொருள். பஞ்சாக்கை (பஞ்சாப்) என்ற சிவத்தலத்தை அப்பர் தேவாரம் போற்றியுள்ளது - பஞ்சாக்கை போன்றே ஈராக்கை என்பதும் ஒரு சிவத்தலமாக விளங்கியது. சூரிநாம், சகாரா, ருமேனியா, யமன், மங்கோலியா ஆகியவையெல்லாம் ஆரிய மொழிச் சொற்களாகும். அமெரிக்காவில் உள்ள பேறு என்பதும் தமிழ்ச் சொல். திருவல்லிக்கேணி என்பது ற்றிப்ளிகேன் ஆனது போன்றே பிள்ளைப்பண் என்பதும், பிலிப்பைன்ஸ் ஆயிற்று. ஓமன் என்பது ஓங்காரேஸ்வரனைக் குறிக்கும் தமிழ்ச்சொல். ஆப்கானிஸ்தானத்திலுள்ள ஜலால்கோட் பாக்கிஸ்தானத்தில் உள்ள ஜெயில் கோட் ஆகிய பெயர்களில் கோட்டை என்ற தமிழ்ச்சொல் உள்ளது. பாரதப் பெயர்கள் எல்லாம் மூல உச்சரிப்பே தெரியாத வகையில் சிதைத்து வழங்கப்படுவது இன்றும் கண்கூடு. தூத்துக்குடி, கோழிக்கோடு போன்றவையெல்லாம் டுட்டகுரின், காலிகட் என்றெல்லாம் மாற்றப்பட்டு வழங்கப்படுவதை யாவரும் அறிவர். இவ்வாறே உலகத்தின் பல பகுதிகளிலும் நிலவி வந்த தமிழ் மற்றும் சமஸ்கிருதப் பெயர்கள் எல்லாம் மூல வடிவமே தெரியாத வகையில் சிதைத்து வழங்கப்படுகின்றன. ஆப்கானஸ்தானத்தின் பழைய பெயர் காந்தாரம். இன்றும் இதிலுள்ள ஸ்தானம் என்பது சமஸ்கிருதச் சொல். காந்தார நாட்டு இளவரசியே காந்தாரி. காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம் ஆகியவையெல்லாம் தேவாரத் திருமுறைப் பண்களின் - ராகங்களின் பெயர்களாகும். பிரம்மா என்பது பேச்சுவழக்கில் பர்மா என்றாயிற்று. இது தற்காலத்தில் மியாமார் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பன்னிரு திருமுறைகள் உலகின் பல பகுதிகளிலும் உள்ள சிவத்தலங்களைப் போற்றுகின்றன. கயிலைமலை, சந்திர தீபம் (திபெத்) நேபாளப் பசுபதீஸ்வரம், மேரு, மந்தாரம், இந்திர நீலம், ஹேம கூடம், வாரனாசி, குருஷேத்திரம் (ஹரியானா), விராடபுரம், காம்பீலி, ருத்திரகோடி, குவைப்பதி (குவைத்), மக்கீஸ்வரம் (மக்கா), மத்தீஸ்வரம் (மதினா) அயனீஸ்வரம் (அயர்லாந்து),

அகத்தீஸ்வரம் (ஆஸ்திரேலியா), சோமீஸ்வரம் (குஜராத்), நாகளேஸ்வரம் (நாகாலாந்து), உஞ்சேனை மாகாளம் (உஜ்ஜயினி), சித்தீஸ்வரம் (ஒரிஸ்ஸா), விந்திய மலை (ஓங்காரேஸ்வரம்), கொண்டீஸ்வரம் (கோவா), திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம், ஆந்திரம்), நந்தீஸ்வரம் (கர்நாடகம்), திருவஞ்சைக்களம் (கேரளம்), நாகேஸ்வரம் (மகாராட்டிரம்), கந்தமாதனம் (திருச்செந்தூருக்கும் இலங்கைக்கும் இடையேயிருந்த முழுகிப்போனதலம்), மகேந்திரமலை (இலங்கைக்கு அப்பால் இருந்த முழுகிப் போனதலம்), திருக்கேதீஸ்வரம் (இலங்கை) போன்று உலகத்தின் பல பகுதிகளிலும் உள்ள சிவத்தலங்கள் தேவாரத் திருவாசகம் முதல் பெரிய புராணம் வரையிலான பன்னிரண்டு திருமுறைகளில் போற்றப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு அப்பால் உலக நாடுகள் எங்கும் இருந்த அடியார்களையே,

அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்

என்று பரமேஸ்வரனைத் தோழனாகப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றினார். தெய்வங்கள் முதல் தாவரம் வரை எல்லா வழிபாடுகளையும் தன்னுள் கொண்டுள்ள சிவவழிபாடு மட்டுமே உலகத்தில் இருந்தபோது அதற்கு என்று பெயர் எதுவும் இல்லை. கலியுகத்தில் ஒன்றன்பின் ஒன்றாக மனித வழிபாட்டு மதங்கள் தோன்றியபோது இன்னது என்று சுட்டிக் குறிக்க முடியாத பரம்பொருளை வழிபடுகின்ற இயற்கையான செம்மையான நெறி சைவம் என்று அழைக்கப்பட்டது. சிவபெருமான் செந்நெறியப்பராக உள்ளார்.

வடநாட்டிலும் வெளிநாட்டிலும் உண்டான தனி மனித வழிபாட்டு மதங்கள் எல்லாம் மன்னர்களை மாற்றி மக்கள் மேல் தங்கள் மதத்தை வலுக்கட்டாயமாகத் திணிப்பதையே வழக்காகக் கொண்டிருந்தன. மக்கள் கத்தி முனையில் மதம் மாற்றப்பட்டனர். கோயில்கள் இடிக்கப்பட்டன. மறைக்கப்பட்டன. புத்த விகாரங்களாகவும் சமணப் பள்ளிகளாகவும் மசூதிகளாகவும் சர்ச்சுகளாகவும் மாற்றப்பட்டன. அடியார்கள் கொல்லப்பட்டனர். நாடுகடத்தப்பட்டனர்.

ஊர்களின் பெயர்களும் தலங்களின் பெயர்களும் மாற்றப்பட்டன. வேத ஆகமங்கள் அழிக்கப்பட்டன. இதனால் உலகின் பல பகுதிகளிலும் கடவுள் வழிபாடு அழிந்து போயிற்று.

எங்கெல்லாம் எப்போதெல்லாம் கடவுள் வழிபாடும் பக்தியும் அழிந்து தனிமனிதனின் புகழ் பரப்பும் வெறி மிகுந்து தீய பண்புகளும் கொடுமைகளும் தலைவிரித்தாடுகின்றனவோ அங்கெல்லாம் அப்போதெல்லாம் நாடு துண்டாக்கப்பட்டு மக்கள் துன்பத்திற்கு உள்ளாகின்றனர். ஆங்கிலப் பழக்க வழக்கங்களில் மூழ்கித் திளைத்து உலகத்தின் மிகப் புனிதமான திருத்தலமான திருக்கயிலாயமலைகூட பக்தியில்லாதவர்களினால் மாசுபடுத்தபடுகிறது.

எவ்வளவோ படையெடுப்புகளையும் துன்பங்களையும் துயரங்களையும் கண்ட பின்பும் பாரதத் திருநாடு இயற்கை நெறிபால் நின்று மெய்ப்பொருளை வழிபடுகின்ற நாடாகவும் புண்ணிய பூமியாகவும் புகழ் பெற்று தொடர்ந்து தெய்வீகத்தில் சிறந்து விளங்குகின்றது.

2. புராணங்களின் பெருமை

பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்களைப் பற்றிய செய்திகள் வேதம் ஆகமம், புராணங்கள், தெய்வீகத் திருமுறைகள், இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்கள் மற்றும் பிற நூல்களிலிருந்து அறிய வருகின்றன. உலகில் முதல்முதலாகத் தோன்றிய நூல்கள் வேதங்களும் ஆகமங்களுமாகும். ஆகமங்கள் வேதங்களை விடப் பழைமையானவை. வேதத்திற்கு முற்பட்டது ஆகமம் என்று கந்தபுராணம் கூறுகின்றது. வேதம் ஆகமம் என்ற இரண்டு வகையான புண்ணிய நூல்களும் ஈசனால் அருளிச் செய்யப்பட்ட புனித நூல்களாகும்.

வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்

என்று திருமூல முனிவர் தெரிவித்துள்ளார். உருவம் இல்லாத பரமசிவம் தட்சிணாமூர்த்தியாகி ஆலமர நிழலில் வேதங்களை அருளிச் செய்தார். ஐந்து முகங்கள் கொண்டு ஆகமங்களை ஓதியருளினார். நான் எனது என்ற உணர்வாகிய ஆணவமலம், பாவம், புண்ணியம் என்ற இருவினைகளுக்கான இன்ப துன்பங்கள், பிறவியாகிய மாயை ஆகிய மாசு மலங்களுக்கு அப்பாற்பட்ட பரமேஸ்வரன் அருளிச் செய்த வேதம் ஆகமம் ஆகிய முதல் நூல்களை வினையின் நீங்கிய முனைவன் கண்டது முதல் நூலாகும் என்று அகத்தியரின் மாணவரான தொல்காப்பியர் தெரிவித்துள்ளார்.

முனைவனே முதல் அந்தம் இல்லாமல்
கரை காட்டி ஆட்கொண்டாய்
முனைவனே முறையோ நான் ஆனவாறு
முனைவன் பாத நன்மலர்

என்று ஓங்காரம் உணர்ந்த மாணிக்கவாசகர் முனைவனைப் போற்றுகின்றார். வேதம், ஆகமம், புராணம் என்ற மூன்று வகையான புனித நூல்களில் வேதங்களும் புராணங்களும் தமிழ்மொழி ஆரிய மொழி என்ற இரண்டு மொழிகளிலும் தோன்றியிருந்தன. ஆனால் ஆகமங்கள் தென்திசையில் மட்டும்தான் தோன்றியிருந்தன. தமிழில் இருந்த ஆகமங்கள் பின்னர் சமஸ்கிருதத்திலும் ஆக்கம் பெற்றன. இவ்வாறு தமிழில் ஆகமம் வேதம் என்ற இரண்டு விதமான புனித நூல்களும் பிறந்திருந்த காரணத்தாலேயே தென்திசையானது உலகிலேயே மிகவும் புனிதமான திசை என்று வடக்கேயிருந்து வந்து தமிழ்த்தொண்டு புரிந்த ஆரியரான திருமூல முனிவர் போற்றியுள்ளார். கன்னியாறு, குமரியாறு, காவிரி நதி போன்ற ஒன்பது நதிகளும் ஏழு மலைகளும் இருந்த மகேந்திரமலை என்ற புனிதத் தலம் கடலில் முழுகிப் போய்விட்டது. இந்த மலைத்தலத்தில்தான் தமிழ் வேதங்களும் ஆகமங்களும் தோன்றி வளர்ந்து இருந்தன. இந்த உண்மைகளை

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்தம் மிக்கு உள்ள வெற்பு ஏழுள்
பேறான வேத ஆகமமே பிறத்தலால்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே (திருமந்திரம்)

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன் (அப்பர்)

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
மகேந்திரத்து இருந்து உற்ற ஐம்முகங்களால்
பணித்து அருளியும் (திருவாசகம்)

என்று திருமந்திரம். தேவாரம், திருவாசகம் ஆகிய தெய்வீகத் திருமுறைகள் போற்றுகின்றன. தமிழ் வேத நூல்களை

முத்தமிழ் நான்மறை முளைத்து அருள் வாக்கு (கல்லாடம்)

சதாசிவம் தத்துவம் முத்தமிழ்வேதம் (திருமந்திரம்)

முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன் (சம்பந்தர்)

என்று திருமுறை வரிகள் தெரியப்படுத்துகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் ஈசன் அருளிய பழைமையான தமிழ் வேத நூல்கள் என்பதை

இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும்
முன்பு அறியச் சொன்ன முதுமொழி நூல் (திருவள்ளுவ மாலை)

அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான்
முக்கன் ஆதி (சம்பந்தர்)

நான்மறை அம்மறைதான் அறம் பொருள் இன்பம் வீடு என்று
உலகில் மேம்பட்டன (திருமங்கையாழ்வார்)

என்ற தொடர்கள் தெளிவாக்குகின்றன. ரிக் முதலிய ஆரிய வேதங்களும் அறம் முதலிய தமிழ்வேதங்களும் ஓதியே வேள்விகளும் பிற வழிபாடுகளும் செய்யப்பட்டு வந்தன.

இருக்கு வாய்மொழியால் தனை ஏத்துவார்
செந்தமிழர் தெய்வ மறை நாவர் (சம்பந்தர்)
அறம் கரைந்து வயங்கிய நாவில்

பிறங்கிய உரைசால் வேள்வி முடித்த அந்தணர் (பரிபாடல்) என்று தெய்வீக தேவாரமும் சங்க காலப் பரிபாடலும் புலப்படுத்துகின்றன.

எண்ணற்ற ஆகமங்கள் இருந்து அவையெல்லாம் அழிந்து போக இருபத்தெட்டு ஆகமங்களே எஞ்சி நின்றன. ஆகமங்கள் கர்ம காண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டம் என்ற மூன்று காண்டங்களைக் கொண்டவை. இவற்றில் கடவுள் - ஆத்மா - உலகம் பற்றிய செய்திகளையெல்லாம் விளக்கமாக உரைக்கும் பகுதியே ஞான காண்டம். இந்த ஞான காண்டமே சைவசித்தாந்தம் எனப்படுகின்றது. ஆகமங்களின் ஞானகாண்டமாகிய சைவசித்தாந்தத்தைத் தனியே விளக்கிக் கூறும் நூல்களும் தோன்றியிருந்தன.

“தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்” என்று சைவசித்தாந்த சாத்திர நூல்களைத் திருமூலர் கூறியுள்ளார். இந்தப் பழைமையான சாத்திர நூல்களைப் போன்றே பிற்காலத்தில் பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்கள் தோன்றின.

பரமேஸ்வரன் நான்கு வேதங்களை நான்கு முனிவர்களுக்கு அருளிச் செய்தார். ஆகமங்களைப் பராசக்திக்கு அருளிச் செய்தார்.

ஆகமம் சொல்லும் தன் பாங்கிக்கே என்பது தமிழர்த் திருநெறியை செம்மையாகக் கொண்ட அப்பர் தேவாரம். தமிழில் தோன்றிய ஆகமங்கள் பின்னர் சமஸ்கிருதத்திலும் ஆக்கப்பெற்றன. இதை

தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலுமாமே
ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்கும்
கருணை செய்தானே

என்று பதஞ்சலி முனிவரின் நண்பரான திருமூல முனிவர் தெரிவித்துள்ளார்.

ஈசனால் அருளிச் செய்யப்பட்ட மூன்றாவது புனித நூலான புராணங்கள் ஆரியம் தமிழ் என்ற இரண்டு மொழியிலும் உண்டாகியிருந்தன. புராணங்கள் பதினெட்டாகத் தொகுக்கப்பட்டன. ஆதிகாலத்தில் இருந்த பதினெட்டு புராணங்களுமே சிவபுராணங்கள். தமிழில் இருந்த பதினெட்டுச் சிவபுராணங்களையும் சர்வேஸ்வரன் நந்திதேவருக்கு அருளிச் செய்தார். நந்திதேவர் சூதமுனிவருக்கு உரைத்தார். சூதமுனிவர்களின் பரம்பரையினர் தொடர்ந்து புராணங்களைப் பாதுகாத்து மக்களுக்கு வழிவழியாக ஓதி வந்தனர். இதனால் புராணங்களை ஓதும் பௌராணிகர்களுக்கு சூதர்கள் என்றே பெயர் அமைந்தது. புராணங்களுக்கு ஒலிமாலை என்று பெயர் உண்டானது. வேதம், ஆகமம் ஆகியவற்றோடு பதினெட்டுச் சிவபுராணங்களைப் பரமேஸ்வரன் உலகிற்கு அருளிச் செய்ததை

பங்கம் இல் பதினெட்டொடு நான்குக்கு உணர்வுமாய்
அங்கம் ஆறும் சொன்னானும் ஐயாறுடைய ஐயனே
வேதம் நான்கும் பதினெட்டொடு ஆறும் விரித்தார்
பூதமுதல்வன் முதலே முதலாகப் பொலிந்த
சூதன் ஒலிமாலை (சம்பந்தர்)

என்று மூன்று வயதிலேயே மூன்று காலமும் உணர்ந்த அதிசயப் பிறவியான திருஞானசம்பந்தப் பெருமான் போற்றுகின்றார்.

சூதர் வாழ்த்த

என்று சங்க காலத்து மதுரைக் காஞ்சித் தொடரும் புராணம் ஓதும் பௌராணிகர்களைப் போற்றுகின்றது.

புராணம் என்றால் பழைமையானது தொன்மையானது என்று பொருள். புராணமானது தொன்மை என்று பழங்காலத்தில் வழங்கப்பட்டது. புராண நூல்கள் அதாவது தொன்மையான காவிய நூல்கள் இருந்ததைத் தொல்காப்பியம் தெரிவிக்கின்றது. தொல்காப்பியர் என்ற பெயரே தொன்மை இலக்கியங்களான புராண இலக்கியங்கள் இருந்ததைப் புலப்படுத்துகின்றது. புராண இலக்கியங்கள் மட்டுமன்று தலங்களின் சிறப்புகளைப் போற்றும் தேசபக்தி இலக்கியங்களான தல புராண இலக்கியங்களும் தோன்றி வளர்ந்து இருந்தன. உலக அதிசயமான திருஞானசம்பந்தப் பெருமான் திருஅவதாரம் செய்த சீர்காழித் திருத்தலம் பன்னிரண்டு திருப்பெயர்களால் சிறப்புடன் விளங்கியது. பன்னிரண்டு பெயர்களுக்கான வரலாறுகளையும் காரணத்தையும் ஆளுடைப் பிள்ளையார் பலப்பல பதிகங்களில் அருமையாகப் பாடி விளக்கியுள்ளார். பன்னிரண்டு பெயர்களாலும் சம்பந்தர் தேவாரம் இத்திருத்தலத்தைப் போற்றிப் பாடுகின்றது. சோம சுந்தரர் புரிந்த திருவிளையாடல்கள் அறுபத்து நான்காக மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தொகுக்கப்பட்டுப் போற்றப்பட்டதைக் கல்லாடம் என்ற சங்க இலக்கியம் தெரிவிக்கின்றது.

கூடல் பதி வரும் ஆடல் பரியோன்
எட்டெட்டு இயற்றிய கட்டமர் சடையோன்

என்று சங்கப் புலவர் கல்லாடர் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் போற்றியுள்ளார். மதுரைத் தொகை ஆக்கினானும் என்று திருஞான சம்பந்தரும் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் போற்றியுள்ளார். வால்மீகி முனிவர் இராமாயணம் எழுதியபோது இராவணன், இலங்கை, மற்றும் தென்னகம் பற்றிய செய்திகளுக்குத் தமிழில் இருந்த புராணங்களே, தெய்வக் காவியங்களே மூல நூல்களாக விளங்கின. இரவு போன்ற கரிய நிறம் உடையதால் இராவணன், வண்டுகள் தங்கும் கூந்தலை உடையதால் வண்டோதரி என்று இராவணன், வண்டோதரி போன்ற தூய

தமிழ்ப்பெயர்களின் காரணத்தை சம்பந்தர் தேவாரத் திருமுறை தெரியப்படுத்துகின்றது. வண்டோதரியின் சிவபக்தியை நந்திதேவரின் அவதாரமான மாணிக்க வாசகர் போற்றியுள்ளார். இராவணன் வண்டோதரி என்ற தமிழ்ப்பெயர்களே ராவணன், மண்டோதரி என்று வடமொழியில் மாற்றம் அடைந்தன. தமிழில் இருந்த பதினெட்டுச் சிவபுராணங்களில் பல புராணங்கள் சமஸ்கிருதத்தில் ஆக்கம் பெற்றன. உதாரணமாகக் கந்த புராணம் ஆரிய மொழியில் தட்சிண ஸ்கந்த புராணம் என்று மொழி பெயர்ப்பு அடைந்தது. மதுரைத் திருவிளையாடல்கள் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. மாணிக்கவாசகப் பெருமான் வரலாறு, திருநாவுக்கரசர் வரலாறு போன்றவையும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டன. தமிழ்ப் புராணங்கள் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டவாறே வடமொழி நூல்களும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டன. மகாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. பெருந்தேவனார் என்ற சங்கப் புலவர் மகாபாரதத்தைத் தமிழில் பாடினார். இத்தகைய பல மொழி பெயர்ப்புக் காவியங்களைத் தொல்காப்பியம் கூறுகின்றது.

தெற்கு நோக்கி வந்த அகத்திய முனிவர் மதுரை சொக்கநாதர் திருக்கோயிலில் நாற்பத்தெட்டு பக்திப் புலவர்களைக் கூட்டித் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார். மதுரை சுந்தரேஸ்வரரைத் தலைமைப் புலவராகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தில் தமிழ்வேதம், ஆகமம், புராணம், சாத்திரம், தத்துவம், வான நூல், ஜோதிடம், இயல் இசை நடன நாடக நூல்கள், கட்டிடம், நவமணி இயல் மற்றும் பலப்பல நூல்களும் இயற்றப்பட்டு இருந்தன. தமிழ்ச்சங்கத்தில் பாடற்பொருளாக தெய்வீகம், இருந்தது அல்லாமல் ஆராய்ச்சிப் பொருளாகவும் தெய்வீகம்தான் இருந்தது. மெய்ப்பொருளைத் தவிர வேறு எப்பொருளையும் பாடாத காரணத்தால் மதுரைத் தமிழ்ச் சங்கமானது பொய்மையில்லாத் தமிழ்ச் சங்கம் என்று போற்றப்பட்டது. ஈசனைத் தலைமைப் புலவனாகக் கொண்ட தமிழ்ச் சங்கத்தின் தெய்வீகத்தை

கண்ணுதற் கடவுள் அண்ணல் அம்குறுமுனி
முனைவேல் முருகன் என இவர் முதலிய
திருந்து மொழிப் புலவர் அருந்தமிழ் ஆய்ந்த சங்கம்
சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும்
என் சிந்தையுள்ளும் உறைவான்.
உயர் மதில் கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்

(மாணிக்க வாசகர்) (பரிபாடல் உரைச் சிறப்புப் பாயிரம்)

என்ற வரிகள் எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு அகத்திய முனிவரால் தோற்றுவிக்கப்பட்டுக் காலங்காலமாக இருந்து வந்த தமிழ்ச்சங்கமானது களப்பிரர்கள் என்ற சமண மன்னர்கள் தமிழகத்தின் மேல் படையெடுத்து வந்து மூவேந்தர்களை வென்று ஆண்ட போது சமண சங்கமாக மாற்றப்பட்டது. தமிழ்ச்சங்கத்தில் இருந்த நூல்கள் யாவும் தீயிட்டு அழிக்கப்பட்டன. தமிழ்மொழியை வெறுத்துப் பழித்த சமணர்களின் ஆட்சிக்காலத்தில் புலவர்கள் பழிக்கப்பட்டனர். தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. சமணர்களது ஆட்சியில் தமிழ்மொழி மிகவும் நொந்து கிடந்ததை

அரசு நிலை திரீஇ அளப்பரும் காலம்
கோதில் சொல்மகன் நோதகக் கிடத்தலில்

என்று பரிபாடல் உரைப் பாயிரம் வேதனையுடன் உரைக்கின்றது. சமணர்கள் தமிழ் நூல்களையெல்லாம் அழித்ததையும் புலவர்களையெல்லாம் வெறுத்துப் பழித்ததையும்

செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்
புலவோர்களைப் பழிக்கும் பொலா அங்கதர்
உலகினில் உரை செயும் மொழி பல கொள்ளிய
களவினர்

என்று தமிழ்காத்த சம்பந்தர் தேவாரம் தெரிவிக்கின்றது.

சமணர்கள் தமிழ்மொழி தெரியாமல் தமிழ் விரோதிகளாக வாழ்ந்தது அல்லாமல் சமண மதத்திற்கு மதம் மாற்றப்பட்டிருந்த தமிழர்கள்கூட கொச்சைத் தமிழ் தவிர செந்தமிழ் தெரியாமலேயே வாழ்ந்தனர் என்பதை

வாய் இருந்தமிழே படித்து ஆள் உறா ஆயிரம் சமண்

செந்தமிழ் அறியேன் கவியேன் மாட்டேன்

கல்வியேல் இல்லை என்பால்

என்ற திருநாவுக்கரசரின் அனுபவ வாக்குகள் உரைக்கின்றன. இவ்வாறு மூவேந்தர் காலத்திற்குப் பிறகு சமணர்கள் தமிழ்ச்சங்கத்தை சமண சங்கமாக மாற்றி சங்கத்தில் இருந்த வேதம், ஆகமம், புராணம், காவியம், இயல் இசை நாடகம் போன்ற எல்லாவிதமான நூல்களையும் அழித்துவிட்டபடியால் இத்தகைய நூல்கள் என்றாலே வடமொழிதான் என்ற கருதும் நிலை தோன்றியது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற தமிழ் வேத நூல்களின் பெயர்கள் எல்லாம் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் உறுதிப்பொருட்களான தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்பவற்றின் மொழி பெயர்ப்பு என்று தவறாகக் கருதும் நிலை உண்டானது. தமிழில் இருந்த புராணங்கள் எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டதால் ஆரிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு இருந்த நூல்களைப் பார்த்து மீண்டும் புராணங்கள் சில தமிழில் இயற்றப்பட்டன. இவ்வாறு இயற்றப்பட்டதே கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம், வடமொழியில் இருந்த தட்சிண ஸ்காந்த புராணத்தைப் பார்த்து கச்சியப்பர் கந்தபுராணத்தை மீண்டும் தமிழில் எழுதினார். இவ்வாறு மதுரைத் திருவிளையாடல்களைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி மீண்டும் தமிழில் வடித்தார். பிற்காலத்தில் பரஞ்சோதி முனிவரும் மீண்டும் திருவிளையாடற் புராணம் எழுதினார். திருவிளையாடற்புராணம் தமிழர்க் காவியம், தமிழ்க்காவியம், தமிழ்நாட்டுக் காவியம். பரஞ்சோதி முனிவர் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருந்த திருவிளையாடல் புராணத்தை அப்படியே மீண்டும்

தமிழ்ப்படுத்தியதாலேயே இந்தப் புராணத்திலுள்ள பாண்டியர்களின் பெயர்கள் எல்லாம் பெரும்பாலும் கற்பனைப் பெயர்களாகவும் சமஸ்கிருதப் பெயர்களாகவும் உள்ளன. இவ்வாறே பழங்காலத்தில் இருந்த தல புராண நூல்கள் அழிக்கப்பட்ட பிறகு பிற்காலத்தில் தலபுராணங்கள் புதியதாக மீண்டும் இயற்றப்பட்டன.

வேத ஆகமங்கள் உரைக்கும் கடவுள் - உயிர் - உலகம் பற்றிய உண்மைகளின் விளக்கமாகவே புராணங்கள் உள்ளன. எனவே சைவ சித்தாந்த நூல்களில் சிறந்த பயிற்சி இருந்தால் மட்டுமே புராணச் செய்திகளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். புராணங்களைப் புரிந்து கொள்வதற்கு ஆழ்ந்த தெளிவான சிந்தனையும் கூரிய அறிவும் இருக்க வேண்டும். புராணங்களில் கூறப்படாத செய்திகளே இல்லை என்னும்படி புராண இலக்கியங்கள் அறிவுக்களஞ்சியங்களாக உள்ளன. புராணங்கள் விஞ்ஞான மெய்ஞான உண்மைகளின் உச்ச நிலையாகும். இன்று புதிய கண்டு பிடிப்பு என்று மேல்நாட்டார் கூறுகின்ற எல்லா விஷயங்களையும் புராணங்களில் காண்கின்றோம். பக்தியுணர்வும் ஆன்மீக ஞானமும் சீரிய சிந்தனையும் இல்லாத போது புராணச் செய்திகளைப் தெளிய புரிந்து கொள்ள முடிவதில்லை. கண்ணில்லாதவர்களுக்கு சூரிய ஒளியின் பயன் தெரியாதது போன்று சிந்திக்கத் தெரியாதவர்களுக்குப் புராணங்களின் பயன் தெரிவது இல்லை. விஞ்ஞானம் எப்படி என்ற கேள்விக்கு மட்டுமே விடையளிக்கின்றது. ஆனால் மெய்ஞானப் புராணங்கள் ஏன் என்ற கேள்விக்கும் விடையளிக்கின்றன. உதாரணமாக ஒருவர் எப்படி இறக்கின்றார் என்பதற்கு விஞ்ஞானம் விடை கூறும். ஆனால் ஒருவர் ஏன் இறக்கின்றார் என்பதற்கு விடையளிப்பது மெய்ஞானம் மட்டுமே. புராணங்கள் நாட்டு வளம், நகர்ச்சிறப்பு, ஊர்ச்சிறப்பு, மலைகளின் வளம், நதிகளின் பெருமை ஆகியவற்றையெல்லாம் விளக்கி மண்ணின் பெருமை பாடி நாட்டுப்பற்றை வளர்க்கும் தேசபக்தி நூல்களாக உள்ளன. புராணங்கள் குறிப்பிட்ட ஒருவரைப் பற்றியோ குறிப்பிட்ட

சமுதாயத்தைப் பற்றியோ பேசும் குறுகிய நோக்கம் கொண்ட நூல்கள் அல்ல. அவை கடவுளை அடிப்படையாகக் கொண்டு தெய்வங்கள், தேவ தேவியர்கள், பிற வானலோக வாசிகள், அசுரர்கள், மனிதர்கள், பறவை, மிருகம், மலை, பாம்பு, புழு, பூச்சி, தாவரம் என எல்லா ஜீவராசிகளையும் பற்றிப் பேசுகின்றன. அவை உலகிலுள்ள அனைத்துத் துறைகளையும் பற்றி விளக்குகின்றன. எல்லாத் துறைகளுக்கும், எல்லாவிதமான ஞானங்களுக்கும், எல்லாவிதமான கலைகளுக்கும் புராணங்கள் அடிப்படையாக உள்ளன. ஆதாரமாக விளங்குகின்றன. மனிதர்களால் விடைகாண முடியாத கேள்விகளுக்கு எல்லாம் பதில் புராணங்களில் உள்ளன. கடவுள் - ஆத்மா - உலகம் ஆகியவை பற்றியும் அவற்றுக்கு இடையேயுள்ள உறவுகள் பற்றியும் விளக்கமாக உரைக்கும் மெய்ஞானம், உலகிற்கு நன்மை பயக்கும் ஆக்கபூர்வமான விஞ்ஞானம், சரித்திரம், அரசியல், நீதி, நியாயம், சட்டம், பூகோளம், சமூகம், சிற்பம், கட்டிடம், மருத்துவம், விலங்கியல், தாவரஇயல், வான இயல், கணிதம், ஜோதிடம், இசை, நடனம், நாடகம், வாழ்வு, சாவு, சொர்கம், நரகம், அறம், மறம், சகுணம், சடங்கு, விழா, பண்பாடு, பழக்க வழக்கம், கனவு, நனவு, அன்றாடப் பிரச்சனை, சுகம், துக்கம், அன்றாட வாழ்க்கை ஒழுக்கமுறைகள் போன்ற எல்லாவற்றைப் பற்றியும், புராணங்கள் விளக்கமாக விவரிக்கின்றன. புராணங்களில் வல்லவர்களாக இருப்பவர்களுக்கு உலகத்தில் தெரியாத செய்திகளே இருக்க முடியாது என்னும்படி உலகிலுள்ள எல்லாவற்றையும் பற்றிப் புராணங்கள் விளக்குகின்றன.

புராணங்கள் உலகங்களையெல்லாம் அண்டம் என்றும் அண்டசராசரங்கள் என்றும் கூறுகின்றன. அண்டம் என்ற சொல்லுக்கு முட்டை அதாவது உருண்டை என்று பொருள். பூமி மட்டுமன்று எல்லா உலகங்களுமே எல்லா கோள்களுமே உருண்டையாகத்தான் உள்ளன என்று புராணங்கள் பேசுகின்றன. பறப்பது பறவை என்பது போல உருண்டையாக உள்ளது அண்டம் என்ற இந்தப் பேச்சு

வழக்குச் சொல்லே உலகத்தின் உருண்டையான வடிவத்தையும் புலப்படுத்தி விடுகின்றது. உருண்டையான உலகங்களின் எண்ணிக்கை, அளவு பற்றியும் அவற்றையெல்லாம் வடிவமைத்துப் படைத்து வைத்த பரமேஸ்வரனின் அளவு பற்றியும் அருமைத் திருவாசகம் அழகாகக் கூறுகின்றது. முட்டையாக உள்ள பூமியைப் போன்று உருண்டையாகப் பிறந்த கோளங்கள் நூற்றியொரு கோடிக்கும் மேற்பட்டு உள்ளன. ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் அழகும் வளமும் பெற்று அளவிட்டுக் கூற முடியாத கோடிக் கணக்கான உருண்டைகள் எல்லாம் பரமசிவனுக்கு முன்பு சிறு துகள் போன்று மிகவும் சிறியனவாக உள்ளன. வீட்டின் துளை வழியே பாயும் சூரிய ஒளிக்கற்றையில் பறக்கின்ற நுண்ணிய தூசினைப் போன்று கோடிக்கணக்கான உலகங்கள் எல்லாம் ஒரு சிறு புள்ளி போன்று மிகச் சிறியனவாக இருக்கப் பராபரன் அத்தனைப் பெரியவனாக உள்ளான் என்று கடவுளைக் கண்டு பாடிய முதல் அருட்கவியான மாணிக்கவாசகர் போற்றுகின்றார்.

அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூற்றியொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன் அணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் தெரியின்

என்பவை இறைவனே ஏடுகொண்டு வந்து எழுதிச் சென்ற அற்புதமான திருவாசக வரிகள்.

தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று புராணங்கள் விளக்குகின்றன். பச்சை மரங்களைக் கொல்வது பஞ்ச மகா பாவங்களில் ஒன்றாக உள்ளது. சரியை எனப்படும் திருக்கோயில் வழிபாட்டில் தலமர வழிபாடு மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. புட்புதர் மரம் போன்ற தாவரங்கள் எல்லாம் நகர்ந்து செல்லாமல்

ஓரிடத்திலேயே நிற்கும் பிறவிகள் என்று ஓங்காரம் உணர்ந்த மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி

.... நின்ற இத் தாவரச் சங்கமத்துள் எல்லாப் பிறப்பும்

என்பவை திருவாசக வரிகள். புல்லுயிர்க்கும் ஒரு சிறு உடலைப் பரப்பிரும்மம் படைத்து வைத்துள்ள அருமையை

புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி என்று திருநாவுக்கரசர் போற்றியுள்ளார். புல்லுக்கு உயிர் உண்டு என்பது பட்டிக்காட்டுப் பாமர மக்களுக்கும் தெரிந்த சர்வ சாதாரணப் பொதுச் செய்தி என்பதைப் புல்லானாலும் புருஷன் என்ற பழமொழி புலப்படுத்துகின்றது.

பொருட்கள் வானத்திலும் நிலைத்து நிற்காமல் பூமியிலும் நிலைத்து நில்லாமல் நடுவே இருக்கும்போது அவை தொங்குகின்றன அல்லது மிதக்கின்றன. இதைத் திரிசங்கு சொர்கம் என்று புராணங்கள் வர்ணிக்கின்றன. வானத்தில் பறக்கும் விமான ஊர்திகளைப் புராணங்கள் மிகப் பரவலாகப் பேசுகின்றன. பக்தர்கள் மரணம் அடையும்போது சிவகணங்கள் விமானம் கொண்டு வந்து அவர்களைச் சிவலோகம் அழைத்துச் செல்வதை எல்லாப் புராணங்களும் கூறுகின்றன. இராமாயண காவியமும் சிறிய வானவூர்திகளையும் பெரிய விமானங்களையும் பற்றிப் பேசுகின்றது.

உருவம் இல்லாமல் குரல் மட்டும் கேட்பதை அசரீரி, வானொலி என்று புராணங்கள் கூறுகின்றன. எங்கோ நடக்கும் நிகழ்ச்சியை வேறு எங்கோ இருந்து கண்டறிந்து சொல்லும் ஆற்றல் அஷ்டமகா சித்திகளில் ஒன்றாகும். இதனை தூர தரிசனம் என்று தெய்வீக நூல்கள் தெரிவிக்கின்றன. கைலைமலையில் தவம் செய்து அஷ்டமகாசித்திகளைப் பெற்ற திருமூல முனிவர் தூரதரிசன ஆற்றல் பெற்றவர்.

'தூர தரிசனம் சொல்லுவன் காணலாம்' என்று திருமூலர் தெரிவித்துள்ளார். மகாபாரதமும்

தூரதரிசனத்தைப் பற்றிப் பேசுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பரான பெருமிழலைக் குறும்ப நாயனாரும் தூர தரிசன ஆற்றல் பெற்றிருந்தார்.

கருவை வெளியே வைத்துப் பாதுகாத்துக் குழந்தைகளைப் பிறக்கச் செய்வதையும் புராணங்கள் புலப்படுத்துகின்றன. இவ்வாறு கருவை வளர்த்துப் பாதுகாத்து வந்த ஊர் கருகாவூர் (கருவைக் காக்கின்ற ஊர்) என்று பெயர். தேவாரப் பாடல் பெற்ற இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள பரப்பிரும்மத்திற்குக் கருக்காவலன் என்று பெயர். தேவாரப் பாடல் பெற்ற இத்திருத்தலத்தில் உள்ள பரப்பிரும்மத்தின் பட்டமகிஷியான பராசக்திக்குக் கர்ப்பரட்ச நாயகி என்று பெயர். கௌரவர்கள் நூறு பேரும் பானையில் வைத்துப் பாதுகாக்கப்பட்ட கருவிலிருந்து பிறந்தவர்கள் என்று மகாபாரதக் காவியம் கூறுகின்றது.

பூமியை பூமிதேவி, பூமித்தாய் என்று புராணங்கள் போற்றுகின்றன. பூமி எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றது சுற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை எல்லோரும் அறிவார்கள். பூமி உயிரற்ற பொருளாக இருந்தால் அது தானாக இயங்காது. உயிருள்ள பொருளுக்கு மட்டுமே அசைவு உண்டு. எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் பூமியின் உயிரை பூமிதேவி என்று அற்புதமாகப் புராணங்கள் கூறுகின்றன. இவ்வாறு இயங்கும் தன்மையுடைய காற்று நெருப்பு, நீர் போன்றவற்றையும் வாயுதேவன், அக்கினிதேவன், வருணதேவன், நதிமாதர்கள், கங்கையம்மன், காவிரியம்மன் என்று புராணங்கள் பேசுகின்றன.

கடல், மலை இவற்றுக்கெல்லாம் உயிர் உண்டு என்று புராணங்கள் விளக்குகின்றன. சமுத்திரராஜன், மலையரசன், மலைமகள் போன்ற வழக்குகள் இதை உணர்த்துகின்றன.

கல்லுயிராய் நின்ற கனலே போற்றி என்று திருவண்ணாமலையாக நின்ற லிங்கோற்பவ அரும்பெரும்

சோதியைப் போற்றும் திருநாவுக்கரசர் தேவாரம் மலைக்கு உயிர் உண்டு என்பதைத் தெளிவுப்படுத்துகின்றது. மலையும் அதாவது கல்லும் ஒரு பிறவியே என்பதை

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் என்று மெய்ஞானத் திருவாசகம் தெரிவிக்கின்றது. சிருஷ்டியின் துவக்ககாலத்தில் மலைகள் இயங்கும் பிறவிகளாக இருந்தன. பின்னர் ஒரு காலத்தில் அவற்றின் இயக்கம் நின்று போய் நிலைத்த பிறவிகளாக உள்ளன என்று புராணங்கள் விளக்கமாக உரைக்கின்றன. மனிதர்கள் எவ்வாறு சாபத்தால் பறவைகளாகவும் மிருகங்களாகவும் மாறிவிடுகின்றார்களோ அவ்வாறே கல்லாகவும் மாறிவிடுகின்றனர் என்பதைப் புராணங்களும் பிற பண்பாட்டுக் கதைகளும் கூறுகின்றன. மலைப் பிறவியிலும் ஆண், பெண், அலி என்ற மூன்று வகையும் உண்டு. யாருடைய உருவத்தைச் செதுக்க வேண்டுமோ அதற்கு ஏற்பவே ஆண் கல்லையோ பெண் கல்லையோ சிற்பிகள் தேர்ந்து எடுப்பார்கள்.

இந்த உலகத்தில் எல்லா ஜீவராசிகளிலும் ஆண், பெண், அலி என்ற மூன்று வகையும் உள்ளன. இதனால் இந்த உலகமானது தந்தை பரமேஸ்வரனாகவும் அன்னை தாயுமானவனாகவும் இருபால் அர்தநாரீஸ்வரனாகவும் விளங்கும் சிவபரம்பொருளிடமிருந்து தோன்றி வந்துள்ளது என்று முழுமையடைந்த விஞ்ஞான உண்மையைப் புராணங்களும் பிற தெய்வீக நூல்களும் கூறியுள்ளன.

பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க (திருவாசகம்)

தொல் உலகுக்கு ஆதியாய் நின்ற அரன்
(காரைக்கால் அம்மையார்)

ஆதிபகவன் முதற்றே உலகு (திருக்குறள்)

என்று ஓங்கார வாசகரின் திருவாசகமும் காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியும் திருவள்ளுவ நாயனாரின் திருக்குறளும் போற்றுகின்றன.

விஞ்ஞானிகள் தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். மலைகளுக்கு உயிர் உண்டு என்பதையும் வருங்காலத்தில் ஒப்புக்கொள்வார்கள். இவ்வாறு புதியதாகக் கண்டு பிடித்துச் சொல்வதற்கு எதுவும் இல்லை என்னும்படி இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலச் செய்திகளும் புராணங்களில் அருமையாக விளக்கப்படுகின்றன. இத்தகைய புராணங்களின் பெருமையை நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்து இருந்தனர். மக்களுக்கு நாள்தோறும் ஓதி வந்தனர். கலி யுகம் இருபத்தெட்டாம் நூற்றாண்டில் அதாவது கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌடில்யர் என்பவர் அரசகுமாரர்கள் கற்க வேண்டிய முக்கியமான பாடமாகப் புராணங்கள் விளங்கின என்று கூறியுள்ளார். புராணங்களைப் போற்றாத நூல்களே இல்லை, புராண நிகழ்ச்சிகளை எடுத்துப் பேசாத நூல்களே இல்லை என்னும்படி எல்லாவிதமான இலக்கியங்களிலும் புராண நிகழ்ச்சிகள் முக்கிய இடம் பெறுகின்றன. சான்றுகளாகவும் உவமைகளாகவும் கூறப்படுகின்றன. பழமொழிகளாக அன்றாட வாழ்க்கையில் வழங்கப்படுகின்றன. இவ்வாறு உலகம் முழுவதும் பேசப்பட்டு வந்த ஆரியம் தமிழ் என்ற இரண்டு மொழிகளிலும் இருந்து வந்த புராண இலக்கியங்கள் கோடிக்கணக்கான ஆண்டுகளாகப் பெருமை மிக்க நூல்களாக இருந்து வாழ்க்கைக்கு வழிகாட்டி வந்தன.

இந்தக் கலியுகத்தில் உலகத்தின் பல பகுதிகளிலும் தோன்றிய மனித வழிபாட்டு மதங்கள் கடவுள் எழுந்தருளியுள்ள கோயில்களை யெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கின. வேதம், ஆகமம், புராணங்கள், போன்ற புனித நூல்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. உலகின் பல்வேறு நாடுகளிலும் ஆரியமும் தமிழும் அழிந்து புதுப்புது மொழிகள் தோன்றின. இவ்வாறு பாரதம் உட்பட உலகம் முழுவதும் இருந்து வந்த புராணங்கள் எல்லாம் அழிக்கப்பட்ட பின்னர் பாரதத் திருநாட்டில் மீண்டும் புராணங்கள் இயற்றப்பட்டன. அப்போது சிவபுராணங்களே அல்லாமல் அந்தந்த

காலத்தில் புகழ்பெற்று இருந்த தெய்வங்கள் மீதும் புதிய புதிய புராணக் கதைகள் தோன்றின. இவ்வாறு புராணங்கள் மீண்டும் இயற்றப்பட்டபோது அவை பெயரையும் புகழையும் விரும்புகின்ற கற்பனைப் போக்கு மிக்க சாதாரணப் புலவர்களாலும் பக்தி சிரத்தை இல்லாதவர்களாலும் ஆன்மீக ஞானம் இல்லாதவர்களாலும்கூட எழுதப்பட்டன. இதனால் தெய்வீகம் இல்லாத கதைகளும் கற்பனைகளும் கடவுள் இயல்பிற்குப் பொருந்தாத மாறுபட்ட செய்திகளும் தவறான கருத்துகளும் புராணம் என்ற பெயரில் புகுந்தன. புராணங்கள் நாடகம் ஆக்கப்பட்ட போதும் அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டன. முற்றிலும் கற்பனையாகப் புதிது புதிதாகச் சேர்க்கப்பட்டன. இம்முறையில் சாதாரணப் புலவர்களாலும் நாத்திகர்களாலும் பக்தியும் உண்மை உரைக்கும் பண்பும் இல்லாதவர்களாலும் எழுதப்பட்ட பிற்காலக் கற்பனைகள் எவை என்பதை வேதம், ஆகமம், தேவாரத் திருவாசகத் திருமுறைகள் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெரிந்துவிடும். உதாரணமாகப் பிள்ளையாரின் பிறப்பு பற்றிக் கூறப்படும் கதைகள் யாவும் கடவுளைப் பற்றியும் தெய்வீகத்தைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியாதவர்களால் எழுதப்பட்ட கற்பனையே என்பதை மூன்று வயதிலேயே மூன்று காலமும் உணர்ந்த திருஞான சம்பந்தரின் தேவாரத் திருமுறைப் பாடல் வெளிச்சமிட்டுக் காட்டிவிடுகின்றது.

பிடிஅதன் உரு உமை கொள மிகு கரிஅதன்
வடிகொடு தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே

என்பது ஆளுடைப் பிள்ளையார் அருளிய பிள்ளையாரைப் பற்றிய தேவாரப் பாடல். தானமே வடிவமாக விளங்கி வாரி வழங்குகின்ற வள்ளல்கள் வாழ்கின்ற திருவலிவலம் என்ற திருத்தலத்தில்

எழுந்தருளியுள்ள பரமேஸ்வரன் உமையைப் பெண் யானையாக உருக்கொளச் செய்தார். தான் ஆண் யானையாக வடிவம் கொண்டு தனது திருவடியை வணங்குகின்ற அன்பர்களின் துன்பங்களைப் போக்குகின்ற கணபதி வெளிப்படுமாறு அருளிச் செய்தார் என்று தமிழ்நாதர் திருஞானசம்பந்தர் பிள்ளையாரின் தோற்றம் பற்றிப் பாடியுள்ளார். விநாயகர் பிறக்கும்போதே யானையாகப் பிறந்தார் என்பதை கணபதி என்னும் களிறு என்று திருநாவுக்கரசர் போற்றுகின்றார். பக்தி மிக்க பல்லவர் பரம்பரையில் வந்த மகேந்திர வர்மனை சமண மதத்திற்கு மாற்றிய சமண குருமார்கள் அப்பர் பெருமானைக் கொல்வதற்காக மதயானையை ஏவிவிட்டபோது அப்பர் சுவாமிகள் அந்த யானையைப் பரப்பிரும்மத்தின் குழந்தையான பிள்ளையார் என்ற யானையாகக் கண்டார். பார்க்கும் கண்ணில் பரம்பொருள் நின்றதால் மதயானையும் அமைதியடைந்து அவரை வலம் வந்து வணங்கிச் சென்றது. இவ்வாறு கொல்ல வந்த கொடிய யானையும் கொல்லாமல் வணங்கிச் சென்ற அற்புத அனுபவத்தை

> கொலைசெய் யானைதான் கொன்றிடுகிற்குமே?
>
> அஞ்சுவது யாதும் ஒன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை

என்று நாவரசர் பாடுகின்றார். பிள்ளையாரின் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பியும் பிள்ளையாரை சிவக்களிறு என்று போற்றியுள்ளார். உருவம் இல்லாத பரமசிவம் ஆறுமுகங்களோடு வெளிப்பட்டு ஆறுமுகனைப் படைத்தருளினார். ஆனைவடிவுடன் வெளிப்பட்டு ஆனை முகனைத் தோற்றுவித்தார். தமிழர்களின் திருநெறியாகிய சைவம் மெய்ஞானமும் விஞ்ஞானமும் கலந்த அருள்நெறி என்பதை ஆறு முகத்திலிருந்து வந்த ஆறுமுகன் தோற்றமும் ஆனைவடிவிலிருந்து வந்த ஆனைமுகன் தோற்றமும் அருமையாகப் புலப்படுத்துகின்றன.

3. ஜோதிலிங்கமும் லிங்கோற்பவரும்

தெய்வ வழிபாடு, தேவ வழிபாடு முதல் விலங்கு வழிபாடு தாவர வழிபாடு வரை எல்லாவிதமான வழிபாடுகளையும் தன்னுள் கொண்டுள்ள சைவத் திருநெறி மட்டுமே கோடிக்கணக்கான ஆண்டுகளாக உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் இருந்து வந்த ஒரே இறை நெறியாக விளங்கியது. தென்திசையில் வேதங்களையும் ஆகமங்களையும் அருளிச் செய்த சிவபெருமான் எல்லா நாட்டவர்களுக்கும் இறைவனாக விளங்கிய உண்மையை

தென்னாடு உடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
ஒருவன் என்னும் ஒருவன் காண்க

என்று ஓங்காரம் உணர்ந்த மாணிக்கவாசகப் பெருமான் மிக அருமையாகக் காட்டியுள்ளார். கடவுள் ஒருவன் அவன் பிறைச்சடையன் ஒருவனே என்று எல்லோரும் போற்றி, வழிபட்டதை

ஒருவன் என ஏத்த நின்ற நளிர்மதிச் சடையன் என்று நம்மாழ்வாரும் கூறியுள்ளார். இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் எல்லாமும் இதையே வெளிப்படுத்தியுள்ளன. விஷ்ணு, இராமன், கண்ணன் போன்ற சிவபக்தர்களான தெய்வங்களையும் மனிதப் பிறவிகளையும் கடவுள் என்று கூறும் வைணவம் முதலாகக் கலியுகத்தில் தோன்றிய மதங்கள் எல்லாம் செத்துப் பிறக்கும் ஜீவராசியையே ஆண்பால், பெண்பால் என்று சுட்டியறியப்படக்கூடிய ஒருவரையே கடவுள் என்று கொண்டாடுகின்றன. கடவுள் என்றாலே எல்லாவற்றையும் கடந்து உள்ளது என்று பொருள். இன்னது என்று சுட்டிக் கூற முடியாமல் தோற்றம், அவதாரம், பிறப்பு, வளர்ப்பு, பால்வேறுபாடு, உருவம், அருவம் போன்ற எல்லாவற்றையும் கடந்து உள்ள மெய்யான (சத்தியம்), செம்மையான (சிவம்) அழகிய பொருளே (சுந்தரம்) கடவுள்.

அப்பாலைக்கு அப்பாலை
மெய்யே நிலைபேறாய்
செம்பொருள் துணிவே
அருமையில் எளிய அழகே

என்று நந்திதேவரின் அவதாரமான மாணிக்க வாசக வள்ளல் கடவுள் தன்மையைப் பாடியுள்ளார். சிவம் என்ற தூய தமிழ்ச் சொல்லுக்கு செம்மை, செம்பொருள் என்று அர்த்தம். பிறவி போன்ற மாசு மலங்களுக்கு அப்பாற்பட்ட சிறந்த செம்பொருளே சிவம். பரமசிவம் என்றால் சிறந்த செம்பொருள் என்று அர்த்தம். பரம சிவம் என்பதே சமஸ்கிருதத்தில் பரப்பிரும்மம் எனப்பட்டது. பரப்பிரும்மம் என்றால் பிறப்பு என்னும் பேதைமை இல்லாத சிறந்த ஞானம் என்று பொருள்.

பிறப்பு என்னும் பேதைமை நீங்கச்
சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்

என்று திருவள்ளுவ நாயனார் பிறப்பிற்கு அப்பாற்பட்ட செம்பொருளான பரமசிவத்தை, பிறவிக் கடலுக்கு அப்பாற்பட்ட பரமசிவனை, பிறப்பு என்னும் பேதைமை இல்லாத பரப்பிரும்மத்தைப் போற்றியுள்ளார். பிறப்புக்கு அப்பாற்பட்டவன்தான் இறைவன், பிறப்புக்கு அப்பாற்பட்டதுதான் கடவுள், பிறந்து வருபவையெல்லாம் ஜீவராசிகள் என்று தமிழர்த் திருநெறியாகிய சைவ சித்தாந்தம் கூறுகின்றது. ஆகமங்களின் மூன்றாம் பகுதியாகிய ஞான காண்டம் எனப்படும் சைவ சித்தாந்தம் என்பது வெறும் நம்பிக்கையோ, கொள்கைகளோ, கருத்துகளோ, கோட்பாடுகளோ அல்ல. அது கடவுளை நேரில் கண்டு வாழ்ந்த செந்தமிழ் அருளாளர்களின் மிக உச்சநிலையடைந்த அனுபவ மெய்ஞான விஞ்ஞான உண்மைகளாகும். கடவுளை நேரில் கண்டு திருவடிஞானம் பெற்றவர்களால் மட்டுமே கடவுளின்

இயல்புகளை உள்ளபடி உரைக்க முடியும். இன்னது என்று சுட்டிக் கூறமுடியாமல் எல்லாவற்றையும் கடந்துள்ளதுதான் இறை என்று சைவ சித்தாந்தம் கூறும் தூய செம்பொருளையே கடவுள் என்ற தமிழ்ச்சொல் குறிக்கின்றது. பறப்பது பறவை என்பது போல் கடந்து உள்ளது கடவுள் என்ற இந்த அற்புதமான தமிழ்ச்சொல்லுக்கு இணையான சொல் உலகில் எந்த மொழியிலும் கிடையாது. தமிழ்மொழி எவ்வளவு பழைமையானதோ அவ்வளவு பழைமையானது சைவ சித்தாந்தம், அவ்வளவு உச்ச நிலையடைந்துள்ளது தமிழர்களின் இறையுணர்வு என்பதையும் கடவுள் என்ற சொல் எடுத்துக் காட்டுகின்றது.

தோற்றம் அவதாரம் பிறப்பு வளர்ப்பு முடிவு ஆகிய எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு உள்ள பரமசிவம் தாவரங்கள் முதல் பிரம்மன் விஷ்ணு ருத்திரன் என்ற மும்மூர்த்திகள் வரை உள்ள ஜீவராசிகளுக்கு அருள்புரிவதற்காக அவற்றின் கண்களுக்கும் அறிவுக்கும் புலனாகும் வகையில் வெளிப்படும் போதும் சுட்டிக் குறிக்க முடியாத வகையில் உருவம் இல்லாமலும் ஆண், பெண், அலி, பொருள் என அனைத்து உருவங்களிலும் வெளிப்பட்டுக் காட்சி தருகின்றது. பரமசிவம் பரப்பிரும்மம் பராபரம் என்பது எல்லாவற்றையும் கடந்து உள்ள நிலை. பரமசிவன் என்பது ஆண்பாலான தந்தை வடிவம். தாயுமானவன் என்பது பெண்பாலான அன்னை வடிவம். அர்தநாரீஸ்வரன் மாதுபாதியன் என்பது இருபால் வடிவமான அலியுருவம். லிங்கம் என்பது அங்கங்கள் இல்லாத பரம்பொருள் வடிவம். இவ்வாறு எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு உள்ள பரமசிவம் உருவம் இல்லாமலும் அனைத்து உருவங்களுடனும் வெளிப்படுவதை

சிவம் உருவந்து பூதலத்தோர் உகப்பு எய்தக் கொண்டருளி
உருவமும் அருவமும் ஆனாய் போற்றி
பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க (திருவாசகம்)
பல பல வேடமாகும் பரன்
எல்லாமாம் எம்பெருமான் (சம்பந்தர்)

என்று பழைமையான திருவாசகமும் தமிழ் காத்த தேவாரமும் போற்றுகின்றன.

இயல் இது அன்றே என்னலாகா இறை (திருக்கோவையார்)

மூவரும் அறிகிலா யாவர் மற்று அறிவார்

யாவரும் அறிய அரியாய் (திருவாசகம்)

தன்மை பிறரால் அறியாத தலைவா

என பிரம்மன் விஷ்ணு ருத்திரர் ஆகிய மூன்று மூர்த்திகளாலும்கூட அறிந்து கொள்ள முடியாமல் சிந்தனை சொல் செயல் ஆகிய எல்லாவற்றையும் கடந்து உள்ள பரப்பிரும்மமான பரமசிவம் பலப்பல உருவங்களுடனும் உருவம் இல்லாமலும் வெளிப்பட்டு அருளும் போது எட்டு குணங்களைக் கொண்டு விளங்குகின்றது. எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட நிலைக்கு நிர்குணம், சொரூபம் என்று பெயர். எங்கும் இருத்தல், எல்லையில்லாத அருள், எல்லையில்லாத ஆற்றல், எல்லையில்லாத இன்பம், முற்றறிவு, முற்றுணர்வு, முழுத் தூய்மை எதற்கும் யாரையும் சார்ந்து இல்லாத முழுச் சுதந்திரம் என்ற எட்டு குணங்களைக் கொண்டு வெளிப்பட்டு அருளும் நிலைக்கு சகுணம், தடத்தம் என்று பெயர். இந்த எட்டு உயர்ந்தகுணங்களைக் கொண்ட எண்குணத்தானை வணங்குவதுதான் மனிதத் தலையின் பயன் என்பதை

எட்டு வான் குணத்து ஈசன் எம்மானை

தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கு அணிந்து

தலையாலே பலிதேரும் தலைவனை தலையே நீ

வணங்காய் (அப்பர்)

என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார். எண்குணத்து ஈசனை வணங்காத தலை தலையே இல்லை என்பதை

எண்குணத்தான் தாளை வணங்காத் தலை என்று திருவள்ளுவர் தெரிவித்துள்ளார். பிறப்புக்கு

அப்பாற்பட்ட பராபரத்தை வணங்காத தலை மனிதத் தலையே இல்லை நாய்த்தலை, நரித்தலை, ஆட்டுத்தலை என்று இராமலிங்க அடிகள் கூறியுள்ளார்.

உயிர்களுக்கு அருள்புரிவதற்காக எட்டு குணங்களுடன் பராபரம் கொண்ட பலப்பல வடிவங்களிலே லிங்கம் என்பது உறுப்புகள் எவையும் இல்லாத இன்னது என்று சுட்டிக் கூற முடியாத பரம்பொருளாகும்.

அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என இயக்கத்திற்கும் ஓசையொலிக்கும் ஆதாரமான நடராஜர், அசையாத நிலைத்த தன்மைக்கும் அமைதிக்கும் மூலாதாரமான தட்சிணாமூர்த்தி, அறங்களை வாழவைக்கும் நந்தி வாகனர், துறவறத்திற்குக் காரணமான யோகீஸ்வரர் (யோக தட்சிணாமூர்த்தி) அன்பிற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் காரணமான கயிலைமலைநாதர், நான் எனது என்ற ஆணவ மலத்தை நீக்கி முக்தியருளும் லிங்கோற்பவர் ஆகியவையெல்லாம் பரமசிவத்தின் ஆண்பால் வடிவங்கள். இவையெல்லாம் பரமசிவன் எனப்படும். தாயுமானவன் என்பது பராபரத்தின் பெண்பால் வடிவம், சங்கரன், ஈஸ்வரன், சம்பு போன்ற திருப்பெயர்களின் பெண்பாலான சங்கரி, ஈஸ்வரி, சாம்பவி போன்றவையெல்லாம் தாயுமான சுவாமியைக் குறிக்கும் திருநாமங்களாகும். ஆனால் இவையெல்லாம் மனிதர்களின் சிற்றறிவினால் பிற்காலத்திலிருந்து பராசக்தி என்ற பெண் தெய்வத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அரன் என்பதன் பெண்பால் பெயரே அரி. இது பிற்காலத்தில் விஷ்ணுவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. பெருமான் என்பதன் பெண்பால் வடிவம் பெருமாள். (அவன்-அவள்) பரமேஸ்வரன் ஒருவனே இறைவன். மற்றவர் எல்லாம் பக்தர்களே. சிவபெருமான் ஒருவரே கடவுள். மற்றவையெல்லாம் அந்த இறைவனைச் சென்று சேர்கின்ற, கடவுளைச் சென்று சேர்கின்ற ஆத்மாக்களே. இதனால் பெருமாள் என்ற சொல் சிவனடியார்களைக் குறித்தது. சேரமான் பெருமாள் என்பவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள் போற்றிய அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்.

திருப்புகழில் அருணகிரிநாதர் சிவபக்தனும் சிவமைந்தனும் ஆன முருகப்பெருமானைப் பெருமாளே என்று போற்றுகின்றார். தற்காலத்தில் பெருமாள் என்ற சொல் காக்கும் தெய்வமான விஷ்ணுவைக் குறிக்கின்றது.

அர்தநாரீஸ்வரன், அம்மையப்பன், தோடுடைய செவியன், மாது பாதியன், பெண்ணொருபாகன் என்பது ஆணும் பெண்ணும் கலந்த இருபாலான அலி வடிவமாகும். அர்தநாரீஸ்வரன் தன் பெண் பகுதியில் பராசக்தியை ஏற்றுக் கொண்டருளிய போது அந்த வடிவத்திற்கு உமையொரு பாகன் என்று பெயர். அர்த நாரீஸ்வரனையும் உமையொருபாகனையும் தெய்வத் திருமுறைகளும் திருக்கோயில்களில் உள்ள திருமேனிகளும் மிகத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஆனால் தற்காலத்தில் இந்த இரண்டு வடிவங்களுக்கும் வேறுபாடு தெரியாமல் குழம்புகின்றனர்.

பரப்பிரும்மானது நிலம் நீர் நெருப்பு காற்று, வானம், சூரியன், சந்திரன், ஆத்மா என்ற எட்டு பொருளாகவும் ஒருசேர விளங்கும் போது அஷ்டமூர்த்தி என்று பெயர். ஆத்மா என்பது ஆண், பெண், அலி என்ற மூன்று வகை உயிரினங்களையும் குறிக்கும். எல்லாவற்றையும் கடந்துள்ள பரமசிவம் இவ்வாறு எல்லாமாக விளங்குவதை

எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி (அப்பர்)

எல்லாமாம் எம்பெருமான் (சம்பந்தர்)

எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்து (திருவாசகம்)

யாவையுமாம் ஏகத்து ஒருவன் (திருக்கோவையார்)

என்று தமிழின் பெருமையும் புனிதமும் காத்த தேவாரமும் திருவாசகமும் மிக அருமையாகப் போற்றியுள்ளன. இவ்வாறு சிவம் எல்லாமாக இருப்பதாலேயே சர்வம் சிவம், சர்வம் சிவமயம் என்று வழங்கப்படுகின்றது. தெய்வங்கள் எல்லாம் பிறப்புஇறப்பு விருப்புவெறுப்பு இன்பம்துன்பம் போன்ற மும்மலங்களில் சிக்குண்டுள்ளன. யார் எந்த கோலத்தில் நின்று எந்த

தெய்வத்தை வழிபட்டாலும் அந்த தெய்வமாக வந்து அருள்புரிபவர் பரமேஸ்வரன்தான் சிவபெருமான்தான் என்பதை

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி
ஆங்கே மாதொருபாகனார்தாம் வருவர்
(சிவஞான சித்தியார்)

எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம்
(காரைக்கால் அம்மையார்)

என்பதை மிக அருமையாக அருள்நந்தி சிவாச்சாரியாரும் காரைக்கால் அம்மையாரும் மற்றும் நக்கீரர், அப்பர்பெருமான், சேரமான் பெருமாள், போன்ற பலரும் புலப்படுத்தியுள்ளனர். இவ்வாறு பரமசிவன் எல்லா தெய்வமாகவும் தோன்றி அருள்புரிகின்றார். இதை

அவன் இவன் ஆனது அவன் அருளால் அன்றி
இவன் அவன் ஆகான் (திருவுந்தியார்)

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரிஅயன் என்று எண்ணி அயர்வுற வேண்டா (திருமந்திரம்)

என்று மெய்கண்ட சாத்திரமும் திருமந்திரமும் கூறுகின்றன.

நின் ஆவார்பிறர் இன்றி நீயே ஆனாய்

என்று திருநாவுக்கரசர் தேவாரமும் இந்த ,ஆகம உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறு பராபரம் எல்லாமாகவும் எல்லாவற்றுக்கு அப்பாற்பட்டும் விளங்குவதை

யாவையுமாய் அல்லையுமாம்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி
எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்து
அவை அல்லையாய்

என்று பரப்பிரும்மத்தை நேரில் கண்டு பாடிய முதல் அருட்புலவரான மாணிக்கவாசகப் பெருமான் உரைத்துள்ளார்.

பரமசிவம் எல்லாமாகவும் உள்ளது. எல்லாவற்றுடனும் உள்ளது. எல்லாவற்றுக்கு அப்பாற்பட்டும் உள்ளது. பாலில் நெய் போன்றும் பூவில் மணம் போன்றும் உடலில் உயிர் போன்றும் பரமசிவன் எல்லோருடனும் எல்லாவற்றுடனும் கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்துள்ளார்.

பாலில் நெய் போல் மறைய நின்றுளன் (அப்பர்)

பூவில் நாற்றம் போன்று உயர்ந்து

எங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமை

(திருவாசகம்)

என்று இறைவன் அருளால் செந்தமிழிசை ஞானம் பெற்ற திருநாவுக்கரசரும் ஓங்காரம் உபதேசிக்கப்பட்ட மாணிக்க வாசகரும் அருளிச் செய்துள்ளனர். இவ்வாறு கண்களுக்குப் புலப்படாமல் எல்லா இடத்திலும் எல்லாவற்றிலும் மறைந்து இருப்பதே மறைத்தல் என்னும் தொழிலாகும். சிவபெருமான் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டும் எல்லாமாகவும் எல்லாவற்றுடனும் இருப்பதை

முற்றுமாய் வேறும் ஆனான்

வேறாய் உடன் ஆனான் (சம்பந்தர்)

உலகெலாம் ஆதி வேறாய்·உடனுமாய் (சிவஞான சித்தியார்)

என்று மழலைஞானி திருஞானசம்பந்தரும் அருள் நந்தி சிவாச்சாரியாரும் கூறியுள்ளனர். எல்லாவற்றையும் கடந்தது கடவுள் ஆதலால் மனிதர்கள் உண்டாக்கி வைத்த மதங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டு பரமசிவன் உள்ளார். இதை

ஆறு சமயமும் கண்டவர் கண்டிலர்

ஆறு சமயப் பொருளும் அவன் அலன்

என்று வடக்கேயிருந்து வந்து தமிழ்நாட்டிற்கும் தமிழுக்கும் தொண்டு புரிந்த ஆரியர்களில் ஒருவரான திருமூலர் காட்டுகின்றார். எல்லாவற்றையும் கடந்து இருப்பவர் ஈசன் ஆதலால் நாத்திகர்கள் மறுத்துப் பேசும் இல்லாத பொருளாகவும் இறைவன் இருக்கும் உண்மையை

உண்மையுமாய் இன்மையுமாய் (திருவாசகம்)

இல்லை அலர் உளர் அல்லர் (அப்பர்)

என்று நாத்திக நஞ்சை உட்கொண்டு பக்தியமுதம் வழங்கிய திருவாசகப் பெருமானும் திருநாவுக்கரசரும் தெரிவித்துள்ளனர்.

எல்லாமாகவும் எல்லாவற்றிலிருந்து வேறுபட்டும் எல்லாவற்றுடனும் உள்ள ஈசனுடன் ஆத்மா இரண்டறக் கலந்து ஒன்றாகி நிற்கும் தன்மையே முக்தி, வீடுபேறு, மோட்சம் என்று கூறப்படுகின்றது. உப்பானது நீருடன் இரண்டறக் கலந்து ஒன்றுபட்டு நீராகிவிடுவது போல ஆணவம் கர்மம் மாயை என்ற மூன்று மலங்களும் நீங்கிச் சுத்தமான உயிர்கள் சிவத்துடன் இரண்டறக் கலந்து ஒன்றுபட்டுச் சிவமாகிவிடுகின்றன. இந்த முக்தி நிலையே சிவமாதல், அகம் பிரும்மாஸ்மி, தத்துவமசி, தன்னுயிர் தான் அறப்பெறுதல், அத்வைதம் என்றெல்லாம் கூறப்படுகின்றது. சன்மார்க்கம் எனப்படும் ஞானநெறியில் நிற்பதால் உண்டாகும் இந்த முக்தி நிலைக்கு சாயுச்சியம் என்று பெயர்.

படைக்கும் தெய்வம் பிரம்மன், காக்கும் தெய்வம் விஷ்ணு, அழிக்கும் தெய்வம் ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகள் முதலாகப் புல் புதர் மரம் போன்ற தாவரங்கள் வரையுள்ள பரமாத்மா மற்றும் ஜீவாத்மாக்கள் எல்லாம் ஆணவம் கர்மம் மாயை என்ற மூன்று மலங்களால் பற்றப்படுவதால் அவை தூய செம்பொருளான பரமசிவத்தைச் சேர முடியாமல் விலகி நிற்கின்றன. ஆணவம் என்பது நான் எனது என்ற உணர்வு. கர்மம் என்பது பாவம் புண்ணியம் என்ற இருவினைகளுக்கான பலன்களாகிய இன்ப துன்பங்கள். மாயை என்பது பிறவி. யான் எனது என்ற ஆணவ

மலமாகிய இருளே இருவினைப் பலன்களான இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணமாகின்றது. ஆணவ இருளால் வந்து சேர்கின்ற இருவினைப் பலன்களை அனுபவிக்கவே பிறவி உண்டாகின்றது. நான் எனது என்ற உணர்வே பிறவிக்கு மூல காரணம் ஆவதால் ஆணவம் நீங்கும்போது ஆத்மாக்கள் எல்லாமலங்களும் நீங்கிச் சுத்தமாகின்றன. சுத்தமடைந்த உயிர்கள் சிவத்துடன் சேர்ந்து இருக்கும் முக்தியைப் பெறுகின்றன. இந்த அரிய சைவ சித்தாந்த உண்மைகளை

மலவன் குரம்பையை மாற்றி அம்
மால் முதல் வானவர்க்கு அப்பால் செல அன்பர்க்கு ஒக்கும் சிவன்
(திருக்கோவையார்)

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் (திருக்குறள்)
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர்
புகழ்புரிந்தார் மாட்டு

என்று மணிவாசகமும் ஈசனால் முதல் வாழ்த்துக் கவி பாடப்பட்டுத் தமிழ்ச் சங்கத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருக்குறளும் தெரிவிக்கின்றன.

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதம்
நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்கு உயிராய்
அங்கங்கே நின்றான் (சம்பந்தர்)

என மும்மூர்த்தி முதல் தாவரம் வரையுள்ள எண்பத்து நான்கு லட்சம் பிறவிகளில் தெய்வம் தேவர் அசுரர் மற்றும் கந்தருவர் கின்னரர், இயக்கர் போன்ற வானலோகவாசிகள் அனைவரும் மனிதப் பிறவிக்கு மேற்பட்ட உயர்ந்த பிறவிகள். மிருகம், பறவை, பாம்பு, புழு, பூச்சி தாவரம் போன்றவையெல்லாம் மனிதப் பிறவிக்குக் கீழேயுள்ள தாழ்ந்த பிறவிகள்.

தாவரம் முதல் மிருகம் வரையிலான பிறவிகளில் சிந்தனை விருப்பு வெறுப்பு இல்லாத காரணத்தால் அவை அந்தந்த பிறவிக்கு என்று உள்ள இயல்புக்கு

ஏற்றபடி வாழ்ந்து அடுத்த மேல்பிறவியை அடைகின்றன. ஆனால் மனிதப் பிறவி மற்றும் அதற்கு மேற்பட்ட பிறவிகளில் சிந்தனை விருப்பு வெறுப்பு இருப்பதால் அவை அந்தந்த பிறவி ஒழுக்கத்தை மீறிச் சென்று நன்மையோ தீமையோ செய்கின்றன. இதனால் செய்வினைப் பலன்களுக்கு ஏற்ப மேல் பிறவியோ கீழ் பிறவியோ அடைகின்றன. உதாரணமாக மாடுகள் சைவ உணவு உண்ணும் கருணைப் பிராணிகள், எல்லா மாடுகளும் அந்தப் பிறவியின் சைவ உணவு இயல்புக்கு ஏற்ப ஒன்று போலவே சாதுப்பிராணிகளாக வாழ்கின்றன. அவற்றில் மாமிசம் உண்ணும் கொடிய மாடு மாமிசம் உண்ணாத கருணைமாடு என்ற பாகுபாடு பேதம் எல்லாம் இல்லை. ஆனால் மனிதர்களோ ஆடு மாடு போன்று அன்பு உணவு உண்ணும் கருணைமிக்க சைவப் பிராணிகளாக இருந்தபோதும் எல்லாமனிதர்களும் சைவர்களாக அகிம்சையாளர்களாக வாழ்வது இல்லை. மனிதப் பிறவியின் சைவ இயல்பினை மீறிச் சென்று மாமிசம் உண்ணும் சிலர் அசைவப் பிராணிகளாகவும் இம்சையாளர்களாகவும் வாழ்கின்றனர். இம்முறையில் பண்பு, பழக்க வழக்கம், உணவு, வாழ்க்கைமுறை ஆகியவற்றால் நல்லவர், கெட்டவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதங்கள் உண்டாகின்றன. எனவே செய்கின்ற நல்வினை, தீவினைப் பலன்களுக்கு ஏற்ப மேல் பிறவியும் தாழ்பிறவியும் மாறி மாறி ஏற்படுகின்றன. இவ்வாறு கர்ம பலனுக்கு ஏற்பப் பலப்பல பிறவிகளில் மாறி மாறிப் பிறக்கும் ஆத்மாக்கள் மலங்கள் எல்லாம் நீங்கிச் சுத்தமடைந்து சிவத்தைச் சென்று அடைவதற்கு உரிய வழிமுறைகள் நான்கு ஆகும். அவை சிலம் (சரியை) நோன்பு (கிரியை), செறிவு (யோகம்), அறிவு (ஞானம்) என்பன. இந்த நான்கு வகையான பூஜை முறைகளில் சரியை என்பது கோயில் திருப்பணிகளாகும். கோயிலைப் பெருக்கி மெழுகித் தூய்மைப்படுத்துதல், கோயில் வழிபாட்டிற்குத் தேவையான பூஜைப் பொருட்களைக் கொடுத்தல், விளக்கேற்றுதல், பூமாலை புனைந்து அளித்தல், குளம் வெட்டுதல், நந்தவனம் அமைத்தல், திருப்பணி செய்தல், வலம் வந்து துதி செய்து பாடியாடுதல் மற்றும் திருக்கோயில் தொடர்பான அனைத்துப் பணிகளும் சிலம்

எனப்படும். இது தாசமார்க்கம் என்றும் கூறப்படும். இந்த நெறியில் நின்று புகழ்பெற்று முக்தியடைந்த எண்ணற்ற அடியவர்களில் திருநாவுக்கரசரும் ஒருவர். தாசமார்க்கத்தில் நின்று வழிபடுபவர்களுக்குப் பரமேஸ்வரன் தலைவனாக இருந்து அருள் புரிகின்றார். சரியை என்ற இந்த நெறியின் மூலம் முக்தி பெற்றவர்கள் சிவலோகம் சென்று சேர்கின்றனர். இந்த முக்திக்கு சாலோகம் (இறையுலகம்) என்று பெயர்.

இரண்டாவது பாதையான கிரியை அல்லது நோன்பு என்பது திருவுருவத்தில் கடவுளை வழிபடுவது. எங்கும் நிறைந்துள்ள ஈசனின் அருளைத் திருவுருவத்தில் எழுந்தருளுவித்து நீராட்டி, மலர் தூவி தூப தீபம் காட்டி மணியடித்து நைவேத்தியம் செய்து மந்திரம் சொல்லி துதித்து வழிபடுவதாகும். இது இல்லங்களிலும் பொது இடங்களிலும் நடத்தப்படும். கிரியை, நோன்பு என்பது சத்புத்திர மார்க்கம் என்றும் கூறப்படும். இந்த நோன்பு நெறியில் நின்று புகழ்பெற்ற பெருமக்களில் சண்டேசுர நாயனாரும் திருஞானசம்பந்தரும் குறிக்கத்தக்கவர் ஆவர். இந்த சத்புத்திர மார்க்கத்தில் நின்று வழிபடுகின்றவர்களுக்குப் பரம்பொருள் அன்னை தந்தையாக இருந்து அருள்புரிகின்றார். சத்புத்திர மார்க்கத்தின் மூலம் முக்தி பெறும் ஆத்மாக்கள் சிவனின் பாதக் கமலங்களில் சென்று சேர்கின்றன. இந்த முக்திக்கு சாமீபம் (இறையணுக்கம்) என்று பெயர்.

மூன்றாவது நெறியாகிய செறிவு அல்லது யோகம் என்பது ஓரிடத்தில் நிலையாக அமர்ந்து சிந்தனையை சிவ நினைவில் நிறுத்தி மனதை ஒருநிலைப்படுத்தித் துதித்தலாகும். தவ நெறியாகிய இது சகமார்க்கம் எனப்படும். இந்த நெறியில் நின்று வணங்குகின்றவர்களுக்குப் பரப்பிரும்மம் தோழனாக இருந்து அருள்புரிகின்றார். இந்தச் செறிவு நெறியில் நின்று முக்தி பெற்ற எண்ணற்றவர்களில் சுந்தர மூர்த்தி சுவாமிகளும் ஒருவர். இவர் தம்பிரான் தோழர் என்றே பெயர் பெற்றவர். சகமார்க்கத்தின் மூலம் முக்திபெறுகின்றவர்கள் இறைவடிவைப் பெறுகின்றனர். இந்த முக்திக்கு சாரூபம் (இறையுரு) என்று பெயர்.

ஞானம் என்பது கடவுளைப் பற்றி நன்கு கற்று, கேட்டு, தெளிந்து, சிந்தித்து, உணர்ந்து எங்கும் எப்போதும் சதா சர்வகாலமும் சிவ நினைவோடு மானசிகமாகப் பூஜை செய்து வழிபட்டு வணங்குவதாகும். அறிவு என்ற இந்த நெறி சன்மார்க்கம் எனப்படும். இந்த சன்மார்க்க நெறியில் நின்று வழிபடுகின்ற பக்தர்களுக்குப் பராபரம் குருவாக இருந்து அருள்புரிகின்றார். சன்மார்க்கத்தில் நின்று புகழ் பெற்ற பெரியோர்களில் குறிக்கத்தக்கவர்கள் மாணிக்கவாசகப் பெருமானும் திருமூலரும் ஆவர். சன்மார்க்கத்தின் மூலம் முக்தி பெறும் உயிர்கள் சிவத்தோடு இரண்டறக் கலந்து ஒன்றுபட்டு சிவமாகிவிடுகின்றன. இந்த முக்திக்கு சாயுச்சியம் (இறைமை) என்று பெயர். இந்த நான்கு வகையான நெறிகளில் தாசமார்க்கமும் சத்புத்திர மார்க்கமும் புறவழிபாடு, சகமார்க்கமும் சன்மார்கமும் அக வழிபாடு. சிலம் நோன்பு என்ற புறவழிபாடுகள் செறிவு அறிவு என்ற அக வழிபாடுகளுக்கு ஆதாரமாகவும் ஆரம்பமாகவும் உள்ளன.

இவன்தான் இறைவன் இப்படித்தான் வழிபடவேண்டும் என்று வற்புறுத்திக் கூறும் வெறியாக இல்லாமல் இன்ன தன்மையுடையவன் என்று சுட்டிக் குறிக்க முடியாமல் எல்லாவற்றையும் கடந்து எல்லாமாக உள்ள கடவுளை உருவ வழிபாடு உருவம் இல்லாத அருவ வழிபாடு என எல்லாவிதமான வழிபாட்டு முறைகளிலும் வணங்குகின்ற இயற்கையான செம்மை நெறி சைவம் எனப்பட்டது. சிவபெருமானுக்கு செந்நெறியப்பர் என்று பெயர்.

ஆத்மாக்கள் தங்களுடைய பக்தி நிலைக்கும் பக்குவத்திற்கும் ஏற்ப புறவழிபாடுகளையோ அகவழிபாடுகளையோ அனைத்து வழிபாடுகளையுமோ மேற்கொண்டு வாழும்போது அவற்றின் ஆணவ இருள் குறைந்து இறையுணர்வு பெருகுகின்றது. அப்பொழுது எல்லாம் கடவுள் அருள், எல்லாம் நன்மைக்கே, யாவும் ஈசன் செயல், சர்வம் சிவமயம் என்ற பேருண்மை புலனாகிறது. நான் என்னுடையது என்ற உணர்வாகிய ஆணவ மலம் நீங்கி எல்லாம் ஈசன் அருள் என்று உணரும்போது இன்பங்களையும் துன்பங்களையும் ஒரே

மாதிரியாக சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உண்டாகின்றது. இந்தப் பக்குவ நிலைக்கு இருவினையொப்பு என்றும் மலபரிபாகம் என்றும் பெயர். இருவினையொப்பு நிலை அடைந்த ஆத்மாக்களைப் பிறவி உட்பட எல்லா மலங்களிலிருந்தும் நீக்கித் தூய்மைப்படுத்துவதற்காகப் பரமசிவம் உருவம் இல்லாமலும் பலப்பல உருவங்களுடனும் வெளிப்படுகின்றது. சூரியன் தோன்றும்போது இருள் ஓடி விலகுவது போல ஈசன் வெளிப்பட்டுக் காட்சி கொடுக்கும்போது ஆணவ இருள் முதலான அனைத்து மலங்களும் விலகுகின்றன. பரமனது திருக்காட்சியால் மாசுகள் நீங்கிச் சுத்தம் அடைந்த உயிர்கள் தூய்மையான சிவத்தைச் சென்று சேர்கின்றன. தாச மார்க்கம் சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்ற நான்கு வகையான பூஜை முறைகளுக்கு ஏற்ப உண்டாகும் நான்கு வகையான முக்தி நிலைகளில் சாலோகம் என்பது சிவலோகம் சேர்ந்து சிவகணங்கள் ஆதலாகும். சாமீபம் என்பது ஆலால சந்தரர் போன்று இறைவனுக்கு அருகே அணுக்கத் தொண்டர்களாய் இருப்பதாகும். சாரூபம் என்பது நந்தி தேவர் போன்று மான் மழு தாங்கி இறைவன் வடிவைப் பெற்று சதா சர்வ காலமும் இறைவனுடன் இருத்தலாகும். சாயுச்சியம் என்பது பராசக்தி போன்று பரமனுடன் ஒன்றாகிக் கலந்து இருப்பதாகும். இவ்வாறு ஆத்மாக்களைப் பற்றியுள்ள மலங்களை நீக்கித் தூய்மையாக்கித் தன்னுடன் சேர்த்துக் கொண்டு முக்தி அருள்வதற்காகப் பரமசிவம் கொண்ட பலப்பல வடிவங்களே லிங்கம், லிங்கோற்பவர், நடராசர், தட்சிணாமூர்த்தி, தாயுமானவர், அர்தநாரீஸ்வரர் (பெண்ணொருபாகன்) நந்திவாகனர்,- கங்காதரர், நீலகண்டர், சூலபாணி, சந்திரசேகரர் ஐந்து முகம் கொண்ட பஞ்சானனன், ஆறுமுகம் கொண்ட அதோமுக மூர்த்தி போன்று மற்றும் பலப்பல உருவங்கள்.

இவற்றுள் லிங்கம் லிங்கோற்பவர் என்பவை படைக்கும் தெய்வம் பிரம்மனுக்கும், காக்கும் தேவன் விஷ்ணுவிற்கும் உண்டான ஆணவ இருளைப் போக்கி மெய்ஞானம் அருளிய வடிவங்களாகும். ஆரம்பமும்

முடிவும் இல்லாத மாபெரும் தழல் தூணாய் நின்ற பரஞ்சோதியே லிங்கம். அந்த அரும்பெருஞ்சோதி லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு பிரம்ம விஷ்ணுக்களுக்குக் காட்சி தந்த அருட்பெருஞ்சோதி ஆண்டவரே லிங்கோற்பவர்.

தெய்வங்கள் முதல் மனிதர்கள் வரையுள்ள ஜீவராசிகளுக்கு மூன்று விதமான ஞானங்கள் உண்டாகின்றன. பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்ற மூவகை ஞானங்களிலே முதலாவது உலக அறிவு அல்லது பாசஞானம். இது கற்றல், கேட்டல், அனுபவம் போன்றவற்றால் உண்டாகும் அறிவு. இரண்டாவது உயிர் அறிவு அல்லது பசுஞானம். இது உயிரினங்கள் தம்மையே கடவுள் என்று சொல்லும் அறிவு. புலால் உண்ணும் மாமிசவாதிகளையெல்லாம் கடவுள் என்று வழிபடுவோர் உள்ளனர். இவ்வாறு உயிர்கள் தம்மையோ தம்மைப்போன்று பிறவிநோய் உள்ளவர்களையோ கடவுள் என்று கொண்டாடுவது பசுஞானம் எனப்படும். மூன்றாவது இறையறிவு அல்லது பதிஞானம். இது சிவனருளால் தோன்றும் செம்மையான முற்றறிவு ஆதலால் சிவஞானம் என்றும் திருவடிஞானம் என்றும் கூறப்படும். பரம்பொருளின் திருக்காட்சியால் தோன்றும் இந்த சிவஞானம் மூன்று காலங்களையும் உணர்கின்ற பேரறிவாகும். பால் மணம் மாறா பச்சிளம் மழலைப் பருவத்திலேயே அர்த்தநாரீஸ்வரனால் பால்சோறு ஊட்டி ஆட்கொள்ளப்பட்டு சிவஞானம் பெற்றவர் திருஞானசம்பந்தர்.

பிரம்மன் விஷ்ணு ருத்திரன் என்பவையெல்லாம் தெய்வப் பதவிகள். பாண்டியர், சேரர், சோழர், பல்லவர் போன்றே ஒருவருக்குப் பின் ஒருவராகப் பலப்பல பிரம்மர்களும் விஷ்ணுக்களும் ருத்திரர்களும் தோன்றி மறைகின்றனர்.

நூறுகோடி பிரம்மர்கள் நொந்தினார்

ஆறுகோடி நாராயணர் அங்ஙனே (அப்பர்)

கோன் என்று பல்கோடி உருத்திரர் போற்றும் (சம்பந்தர்)

என்று தமிழ்ப்பண்பாடு காத்த தேவாரத் திருமுறைத் தொடர்கள் கோடிக்கணக்கான பிரம்மர்களும் விஷ்ணுக்களும் ருத்திரர்களும் தோன்றி மறைந்துள்ளதைத் தெரிவிக்கின்றன. விஷ்ணுக்கள் பலர் என்பதை மகாவிஷ்ணு என்ற வழக்கும் காட்டுகின்றது. கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு பிரம்மனுக்கும் விஷ்ணுவுக்கும் பசுஞானம் உண்டானது. இதனால் இருவரும் தாமே கடவுள் என்று வாதிட்டனர். இருவரும் அழிக்கும் தெய்வமான ருத்திரனிடம் சென்றனர். ருத்திரன் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு சிவந்தவன் என்று பொருள். படைத்தல், காத்தல், அழித்தல், கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து இருத்தல், வெளிப்பட்டுக் காட்சி கொடுத்து முக்தி அருளுதல் என்ற ஐந்து தொழிலைப் புரியும் பரமசிவனைப் போன்று சிவந்த நிறம் கொண்டதால் ருத்திரன் என்ற சிவநாமத்தையே தனக்குப் பெயராகக் கொண்ட அழிக்கும் தெய்வம் அவர்களை நோக்கிக் கூறலானார். அழிப்பவனாகிய நான் அழிக்காமல் இருப்பதால்தான் உலகங்கள் காக்கப்படுகின்றன. உலகங்களை நான் அழிப்பதால்தான் அவை மீண்டும் படைக்கப்படுகின்றன. எனவே உங்கள் இருவர் தொழிலுமே அழிக்கும் தொழிலைச் சார்ந்து இருப்பதால் நீங்கள் இருவரும் சமமானவர்களே. மூன்று மூர்த்திகளாகிய நம் மூவருக்கும் மேலேயுள்ள ஐந்து தொழில் புரியும் சிவபெருமானே கடவுள். ஆண் தெய்வங்களான நாமெல்லாம் அவர் அருளால் பிரம்மன் விஷ்ணு ருத்திரர் என்ற பதவிகளை வகிக்கின்ற பரமாத்மாக்களே. நமக்கு முன்னர் எத்தனையோ மும்மூர்த்திகள் தோன்றி வாழ்ந்து மறைந்துள்ளனர். நமக்குப் பிறகும் எத்தனையோ மும்மூர்த்திகள் தோன்றி வருவார்கள். தோற்றம் முடிவு போன்ற எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட பரம்பொருளாகிய சிவனருள் இல்லாமல் மும்மூர்த்திகளாகிய நம்மால் எது ஒன்றையும் செய்ய முடியாது என்று உரைத்தான்.

அவன் அன்று மூவரால் ஆவது ஒன்று இல்லை

(திருமந்திரம்)

அழிக்காமல் அருளோடு அரனே காக்கின்றான்
அழித்தபின் அனைத்தையும் அன்புடன் படைக்கின்றான்
அனைவருக்கும் முதலும் முடிவுமாய் நிலைத்து
முத்தொழில் செய் முதுமுதல்வன் மங்கல ஈசனே

என்று ருத்திரன் உரைத்த உண்மையை உணராத பிரம்மனும் விஷ்ணுவும் தொடர்ந்து தாமே பிரம்மம் என்று வாதம் புரிந்தனர். இவர்களது சண்டையைக் கண்ட ருத்திரன் சிவபூஜை செய்து இருவருடைய துன்பத்தையும் மயக்கத்தையும் தெளிவிக்க வேண்டும் என்று பரப்பிரும்மத்தை வேண்டினார். அப்போது பிரம்ம விஷ்ணுக்களின் முன்பு பரமசிவம் துவக்கமும் முடிவும் இல்லாத பேரொளிப் பிழம்பாக, தழல் தூணாக, நெருப்புக்கம்பமாக, ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும்சோதியாக வெளிப்பட்டுக் காட்சி தந்தது. பரமசிவம் பரஞ்சோதியாக வெளிப்பட்டதை

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே
பிரமன் அரி என்று இருவரும் தம் பேதைமையால்
பரமம் யாம் பரமம் என்றவர்கள் பதைப்பு ஒடுங்க
அரனார் அழல் உருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ
(திருவாசகம்)

சதுர்முகன் தானும் மாலும் தம்மிலே இகலக் கண்டு
எதிர்முகம் இன்றி நின்ற எரியுரு அதனை வைத்தார்
(அப்பர்)

இருவர் துயரம் நீங்கவே அழலாய் ஓங்கி
அருள்கன் செய்தவள் (சம்பந்தர்)

என்று பரஞ்சோதியைக் கண்டு களித்து வாழ்ந்த தேவாரத் திருவாசக அருளாளர்கள் போற்றுகின்றனர்.

உண்மையான உலக அதிசயமான, உலக அற்புதமான தெய்வக் குழந்தை திருஞானசம்பந்தர் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள் எல்லாவற்றிலும் ஒன்பதாம் பாடல் இந்த அரும்பெருஞ்சோதியைப் போற்றி வணங்குகின்றது. வாழ்நாள் முழுவதும் பலப்பலமுறையும் பரமசிவத்தின் பரஞ்சோதி வடிவைக் கண்டு களித்த ஆளுடையடிகள் "கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை" என்று திருவாசகம் முழுவதும் பரஞ்சோதிப் பெருமானைப் போற்றுகின்றார்.

நமச்சிவாயத்தை நான் மறவேனே என்ற இராமலிங்க சுவாமிகளைப் பெரிதும் கவர்ந்த வடிவம் இந்த அரும்பெரும் சோதி வடிவமே. மாணிக்க வாசகரைப் பின்பற்றி வள்ளலாரும் அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்று பாடி வாழ்ந்தார்.

தங்கள் முன் தோன்றிய அற்புத நெருப்புக் கம்பத்தைக் கண்ட பிரம்மனும் விஷ்ணுவும் அதன் அடியையோ முடியையோ கண்டு அறிந்து முதலில்



மீண்டு வருபவரைக் கடவுள் என்று மற்றவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஒப்புக் கொண்டனர். மகாவிஷ்ணு பன்றி உருக்கொண்டு கீழே தோண்டிச் சென்றார். பிரம்ம தேவன் அன்னப் பறவையாகி மேலே பறந்து சென்றார். பின்னர் களைப்படைந்தபோது கழுகு உருக்கொண்டு தொடர்ந்து மேலே பறந்து சென்றார்.

கேழல் அன்னமாய்க் காண்டும் என்றார்
ஏனம் கழுகு ஆனவர் முன்னை என்கொல்
வானம் தலம் மண்டியும் கண்டிலாவாறே
காலம் பல செலவும் கண்டிலாமையினால்
கதறி ஓலமிட (சம்பந்தர்)

ஆணோ அலியோ அரிவையோ என்று
இருவர் காணாக் கடவுள் (திருவாசகம்)

தன்னை இன்னான் எனக் காண்ப அரிய தழல்சோதி
(சம்பந்தர்)

எனப் பலப்பல காலங்கள் சென்ற பின்பும் அந்தப் பரஞ்சோதியைப் பற்றி என்ன ஏது என்று ஒன்றுமே புரியாததால் இருவரும் சோர்வடைந்து தோல்வியுடன் மீண்டனர். தங்களுக்கு அப்பாற்பட்ட பராபரம் ஒன்று உண்டு என்று உணர்ந்தனர். மெய்யுணர்வு பெற்ற இருவரும் நான் எனது என்ற ஆணவம் நீங்கி அந்த அரும்பெருஞ்சோதியை அன்புடன் தொழுதனர். தங்களுக்குப் புரியும் முறையில் கண்களுக்குப் புலனாகும் வகையில் திருக்காட்சி தந்தருள்வாயாக என்று ஓம் நமச்சிவாய மகாமந்திரத்தை ஓதித் துதி செய்து முழுமுதற்பொருளை வழிபட்டனர். அப்போது பரமசிவம் தழல் தூண் நடுவிலிருந்து மானும் மழுவும் ஏந்தி அபய வரத நிலையில் நான்கு கரங்களுடன் ஆண்பால் வடிவுடன் பரமசிவனாக வெளிப்பட்டுப் பிரம்ம விஷ்ணுக்களுக்குத் திருக்காட்சி தந்தார். திருமுடியுச்சியும் திருவடிகளும் மறைந்து இருக்கும் வண்ணம் நெருப்புக் கம்பத்தின் நடுவே காட்சி தந்த பரமேஸ்வரனுக்கு கம்பர், லிங்கோற்பவர் என்று திருப்பெயர்கள். தழல் தூணே

வடமொழியில் ஜோதி லிங்கம் எனப்படுகின்றது. தழல் தூண் அதாவது ஜோதிலிங்கப் பரம்பொருள் தோன்றி உலகம் எங்கும் ஒளிவெள்ளம் ஆக்கிய திருநாளே கார்த்திகை தீபத் திருவிழா. ஜோதிலிங்கத்திலிருந்து பிரம்ம விஷ்ணுக்களுக்குப் பராபரன் திருக்காட்சி தந்த திருநாளே மகாசிவராத்திரிப் புண்ணியப் பெருநாள். இவ்வாறு பிரம்ம தேவனுக்கும் விஷ்ணுதேவனுக்கும் ஏற்பட்ட மயக்கத்தைத் தீர்ப்பதற்காகப் பேரொளிப் பிழம்பாக லிங்கமாக நின்றும் அவர்கள் மயக்கம் தெளிந்து பக்தியுடன் தொழுதபோது லிங்கோற்பவராக வெளிப்பட்டுக் காட்சி தந்தும் அருளிய பரமனின் தனிப் பெருங்கருணையை

காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத்து இருந்தவனும் காணாவண்ணம்
சீரொளிய தழல் பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியை
சிந்தைதனை மயக்கும் தீர்க்கும் ஏரொளியை
இருநிலனும் விசும்பும் விண்ணும் ஏழுலகும்
கடந்து அண்டத்து அப்பால் நின்ற பேரொளியை
செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே (அப்பர்)
வளம்பட்டவர் மலர்மேயவன் மாலும் ஒருவகையால்
அளம்பட்டு அறிவொண்ணாவகை அழல் ஆகிய
அண்ணல்
உளம்பட்டு எழு தழல் தூண் அதன் நடுவே ஒரு உருவம்
விளம்பட்டு அருள் செய்தான் இடம் விரிநீர் வியலூரே
(சம்பந்தர்)

என்று தெய்வீகத் தேவார மந்திரங்கள் போற்றுகின்றன. இவ்வாறு கண்களுக்குப் புலப்படாமல்

மறைந்து இருத்தலும் பக்குவம் அடைந்தவர்களின் முன்பு வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தலும் உண்டே தவிர தோற்றம் அவதாரம், பிறப்பு போன்றவையும் இவற்றால் உண்டாகும் குறிப்பிட்ட உருவம், பெயர், ஊர், உறவு, பகை போன்றவையும் விஸ்வேஸ்வரனுக்குக் கிடையாது. மறைத்தல் தொழில் புரியும் மகேஸ்வரன் பேரருளோடு தானாகத் தன்னை வெளிப்படுத்திக் காட்சி கொடுத்தால் தவிர யாராலும் தன் விருப்பப்படி ஈசனைக் காண முடியாது என்று சைவ சித்தாந்தம் கூறும் நடைமுறை இறை உண்மையை லிங்கமும் லிங்கோற்ப வடிவமும் எடுத்துக் காட்டுகின்றன.

பிரம்மனும் விஷ்ணுவும் லிங்கோற்பவ மூர்த்தியைப் போற்றிப் பணிந்து முக்தி பெற்ற பின்னர் தழல் தூணானது அணைந்து மலையானது. மலையாகத் தணிந்த நெருப்புக் கம்பத்தை ஜோதிலிங்கத்தை

கல்லுயிராய் நின்ற கனலே போற்றி

என்று இறைவன் அருளால் செந்தமிழ் ஞானமும் இசைபாடும் ஆற்றலும் பெற்ற திருநாவுக்கரசர் போற்றுகின்றார். இந்தக் கல்லுயிர்தான் அண்ணாமலை. அண்ணாமலை என்றால் உயர்ந்த மலை என்று பொருள். பிரம்மனும் விஷ்ணுவும் காணமுடியாத வண்ணம் உயர்ந்து விரிந்த நெருப்புத் தூண் மலையாக அமைந்ததால் திருவண்ணாமலை அக்கினிஸ்தலமாக உள்ளது.

மால் அறியா நான்முகனும் காணாமலை (திருவாசகம்)

எனப் பரஞ்சோதிப் பரமசிவம் மலையாக இருப்பதாலேயே அண்ணாமலையை வலம் வருவது கிரிவலங்களில் மிகச் சிறப்பாக விளங்குகின்றது. பிரம்மனும் திருமாலும் அண்ணாமலையை வலம் வந்து வணங்கி சோதிலிங்கப் பரம்பொருளைக் கல்லில் வடித்துப் பிரதிட்டை செய்து வழிபட்டு பின் சத்திய லோகத்திற்கும் வைகுண்டத்திற்கும் மீண்டு சென்றனர். ஜோதிலிங்கம் கல்லில் வடிக்கப்பட்டபோது கல்தூண், கந்து என்று அழைக்கப்பட்டது. இதை

முழுமுதலாய மூவுலகும் முடிவு ஒன்று இல்லாக் கல்தூணை
பொழில் ஏழும் தாங்கி நின்ற கல்தூண் (அப்பர்)

மலரணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ
வம்பலர் சேர்க்கும் கந்து (சங்ககாலப் பாடல்)

எனப் பல்லவர் காலத்துத் தேவாரமும் மூவேந்தர் காலத்திய சங்ககாலப் பாடலும் போற்றுகின்றன.

பரமசிவம் எத்தனையோ வடிவங்களில் வெளிப்பட்டாலும் லிங்கப்பரம்பொருளே திருக்கோயில்களில் மூலவராக விளங்குகின்றது. லிங்கம் என்பது ஆண் என்றோ பெண் என்றோ அலி என்றோ இன்னது என்றோ சுட்டிக் கூற முடியாத வகையில் உள்ள அருவுருவமாகும். அங்கங்கள் இல்லாத ஒரு மெய்ப் பொருளே பரம்பொருளே லிங்கம். எல்லாம் கடந்த இந்தக் கடவுள் வடிவத்தை, முழுமுதற்பொருளை

பெண்ணல்லை ஆண் அல்லை பேடும் அல்லை (அப்பர்)

பெண்டிர் ஆண் அலி என்று அறியொண்கிலை (திருவாசகம்)

கண்ணின்றிக் காணும் செவியின்றிக் கேட்டிடும் (திருமந்திரம்)

என்று பரம்பொருளின் திருவருளால் பிறந்த தெய்வீகத் திருமுறைகள் போற்றுகின்றன. அங்கங்கள் இல்லாத சுட்டிக் கூறமுடியாத மெய்ப் பொருளான லிங்கத்தை, பிறவிப் பிணி நீக்கும் புனிதப் பொருளை

கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்று ஈண்டு வாரா நெறி (திருக்குறள்)

என்று திருவள்ளுவ நாயனார் பாடியுள்ளார்.

எல்லாவற்றையும் கடந்து உள்ள கடவுள் வடிவமான லிங்கம் ஓங்காரப் பொருளாகும். லிங்கோற்பவர் ஓங்காரேஸ்வரர் ஆவர். அஉம் என்ற ஒலிகள் சேர்ந்து

ஓங்கார ஒலி உண்டாகின்றது. லிங்கமும் லிங்கம் அமைந்துள்ள ஆவுடையாரும் பீடமும் சேர்ந்து ஓங்கார வடிவமாகும் என்று ஆகமங்கள் அறிவிக்கின்றன. லிங்கம் அதாவது தூண்பகுதி அகரத்தைக் குறிக்கின்றது. ஆவுடையார் பகுதி உகரம் ஆகும். கீழேயுள்ள பீடம் மகரமாகும் என்று திருமூலர் தெரிவிக்கின்றார்.

இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற்கண்ட நிறையும் அகாரம்
இலிங்க வட்ட நிறையும் உகாரம்
இலிங்க மகார நிறை விந்து நாதமே

என்பது திருமந்திர ஆகமம், லிங்கம் ஓங்காரமாக இருப்பதால் லிங்கோற்பவருக்கு ஓங்காரேஸ்வரர் என்று திருநாமம். தமிழ் நாட்டிலுள்ள ஓமாம்புலியூர், மத்தியப் பிரதேசத்திலுள்ள ஓங்காரேஸ்வரம் வெளிநாட்டிலுள்ள ஓமன் போன்றவையெல்லாம் ஓங்காரத் தலங்களாகும்.

லிங்கமானது கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட இயற்கையான திருவுருவங்களாகும். மனிதர்களால் செதுக்கப்படாமல், வடிக்கப்படாமல் இயற்கையாகவே லிங்கப்பரம்பொருள் கிடைக்கின்றது. மத்தியப் பிரதேசத்தில் பாயும் புனித நதிகளில் ஒன்றான நர்மதையாற்றங் கரையில் எண்ணற்ற லிங்கங்கள் கிடைக்கின்றன. வடநாட்டுக் கோயில்களில் உள்ள பெரும்பாலான லிங்கங்கள் இங்கிருந்து பலரால் பெறப்பட்டவையே. ஒவ்வொரு முறை எடை பார்க்கும் போதும் எடை வெவ்வேறாக இருப்பது இந்த லிங்கங்களின் தனிச் சிறப்பாகும். இத்தகைய சிறப்பு மிக்க லிங்கங்கள் பாணலிங்கங்கள் எனப்படுகின்றன. வடக்கே இமயமலையில் உள்ள கேதாரம், தெற்கே ஆக்கூரில் உள்ள தான்தோன்றி மாடம் போன்று பலப்பல தலங்களில் தானே வெளிப்பட்ட லிங்கங்கள் உள்ளன. வடக்கே அமர நாதத்தில் ஆண்டுதோறும் ஆடி ஆவணி மாதங்களில் பனி லிங்கம் வெளிப்பட்டுக் காட்சி தந்து பின்னர் மறைந்து விடுகின்றது. அன்று பிரம்ம விஷ்ணுக்களுக்கு அனல் லிங்கமாகக் காட்சி தந்த பரப்பிரும்மம் இந்தக்

கலியுகத்திலும் லட்சக் கணக்கான பக்தப் பெருமக்களுக்கு பனிலிங்கமாகக் காட்சி கொடுக்கின்றார். சென்னையை அடுத்த திருப்பாச்சி (திருப்பாசூர்) என்ற திருத்தலத்தில் மூங்கில் லிங்கம் உள்ளது. இம்முறையில் தானே வெளிப்பட்டுள்ள லிங்கங்கள் எல்லாம் சுயம்புலிங்கங்கள் என்றும் சிவலிங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. பக்தர்களால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கங்கள் எல்லாம் அந்தந்த பக்தர்களின் பெயரால் இராமலிங்கம், அகத்திய லிங்கம், கணேசலிங்கம் என்று வழங்கப்படுகின்றன. லிங்கப் பரம்பொருளானது அரிசி (சாதம்), மண், சந்தனம், வெண்ணை, முத்து, பவளம், தங்கம், வெள்ளி, மஞ்சள் போன்ற பொருட்களால் உருவாக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. அரசர்களின் வழிபாட்டிற்கு உரியவை தங்க லிங்கம், அந்தணர்களின் பூஜைக்கு உரியவை ஸ்படிக லிங்கம், வணிகர்களின் வழிபாட்டிற்குத் தகுந்தவை கோமளலிங்கம், சூத்திரர் மற்றும் பிற சாதியினரின் வழிபாட்டிற்குத் தக்கவை பாணலிங்கம் என்று திருமூலர் தெரிவிக்கின்றார்.

பிரம்ம தேவனும் விஷ்ணு தேவனும் அடிமுடி காணமுடியாதவாறு நின்ற அரும்பெருஞ்சோதிதான் லிங்கம். ஜோதிமயமான இந்த லிங்கம்தான் எல்லாத் திருக்கோயில்களிலுமே மூலவராக எழுந்தருளியுள்ளது. ஆயினும் பிரம்ம விஷ்ணுக்களுக்குக் காட்சி கொடுத்தது போன்று பரஞ்சோதியாக வெளிப்பட்டுப் பக்தர்களுக்குத் திருக்காட்சி கொடுத்த தலங்கள் ஜோதிலிங்கத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஜோதிலிங்கத் தலங்கள் எண்ணற்றவை. ஆனாலும் பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்கள் என்பவை இராமாயண காலத்திலேயே அதாவது திரேதாயுகத்திலேயே இன்றைக்கு லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தொகுக்கப்பட்டுவிட்டன. கோதண்டராமன் பூஜை செய்து வழிபட்ட இராமேஸ்வரமே பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களில் பன்னிரண்டாவதாக இறுதியாக விளங்குகின்றது. பன்னிரண்டு ஜோதிலிங்கத் திருத்தலங்களின் பெயரையும் அங்கு விளங்கும் திருக்கோயிலின் பெயரையும் ஒரு சமஸ்கிருதப் பாடல் மிக அழகாகக் கூறியுள்ளது.

சௌராஷ்ற்றே சோமநாதம்
ஸ்ரீசைலே மல்லிகார்ஜுனம்
உஜ்ஜன்யாம் மகாகாளம்
ஓங்காரம் மமலேஷ்வரம்
பரல்யாம் வைஜயநாதம்
டாகின்யாம் பீமசங்கரம்
சேதுபந்தே து ராமேஷ்ம்
நாகேஷம் தாருகாவனே
வாரணாஸ்யம் து விஷ்வேஷம்
த்ரயம்பகம் கௌதமீடே
ஹிமாலயேது கேதாரம்
குஷ்மேஷம் ச ச்வாலயே

சௌராட்டிரத்தில் (குஜராத்) சோமநாதம் என்ற கோயில் உள்ளது. ஸ்ரீ சைலம் என்ற ஊரில் மல்லிகார்ஜுனம் சிறப்புறுகின்றது. உஜ்ஜயினியில் மகாகாளம் விளங்குகின்றது. ஓங்காரம் என்ற தலத்தில் மமலேஸ்வரம் என்ற கோயில் இருக்கின்றது. பரலி என்ற இடத்தில் வைஜயநாதம் என்ற ஆலயம் பொலிவுறுகின்றது. டாகின் (பூனா) என்ற ஊரில் பீமசங்கரம் திகழ்கின்றது. சேது பந்தனம் என்ற இடத்தில் இராமேஸ்வரம் சிறப்பாக உள்ளது. தாருகாவனம் என்றதலத்தில் நாகேஸ்வரம் திகழ்கின்றது. வாரணாசி என்ற ஊரில் விஸ்வேஸம் விளங்குகின்றது. கௌதமி என்ற நதியின் கரையில் திரியம்பகேஸ்வரத்தைக் காணலாம். இமாலய மலையில் கேதாரம் இருக்கின்றது. குஷ்மேசமும் சேர்ந்து இத்தகைய சிவாலயங்களாக சிறப்புறுகின்றன.

பிரம்ம முராரி சுர அர்ச்சித்த லிங்கம்

என்று பிரம்ம விஷ்ணுக்களால் அர்ச்சனை செய்து வழிபடப்படுவது லிங்கம் என லிங்கப் பரம்பொருளைப் போற்றும் ஆதிசங்கராச்சாரியார் பன்னிரண்டு சோதி


லிங்கத் தலங்களையும் போற்றிப் பாடித் துதித்துள்ளார்: பாடப்பட்ட பல்லாயிரக் கணக்கான தேவாரத் திருப்பதிகங்களிலே பெரும்பாலானவை சமணகுருமார்களால் அழிக்கப்பட்டு விட்டதால் கிடைத்துள்ள மிகச் சொற்ப அளவு தமிழ்ப் பதிகங்களில் ஒரு சில ஜோதிலிங்கத் தலங்களின் பெயர்களே காணப்படுகின்றன. இராமேஸ்வரம், ஸ்ரீசைலம், கேதாரம் ஆகிய மூன்று திருத்தலங்களுக்கும் தனியே திருப்பதிகங்கள் உள்ளன. லிங்கத்தையும் லிங்கோற்பவரையும் பணிந்து வழிபடுகின்றவர்கள் எல்லாவிதமான நற்பலன்களையும் பெற்று தலைசிறந்து விளங்கி வாழ்வார்கள் என்பது ஞானக்குழந்தையின் அருள்வாக்கு

முயன்றவர் அருள்பெறு முதுகுன்றம் மேவி அன்று
இயன்றவர் அவர் அறிய அரியீரே
இயன்றவர் அவர் அறிய அரியீர் உமை ஏத்துவார்
பயன்தலை நிற்பவர் தாமே (சம்பந்தர்)

4. பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்கள்

பரப்பிரும்மத்தின் திருக்காட்சி கண்டவர்களும் பரப்பிரும்மத்தின் பேரருளைப் பெற்றவர்களும் அருளிச் செய்த தேவாரம் திருவாசகம் முதல் பெரிய புராணம் வரையிலான தெய்வீக நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. இவ்வாறே பரம்பொருள் ஜோதியாகக் காட்சி தந்து பக்தர்களுக்கு அருள்புரிந்த திருத்தலங்கள் பன்னிரண்டாக அமைக்கப்பட்டன. வடக்கே இமயம் முதல் தெற்கே குமரிவரையுள்ள பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்கள் பழம்பெரும் பாரதத் திருநாட்டின் ஒற்றுமையை எடுத்துரைக்கும் பாலமாக உள்ளன. லட்சக்கணக்கான ஆண்டுகளாக ஒரே நாடாகத் திகழ்ந்து வரும் உன்னதத்தைக் காட்டுகின்றன.

பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களின் பூகோள அமைப்பு



பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்கள்

	ஜோதிலிங்கம்	பிரதிட்டை/வழிபாடு	தலம்	நகரம்	மாநிலம்
1.	ஸ்ரீ திருயம்பகேஸ்வரர்	பிரம்மன், விஷ்ணு, ருத்ரன்	கோதாவரி நதிக்கரை	நாசிக்	மகாராஷ்டிரம்
2.	ஸ்ரீ விஸ்வேஸ்வரர்	சுயம்பு/விஷ்ணு	கங்கை நதிக்கரை	வாரணாசி	உத்திரப் பிரதேசம்
3.	ஸ்ரீ சோமேஸ்வரர்	சந்திரன்	கடற்கரைத் தலம்	சோம்நாத்	குஜராத்
4.	ஸ்ரீ மகாகாளேஸ்வரர்	மகாகாளி	சிப்ரா நதிக்கரை	உஜ்ஜயினி	மத்தியப் பிரதேசம்
5.	ஸ்ரீ ஓங்காரேஸ்வரர் (ஸ்ரீ அமலேஸ்வரர்)	சுயம்பு	மலைக்கோயில் நர்மதை நதிக்கரை	இந்தூர்	மத்தியப் பிரதேசம்
6.	ஸ்ரீ கேதாரேஸ்வரர்	சுயம்பு/உமாதேவி	மலைக்கோயில்	கேதர்நாத்	உத்தராஞ்சல்
7.	ஸ்ரீ கிராணேஸ்வரர் (ஸ்ரீ குஷ்மேஸ்வரர்)	பராசக்தி	ஊர்த்தலம்	எல்லோரா (ஔரங்கபாத்)	மகாராஷ்டிரம்
8.	ஸ்ரீ மல்லிகார்ஜுனர் (ஸ்ரீ சைலநாதர்)	மகாலட்சுமி	மலைக்கோயில்	ஸ்ரீ சைலம்	ஆந்திரப் பிரதேசம்
9.	ஸ்ரீ நாகேஸ்வரர்	நாகதெய்வம்	தாருகாவனம் காட்டுத்தலம்	ஔண்டா	மகாராஷ்டிரம்
10.	ஸ்ரீ வைஜயநாதர்	பராசக்தி, லட்சுமி சரஸ்வதி	ஊர்த்தலம்	பரலி	மகாராஷ்டிரம்
11.	ஸ்ரீ பீமசங்கரர்	கும்பகர்ணனின் மகன் பீமன்	மலைக்கோயில்	டாகினி (பூனா)	மகாராஷ்டிரம்
12.	ஸ்ரீ இராமேஸ்வரர்	இராமர்	கடற்கரைத் தலம்	இராமேஸ்வரம்	தமிழ்நாடு

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே (திருவாசகம்) என உருவம் இல்லாத சிவபெருமான் ஜோதியாக வெளிப்பட்டுக் காட்சி கொடுத்த பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களில் திரியம்பகேஸ்வரம், குஷ்மேஸ்வரம், நாகேஸ்வரம், வைஜயநாதம், பீமசங்கரம் ஆகிய ஐந்து திருத்தலங்கள் மகாராஷ்ற்றத்தில் உள்ளன. இவற்றில் திரியம்பகேஸ்வரம் நாசிக் அருகே உள்ளது. குஷ்மேஸ்வரம் எல்லோரா அருகில் உள்ளது. நாகேஸ்வரம் ஔண்டா என்ற இடத்தில் உள்ளது. வைஜய நாதம் பரலி என்ற ஊரில் விளங்குகின்றது. பரலி வைஜயநாதம் என்று ஊரும் வழங்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் ஆவுடையார்க்கோயில், வைதீஸ்வரன் கோயில், காளையார் கோயில் என்று இங்கு கோயிலின் பெயரே ஊருக்கும் பெயராக உள்ளது போன்று பரலி வைஜயநாதம் என்ற கோயிலின் பெயரே ஊருக்கும் பெயராக விளங்குகின்றது. பீம சங்கரம் பூனாவிற்கு அருகே அமைந்துள்ளது.

மகாகாளம் மத்தியப்பிரதேசத்தில் உஜ்ஜயினியில் உள்ளது. அமலேஸ்வரம் மத்தியப்பிரதேசத்திலிருந்து புதியதாகப் பிரித்து அமைக்கப்பட்ட சத்தீஸ்கர் என்ற மாநிலத்தில் உள்ள ஓங்காரேஸ்வரம் என்ற இடத்தில் உள்ளது.

காசித் திருத்தலம் உத்தரப்பிரதேசத்தில் உள்ளது. கேதாரம் உத்தரப்பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்ட உத்தராஞ்சல் என்ற மாநிலத்தில் உள்ளது. சோமநாதம் குஜராத் மாநிலத்தில் உள்ளது.

ஸ்ரீசைலம் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ளது. இராமேஸ்வரம் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. இந்தப் பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்கள் பாரத நாடு முழுவதிலும் பரவி நாட்டைக் காக்கும் அரணாக விளங்குகின்றன.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக ஒளிவீசி நின்ற பரஞ்சோதி எழுந்தருளியுள்ள ஜோதிலிங்கத் தலங்களும் மற்ற சிவாலயங்களைப் போன்றே காடு, மலை, கடல், நதி, ஊர், என எல்லா இடங்களிலும் அமைந்துள்ளன.

பூவில் நாற்றம் போன்று உயர்ந்து
எங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமை (திருவாசகம்)

எனப் பூவின் வாசனை போன்று உள்ளும் புறமும் எல்லா இடத்திலும் நிறைந்துள்ள பரமசிவம் எழுந்தருளியுள்ள பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களில் கடல் தலங்கள் இரண்டு. மலைத்தலங்கள் நான்கு. ஆற்றுத் தலங்கள் மூன்று. காட்டுத்தலம் ஒன்று. ஊர்த்தலங்கள் இரண்டு.

இராமேஸ்வரம் சோமநாதம் ஆகிய இரண்டும் கடற்கரைத் தலங்கள். கேதாரம், பீமசங்கரம், ஸ்ரீசைலம், அமலேஸ்வரம் ஆகிய நான்கும் மலைக்கோயில்களாகும். இவற்றுள் அமலேஸ்வரம் நர்மதையாற்றங்கரையிலுள்ள குன்றின் மீது அமைந்துள்ளது. தரையிலிருந்தே கோயில் கண்களுக்குப் புலனாகும். திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளித் தாயுமானவர் கோயில் போன்று படியேறிச் சென்றால் போதும் கோயிலை அடைந்து விடலாம். ஆனால் மற்ற மூன்று தலங்களும் உயரமான மலைமீது அமைந்துள்ளதால் மலையின் மீது பயணம் செய்த பிறகே கோயிலைச் சென்று அடைய முடியும், பீமசங்கரம் கோயிலை அடைவதற்கு மலைமேல் சென்ற பின்பு படிக்கட்டுகள் கீழே இறங்கிச் செல்கின்றன.

நாகேஸ்வரம் காட்டுத் தலமாகும். இந்தக் காடு இருந்த பகுதிக்குத் தாருகாவனம் என்று பெயர். ஆலங்காடு, மறைக்காடு, கடம்பவனம் (மதுரை) போன்று தாருகாவனம் காட்டுத் தலங்களில் ஒன்று.

திரியம்பகேஸ்வரம், உஜ்ஜயினி மகாகாளம், காசி விஸ்வநாதம் ஆகிய மூன்று திருக்கோயில்களும் ஆற்றங்கரையில் அமைந்துள்ளன. திரியம்பகேஸ்வரம் கோதாவரி நதிக்கரையிலும் உஜ்ஜயினி மகாகாளேஸ்வரம் சிப்ரா என்ற நதிக்கரையிலும் காசி விஸ்வேஸ்வரம் கங்கை நதிக்கரையருகேயும் அமைந்துள்ளன.

குஷ்மேஸ்வரம், வைஜயநாதம் ஆகிய இரண்டு தலங்களும் ஊர்த்தலங்களாகும். தமிழ்நாட்டிலுள்ள

காட்டுத்தலங்கள், கடல் தலங்கள், மலைத்தலங்கள், ஊர்த்தலங்கள், பள்ளித்தலங்கள், சோலைத் தலங்கள், எனப் பலப்பல தலங்களையும் திருநாவுக்கரசர் ஒரு பதிகம் முழுமையும் தனித்தனியாகப் போற்றியுள்ளார்.

பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களிலே ஒங்காரேஸ்வம், காசி, கேதாரம் ஆகிய தலங்களில் உள்ளவை பரப்பிரும்மம் தானே வெளிப்பட்டு அருளிய சுயம்பு லிங்கங்களாகும். மற்ற லிங்கங்கள் எல்லாம் தெய்வங்கள், தேவர்கள், அசுரர், நாகம், மனிதர் என மும்மூர்த்தி முதல் நாகம் வரையிலான பரமாத்மா மற்றும் ஜீவாத்மாக்களால் பிரதிட்டை செய்யப்பட்டவையாகும்.

படைக்கும் தெய்வம் பிரம்மன், காக்கும் தெய்வம் விஷ்ணு, அழிக்கும் தெய்வம் ருத்திரன் ஆகிய மூன்ற மூர்த்திகளும் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில் புரியும் பரமேஸ்வரனைப் பூஜை செய்த தலமே திரியம்பகேஸ்வரம்.

பராசக்தி லிங்கப்பரம்பொருளைப் பிரதிட்டை செய்து குங்குமப் பூவால் அர்ச்சனை செய்து வழிபட்ட தலமே குஷ்மேஸ்வரம். ஸ்ரீசைலத்திலுள்ள லிங்கம் மகாலட்சுமியால் பிரதிட்டை செய்து பூஜிக்கப்பட்டதாகும். காளியும் மாகாளர் என்ற சிவகணமும் பூஜை செய்து முழுமுதற்பொருளை வழிபட்ட இடமே உஜ்ஜயினி மகாகாள லிங்கம்.

வாசுகி என்ற நாகத்தால் பிரதிட்டை செய்து வழிபடப்பட்டதே நாகேஸ்வரம். சந்திரன் பூஜை செய்து வாழ்வு பெற்ற தலமே சோமநாதம். லட்சுமி, சரஸ்வதி, பராசக்தி என்ற மூன்று தேவியர்களும் பிரதிட்டை செய்து லிங்கப் பரம்பொருளைப் பூஜித்த தலம் பரலி வைஜயநாதம். தசரத மைந்தன் இராமன் தன் மனைவி சீதையுடனும் தம்பி லட்சுமணனுடனும் பிரதிட்டை செய்து லிங்கப் பரம்பொருளைப் பூஜை செய்து பாவம் நீங்கிய தலமே இராமேஸ்வரம். கும்பகர்ணனின் மகன் பீமன் என்ற அசுரன் பிரதிட்டை செய்து பூஜை புரிந்த தலமே பீம சங்கரம். இவ்வாறு தெய்வம் தேவர் அசுரர் மனிதர்

பாம்பு என எல்லா ஜீவராசிகளுக்கும் சிவபொருமான் இறைவனாக கடவுளாக உள்ளார். தெய்வங்களுக்கு ஒரு கடவுள், தேவர்களுக்கு ஒரு கடவுள், அசுரர்களுக்கு ஒரு கடவுள், மனிதர்களுக்கு ஒரு கடவுள், மிருகங்களுக்கு ஒரு கடவுள், படைப்பதற்கு ஒரு கடவுள், காப்பதற்கு ஒரு கடவுள், அழிப்பதற்கு ஒரு கடவுள் என்றெல்லாம் பல வகைக் கடவுள்களைச் சொல்லலாம். இறைவனாக இருந்து அருள்புரிபவனே பரப்பிரும்மம். இவ்வாறு எல்லோருக்கும் இறைவனாகப் பரமசிவன் விளங்குவதாலேயே சர்வேஸ்வரன், விஸ்வேஸ்வரன், பரமேஸ்வரன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். எல்லா சீவராசிகளுக்கும் இறைவனாக இருக்கும் சிவபெருமானை

எல்லார்க்கும் தான் ஈசன்

எவ்வுயிர்க்கும் இயல்பானான்

என்று ஓங்காரம் உணர்ந்த மாணிக்கவாசகப் பெருமான் போற்றுகின்றார். யார் வழிபட்டாலும் இல்லை என்று சொல்லாமல் அருள் தந்து வாழ வைத்து எல்லோருக்கும் தாய்தந்தையாக விளங்கும் பரமசிவத்தின் மாப்பெருங்கருணையை

எல்லார்க்கும் இல்லை என்னாது அருள் செய்வார்

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றியுள்ளார்.

சுயம்புலிங்கங்களும் ஒருவரால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கங்களும் காலப்போக்கில் மிகப் பெரிய கோயில்களாக வளர்ச்சியடைகின்றன. பழங்காலத்தில் கோயில்கள் மண், மரம், கல், உலோகம் எனப் பலவிதப் பொருட்களால் பலவகையான அமைப்புகளில் கட்டப்பட்டன. கோயில்களுக்குத் தளி என்றும் பெயர் உண்டு. மண்ணாலான கோயில்கள் மண்டளிகள் என்றும் கல்லாலான கோயில்கள் கற்றளிகள் என்றும் பொன்னாலான கோயில்கள் மணிக்கோயில்கள் என்றும் வழங்கப்பட்டன. எட்டு வகையான கோயில்களைத் திருநாவுக்கரசர் தேவாரம் குறிப்பிடுகின்றது. மாடக்கோயில், மணிக்கோயில், கரக்கோயில், ஞாழல்

கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், ஆலக்கோயில், திருக்கோயில், என்ற இந்த எட்டு வகையான கோயில்கள் உலகம் எங்கும் இருந்தன. பெரிய பெரிய கோயில்களுக்கு மாடக் கோயில்கள் என்று பெயர். பொற்கோயில்களுக்கு மணிக்கோயில்கள் என்று பெயர். பொன்னால் வேயப்பட்ட கூரை, தங்கக் கலசம், தங்கத் திருமேனிகள் ஆகியவற்றைக் கொண்டு பொன்னால் பொலிவுறும் கோயில்கள் மணிக் கோயில்கள் எனப்பட்டன. பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்கள் மாடக்கோயில்களாகவும் மணிக்கோயில்களாகவும் விளங்கின.

பாலில் நெய்போல பூவில் மணம் போல கண்களுக்குப் புலனாகாமல் மறைந்து எங்கும் நிறைந்துள்ள பரமசிவம் சுட்டிக் குறிக்க முடியாத அருவுருவமான லிங்கப்பரம் பொருளாகவும் நடராஜர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், கைலைநாதர் அர்தநாரீஸ்வரர், ஏகபாதமூர்த்தி போன்ற பல்வேறு உருவங்களுடனும் எழுந்தருளியுள்ள இடமே சிவாலயம். இவ்வாறு எல்லாவற்றையும் கடந்துள்ள கடவுள் பலப்பல வடிவங்களில் எழுந்தருளி அருளைப் பொழியும் இடம் ஆதலால் சிவாலயங்கள் உலகத்தில் மிகப் புனிதமான இடங்களாக விளங்குகின்றன. தெய்வங்கள் முதல் தாவரங்கள் வரை எல்லா ஜீவராசிகளுக்கும் பரமேஸ்வரன் இறைவனாக, அரசனாக உள்ளார். கோ என்றால் அரசன் என்று பொருள்.

பல்லுயிர்க்கும் கோனாகி நின்றவா கூறுதும் காண்
(திருவாசகம்)

என எல்லா உயிரினங்களுக்கும் அரசனாக உள்ள அகிலாண்டேஸ்வரன் எழுந்தருளியுள்ள இடம் கோயில் என்று அழைக்கப்பட்டது. அரசனைச் சுற்றிப் பரிவாரங்கள் காணப்படும். ஆதலால் இந்த உலகத்தின் அரசனான ஈசனைச் சுற்றிலும் பிரம்மன், விஷ்ணு, பராசக்தி, லட்சுமி, சரஸ்வதி, பிள்ளையார், முருகன், சூரியன், சந்திரன், நவகிரகம், பாம்புகள், தாவரங்கள்

என சிவாலயங்களில் எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் ஒரு இடம் உள்ளது. சிவாலயங்கள் மற்ற வழிபாட்டுத் தலங்களைப் போன்று இந்தப் பூமியில் பிறந்து வளர்ந்து மடிந்து போன ஒருவருடைய சிலையைக் கொண்டுள்ள நினைவிடமும் இல்லை. எங்கும் நிறைந்து உள்ள எல்லோருக்கும் சொந்தமான எல்லோருக்கும் தாய்தந்தையான சர்வேஸ்வரனின் திருவருளைத் திருமேனியில் எழுந்தருளுவித்து அந்தப் பரப்பிரும்மத்திற்குப் பூஜைகள் செய்யப்படும் இடமே சிவாலயங்கள். மக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாள்தோறும் காலையும் மாலையும் தவறாமல் கடவுளுக்கு வழிபாடுகள் நடத்தப்படும் புனிதமான இடமே கோயில். அனைத்துப் பொருட்களிலும் அனைத்து ஜீவராசிகளிலும் மூச்சுக்காற்று போன்று உள்ளும் புறமும் நீக்கம் இல்லாமல் நிறைந்துள்ள பரமசிவம் பெருங்கருணையோடு திருவுருவங்களின் மூலம் பேரருளைப் பொழிகின்ற புனிதமான இடமே கோயில். எல்லா இடங்களிலும் உள்ள காற்றை விசிறி போன்ற பல கருவிகளின் மூலம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெறுவது போல, பூமிக்கு அடியில் எங்கும் உள்ள நீரை குழாய், கிணறு மூலம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெறுவது போல பார் முழுவதும் நிறைந்துள்ள பரப்பிரும்மத்தின் திருவருளைத் திருமேனிகள் மூலம் பெறுகின்ற ஒரு குறிப்பிட்ட இடமே கோயில்.

நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே (திருவாசகம்)

என எள்ளுக்குள் இருக்கும் எண்ணை போன்று பரமசிவம் கல், செம்பு உட்பட எல்லாவற்றிலும் இயல்பாகவே எழுந்தருளியுள்ளார். உள்ளும் புறமும் எங்கும் உள்ள காற்று புல்லாங்குழல் மூலம் இனிய இசையாக வருவது போன்று எங்கும் நிறைந்துள்ள ஈசனின் இன்னருள் திருமேனிகள் மூலம் வருகின்றது. மூங்கில் கட்டையானது இசைக்கருவியாகி இனிய ஒலியை உண்டாக்குவது போல் கல்லும் செம்பும் கடவுளின் திருமேனிகளாகத் திருவருளைப் பொழிகின்றன. காகிதம்

விலைமதிப்புள்ள நாணயமாக மாறுவது போன்று கல்லும் செம்பும் திருவருளைப் பொழியும் கடவுளின் திருமேனிகளாக மாறும் இடமே திருக்கோயில். எல்லா இடத்திலும் உள்ள இறைவனது திருவருளைத் திருமேனிகள் மூலம் எல்லோரும் பெற வைக்கும் புனிதமான நிகழ்ச்சியே பிராணப் பிரதிட்டை, கும்பாபிஷேகம் போன்ற தெய்வீக நிகழ்ச்சிகள். அந்தப் பரம்பொருளாலேயே கும்பாபிஷேகத்திற்கு நாள் குறிக்கப்பட்ட பெருமையும் புனிதமும் கொண்டது காஞ்சி கைலாசநாதர் திருக்கோயில். இதை அக்கோயிலின் கல்வெட்டுகளும் பெரியபுராணமும் எடுத்துரைக்கின்றன.

கடவுள் எழுந்தருளியுள்ள கோயில்கள் இசை நடனம் இலக்கியம் யோகம், தவம், தத்துவம், சிற்பம், சரித்திரம், சமூகம், உடற்பயிற்சி, விஞ்ஞானம், வரலாறு, ஜோதிடம், திருவிழா, பண்பாடு கலாச்சாரம் சுற்றுப்புறத் தூய்மை, நீதி, சட்டம், நியாயம், தானதர்மம் அன்றாட வாழ்வு ஆகிய எல்லாவற்றுக்கும் மையமாக உள்ளன. மனித வாழ்க்கையின் நடுநாயகமாக விளங்குகின்றன. இதுமட்டுமன்றி வெள்ளம், புயல், வறட்சி போன்ற ஆபத்துக்காலங்களில் மக்களைப் பாதுகாக்கும் அறநிலையங்களாக உள்ளன. இதனாலேயே கோயில்களுக்கு அறநிலையத்துறை என்று பெயர். கோயில் திருப்பணிகள் செய்து கோயிலைப் பாதுகாப்பவர்களுக்கு அறங்காவலர்கள் என்று பெயர். இத்தகைய அறங்காவல் பெண்டிர்களைக் கோயில் பிணாப் பிள்ளைகள் என்ற திருவாசகம் தெரிவிக்கின்றது. கோயிலுக்கு வரும் மக்களுக்கும் தானதரும சிந்தனை தன்னாலேயே வந்து விடுகின்றது. இதனால் தானம் பெற விரும்புகின்ற கூட்டத்தினருக்கு கோயில் வாசலே இடமாக உள்ளது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று
கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் (ஔவையார்)
திருக்கோயில் இல்லாத திரு இல் ஊரும்
......ஊரல்ல அடவி காடே (அப்பர்)

என மிருகங்கள் வாழும் கொடிய காட்டிலிருந்து நாட்டை வேறுபடுத்திக் காட்டுபவை கோயில்கள். மிருகப் பிறவியிலிருந்து மனிதப் பிறவியைப் பிரித்துக் காட்டுபவை கோயில்கள். திருக்கோயில்கள் ஆத்மாவையும் வாழ்க்கையையும் உன்னதமாக்குகின்றன. புண்ணிய தீர்த்தங்களையும் தலமரங்களையும் கொண்டு சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக்குகின்றன. வலம் வந்து விழுந்து எழுந்து வணங்கித் துதி செய்வதால் மக்களின் உடலும் உள்ளமும் உயிரும் நலமடைகின்றன.

சர்வேஸ்வரனது அருளை அனுபவித்த மகான்களும் முனிவர்களும் பெரியோர்களும் அருளாளர்களும் சித்தர்களும் யோகிகளும் அடியார்களும் வாழ்ந்து முக்தி பெற்ற திருத்தலங்கள் எண்ணற்றவை. பரமேஸ்வரனது திருவருளை மழையெனப் பொழியும் திருக்கோயில்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அவற்றையெல்லாம் சென்று தரிசனம் செய்து வழிபடுவதற்கு மனித ஆயுள் போதாது. எனவே ஒரு சில திருத்தலங்களையாவது வாழ்நாளில் கஃடிப்பாக தரிசனம் செய்து வணங்கி மனிதப் பிறவி பெற்ற பயனை அடைய வேண்டும் என்பதால் பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்கள், எட்டு வீரட்டத் தலங்கள், ஏழு விடங்கத்தலங்கள், பஞ்சபூதத் தலங்கள், என்று நம் முன்னோர்கள் தொகுத்து வைத்தனர். இவற்றில் வீரட்டத்தலங்கள், விடங்கத்தலங்கள், பூதத்தலங்கள் எல்லாம் தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உள்ளன. (வாயுஸ்தலமான காளஹஸ்தியும் தமிழ்நாட்டின் பகுதியாகத்தான் இருந்தது). இவ்வாறு வேத ஆகமங்கள் தோன்றியதால் மட்டுமன்றி பலப்பல புனிதத் தலங்களையும் கொண்டுள்ள காரணத்தாலும் தென்திசையானது திருமூலர் போற்றுவது போல உலகிலேயே மிகப் புனிதமான திசையாக உள்ளது. பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்கள் இமயம் முதல் குமரி வரை பாரதத் திருநாடு முழுவதும் பரவியுள்ளன. இவற்றையெல்லாம் உடலில் வலிமையிருக்கும்போதே சென்று தரிசனம் செய்து முழுமுதலை வழிபடுவது மனிதர்களின் கடமையாகும்.

காளையர்கள் ஈளையர்களாகிக் கருமயிரும்

பூள்ளயெனப் பொங்கிப் பொலிவிழந்து - சூளையர்கள்

ஓகாளம் செய்யா முன் நெஞ்சமே உஞ்சேனை

மாகாளம் கைதொழுது வாழ்த்து (11-ஆம் திருமுறை)


என்று பல்லவ மன்னன் ஐயடிகள் காடவர்கோமான் பாடி வாழ்ந்தது போல மூப்பும் மரணமும் வருவதற்கு முன்இளமைக்காலத்திலேயே திருக்கோயில்களை எல்லாம் சென்று தொழுது வணங்குதல் வேண்டும். பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களையும் சென்று தொழுபவர்களுக்குப் பரமன் அருளால் வாழ்வில் எல்லா விதமான செல்வங்களும் வந்து சேர இவ்வுலகத்தில் பெரும் புகழுடன் வாழ்வார்கள்.

பாடியாடு மெய்ப்பக்தர்கட்கு அருள் செயும் முத்தினைப் பவளத்தைத்

தேடிமால் அயன் காண ஒண்ணா அத்திருவினை தெரிவைமார்

கூடி ஆடவர் கைதொழுது கோட்டூர் நற்கொழுந்தே
என்று எழுவார்கள் நீடு செல்வந்தராகி
இவ்வுலகினில் நிகழ்தரு புகழாரே

என்பது உலக அற்புதமான ஞானக் குழந்தையின் அருள் வாக்கு.



பகுதி 2

1. ஸ்ரீ திரியம்பகேஸ்வரர்



மும்மூர்த்திகளுக்கு அருள் புரிந்த முக்கண் ஈசர்

காரடைந்த வண்ணனொடு கனகம் அனையானும்
பார்அடைந்தும் விண்பறந்தும் பாதம் முடி காணார்
சீரடைந்து வந்து போற்றச் சென்று அருள் செய்தது என்னே!
தேர் அடைந்த மாமறுகில் சேய்ஞலூர் மேயவனே

(சம்பந்தர்)

திரியம்பகேஸ்வரம் என்ற இந்த ஜோதிலிங்கத் தலத்திற்கு மகாராட்டிர மாநிலத்தில் உள்ள நாசிக் என்ற ஊரிலிருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன. இது

கருங்கல்லால் ஆன பழம்பெரும் கோயிலாகும். தூண்களும் மண்டபங்களும் சிற்ப வேலைப்பாடுகளுடன் உள்ளன. கோயிலுக்குப் பின்புறம் சிறிது தூரத்தில் புனிதக் குளம் நான்கு புறமும் தாழ்வாரங்களுடன் விளங்குகின்றது. கும்பகோணம் காசி விஸ்வநாதர் கோயிலுக்கு அருகேயுள்ள மகாமகக் குளம் போன்று இந்தப் புண்ணிய தீர்த்தம் விளங்குகின்றது. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வரும் கும்பத்திருவிழாவின் போது மக்கள் இப்புனிதக் குளத்தில் புனித நீராடுகின்றனர். இந்தக் குளமே அல்லாமல் கோதாவரி நதியும் திரியம்பகேஸ்வரத்தின் புனிதத் தீர்த்தமாக உள்ளது. இந்தத் தலத்தில் எழுந்தருளி அருள் பொழியும் பரப்பிரும்மத்திற்குத் திரியம்பகேஸ்வரர் என்று திருப்பெயர். கௌதமேஸ்வரர் என்ற திருநாமமும் உண்டு. மும்மூர்த்திகளுக்கும் கௌதம முனிவருக்கும் அருள் புரிந்ததால் இப்பெயர்கள் ஏற்பட்டன. திரியம்பகேஸ்வரர் என்றால் மும்மூர்த்திகளுக்கு இறைவன் என்று பொருள். ஈஸ்வரன், ஈசன் என்ற சமஸ்கிருதச் சொற்களுக்குத் தலைவன், முதல்வன், அரசன் என்று பொருள். ஈஸ்வரன் என்ற ஆரியச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் இறைவன். ஈஸ்வரன், ஈசன் என்ற சொற்களுக்கு என்னென்ன பொருள் உண்டோ அத்தனைப் பொருளும் இறைவன் என்ற சொல்லுக்கும் உள்ளன. பரமசிவன் ஒருவரே இறைவன். மற்ற எல்லோரும் சிவபூஜை செய்கின்ற பக்தர்களே. ஆதலால் ஈஸ்வரன் ஈசன் என்றே சிவபெருமானுக்குத் திருப்பெயர்கள் அமைந்தன. இந்த உலகத்தின் முதல்வன், அரசன்,தலைவன், இறைவன் சிவபெருமானே ஆதலால் அவர் ஈஸ்வரன், ஈசன், இறைவன் என்றே அழைக்கப்பட்டார். மதுரை சுந்தரேஸ்வரர் பாணபத்திரனுக்காகவும் தருமிக்காகவும் திருக்குறளுக்காகவும் எழுதியருளிய தமிழ்ப்பாடல்கள் எல்லாம் இறையனார் எழுதியவை என்றே கூறப்படுகின்றன.

திரியம்பகேஸ்வரர்

படைக்கும் தெய்வம் பிரம்மன், காக்கும் தெய்வம் விஷ்ணு, அழிக்கும் தெய்வம் ருத்திரன் அகிய மூன்று மூர்த்திகளும் ஒன்றாக வந்து லிங்கப்பரம்பொருளைப்

பிரதிட்டை செய்து பிரும்மத்தைப் பூஜை செய்தனர். இதனால் இத்தலம் திரியம்பகேஸ்வரம் என்று அழைக்கப்பட்டது. மூவருக்கும் அருள்புரிந்த பரமேஸ்வரனுக்குத் திரியம்பகேஸ்வரர் என்று பெயர்.

மூவர் நின்று ஏத்த (திருக்கோவையார்)

ஆதிமூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய தேவதேவன்

மூவர் கோனாய் நின்ற முதல்வன்

முழுமுதலே மூவருக்கும் (திருவாசகம்)

என்று நந்திதேவரின் அவதாரமான மாணிக்கவாசகப் பெருமான் திரியம்பகேஸ்வரரைப் போற்றுகின்றார்.

பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் என்பவையெல்லாம் அரசன், மந்திரி போன்று பதவிகளின் பெயர்களாகும். பலப்பல மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து போவது போல கோடிக்கணக்கான பிரம்ம விஷ்ணு ருத்திரர்கள் வந்து போயுள்ளனர். இதை

நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்

ஆறுகோடி நாராயணர் அங்ஙனே (அப்பர்)

கோன் என்று பல்கோடி உருத்திரர் போற்றும் (சம்பந்தர்)

என்று உண்மையான உலக அதிசயமான திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கூறியுள்ளனர்.

ஏழு நாட்கள் கழிந்தால் ஒரு வாரம் முடிகின்றது. நான்கு வாரங்கள் சென்றால் ஒரு மாதம் கழிகின்றது. பன்னிரண்டு மாதம் போனால் ஒரு வருடம் போகின்றது. இவ்வாறு நான்கு யுகங்கள் முடிந்தால் ஒரு ஊழி முடிகின்றது. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலி யுகம் என்ற நான்கு யுகங்கள் சென்றால் முற்றழிப்புக் காலம் ஏற்படுகின்றது. ஊழிக்கால முடிவில் பிரம்மன், விஷ்ணு, ருத்திரர், அவர்கள் உலகங்கள் உட்பட எல்லோரும் எல்லா உலகங்களும் மறைந்த பின்னர்

ஆத்மாக்கள் ஒய்வெடுக்கின்றன. புல் முதல் மும்மூர்த்திவரை பலப்பல பிறவிகளில் பிறந்து பிறந்து இளைத்துக் களைத்த ஆத்மாக்களின் ஓய்வுக்காலம் முடிந்த பின்னர் அவை செய்த கர்மபலன்களுக்கு ஏற்ப சர்வேஸ்வரன் எல்லோருக்கும் மீண்டும் பிறவிகளை வகுத்து வைக்கின்றார். பிரம்மன், விஷ்ணு, ருத்திரர் ஆகிய மும்மூர்த்திகள் முதலான தெய்வங்களிலிருந்து புல் புதர் செடி கொடி முதலான தாவரங்கள் வரை எல்லா ஜீவராசிகளையும் பரமசிவம் மீண்டும் படைக்கின்றார்.

எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் (திருவாசகம்)

வகுத்தான் வகுத்த வகை (திருக்குறள்)

ஊழிதோறு ஊழி உளதாய படையானை (சம்பந்தர்)

நின்னில் வெளிப்படுவது ஏழுலகும்
மீண்டே ஒளிப்பதுவும் (நக்கீரர்)

இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்
(காரைக்கால் அம்மையார்)

என்று மாணிக்கவாசக வள்ளலும் திருவள்ளுவ நாயனாரும் சங்கப்புலவர் நக்கிரரும் இறந்தவர்களையும் மீண்டும் உயிரோடு எழுப்பி வாழவைத்த திருஞானசம்பந்தரும் பேயுருவம் பெற்று வாழ்ந்த காரைக்கால் அம்மையாரும் இதைப் போற்றியுள்ளனர்.

'அருவம் உருவம் தோற்றம் அவதாரம் என எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட முழுமுதல் ஏகபாத மூர்த்தியாகி வலப்பாகத்திலிருந்து பிரம்மனையும் இடப்பாகத்திலிருந்து விஷ்ணுவையும் படைக்கின்றார். செஞ்சடையிலிருந்து ருத்திரனைத் தோற்றுவிக்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில் புரியும் பரமசிவம் படைக்கும் தொழிலைப் பிரம்மனுக்கும் காக்கும் துறையை விஷ்ணுவிற்கும் அழிக்கும் பணியை ருத்திரனுக்கும் அருளிச் செய்கின்றார். ருத்திரன் என்றால் சிவந்தவன் என்று பொருள். ஐந்து தொழில் புரியும் பரமசிவனைப் போன்று சிவந்த நிறம் உடையதால் அழிக்கும் தெய்வத்திற்கும் ருத்திரன் என்ற சிவநாமமே அமைந்தது. நந்தி

என்ற சொல்லானது சிவபொருமானது காளைவாகனமான தருமதேவரையும் குறிக்கின்றது. பரமேஸ்வரனையும் குறிக்கின்றது.

நந்தி விடையாடி முன் நணுக (அப்பர்)

இந்திரன் மால் அயன் முதலாம் இமையவர்க்கு
நெறியருளும் நந்தி (பெரிய புராணம்)

என்ற திருமுறைத் தொடர்களில் நந்தி என்ற சொல் பரப்பிரும்மத்தின் காளைவாகனமான நந்திதேவரைக் குறிக்கின்றது.

நந்தி நாமம் நமச்சிவாயவே (சம்பந்தர்)

பிறவா நெறிதந்த பேரருளாளன்
மறவா அருள் தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிப்பராபரன் (திருமந்திரம்)

என்ற தெய்வீகத் தொடர்களில் நந்தி என்ற சொல் பரப்பிரும்மத்தைக் குறிக்கின்றது. இவ்வாறே ருத்திரன் என்ற சொல்லும் மும்மூர்த்திகளில் ஒருவனான அழிக்கும் தொழில் புரியும் தெய்வத்தையும் குறிக்கின்றது. மும்மூர்த்திகளுக்கும் இறைவனான ஐந்து தொழில் புரியும் முழுமுதலான மெய்ப்பொருளையும் குறிக்கின்றது.

மாயவன் சேயவன் வெள்ளியன்
கோன் என்று பல்கோடி உருத்திரர் போற்றும் (சம்பந்தர்)
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்
(திருவாசகம்)

என்ற திருமுறைத் தொடர்களில் உருத்திரர், செம்பெருமான் என்பவை மும்மூர்த்திகளில் ஒருவனான அழிக்கும் தெய்வத்தைக் குறிக்கின்றன.

உருத்திரனை உமாபதியை (அப்பர்)
செம்பெருமானே சிவபுரத்தரசே (திருவாசகம்)
கல்வியாய கருத்தன் உருத்திரன் (சம்பந்தர்)

என்ற தொடர்களில் எல்லோருக்கும் தெய்வமாக சர்வேஸ்வரனைக் குறிக்கின்றன. ஸ்ரீருத்திரம் என்பது பரப்பிரும்மத்தைப் போற்றும் துதிகளாகும். பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் (குறள்) என்று பிறப்பானது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக ஒரே வழியில்தான் உண்டாகின்றது. ஆனால் இறப்பானது பல மாதிரியாக பலவழிகளில் உண்டாகின்றது. இதனால் படைக்கும் தெய்வம் பிரம்மன் ஒருவனாக இருக்கும்போது அழிக்கும் தெய்வம் ருத்திரன் பதினோரு வடிவானான்.

இதற்கு முந்தைய ஊழிகளில் .தோன்றி மறைந்த கோடிக்கணக்கான பிரம்ம விஷ்ணு ருத்திரர்களைப் போன்றே இந்த ஊழிக் காலத்தில் தோன்றியுள்ள மும்மூர்த்திகளும் தங்கள் தங்கள் தொழிலை மேற்கொள்வதற்கு முன்பு சிவபூஜை செய்ய விரும்பினர்.

அவன் அன்றி மூவரால் ஆவது ஒன்றும் இல்லை
(திருமந்திரம்)

என்ற திருமந்திர ஆகம வாக்கிற்கு ஏற்ப ஈசன் அருள் இல்லாமல் பிரம்மனால் எது ஒன்றையும் படைக்க முடியாது. பரமன் அருள் இல்லாமல் காக்கும் பதவியில் உள்ள விஷ்ணுவால் எது ஒன்றையும் காப்பாற்ற முடியாது. பரம்பொருளின் மறக்கருணை இல்லையென்றால் ருத்திரனால் எது ஒன்றையும் அழிக்க முடியாது. ஆதலால் மூவரும் கடவுளை வழிபடுவதற்காகப் பூவுலகை அடைந்தனர். சிவபூஜைக்காகக் குளம் ஒன்றை உண்டாக்கினர். மும்மூர்த்திகளும் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து தாமரை மலர்களால் பரப்பிரும்மத்தை வழிபட்டுத் துதித்தனர்.

முன்பினார் மூவர்தாம் தொழும் முக்கண் மூர்த்தி என்று மக்கள் துயரம் தீர்த்த மகேஸ்வர மைந்தர் திருஞானசம்பந்தர் மும்மூர்த்திகள் புரிந்த சிவபூஜையைப் போற்றுகின்றார். மூவருக்கும் அருள் புரிந்த திரியம்பகேஸ்வரர் எழுந்தருளியுள்ள கர்பக்கிரகம் தாழ்வாக உள்ளது. மேலேயுள்ள மண்டபத்திலிருந்து

திரியம்பகேஸ்வரரை தரிசனம் செய்யவேண்டும். மும்மூர்த்திகள் பிரதிட்டை செய்து வழிபட்ட லிங்கப் பரம்பொருளுக்கு ஆவுடையார் மட்டுமே உள்ளது. ஆவுடையார் உரல் போன்று நடுவே பள்ளமாக உள்ளது. இந்தப் பள்ளத்தில் மும்மூர்த்திகள் அர்ச்சனை செய்த மூன்று தாமரை மொட்டுகளின் அடையாளம் உள்ளது. திரியம்பகேஸ்வரம் திருக்கோயில் தென்னாட்டு முறைப்படி ஆகம விதிப்படி கட்டப்பட்டது. எனவே அர்ச்சகர்கள் தவிர வேறு யாரும் கர்பக்கிரகத்திற்குள் நுழைவதில்லை. பெரும்பாலான வடநாட்டுக் கோயில்கள் வேத விதிப்படி பிராணப் பிரதிட்டை மட்டுமே செய்யப்பட்டு அமைந்துள்ள கோயில்கள். ஆதலால் காலைநேரங்களில் பக்தர்கள் எல்லோரும் பூ, நீர், மற்றும் பிற பூஜைப்பொருட்களுடன் சென்று தாங்களே தொட்டு வழிபட்டு வணங்க முடியும். ஆனால் திரியம்பகேஸ்வரமும் சோமநாதமும் ஆகம விதிப்படி கும்பாபிஷேகம் நடத்தப் பெற்ற கோயில்கள். ஆதலால் சுத்தமாக தூய்மையாக மடியாக உள்ள அர்ச்சகர்கள் மட்டுமே இறைவனைத் தொட்டுப் பூஜை செய்ய முடியும். வடநாட்டுக் கோயில்களுக்குத் தென்னாட்டுக் கோயில்கள் போன்று ராஜ கோபுரங்கள் இல்லை. கருவறை மீது அமைந்துள்ள விமானமே கோபுரம் போன்று மேலே உயர்ந்து செல்கின்றது. தஞ்சையிலுள்ள பெரியகோயில் எனப்படும் பிரகதீஸ்வரர் ஆலயம் வடநாட்டுப் பாணியில் கட்டப்பட்டதாகும். இக்கோயிலில் கருவறை மீது உள்ள விமானம்தான் பெரிய கோபுரமாக உயர்ந்து விளங்குகின்றது. வடநாட்டுக் கோயில்கள் எல்லாமே தஞ்சைப் பெரிய கோயில் போன்றுதான் உள்ளன. திரியம்பகேஸ்வரம் கோயிலும் இம்முறையில் அமைந்ததே.

திரியம்பகம் ஆவுடையாருக்கு மாலைக் காலங்களில் வெள்ளி லிங்கம் சார்த்தப்பட்டு அலங்காரம் செய்யப்படுகின்றது. திரியம்பகம் போன்று மும்மூர்த்திகளும் ஒன்றாக வந்து சிவ பூஜை செய்த தலங்கள் பலப்பல. அவற்றுள் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலும் அமெரிக்காவில் உள்ள திரிநாடு (த்ரிநாட்) என்பவையும்

குறிப்பிடத்தக்கவை. இவையல்லாமல் மூன்று மூர்த்திகளும் அவ்வப்போது தனித்தனியே வந்து சிவபூஜை செய்து கடவுளை வழிபட்ட திருத்தலங்கள் பலப்பல உள்ளன.

கௌதமேஸ்வரர்

மும்மூர்த்திகள் வழிபட்டு பரப்பிரும்மத்தின் அருள் பெற்ற திரியம்பகேஸ்வரத்தில் கௌதம முனிவர் வசித்து வந்தார். நாள்தோறும் புனிதக்குளத்தில் நீராடி திரியம்பகேஸ்வரரைப் பூஜை செய்து வேள்விகள் புரிந்தும் தவம் செய்தும் தூய வாழ்க்கை வாழ்ந்தார். ஒருமுறை நாட்டில் வறட்சியும், பஞ்சமும் உண்டாயின. எல்லா இடங்களிலும் நீர் வற்றிப்போய் தண்ணீர்ப் பஞ்சம் உண்டாயிற்று. ஆனால் கங்காதரனை நினைந்து உள்ளன்போடு சிவசிவ என்றே வாழ்ந்த கௌதமரின் ஆசிரமத்தில் எந்தவிதமான பஞ்சமும் இல்லை. திரியம்பகேஸ்வரத்தில் இருந்த நீர் நிலைகளில் நீர்வளம் பெருகியிருந்தது. இதையறிந்து நாட்டின் பல பகுதிகளிலும் இருந்த முனிவர்கள் திரியம்பகேஸ்வரத்தில் குடியேறினர்.

கௌத்தம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்குப் பசுவே உத்தமம் என்று பொருள். கோ+உத்தம் என்பதே கௌத்தம் என்றாயிற்று. இது தமிழில் கௌதம் எனப்பட்டது. கௌதம முனிவர் பசுவை வலம் வந்து அகல்யையைத் திருமணம் செய்து கொண்டார். உலகத்தை வலம் வருபவனுக்குத் தனது மகளை மணம் முடித்துக் கொடுப்பதாக அகல்யையின் தந்தை நிபந்தனை விதித்திருந்தார். கன்று போடும் நிலையில் உள்ள பசுவை அதாவது இரண்டு முகங்கள் கொண்ட பசுவை வலம் வந்தால் உலகத்தை வலம் வருவதற்கு ஒப்பாகும் என்று ஒழுக்க நூல்கள் உரைக்கின்றன. இந்த சாத்திரப்படி கௌதம முனிவர் கன்று போடும் நிலையில் இருந்த தாய்ப்பசுவை வலம் வந்து வணங்கி அகல்யையைத் திருமணம் செய்து கொண்டார். அத்தகைய கௌதம முனிவரின் ஆசிரமத்தில் தாய்ப்பசு ஒன்று இறந்து கிடந்தது. அதைக் கண்ட கௌதம முனிவர் மனம்

துடிதுடித்தார். இறந்த பசுவிற்கு எப்படியாவது உயிர் கொடுக்க வேண்டும் என்று முனிவர்கள் விரும்பினர். மற்ற உயிரினங்கள் எல்லாம் தமக்காக வாழ்கின்றன. ஆனால் மாடுகளோ உலக மக்கள் அனைவரையும் பாலூட்டி வளர்க்கின்றன. தேசத்தின் செல்வங்களாக இருந்து வருவாயைப் பெருக்குகின்றன. உழுவதற்குப் பாடுபட்டும் பயிர்வளர எருவைத் தந்தும் மனித இனத்திற்கு மகத்தான உதவி புரிந்து உண்டி கொடுத்து உயிர் காக்கின்றன. எல்லாமாகவும் எல்லாவற்றுடனும் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டும் உள்ள சிவபெருமானின் திருமுழுக்காட்டிற்காகப் பால், தயிர், வெண்ணை, நெய், திருநீறு ஆகிய பஞ்ச கவ்வியம் எனப்படும் ஐந்து அபிஷேகப்பொருட்களைக் கொடுக்கும் புனிதப் பிறவிகளாகப் பசு மாடுகள் உள்ளன. இத்தகைய பசுமாடுகள் முனிவர்களும் தேவர்களும் தெய்வங்களும் வந்து வணங்கும் புண்ணியம் வாய்ந்தவை. இனிய குணங்கள் கொண்ட பாலைத் தரும் நல்ல பண்புள்ள சாந்தமான பசுக்கள் மெய்ப்பொருளின் வாகனமும் தரும தேவனுமான நந்தியின் குலத்தைச் சேர்ந்தவை. அத்தகைய புண்ணிய ஆத்மாவான இந்தப் பசுவை எப்படியாவது உயிர்பிழைக்கச் செய்ய வேண்டும் என்று முனிவர்கள் முடிவெடுத்தனர். இறைவன் அருள் இருந்தால் மாண்டவர்களும் மீண்டு எழுந்து வருவார்கள். தட்சன் மனைவி வேண்டியபோது தியாகேசன் தட்சனுக்கு மீண்டும் உயிர் வழங்கவில்லையா? ரதி பூஜை செய்து தொழுத போது மகேஸ்வரன் மன்மதனுக்கு மீண்டும் உயிர் வழங்கவில்லையா? எனவே கோடிலிங்கார்ச்சனை செய்து பரம்பொருளை வழிபட்டுக் கங்கை நதியைப் பசுவின் உடலில் பாயச் செய்தால் கோமாதா மீண்டும் உயிர் பெற்று எழுவார் என்று ஆலோசனை கூறினர்.

சொல்லானைத் தோற்றம் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுது ஓங்க
வல்லார் நன் மாதவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாமாம் எம்பெருமான் கழல் ஏத்துமே (சம்பந்தர்)

என்று மாதவ முனிவர்கள் சொல்லிய வண்ணம் மகாமுனிவரான கௌதமர் கோடி சிவநாமம் ஓதி லிங்கார்ச்சனை செய்தார்.

புனிதன் திருநாமம்தான் நாவில்
நூறு நூறாயிரம் நண்ணினார் (அப்பர்)

என கோடி சிவநாமங்களை உச்சரித்து லிங்கப் பரம்பொருளைப் பூஜை செய்தார். கங்காதரனிடமிருந்து கங்கை நீரைப் பெறுவதற்காகக் கடுமையாகத் தவம் புரிந்தார். கங்காதரனை நெஞ்சில் நிறுத்தி ஓம் நமச்சிவாய மகா மந்திரத்தை உச்சரித்து திரியம்பகேஸ்வரரை தியானம் செய்து அன்ன ஆகாரம் இல்லாமல் தவம் புரிந்தார்.

எண்ணிய எண்ணியாங்கு எய்தலால்
செய்தவம் ஈண்டு முயலப்படும் (குறள்)

என நினைத்த காரியத்தை நினைத்தபடி முடித்து வைக்கின்ற தவத்தின் மகிமை உணர்ந்த தவ முனிவர்கள் எல்லோரும் கௌதம முனிவருக்கு உறுதுணையாக இருந்தனர். கடுகளவு புண்ணியம் செய்தாலும் மலையளவு பலனை வாரி வழங்கும் அருள் வள்ளலான திரியம்பகேஸ்வரர் கௌதம முனிவருக்கு வெளிப்பட்டுத் திருக்காட்சி தந்தார். பலகாலங்கள் தேடித் திரிந்தாலும் பிரம்ம விஷ்ணுக்களால் காண முடியாமல் மறைந்து இருந்த பரஞ்சோதிப் பெருமானின் திருக்காட்சி கண்ட கௌதம முனிவர் அளவில்லா ஆனந்தம் அடைந்து விழுந்து எழுந்து போற்றித் துதி செய்து வணங்கினார். எல்லாப் பொருட்களுக்கும் அப்பாற்பட்டு எல்லாவற்றுக்கும் எல்லையாக விளங்குகின்ற திருமுடியிலிருந்து கங்காதரன் கங்கை நீர்த்துளிகளைச் சிந்தி அருளினார். அந்த நீர்த்துளிகள் நதியாகப் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தன. கங்கை நதி பசுவின் உடலில் பாய்ந்தபோது பசு உயிர்பெற்று எழுந்தது. கௌதம முனிவர் பசுபதீஸ்வரனின் மாப்பெருங்கருணைக்கு மனம் நெகிழ்ந்தார். கோமாதாவின் காரணமாக உற்பத்தியான




நதி கோதாவரி என்று பெயர் பெற்றது. கோதாவரி நதிக்கு கௌதமி என்ற பெயரும் உண்டு. பகீரதனுக்காகப் பாய்ந்த கங்கை பாகீரதி என்று அழைக்கப்பட்டது போன்றே கௌதமருக்காகப் பாய்ந்த கங்கை கௌதமி என்று பெயர் பெற்றாள். இம்முறையில் தவம் செய்யும் முனிவர்களின் புனிதமான வாழ்க்கையானது அவர்கள் வாழ்ந்த காலத்தில் மட்டுமன்றி யுகம் யுகமாக மக்கள் எல்லோருக்கும் பயன்படும் மகத்தான தொண்டு செய்யும் பொதுநலம் காக்கும் வாழ்க்கையாக இருந்தது. சமுதாயம் முழுவதையும் சிறப்பாக்கும் சீரிய வாழ்க்கையாக விளங்கியது.

மும்மூர்த்திகள் உண்டாக்கிய குளத்தோடு கௌதம முனிவர் ஏற்படுத்திய கோதாவரி நதியும் திரியம்பகேஸ்வரம் திருக்கோயிலின் புனிதத் தீர்த்தம் ஆயிற்று. கௌதமர் செய்த கோடியர்ச்சனைக்கும் தவத்திற்கும் கருணைகூர்ந்து ஒரு நதியையே புதியதாகப் படைத்து அருளி கௌதம முனிவருக்கு அளவற்ற ஆனந்தம் அளித்த பராபரனுக்கு கௌதமேஸ்வரர் என்று திருப்பெயர் உண்டாயிற்று.

உலகம் தோன்றிய காலத்திலிருந்து கோடிக் கணக்கான ஆண்டுகளாக பக்தர்களுக்கு அருள்புரியும் அருமை பெருமை மிக்க திரியம்பகம் திருத்தலத்தைச் சென்று தரிசனம் செய்து வழிபடுகின்றவர்களுக்கு அவர்கள் புரியும் தொழில் சிறப்புடன் விளங்குகின்றது. வாழ்க்கையில் தண்ணீர்ப் பஞ்சம் உண்டாவது இல்லை. வாழ்வில் அளவில்லாத ஆனந்தம் அடைகின்றனர்.

நீர்மல்கு மலர் உறைவானும் மாலுமாய்ச்
சீர்மல்கு திருந்தடி சேரகிற்கிலர்
போர்மல்கு மழுவினன் மேய பூவணம்
ஏர்மல்கு மலர் புனைந்து ஏத்தல் இன்பமே (சம்பந்தர்)

2. ஸ்ரீ விஸ்வேஸ்வரர்



மகாவிஷ்ணு பூஜை செய்த விஸ்வேஸ்வரர்

விண்ணவர் தம்மொடு வெங்கதிரோன் நல
எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனும் காண்ப அரிதாகிய
அண்ணல் தன் வளநகர் அந்தண் ஐயாறே (சம்பந்தர்)

சுயம்புலிங்கம் எழுந்தருளியுள்ள விஸ்வேஸ்வரம் என்ற ஜோதிலிங்கத் தலம் காசித் திருநகரில் கங்கை நதிக் கரையருகே உள்ளது. கயிலைமலைக்கு அடுத்து மிகவும் புகழ் பெற்று விளங்கும் புனிதத் தலம் காசி. காசியோடு தொடர்புறுத்திப் பேசப்படாத தலமே இல்லை. கங்கையோடு தொடர்புறுத்திக் கூறப்படாத நதியே இல்லை என்னும்படி காசியும் கங்கையும் கோடிக்கணக்கான ஆண்டுகளாக உலகப்புகழ் பெற்று

விளங்குகின்றன. ஆகாயத்திலிருந்த காசித் திருநகரை உலக நன்மைக்காகப் பூமியில் இறக்கியருளிய பரப்பிரும்மம் இங்கு விஸ்வேஸ்வரர், விஸ்வநாதர் அதாவது உலகேஸ்வரன் உலகநாதன் என்ற பெயர்களுடன் எழுந்தருளியுள்ளார்.

காசிக்கு வாரணாசி, அவிமுக்தம், ஆனந்தவனம் போன்ற வேறு பெயர்களும் உள்ளன. வருண, அசி என்ற இரண்டு நதிகள் பாய்வதால் வாரணாசி என்று பெயர் பெற்றது. இது பனாரஸ் என்று ஆங்கிலத்தில் சிதைத்து வழங்கப்படுகின்றது. யார் எந்தப் பிறவியில் எங்கு பிறந்தாலும் ஈசன் நாமம் ஓதி காசியில் இறப்பார்களேயானால் அவர்கள் மீண்டும் வந்து பிறக்காமல் இறைவனுடன் சேர்ந்து இருக்கும் முக்தி நிலையை அடைவார்கள். இதனால் இத்தலம் அவிமுக்தம் என்று வழங்கப்படுகின்றது. காசியில் இறப்பவர்களுக்குப் பிறவித்துன்பம் நீங்கி மீண்டும் பிறவாத ஆனந்த நிலை கிடைப்பதால் ஆனந்த வனம் என்று பெயர் உண்டாயிற்று. காசியில் இறக்கும் ஜீவராசிகளுக்கு இனிய முக்தி வழங்கும் இனியவனாக இருப்பதால் விஸ்வேஸ்வரருக்கு இராமன் அதாவது இனியவன் என்று பெயர். இராம என்றால் ரம்மியம் அதாவது இனிமை என்று பொருள். இனியன், கண்ணுக்கு இனியன், அடியார்க்கு இனியன், நச்சினார்க்கு இனியன் என்பவையெல்லாம் சிவநாமங்கள்.

இனியனாய் நின்ற இன்னம்பர் ஈசன் (அப்பர்)
இனியவன் இருப்பதும் ஆரூர் (சுந்தரர்)
கண்ணுக்கு இனியானை (திருவாசகம்)
எப்போதும் இனியானை (அப்பர்)
எனக்கு இனியவன் தமர்க்கு இனியவன்
எழுமையும் மனக்கு இனியவன் (சம்பந்தர்)

என்று முழுமுதற்பொருளை நேரில் கண்டு பாடிய தெய்வீகத் திருமுறை அருளாளர்கள் போற்றியுள்ளனர். காசியில் சிவநினைவோடு இறப்பவர்களுக்கு பிறவித் துன்பத்தைக் களைந்து பிறவிநோயைப் போக்கி, பிறவி மலத்தை நீக்கி பிறவா நிலையாகிய இனிமையான மோட்சத்தை அருளும் இனியவன் ஆதலால் பரமசிவனுக்கு இனிமை அதாவது இராம என்ற பெயர் சிறப்பாக அமைந்தது.

விஸ்வநாதரின் இந்தத் திருப்பெயரே தாரக மந்திரம் ஆகும். சிவ என்ற ஓங்கார மகாமந்திரத்திற்கு இணையாக ராம என்ற தாரக மந்திரம் அமைந்ததால் தென்னாட்டில் சிவசிவ ஹரஹர (அரோகரா) என்று சொல்வது எவ்வாறு வழக்கமாக அமைந்ததோ அவ்வாறே வடநாட்டில் ராமராம என்று சொல்வது வழக்கமாயிற்று.

சிறந்த சிவபக்தரான ஜமதக்கினி முனிவர் தன் நான்காவது புதல்வனுக்குக் காசி விஸ்வநாதரின் திருநாமமான ராம என்னும் பெயரைச் சூட்டினார். அயோத்தி மன்னன் தசரதனும் தன் மூத்த மைந்தனுக்கு இந்த சிவநாமத்தையே வைத்தான். ஜமதக்கினி இராமன் தவமும் பூஜையும் புரிந்து பரமேஸ்வரனிடமிருந்து பரசு என்ற மழு ஆயுதத்தைப் பெற்றான். இதனால் பரசு ராமன் என்று புகழ் அடைந்தான். தசரத மைந்தன் இராமன் வால்மீகி இராமாயணத்தின் மூலம் புகழ் பெற்ற போது அவன் கோதண்டராமன் என்று அழைக்கப் பெற்றான்.

விஸ்வநாதர் எழுந்தருள் புரிந்து உலகத்தைப் பாதுகாக்கும் காசித் திருநகரைப் போற்றாத புராணங்கள் இல்லை. பாடாத நூல்கள் இல்லை. பேசாத மொழி இல்லை. பெரும்பாலான புராணங்களும் இராமாயண மகாபாரதக் காவியங்களும் பிறவகையான நூல்களும் காசியைப் போற்றுகின்றன. தமிழிலும் மூவேந்தர்கள் ஆண்ட சங்ககாலத்தில் தோன்றிய நூல்களிலிருந்து காலந்தோறும் பெரும்பாலான நூல்கள் காசியின் பெருமை பேசுகின்றன. குமரகுருபரர் காசிக்கலம்பகம் என்று தனியே காசித்திருநகரைப் பற்றி ஒரு நூல் பாடியுள்ளார். தேவாரத் திருமுறைகளில் இத்தலம் வாரணாசி என்று குறிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் காசியாத்திரை மேற்கொள்வதையும் கங்கையில் புனித நீராடுவதையும் காலம்காலமாக நூல்கள் போற்றுகின்றன. பெரும்பாலான கோயில்களில் காசிலிங்கம் என்று விஸ்வநாதருக்குச் சந்நிதி உண்டு. ஒரு தலத்தின் பெருமையைக் கூறவரும்போது இது காசியைப் போன்று புனிதமானது. காசிக்குச் சமமான சிறப்புடையது என்றே பேசப்படுகின்றது.

காசித் திருத்தலமானது கிருதயுகத்தில் திரிசூல வடிவமாக விளங்கியது. திரேதாயுகத்தில் சக்கர வடிவமாக இருந்தது. துவாபரயுகத்தில் ரத வடிவமாகத். திகழ்ந்தது. இப்போது கலியுகத்தில் சங்கு வடிவமாக உள்ளது.

உணர்வுக்கும் தெரிய அரும்பொருளே (திருவாசகம்)

என இன்னது என்று அறிந்து சொல்ல முடியாமல் எல்லாவற்றையும் கடந்துள்ள பரமசிவம் என்னும் மெய்ப்பொருள் ஊழிக்காலத் துவக்கத்தில் ஏகபாத மூர்த்தியாகி வலப்பாகத்திலிருந்து ஐந்து தலை கொண்ட பிரம்மனைப் படைத்தார். இடப்பாகத்திலிருந்து விஷ்ணுவை உண்டாக்கினார். இருவரும் ஆகாயத்தில் இருந்த ஒரு திருநகருக்குச் சென்று அங்கு சிவநினைவில் மூழ்கி தியானத்தில் அமர்ந்தனர். இந்த சிவபூஜையின் பலனாக பிரம்மனுக்குப் படைக்கும் தொழிலையும் விஷ்ணுவுக்குக் காக்கும் பொறுப்பையும் சர்வேஸ்வரன் அருளிச் செய்தார். இருவரும் பரஞ்சோதியைப் பூஜை செய்த பின்னர் தங்கள் தங்கள் தொழிலை மேற்கொண்டனர். பிரம்மனும் விஷ்ணுவும் தவம் இருந்த ஆகாயத் திருநகரைப் பராபரன் மண்ணுலகவாசிகளின் நன்மைக்காக பூமியில் இறக்கினார். இந்தத் திருநகரமே காசி என்று அழைக்கப்படுகின்றது. கங்கை நதி ஆகாயத்திலிருந்து வந்தது போன்றே அப்புண்ணிய நதி பாயும் காசித் திருநகரமும் ஆகாயத்திலிருந்த வந்ததாகும்.

தாங்கள் தவம் புரிந்த திருநகரை மீண்டும் பார்க்க விரும்பிய பிரம்மனும் விஷ்ணுவும் பூமிக்கு வந்தனர். காசியில் இருந்த ஞானவாபி என்ற கிணற்றில் பிரகாசமான சுடர் தோன்றுவதை மகாவிஷ்ணு கண்டார். அருகே சென்று பார்த்த போது கிணற்றில் ஒரு சுயம்பு லிங்கத்தைக் கண்டார். மகாவிஷ்ணு அந்தப் பரம்பொருளை பயபக்தியுடன் எடுத்துப் பூஜை செய்து வழிபட்டார். இதுவே காசிவிஸ்வநாதர் கோயிலின் ஜோதிலிங்கம். ஜோதிலிங்கத்தை நாள்தோறும் வழிபட்டு வந்த மகாவிஷ்ணு வழக்கம் போல ஒரு நாள் சிவநாமம் ஓதி கங்கையில் நீராடினர். அப்போது அவருடைய காதிலிருந்த குண்டலம் நதியில் விழுந்தது. குண்டலம் விழுந்த இடத்தில் மற்றொரு சுயம்பு லிங்கம் இருப்பதைக்

கண்டார். விஷ்ணு அந்த லிங்கத்தையும் எடுத்துப் பூஜை செய்து வழிபட்டார். இந்தக் கோயில் ஹிரண்யகர்பர் கோயில் என்று வழங்கப்படுகின்றது. குண்டலம் விழுந்த இந்த இடம் மனிகர்ணிகை என்று அழைக்கப்படுகின்றது. மகாவிஷ்ணுவும் பிரம்மனும் காசியில் பலப்பல யாகங்களைப் புரிந்தனர். பிரம்மன் பத்து அஸ்வமேத யாகங்களைப் புரிந்து சிவவழிபாடு செய்த இடம் தசாஸ்வமேத காட் எனப்படுகின்றது. பிரம்மன் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்த இடத்திற்கு விருஷத்வஜர் கோயில் அதாவது நந்திக் கொடியுடையார் கோயில் என்று பெயர். வாரணாசியில் விஷ்ணுவும் பிரம்மனும் மட்டுமன்று பிற தெய்வங்கள், தேவ தேவியர்கள், வானவர்கள், முனிவர்கள், தவசிகள், கணங்கள், தொண்டர்கள், சித்தர்கள், யோகிகள் என்று பலதரப்பட்ட பக்தர்களும் விஸ்வநாதரை வழிபட்டு வாழ்வு பெற்றதுடன் தாங்களும் ஒரு லிங்கப்பரம்பொருளைப் பிரதிட்டை செய்து பரமேஸ்வரனைப் பூஜித்துள்ளனர்.

எல்லாவிதமான பூக்களாலும் இறைவனை வழிபட விரும்பிய மகா முனிவராகிய வியாக்கிர பாதர் விஸ்வநாதரை வழிபட்ட பின் லிங்கப் பரம்பொருள் ஒன்றைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்தார். வியாக்கிர பாதருக்கு அருள் புரிந்த லிங்கோற்பவருக்கு வியாக்கிரபாதேஸ்வரர் என்று பெயர்.

மலைகளின் அரசனான இமவான் விஸ்வேஸ்வரரை வழிபட்டபின் ஓங்காரப் பொருளாகிய லிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்தான். இந்தப் பூஜையின் பலனாகப் பராசக்தியை மகளாகப் பெறும் பாக்கியத்தைப் பரமேஸ்வரன் இமவானுக்கு அருளிச் செய்தார். இமவானுக்குக் கருணை காட்டிய இறைவனுக்கு சைலேஸ்வரர் என்று திருப்பெயர். அசுர குருவான சுக்கிராச்சாரியார் விஸ்வநாதரை வணங்கிய பின் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து வழிபட்டு நவக்கிரகங்களில் ஒன்றாக விளங்கும் பேறு பெற்றார். சுக்கிராச்சாரியாருக்கு அருள்புரிந்த பரப்பிரும்மத்திற்கு சுக்கிரேஸ்வரர் என்று பெயர்.

குபேரன், எமன், சனி ஆகியோர் விஸ்வேஸ்வரரை வழிபட்டு வாழ்வு பெற்றனர். குபேரனும் யமனும் இந்திரனுக்கு ஒப்பாக திசைக்காவலர்கள் ஆயினர். எமன் மகனான சனி நவக்கிரகங்களில் ஒருவன் ஆனான். சப்தரிஷிகள் காசிலிங்கத்தை வழிபட்டு நட்சத்திரங்கள் ஆயினர். இந்த ஏழு நட்சத்திரங்களின் கூட்டமே சப்தரிஷிமண்டலம் என்று அழைக்கப்படுகின்றது.

பராசக்தி வாரணாசிக்கு வந்து விஸ்வநாதரை வழிபட்டுத் தவமும் பூஜையும் புரிந்தாள். இரவு பகல் கண்ணுறங்காமல் அகலமாக விழித்திருந்த கண்களுடன் விஸ்வநாதரை நோக்கிய வண்ணமே தவம் புரிந்ததால் அம்மனுக்கு விசாலாட்சி என்று பெயர் உண்டானது. திருவீழிமிழலையில் அடியார்கள் திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் பொற்காசுகளை அருளிச் செய்து பக்தர்களின் பசிப்பிணியைப் போக்கியருளிய பரமேஸ்வரன் காசியில் விசாலாட்சிக்கு எடுக்க எடுக்கக் குறையாத அட்சய பாத்திரத்தை அருளிச் செய்து அன்னபூரணியாக்கி மக்களின் பசித்துன்பத்தைப் போக்குமாறு அருளிச் செய்தார். விஸ்வநாதர் கோயிலுக்கு அருகே விசாலாட்சிக்கும் அன்னபூரணிக்கும் தனியே கோயில்கள் உள்ளன.

இறந்த மகனையும் இறக்க இருந்த மனைவியையும் விஸ்வேஸ்வரரின் திருவருளால் அரிச்சந்திர மகாராஜன் மீண்டும் உயிரோடு பெற்றான். லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து அரிச்சந்திரன் வழிபட்ட இடமே அரிச்சந்திர காட் எனப்படுகின்றது. அரிச்சந்திரன் கட்டிய சிவாலயத்திற்கு அரிச்சந்திரம் என்று பெயர். அரிச்சந்திரத்து உள்ளார் என்று இந்த சிவாலயத்தைத் திருநாவுக்கரசர் தேவாரம் போற்றுகின்றது. அரிச்சந்திரனை சத்திய அரிச்சந்திரனாக்கி இறவாப் புகழுடன் வாழவைத்த திருத்தலம் காசி. இராமன், கண்ணன், ருக்மணி, சத்தியபாமா போன்ற பலரும் விஸ்வநாதரை வழிபட்டுத் தங்கள் துன்பம் தீர்ந்து உள்ளனர்.

காசியிலுள்ள மற்றொரு லிங்கம் சக்ரலிங்கமாகும். இந்த லிங்கப் பரம்பொருளின் மீது சக்கரம் காணப்படுகின்றது. அஷ்டவீரட்டச் செயல்களில் ஒன்று

ஜலந்தர வதம். ஜலந்தரனது உடலை இரண்டாகப் பிளந்த மண் வட்டமானது பரமனின் கையில் வந்து தங்கியது. சக்கரம் தாங்கிய பரமசிவனுக்கு சக்கரேஸ்வர் என்று பெயர். சக்கரம் உள்ள பரம்பொருளுக்கு சக்கரலிங்கம் என்று பெயர். இந்தச் சக்கரத்தை இறைவனிடமிருந்து பெறுவதற்காகத்தான் மகாவிஷ்ணு திருவீழிமிழலையில் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து வைகுண்டத்திலிருந்து விமானம் கொண்டு வந்து அமைத்து நாள்தோறும் ஆயிரம் தாமரைமலர்களால் ஆயிரம் கடவுள் நாமம் ஓதி சிவபூஜை செய்தார். நெற்றியில் திருநீறு பூசி நியமத்துடன் பூஜை புரிந்து வந்தபோது ஒரு நாள் ஒரு தாமரைப் பூ குறைந்து போயிற்று. சிவ சகஸ்ரநாமம் ஓதும் போது இறுதிப் பெயருக்கு பூ இல்லாத போது மகாவிஷ்ணு தன் கண்ணைப் பறித்து வைத்து அர்ச்சனை செய்து பூஜையை முடித்தார். மகாவிஷ்ணு செய்த பூஜையின் பலனாகப் பரமேஸ்வரன் விஷ்ணுவிற்குச் சக்கரத்தை அருளிச் செய்தார். சக்கரத்தைப் பெற்றுக் கொண்ட விஷ்ணுவிற்குச் சக்கரதாரி என்றும் கமலக்கண்ணன் என்றும் பெயர்கள் உண்டாயின. திருமாலுக்குக் கண்ணும் சக்கரமும் வழங்கிய சிவபெருமானுக்குக் கண்ணீந்த பெருமான், ஆழீயீந்த பெருமான் என்று திருநாமம். சிலந்தியாக இருந்து திருவானைக்காவலில் ஜம்புலிங்கத்திற்கு இரண்டு நாள் பந்தல் அமைத்த பணியின் பலனாக சோழச்சக்கரவர்த்தியாகப் பிறந்த கோச்செங்கணான் பாரதம் முழுவதும் ஆண்ட முதல் மன்னன் ஆவார். கோச்செங்கணார் பாரதம் முழுவதும் மாடக் கோயில்கள் எனப்படும் எழுபது பெருங்கோயில்களைக் கட்டினார். காசியில் லிங்கப் பரம்பொருளை வழிபட்டுப் பூஜை செய்தார்.

இவ்வாறு காலந்தோறும் பலப்பல பக்தர்களால் பிரதிட்டை செய்யப்பட்ட பலப்பல லிங்கங்களையும் எண்ணற்ற சுயம்பு லிங்கங்களையும் கொண்டுள்ள புண்ணியப் பதி காசி. யாருக்கு எந்த பகுதியில் உடனடியாக லிங்கம் தேவைப்பட்டாலும் அவர்கள் காசியிலிருந்தே லிங்கப் பரம்பொருளை எடுத்துச்

செல்வது வழக்கமாக இருந்தது. இராவணனை வெல்வதற்காகவும் இராவணனைக் கொன்ற பாவத்திற்குப் பிராயச்சித்தமாகவும் இராமன் சிவபூஜை செய்து கடவுளை வழிபட முற்பட்டபோது அனுமானை அனுப்பிக் காசியில் இருந்தே லிங்கப் பரம்பொருளைக் கொண்டு வரச் சொன்னான் என்று இராமாயணமும் தேவாரத் திருமுறைகளும் புராணங்களும் கூறுகின்றன.

காசித் திருத்தலத்தின் புனிதத் தீர்த்தங்கள் பலப்பல. பகிரத மன்னன் செய்த விடாமுயற்சியின் பலனாகப் பரமேஸ்வரனது திருச்சடையிலிருந்து பாய்ந்து வந்த கங்கை நதி மிக முக்கியமான புனிதத் தீர்த்தமாக உள்ளது. விஸ்வநாதர் கோயிலில் உள்ள ஞானவாபி என்ற கிணறு மற்றொரு முக்கியமான புண்ணிய தீர்த்தம். இவையல்லாமல் தாராமதி எனப்படும் சந்திரமதி உண்டாக்கிய தாரக தீர்த்தம், ஞான தீர்த்தம், மோட்ச தீர்த்தம் என்று பலப்பல புனித நீர் நிலைகள் உள்ளன. கங்கை, யமுனை, சரஸ்வதி, ரண, தூதபாலா என்ற ஐந்து ஆறுகள் சங்கமமாகும் இடம் பஞ்சகங்கை என்ற புனிதத் தீர்த்தமாக விளங்குகின்றது. தமிழ்நாட்டில் செம்பொற்சோதி யீசர் எழுந்தருளிப் பாதுகாக்கும் ஐந்து ஆறுகள் பாய்கின்ற திருவையாறு தலம் போன்று காசியில் ஐந்து ஆறுகள் பாயும் இடம் பஞ்சகங்கை எனப்படுகின்றது. மதுரையில் சுந்தரேசர் புரிந்த திருவிளையாடல்கள் அறுபத்து நான்காகத் தொகுக்கப்பட்டுப் புகழ் பெற்றுள்ளது போல காசியில் புனித நீராடும் துறைகள் அறுபத்து நான்காக உள்ளன. இவ்வாறு கங்கைக் கரை முழுவதும் காலந்தோறும் பலப்பலரால் பிரதிட்டை செய்து பூஜை செய்யப்பட்ட பல்வேறு லிங்கங்களைக் கொண்ட கோயில்கள் உள்ளன.

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்

(திருவாசகம்)

ஆலம் உண்டு அமுதம் அமரர்க்கு அருள் அண்ணலார்
காலன் ஆருயிர் வீட்டிய மாமணிகண்டனார்
சாலநல்லடியார் தவத்தார்களும் சார்விடம்
மால் அயன் வணங்கும் மழபாடி எம் மைந்தனே

(சம்பந்தர்)

என தெய்வங்களும் தேவர்களும் தவசிகளும் பக்தர்களும் வந்து சேர்கின்ற புண்ணியப் பெரு நகரமாக உள்ளது காசி. காசியில் மிக முக்கியமாக தரிசனம் செய்யவேண்டிய இடம் காலபைரவர் திருக்கோயில். காசிக்கயிறு எனப்படும் கருமையான காப்பு நூல் இந்தக் கோயிலில்தான் கிடைக்கின்றது.

பிறப்பில்லாத பரப்பிரும்மமான பரமசிவம் ஏகபாத மூர்த்தியாகி வலப்புறத்திலிருந்து ஐந்து முகங்கள் கொண்ட பிரம்மனைத் தோற்றுவித்தார். தட்சிணாமூர்த்தியைப் போன்று கமண்டலமும் ருத்திராட்சமும் வேதச்சுவடிகளும் கொண்ட பிரம்மனுக்குப் பரமன் படைப்புத்தொழிலை அருளிச் செய்தார். படைத்தல் காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில் புரியும் ஐந்து முகங்கள் கொண்ட ஆகமேஸ்வரனைப் போன்று விளங்கியதால் பிரம்மன் ஆணவத்தோடு செயல்பட்டான். பிரம்மனைப் பிடித்த ஆணவமலத்தை முற்றிலும் போக்கித் தூய்மைப்படுத்துவதற்காகப் பராபரம் பைரவரைத் தோற்றுவித்தார். பைரவமூர்த்தி தன் விரல் நகத்தால் பிரம்மனது ஐந்தாவது தலையைக் கிள்ளினார். சர்வேஸ்வரன் பைரவரைப் படைத்து பிரம்மனது ஒரு தலையைக் கொய்த இடமே திருக்கண்டியூர். நல்ல மலரின் மேல் நான்முகனார் தலை ஒல்லை அரிந்தது என்று உந்தீ பற உகிரால் அரிந்தது என்று உந்திபற (திருவாசகம்) என பிரம்மனது தலையைக் கண்டமாக்கியதால் இத்தலம் திருக்கண்டியூர் என்று பெயர் பெற்றது. கண்டித்தல் என்றால் துண்டித்தல் என்று பொருள். அஷ்ட வீரட்டத் திருத்தலங்களுள் ஒன்றான இங்கு ஈசனுக்கு வீரட்டானேஸ்வரர் என்றும் பிரம்மசிரச்சேதர் என்றும் பெயர்கள்.

பிரம்மனது சிரத்தைத் துண்டித்த பைரவர் திருக்கண்டியூர் வீரட்டானேஸ்வரரைத் தொழுத பின்னர் காசி சென்றார். விஸ்வநாதரை நினைந்து கங்கையில் நீராடியபோது பைரவரின் கையிலிருந்த கபாலம் கீழே விழுந்தது. பிரம்மனது கபாலம் விழுந்த இடமே கபால

மோட்சம் எனப்படுகின்றது. விஸ்வேஸ்வரரைப் பூஜை செய்து வழிபட்ட பைரவர் உலகநாதனின் திருவருளால் காவல் தெய்வமாக இருக்கும் பேறு பெற்றார். பைரவர் அறுபத்து நான்கு பெயர்களுடன் விளங்குகின்றார். காசியின் காவல் தெய்வமாக விளங்கும் பைரவருக்குக் கால பைரவர் என்று திருப்பெயர். எல்லாச் சிவாலயங்களிலும் பைரவருக்குச் சிறப்பான இடம் உள்ளது. சிவாலயங்களில் நுழையும் முன்பு நந்தியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு நுழைய வேண்டும். இவ்வாறே சிவாலயங்களை விட்டு வெளிவரும்போது பைரவரிடம் சொல்லிவிட்டு விடைபெற்று வரவேண்டும். சிவநிந்தனையும் சிவ அபச்சாரமும் செய்பவர்களைத் தண்டிப்பது பைரவரின் பணியாகும். அக்கினிஸ்தலமான திருவண்ணாமலையில் பைரவருக்குத் தனிச்சந்நிதி அமைந்துள்ளது. பைரவரின் வாகனம் நன்றியுள்ள பிராணியான நாயாகும். மதுரையில் தெய்வத் தமிழ்ச்சங்கம் நிலவிய மூவேந்தர்கள் காலத்தில் பைரவருக்குத் தனியே கோயில்கள் இருந்ததைக் கல்லாடம் என்ற சங்க நூல் தெரிவிக்கின்றது. மதுரை சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றியிருந்த பல கோயில்களில் ஒரு கோயிலாக பைரவர் கோயில் குறிக்கப்பட்டுள்ளது.

இறந்தால் முக்தி தரும் திருத்தலம் ஆதலால் இறந்தவர்க்கான பித்ரு காரியங்கள் செய்வதற்கு ஏற்ற சிறந்த புண்ணியத் தலமாகக் காசி திகழ்கின்றது.

தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர் (புறநானூறு)

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (திருக்குறள்)

என இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் சிறப்பாகச் செய்யும் தங்கமான பிள்ளைகளாகவும் சிறந்த குடும்பவாசியாகவும் விளங்கும் நல்ல பண்பாடுடையவர்கள் எல்லாம் இறந்தவர்க்குச் செய்யும் பிண்டம் போடுதல், தர்ப்பணம் செய்தல் திவசம்

செய்தல், போன்ற காரியங்களையெல்லாம் செய்வதற்கு உரிய சிறந்த தலமாகக் காசி திகழ்கின்றது. அனைவரின் வாழ்க்கையிலும் காசியாத்திரையும் கங்கையில் நீராடுவதுவும் இறந்தவர்க்குப் பிண்டம் போடுவதுவும் பெறுதற்கு அரிய பெரிய பேறாக விளங்குகின்றது. இவ்வாறு இம்மைக்கும் மறுமைக்கும் இன்பமும் அமைதியும் சேர்க்கும் ஈடு இணையில்லாத அருள் தலமாகக் கோடிக்கணக்கான ஆண்டுகளாகக் காசி இருந்து வருகின்றது.

பற்றலாவதோர் நிலை இலாப் பரம்பொருள் அப்பொருள்
(திருவாசகம்)

என அவதாரம் பிறப்பு போன்ற மாசுகள் இல்லாத பரபிரும்மத்தை வழிபடுகின்ற செம்மையான இயற்கைத் திருநெறியாகிய சைவம் மட்டுமே உலகம் முழுவதும் இருந்த காலம் வரையில், அந்தக் கடவுள் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு தெய்வம் முதல் தாவரம் வரை எல்லா ஜீவராசிகளையும் வணங்கி மதிக்கும் இயற்கையான இந்து நெறி மட்டுமே இருந்த வரையில், மன்னர்கள் ஒருவரையொருவர் மதித்து பல நாடுகளுக்கும் புனித யாத்திரை மேற்கொண்டு நட்புடன் உறவாடினரே தவிர அடுத்த நாட்டின் மீது படையெடுத்து சென்று தாக்கியது இல்லை. பாரசிகத்தை ஆண்ட மன்னர்கள் காசி யாத்திரை மேற்கொண்டு கங்கையில் நீராடி விஸ்வநாதரை வழிபட்டுப் பலப்பல யாகங்கள் புரிந்ததைச் செப்பேடுகள் கூறுகின்றன.

நல்லார் அறம் சொல்லப் பொல்லார் புறங் கூற (சம்பந்தர்)

என்று மூன்று வயதிலேயே மூன்று காலமும் உணர்ந்த ஞானப் பிள்ளையார் கூறுவதற்கு ஏற்ப நல்லவர்கள் எல்லாம் அறநெறியில் நின்று காலங்காலமாகக் காசியைப் போற்றிக் கொண்டாடும்போது பொல்லாதவர்கள் எல்லாம் பொய்ப்பிரச்சாரம் செய்து அந்தப் புண்ணியத் திருநகரின் பெருமையையும் மகிமையையும் அழிப்பதிலேயே குறியாக இருந்தனர்.

3. ஸ்ரீ சோமேஸ்வரர்



சந்திரனுக்கு வாழ்வு அளித்த சோமேஸ்வரர்

போதன் போது அன்ன கண்ணனும் அண்ணல்தன்
பாதந்தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண்ப அரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே

சோமநாதம் என்ற புண்ணியத் திருத்தலம் குஜராத் மாநிலத்தில் உள்ள வீராவலி என்ற ஊரில் சரஸ்வதி நதி கடலில் சங்கமமாகும் இடத்தில் அமைந்துள்ளது. கோயிலின் பெயரே ஊருக்கும் பெயராக விளங்குகின்றது. வீராவலி தொடர் வண்டி நிலையத்தில் இருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன. அகமதாபாத் தொடர் வண்டி நிலையத்திலிருந்து வீராவலிக்குத்

தொடர் வண்டி உள்ளது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமை வாய்ந்து உலகத்தின் மிகப்பழமையான திருத்தலங்களுள் ஒன்றாக விளங்கும் சோமநாதத்திற்குப் பிரபாசபட்டினம், சோமபுரி, சோமநாதபுரம், அரசநகரம், சிவநகரம், வில்வபுரிப் பட்டினம், சூரப்பட்டினம் என்று காலந்தோறும் ஏற்பட்ட பலப்பல பெயர்கள் உள்ளன. இங்கு எழுந்தருளிப் பாதுகாக்கும் பரப்பிரும்மத்திற்கு சோமநாதர் சோமேஸ்வரர், சந்திரசேகரர், சந்திர மௌலீஸ்வரர் என்று திருநாமங்கள். சோமேஸ்வரர் என்றால் சந்திரனுக்கு இறைவன் என்று பெயர். க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்ட சந்திரன் இத்தலத்தில் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து வழிபட்டு நோய் நீங்கி நல்வாழ்வும் ஒளியும் பெற்றதால் இத்தலம் சோமநாதம் சோமேஸ்வரம் என்று பெயர் பெற்றது. சந்திரனைப் பாதுகாத்து வாழ்வளித்து ஒளிவழங்கிய பரமேஸ்வரனுக்கு சோமேஸ்வரர் என்று பெயர்.

தெற்கே தோன்றிய ஆகமங்கள் அழிந்து போய்விட்டதால் இப்போது உலகத்தின் மிகப் பழைமையான நூலாக இருக்கும் ரிக் வேதத்தில் போற்றப்படும் பழைமை மிக்க மிகத் தொன்மையான திருத்தலம் சோமநாதம். விஷ்ணுபுராணம், பாகவதம் உள்ளிட்ட பெரும்பாலான புராண இலக்கியங்களிலும் பிற நூல்களிலும் இத்தலம் புகழப்பட்டுள்ளது. தெய்வீகத் தேவாரத் திருமுறை இத்திருத்தலத்தை சோமீச்சுரம் என்று குறிப்பிடுகின்றது.

பிரம்மதேவனின் புதல்வனான தட்சனுக்கு அசுவினி முதல் ரேவதி வரையிலான இருபத்தேழு பெண்கள் இருந்தனர். அந்த இருபத்தேழு மகளிரும் சந்திரதேவனை மணம் புரிந்து கொள்ள விரும்பினர். தட்சன் இருபத்தேழு புதல்விகளையும் சந்திரனுக்கு மணம் செய்து கொடுத்தான். இருபத்தேழு புதல்விகளும் சென்னையிலுள்ள திருவொற்றியூர் என்ற தலத்தில் தியாகேசர் கோயிலில் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து

வழிபட்டு நட்சத்திரங்களாகும் பேறு பெற்றனர். இத்திருக்கோயிலில் இருபத்தேழு நட்சத்திர லிங்க சந்நிதிகள் உள்ளன.

இருபத்தேழு பெண்களையும் திருமணம் செய்துகொண்ட சந்திரன் ரோகினியுடன் மட்டும் அதிக ஆசையுடன் இருந்து மற்றவர்களை உதாசினப்படுத்தினான். இருபத்தாறு பேர்களும் சந்திரனின் முறைகேடான நடவடிக்கை பற்றி தட்சனிடம் முறையிட்டனர். மனைவியர்களிடையே பாரபட்சம் காட்டி அவர்களைத் துன்பப்படுத்தியதற்காக தேய்ந்து தேய்ந்து அழிந்து போகுமாறு தட்சன் சாபமிட்டான். சந்திரனை க்ஷய ரோகம் பற்றியது. அவன் ஒளி குறைந்து நாளுக்கு நாள் தேய்ந்து வரலானான். தேவமருத்துவர்களான அசுவினி குமாரர்களும் தன்வந்திரியும் எவ்வளவு வைத்தியம் செய்தும் நோய் திரவில்லை.

தனது நிலை கண்டு வருத்தம் அடைந்த சந்திரன் பூவுலகை அடைந்தான். சௌராஷ்ற்றத்தில் சரஸ்வதி நதி கடலில் கலக்கும் இடத்தில் லிங்கப்பரம்பொருளைப் பிரதிட்டை செய்து அர்ச்சனை ஆராதனை புரிந்து வழிபட்டான். குற்றம் பொறுத்து கூறுவோர் குறை தீர்க்கும் கயிலைநாதனை நாள்தோறும் நீராடி விரதம் இருந்து பூஜை செய்தான். தேவர்களும் சந்திரனுக்காக சர்வேஸ்வரனைப் பூஜை செய்து சந்திரனைக் காப்பாற்ற வேண்டினர். பதினாறு கலைகளிலே பதினைந்து கலைகள் அழிந்து விட்ட சந்திரன் வைத்தியர்களுக்கெல்லாம் மிகப்பெரிய வைத்தியனான வைதீஸ்வரனை, மருந்துகளில் எல்லாம் மிகப்பெரிய மருந்தான மருந்திஸ்வரனைத் தொழுது போற்றித் தன்னைப் பாதுகாத்து அருளுமாறு பரம்பொருளை வேண்டினான். படைத்தல் காத்தல் அழித்தல், கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்து இருத்தல், வெளிப்பட்டுக் காட்சி கொடுத்து முக்தி அருளுதல் என்னும் ஐந்து தொழில் புரியும் அம்மையப்பன் சந்திரனின் ஒரு கலையைத் தன் திருமுடியில் அணிந்து கொண்டு சந்திரனுக்கு அருள் புரிந்தார். பராபரனின் பேரருள் பெற்ற சந்திரன் இழந்த ஒளியை மீண்டும் பெற்று நாளுக்கு நாள் வளர்ந்து; முழுப்பிரகாசத்தை

அடைந்தான். சந்திரனது கலையைத் திருச்சடையில் முடிந்து கொண்டு சந்திரனுக்கு வாழ்வு அளித்ததால் பரப்பிரும்மத்திற்கு சந்திர கலாதரர், பிறைச்சடையன், பிறைமதியன், பிறைசூடி சோமசுந்தரர், மதியழகன், நிலவணிந்தோன் என்ற பலப்பல பெயர்கள் உண்டாயின. லிங்கப்பரம்பொருளுக்கு சோமலிங்கம், சந்திரலிங்கம் என்று திருப்பெயர்கள். இவ்வாறு தட்சனின் சாபத்தால் தேய்பிறையும் பரம்பொருளின் திருவருளால் வளர்பிறையும் உலகில் மாறி மாறி ஏற்படுகின்றன. சூரியன் நாள்தோறும் தோன்றுகின்றான் நாள்தோறும் மறைகின்றான். ஆனால் அவன் முழுமையாகத் தோன்றுகின்றான். முழுமையாக மறைகின்றான். மற்ற கோள்களுக்கு இல்லாமல் சந்திரனுக்கு மட்டும் படிப்படியாக வளர்வதுவும் படிப்படியாகத் தேய்வதுவும் ஏன் உண்டாகின்றன என்பதை சோமநாதத் திருத்தல வரலாறு அருமையாகக் காட்டுகின்றது. விஞ்ஞானம் எப்படி என்ற கேள்விக்கு மட்டுமே விடைகூறும். ஆனால் மெய்ஞானமோ ஏன் என்ற கேள்விக்கும் விடைகூறுவது என்பதை சோமநாதர் தல வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறே சந்திரகிரகணம் சூரிய கிரகணம் என்பதெல்லாம் எப்படி உண்டாகின்றது என்று மட்டுமே விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவை ஏன் உண்டாகின்றன என்பதையும் புராணங்கள் விளக்குகின்றன.

கோணா கணையானும் குளிர் தாமரையானும்
காணார் கழல் ஏத்த கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் ஏத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே (சம்பந்தர்)

என்று சிவபூஜை புரிந்து உடல்நோய் குணமாகி நலம்பெற்ற சந்திரன் மிக்க மகிழ்ச்சியுடன் வேறு பல தலங்களிலும் பரம்பொருளை வழிபட்டுப் பூஜை செய்தான். அத்தகைய திருத்தலங்களில் ஒன்று தமிழ்நாட்டிலுள்ள திங்களூர். அப்பூதியடிகளின் இறந்த மகனைத் திருநாவுக்கரசர் மீண்டும் உயிரோடு எழுப்பிக் கொடுத்த தலமாகிய திங்களூரில் சிவபூஜை புரிந்த சந்திரனுக்குத் தனிச் சந்நிதியுள்ளது. கும்பகோணத்தில்

வியாழபகவானாகிய பிரகஸ்பதியும் சந்திரனும் வழிபட்டுப் பூஜை செய்த வியாழ சோமேஸ்வரர் ஆலயம் உள்ளது. கும்பேஸ்வரர் கோயிலுக்கு அருகே இத்திருக்கோயில் உள்ளது. முக்கண்ணனது கண்களிலிருந்து ஒளியைப் பெறும் சூரியபகவானுக்கும் சந்திர பகவானுக்கும் எல்லா சிவாலயங்களிலும் சுற்றுப் பிரகாரத்தில் சந்நிதி உள்ளது.

சந்திரனுக்கு வாழ்வு அளித்த சோமநாதரை வழிபட்டு அருள் பெற்றவர்கள் பலப்பலர்.

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி (திருவாசகம்)

என சோமேஸ்வரரைப் போற்றித் தொழுது இந்திரன், சூரியன், கண்ணன், ஜன்மேஜயன், பாண்டவர்கள், என்று காலந்தோறும் பலப்பல பக்தர்கள் சோமநாதரின் திருவருள் பெற்றுள்ளனர். தனது இறுதி நாட்களில் சோமநாதத்தில் வாழ்ந்த கண்ணன் வேடனால் கொல்லப்பட்டபோது சோமேஸ்வரரின் திருவருளால் வைகுண்டப் பிராப்தி பெற்றான். வடமதுரையின் மேல் மீண்டும் மீண்டும் படையெடுத்து வந்து தாக்கிய ஜராசந்தனுக்கு அஞ்சிய கண்ணன் யாதவர்களுடன் மதுராவை விட்டு நீங்கி துவாரகையை அடைந்து அங்கு ஒரு ஊர் அமைத்துக் கொண்டு வாழலானான். ஒரு நாள் சில முனிவர்கள் துவாரகையை அடைந்தனர். மூன்று காலமும் உணரும் முனிவர்களின் தவவலிமையைச் சந்தேகப்படும் நாத்திகப் போக்கும் விளையாட்டுப் புத்தியும் கொண்ட சில யாதவச் சிறுவர்கள் சாம்பன் என்பவனுக்கு கர்ப்பிணிப் பெண் போல் வேடம் போட்டு முனிவர்களிடம் அழைத்துச் சென்றனர். இந்தப் பெண்ணிற்கு என்ன குழந்தை பிறக்கும் என்பதைத் தங்களுடைய தவ ஆற்றலால் கூற வேண்டும் என்று கேட்டனர். யாதவர்களின் விஷமத்தனத்தைக் கண்ட முனிவர்கள் இவள் உலக்கையைப் பெற்றெடுப்பாள். அந்த உலக்கைப் பிள்ளையால் உங்கள் வம்சமே அழியும் என்று கூறினர். அந்த முனிவர்களின் சத்திய வாக்குப்படி சாம்பனுக்கு ஒரு இரும்பு உலக்கை பிறந்தது. கண்ணனது

ஆலோசனைப்படி யாதவர்கள் அந்த இரும்பு உலக்கையைப் பொடி செய்து கடலில் வீசினர். பொடியாகாமல் இருந்த ஒரு சிறு இரும்புத் துண்டையும் கடலில் எறிந்தனர். இரும்புத் துகள்கள் சோமநாதத் திருத்தலத்தில் கரை சேர்ந்தன. அங்கு அவை கோரைப் புற்களாக வளர்ந்தன. தூளாகாமல் வீசி எறியப்பட்ட இரும்புத் துண்டை ஒரு மீன் விழுங்கியது. மீனவர்களின் வலையில் விழுந்த அந்த மீன் விற்பனைக்குச் சென்றபோது அதை வேடன் ஒருவன் வாங்கிச் சென்றான். அந்த மீனின் வயிற்றில் ஒரு இரும்புத் துண்டு இருப்பதைக் கண்ட வேடன் அதையெடுத்துத் தனது அம்பினில் பொருத்தி வைத்தான்.

கண்ணன் தனது குலத்திற்கு அழிவு வந்துவிட்டதை உணர்ந்தான். துவாரகையை விட்டு நீங்கி யாதவர்களுடன் சோமநாதம் சென்றான். உபமன்னியு முனிவரிடம் சிவதீட்சை பெற்றிருந்த கண்ணபிரான் நாள்தோறும் நெற்றியில் திருநீறு பூசி நியமத்துடன் சிவபூஜை செய்து சோமநாதரை வழிபட்டு அன்னதானம் செய்து தான தர்மங்கள் புரிந்து சிவபக்தனாக வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் யாதவர்களிடையே வாக்குவாதம் மூண்டது. வாய் வார்த்தை வளர்ந்து முற்றி கைச்சண்டை துவங்கியது. கையில் கிடைத்த பொருட்களையெல்லாம் வீசி எறிந்து ஒருவரை ஒருவர் அடிக்கலாயினர். ஆயுதங்கள் தீர்ந்து போன பின்பு அங்கு வளர்ந்திருந்த கோரைப் புற்களைப் பிடுங்கி ஒருவரை ஒருவர் அடித்தனர். புற்கள் உலக்கையாக மாறின. யாதவர்கள் உலக்கையால் அடிபட்டுச் சாவதைக் கண்ட கண்ணன் அவர்களது சண்டையைத் தடுக்க முயன்றான். கண்ணன் மீதும் உலக்கையடிகள் வீழ்ந்தனவே தவிர யாதவர்களின் சண்டையைக் கண்ணனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. யாதவர்கள் எல்லாம் மாண்டுபோனதைக் கண்டு மனம் வருந்திய கண்ணன் சோர்வுடன் ஒரு போதிமரத்தடியில் (அரசமரம்) படுத்து இருந்தான். தொலைவில் இருந்த ஒரு வேடன் மிருகம் என்று நினைத்து அம்பு எய்தான். இரும்பு உலக்கையின் துண்டு பதிக்கப்பட்டிருந்த அந்த அம்பு கண்ணனது உடலில் பாய்ந்தது. கண்ணன் வேதனையால் அலறினான்.

மனிதக்குரல் கேட்டு ஓடி வந்த வேடன் தவறுதலாகக் கண்ணன் மீது அம்பு பாய்ந்திருப்பதைக் கண்டு மனம் வருந்தினான். கண்ணனது உயிர் பிரிந்தது. சோமநாதரின் திருவருளால் கண்ணன் உயிர் வைகுண்டம் சேர்ந்து காக்கும் தெய்வம் திருமால் ஆனது.

வேடன் கண்ணனது உடலைத் தகனம் செய்துவிட்டுச் சென்றான். அன்று மழை பொழிந்தது. அதனால் கண்ணனது உடல் பாதி கருகியும் பாதி வேகாமலும் இருந்தது. மழை வெள்ளத்தினால் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட சடலம் பூரி நகரில் கரை சேர்ந்தது. கிருஷ்ணனது உடல் பாதி வேகாமலும் பாதி எரிந்து கருகியிருப்பதையும் கண்ட மக்கள் வேதியர்களிடம் உரைத்தனர்.

வேதப்பிராமணர்கள் ரிக் வேத மந்திரங்கள் ஓதி கண்ணன் உடலை அடக்கம் செய்தனர். இந்த வரலாற்று நிகழ்ச்சியை

இருக்கு உருவாம் எழில் வேதத்தின் உள்ளே
உருக்கு உணர்வாய் உணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குருவாகிய வேதியர் சொல்லும்
கருக்கு உருவாய் நின்ற கண்ணனுமாமே

(திருமந்திரம்)

என்று திருமூலமுனிவர் பாடியுள்ளார். கண்ணன் வேடனது அம்பினால் இறந்து போன இடம் பாலுகா தீர்த்தம் எனப்படுகின்றது. இங்குக் கட்டப்பட்டுள்ள கோயிலில் கண்ணன் மரணம் அடைந்த வரலாறு சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது. பூரியில் கண்ணன் அடக்கம் செய்யப்பட்ட இடமே ஜகந்நாதர் கோயிலாக விளங்குகின்றது. இக்கோயிலில் முழுமையில்லாத அரைகுறையாக உள்ள கண்ணன் உருவம் காணப்படுகின்றது. கண்ணன் மரணம் அடைந்ததைப் பற்றிக் கேள்வியுற்ற பாண்டவர்கள் சோமநாதத்திற்கு வந்தனர். சிலநாட்கள் இங்கு தங்கியிருந்து சோமநாதரை வழிபட்டுச் சென்றனர்.

எட்டு வகையான திருக்கோயில்களிலே சோமநாதம் பெருங்கோயிலாகவும் மணிக்கோயிலாகவும் விளங்கியது.

இராவணன் சோமேஸ்வரர் ஆலயத்தைத் தங்கத்தால் அமைத்துப் பொன்மயமாக்கினான். கிருஷ்ணன் சோமநாதர் ஆலயத்தை வெள்ளியால் புதுப்பித்தான். வெள்ளித் தோரண வாயிலை அமைத்துத் திருப்பணி செய்தான். இத்திருக்கோயிலானது தங்கமணி, தங்கச் சங்கிலிகள், தங்க விக்கிரகங்கள், தங்கத் தாம்பாளங்கள், நவரத்தினக் கற்கள் ஆகியவற்றையெல்லாம் கொண்டு மாபெரும் பொன்மணிக் கோயிலாகத் திகழ்ந்தது. மிக்க புகழும் பெருமையும் கொண்ட சோமநாதர் ஆலயம் செந்நிறக் கற்களால் கட்டப்பட்டிருந்த ஆலயம் என்பதைக் கல்வெட்டு கூறுகின்றது.

கோடிக்கணக்கான ஆண்டுகளாக நான்கு யுகங்களிலும் பலப்பலரால் புதுப்பிக்கப்பட்டு சீருடன் இருந்த கோயிலை ஹர்ஷவர்தனின் பேரன் நான்காம் தாரா என்பவன் கலியுகம் 38-ஆம் நூற்றாண்டில் புதுப்பித்துத் திருப்பணிகள் செய்தான். சோமநாதர் ஆலயம் தென்னாட்டுக் கோயில்கள் போன்று ஆகம முறையில் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் நடத்தப்பெற்ற கோயில் ஆனதால் தூய்மையாக உள்ள அர்ச்சகர்கள் தவிர வேறு யாரும் கருவறைக்குள் செல்வதில்லை. புண்ணிய பாரதப் பண்பாட்டின் வடிவமாக விளங்கும் சோமநாதர் கோயிலில் எண்ணற்ற இசைநடனக்கலைஞர்கள் இருந்தனர். ஆயிரம் இசைக் கலைஞர்களும் இருநூற்று ஐம்பது நடனக் கலைஞர்களும் ஆயிரம் புரோகிதர்களும் இருந்தனர். நாள்தோறும் சோமலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதற்காக கங்கையிலிருந்து நீரும் காஷ்மீரத்திலிருந்து மலர்களும் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு அளவற்ற பெருமையும் புகழும் கொண்ட சோமநாதரை நாள்தோறும் ஒரு முறையாவது தரிசனம் செய்து வழிபடுதல், சோமவாரங்களில் பூஜை செய்தல், அமாவாசை இரவு அன்று சிவநாமம் ஓதி ஆராதனை செய்தல், விசேஷ நாட்களிலும் பிரதோஷம் சிவராத்திரி போன்ற தினங்களிலும் விரதம் இருத்தல், சரஸ்வதி சங்கமத்தில் நீராடுதல் ஆகிய ஐந்து வகை வழிபாடுகளையும் முறைப்படி செய்து வருபவர்களுக்கு எண்ணிய எண்ணமெல்லாம் ஈடேறுகின்றன என்று புராணங்கள் போற்றுகின்றன.

இவ்வாறு கோடிக்கணக்கான ஆண்டுகளாக சீரும் சிறப்பும் பெற்று பலப்பல மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டுப் பலப்பல நூல்களில் போற்றப்பட்டு வந்த சோமநாதர் திருக்கோயில் சென்ற ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக முகம்மதிய மன்னர்களால் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டது.

கலியுகம் முப்பத்தேழாம் (கி.பி.6) ஆம் நூற்றாண்டில் தோன்றிய முகம்மது நபியால் உண்டாக்கப்பட்ட முகம்மதிய மதத்தவர்கள் மன்னர்களை மதம் மாற்றினர்.

குவைப்பதி மலிந்த கோவே போற்றி (திருவாசகம்)

என குவைத் போன்ற அரபு நாடுகளில் இருந்த எண்ணற்ற சிவாலயங்கள் எல்லாம் இடித்துத் தள்ளப்பட்டன. மசூதியாக்கப்பட்டன. இராமேஸ்வரம் திருக்கோயிலைப் போன்ற அமைப்பு உடைய மக்கீஸ்வரம் என்ற சிவாலயம் இடிக்கப்பட்டு மசூதியாக மாற்றப்பட்டது. இன்றும் மக்கா மசூதியில் ஏழு அடி உயரமுள்ள மக்கீஸ்வரரைக் காணலாம். இந்த லிங்கப்பரம்பொருளையே சைத்தான் என்று கூறி முகம்மதியர்கள் கல்லெறிந்துவிட்டு வருகின்றனர்.

எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம் (காரைக்கால் அம்மையார்)
ஆர் ஒருவார் உள்குவார் உள்ளத்து உள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும் (அப்பர்)
காளத்தி ஆள்வார் நீர் ஆதரித்த தெய்வமே ஆம் (நக்கீரர்)

என யார் எந்த வடிவில் எப்படி வழிபட்டாலும் அவர்களுக்கு அந்த வடிவிலேயே நின்று அருள்புரிகின்ற சர்வேஸ்வரன் பௌத்த கோலத்துடனேயே இருந்த சாக்கிய நாயனார் எறிந்த கல்லை மலராக ஏற்றுக் கொண்டது போன்று முகம்மதியர்கள் எறியும் கல்லையும் மலராகக் கொள்கின்றார் போலும்.

விரிவிலா அறிவினோர்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும் (அப்பர்)

என்று பூமியைவிடப் பொறுமையும் கடலைவிடப் பரந்த மனமும் கொண்ட சிவனடியார்கள் எல்லாம் ஈசன் செயல், சர்வம் சிவமயம் என்று கொண்டு பிறர் சொல்லும் நச்சுப் பேச்சுக்களையும் செய்யும் வன்முறைகளையும் கண்டு பாதிப்பு அடையாமல் அமைதியாய் இருந்து மலையை விட உயர்ந்து நிற்கின்றனர் போலும்.

சோமநாதர் ஆலயம் இருந்த பழைய இடத்திலேயே கோயில் கட்டுவதற்கு அஸ்திவாரம் அமைக்கப்பட்டது. பின்னர் லிங்கப் பரம்பொருள் பிரதிட்டை செய்யப்பட்டது. கி.பி.1965 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. பாரதத் தாயைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும் புண்ணிய பூமியாக சோமநாதம் திகழ்கின்றது. அகலமான மண்டபங்களையும் வானுயர்ந்த விமானங்களையும் அழகுமிக்க கூரைகளையும் தோரணவாயில்களையும் கொண்டுள்ள சோமநாதர் திருக்கோயில் இராமநாதர் திருக்கோயிலைப் போன்று கடலுக்கு அருகே அமைந்துள்ளது. கடலே புனிதத் திர்த்தமாக விளங்குகின்றது.

கோலமலர் அயனும் குளிர் கொண்டல் நிறத்தவனும்
சீலம் அறிய அரிதாய்த் திகழ்ந்து ஓங்கிய செந்தழலான்
மூலமதாகி நின்றான் முதிர் புன்சடை வெண்பிறையான்
வேலை விடம் மிடற்றான் விரும்பும் இடம்
வெண்டுறையே

வேலை-கடல், மிடறு-கழுத்து

ஓதியாரும் அறிவார் இல்லை ஓதி உலகெலாம்
சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுள் சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணோடு எறி காற்றுமாய்
ஆதியாகி நின்றானும் ஐயாறுடை ஐயனே

4. ஸ்ரீ மகாகாளேஸ்வரர்



மகாகாளி வழிபட்ட மகாகாளேஸ்வரர்

நீரினார் கடல் துயின்றவன் அயனொடு நிகழ் அடிமுடி காணார்
பாரினார் விசும்புறப் பரந்து எழுந்ததோர் பவளத்தின் படியாகிக்
காரினார் பொழில் சூழ்தரு கடிக்குளத்து உறையும் கற்பகத்தின்தன்
சீரினார் கழல் ஏத்த வல்லார்களைத் தீவினை அடையாவே

மகாகாளேஸ்வரம் ஜோதிலிங்கத் திருக்கோயில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள உஜ்ஜயினி நகரில் உள்ளது. உஜ்ஜயினி தொடர் வண்டி நிலையத்திலிருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன. இத்தலம் திருமுறைகளில் உஞ்சேனை மாகாளம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

மகாகாளி லிங்கப்பரம்பொருளைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்து பெருவாழ்வு பெற்ற பலப்பலத் தலங்களில் உஜ்ஜயினியும் ஒன்று. இதனால் இத்தலம் உஜ்ஜயினி மாகாளம் என்று வழங்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் அம்பர், இரும்பை என்ற திருத்தலங்களிலும் மாகாளி பரப்பிரும்மத்தைப் பூஜை செய்தார். இந்தத் தலங்கள் அம்பர் மாகாளம், இரும்பை மாகாளம் என்று வழங்கப்படுகின்றன. மகாகாளிக்குப் பேரருள் புரிந்த பரமேஸ்வரனுக்கு மகாகாளேஸ்வரர், மகாகாளீஸ்வரர் என்று திருப்பெயர்கள் அமைந்தன. மகாகாளர் என்ற சிவகணம் பூஜை செய்ததாலும் இத்திருத்தலங்கள் மாகாளம் என்று வழங்கப்படுகின்றன.

வெள்ளம் பெருகியோடும் ஆற்றங்கரையில் இருந்தும் நீர் பருகமுடியாமல் நாக்கு வறண்டு போவது போல கடவுளையே கணவனாகப் பெற்றபோதும் தாட்சாயிணி அப்பரம்பொருளின் பேரருளில் முழுகித் திளைக்காமல் பந்த பாசங்களில் சிக்குண்டு துயரம் அடைந்தாள்.

வெள்ளத்துள் நா வற்றியாங்கு
உன் அருள் பெற்று துன்பத்தினின்றும் விள்ளக்கிலேனை
மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப
யான் உன் மணிமலர்த்தாள் வேறுபட்டேனை (திருவாசகம்)
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்

பரப்பிரும்மத்தைப் புரிந்து கொள்ள முடியாத பராசக்தி பராபரனின் திருக்குறிப்பிற்கு மாறாக தட்சன் செய்த கடவுள் விரோத யாகத்தில் கலந்து கொண்டாள். அந்தப் பாவத்திற்கும் சிவ நிந்தனையைக் கேட்ட கொடுமைக்கும் பிராயச்சித்தமாக யாக குண்டத்திலிருந்த நெருப்பில் விழுந்து எரிந்து சாம்பலாகிப் போனாள். பரமசிவம் வீரபத்திரரையும் பத்திரகாளியையும் படைத்து அருளினார். தட்சயாகத்தில் பங்கு கொண்டு தீமைக்கு உடந்தையாய் இருந்த தெய்வங்களையும் தேவ தேவியர்களையும் வீரபத்திரரும் பத்திரகாளியும் தண்டித்தனர். இவ்வாறு தேவ தேவியர்கள் செய்த

பாவங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் தூய்மையடைந்த தலமே திருப்பறியலூர். அஷ்ட வீரட்டத்தலங்களில் ஒன்றான இத்தலம் பறசலூர் என்று தற்காலத்தில் வழங்கப்படுகின்றது. தட்சனின் மனைவி பரமேஸ்வரனைப் பூஜை செய்து தட்சனுக்கு மீண்டும் உயிர் வழங்குமாறு வேண்டினாள்.

ஆர் உற்றார் ஆர் அயலார் (திருவாசகம்)
வேண்டாமை வேண்டுவதுவும் இல்லான் தன்னை (அப்பர்)
வேண்டுதல் வேண்டாமை இலான் (திருக்குறள்)

என உறவு பகையில்லாமல் வேண்டுதல் வேண்டாமையில்லாமல் அவரவர் செய்த கர்மங்களுக்கு ஏற்ப மறக்கருணையும் அறக்கருணையும் காட்டும் அறவாழி அந்தணன் தட்சனுக்கு ஆட்டுத்தலையை அருளிச் செய்தார்.

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்து அங்கு
எச்சனுக்கும் மிகைத்தலை மற்று அருளினன் காண் சாழலோ
ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக் கூட்டியவா
(திருவாசகம்)

என்று பரம்பொருளின் பெருங்கருணையினால் ஆட்டுத்தலையுடன் மீண்டும் உயிர் பெற்று எழுந்த தட்சன் தனது செயலுக்கும் நிலைமைக்கும் மிகவும் மனம் வருந்தினான்.

நெடுந்தகை நீ என்னை ஆட்கொள்ள
யான் ஐம்புலன்கள் கொண்டு விடும்தகையேன் (திருவாசகம்)

எனப் பராபரனோடு உறவு கொண்டாடும் பேரின்பப் பெருவாழ்வு கிடைத்தபோதும் அதைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் ஆணவத்தால் ஆடி அழிவு தேடிக் கொண்டதற்காக வருந்திய தட்சன் பல தலங்களையும் தரிசனம்

செய்து கொண்டு சென்னையை அடுத்து உள்ள திருவூறல் என்ற தலத்தை அடைந்தான். நந்தியின் திருவாயிலிருந்து எப்போதும் நீர் ஊறிக்கொண்டு இருப்பதால் திருவூறல் என்று பெயர் பெற்ற இத்தலத்தில் தட்சன் பரமேஸ்வரனை நோக்கித் தவம் புரிந்து, பூஜை செய்து போற்றித் துதித்து தனது நிலைமையை மாற்றியருள வேண்டும் என்று வேண்டினார். வேண்டுவார் வேண்டுவதே வழங்கும் வள்ளற்பெருமானும் தட்சனுக்கு மீண்டும் பழைய தலையை அருளிச் செய்தார். தக்கன் ஓலமிட்டு வணங்கியதால் இத்தலம் தக்கோலம் என்று பெயர் பெற்றது.

தட்சயாகத்தில் தட்சனது தலையை அறுத்து எறிந்து தேவ தேவியர்களையெல்லாம் தண்டித்த வீரபத்திரர் கைலைமலை அடைந்து சிவநினைவில் மூழ்கினார். ஆனால் பத்திர காளியோ வெறி அடங்காமல் கண்ணில் பட்ட எல்லோரையும் தாக்கித் துன்புறுத்தினாள். காளியின் கொடுமைக்கு ஆளான மண்ணுலகவாசிகளும் விண்ணுலக வாசிகளும் மகேஸ்வரனைப் பூஜை செய்து தங்களைக் காக்குமாறு வேண்டினர்.

ஆடல் நாயகனான ஈசன் திருவாலங்காட்டில் நடனம் ஆடினார். காளியும் போட்டிபோட்டுக் கொண்டு ஆட வந்தாள். கால் கட்டைவிரலைக் காது வரையிலும் தூக்கி ஆடும் ஊர்த்துவத் தாண்டவம் என்னும் நடனத்தை அம்பலவாணர் ஆடினார்.

மாகாளி கோபம் தவிர எடுத்த நடத்து இயல்பு (நக்கீரர்)

அரங்கிடை நூல் அறிவாளர் அறியப்படாததோர் கூத்தும் (அப்பர்)

என உலகத்தில் இல்லாத, நடன நூல்களில் கூறப்படாத நாட்டியக் கலைஞர்கள் அறியாத, எல்லாம் வல்ல கடவுளால் மட்டுமே நிகழ்த்தக் கூடிய இந்த நுணுக்கமான அரிய நடனத்தை ஆடமுடியாமல் தோற்றுப் போன காளி கோபமும் வெறியும் அடங்கி அமைதியடைந்தாள். சிவபெருமானைப் பணிந்து



வணங்கித் தொழுதாள். அம்பலத்தரசனின் அருள் பெற்ற காளி தமிழ்நாட்டில் பல திருத்தலங்களிலும் சிவவழிபாடு புரிந்த பின்னர் உஜ்ஜயினி நகரத்தை அடைந்தாள். அங்கு குளம் ஒன்று தோண்டி லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்து வழிபட்டாள்.

விண்ணுக்கு மேல் வியன் பாதலக் கீழ் விரி நீர் உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்து தில்லை நின்றோன்
(திருக்கோவையார்)

என்று துதித்த காளிக்கு அருள் புரிந்த சர்வேஸ்வரன் காளியை எல்லைத் தெய்வமாக வாழுமாறு பணித்தருளினார்.

ஈசனை மாகாளி வெங்கதிர்ச் செல்வன்
விண்ணொடு மண்ணும் நேர் சங்கு சக்கரதாரி
சதுர்முகன் அங்கு அகத்தியனும் அர்ச்சித்தார் அன்றே
(அப்பர்)

காளிக்கு அருளிய திருமுகத்து அழகுறு சிறுநகை இறைவன்
(திருவாசகம்)

என்று மகாகாளி பூஜை செய்து வழிபட்டதால் லிங்கோற்பவருக்கு மகாகாளேஸ்வரர் என்ற திருப்பெயர் உண்டாயிற்று. மகாகாளேஸ்வரர் எழுந்தருளியுள்ள கோயில் மாகாளம் என்று வழங்கப்படுகின்றது. சிவவழிபாட்டிற்காகக் காளி உண்டாக்கிய குளம் புஷ்கரணி என்று புண்ணிய தீர்த்தமாக உள்ளது. தமிழ்நாட்டில் மாகாளி சிவ பூஜை செய்த தலங்களும் மாகாளம் என்று வழங்கப்படுகின்றன. உஜ்ஜயினி மாகாளம் போன்று அம்பர், இரும்பை ஆகிய தலங்களில் உள்ள சிவாலயங்கள் அம்பர் மாகாளம், இரும்பை மாகாளம் என்று அழைக்கப்படுகின்றன.

உஜ்ஜயினியில் வேத விரதன் என்ற வேதியர் வாழ்ந்து வந்தார். சிறந்த சிவனடியாராக விளங்கி நாள்தோறும் மகா காளேஸ்வரரைப் பூஜை செய்து வந்தார். அந்நாளில் தூஷணன் என்ற அரக்கன் ஒருவனுக்கு இரண்யாட்சனைப் போன்று பசுஞானம் உண்டானது. அதனால் தன்னையே கடவுள் என்று கூறலானான். யாரும் தன்னைத் தவிர வேறு யாரையும் வழிபடக் கூடாது என்று ஆணையிட்டான். வேதவிரதன் அசுரனது அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் பக்தி வைராக்கியத்துடன் மகாகாளேஸ்வரரைத் தொடர்ந்து பூஜை செய்து வாழ்ந்தார்.

கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு
குடிகெடினும் நள்ளேன் நினது அடியாரொடு அல்லால்
நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின்
இறைவா உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லாது
எங்கள் உத்தமனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ (திருவாசகம்)

என சிவபூஜையின் பலனாக ஈசன் திருவருளால் நரகமே கிடைத்தாலும் சரி, குடும்பம் முழுவதும் கெட்டு ஒழிந்தாலும் பரவாயில்லை. எல்லோருக்கும் தேவனான மகாதேவனைத் தவிர வேறு எந்த தேவனையும் வழிபடமாட்டேன், பரம் பொருளைத் தவிர வேறு யாரையும் மனதால் கூட நினைத்துப் பார்க்க மாட்டேன், பரமேஸ்வரனைத் தவிர வேறு யாரையும் துதிக்க மாட்டேன் என்று உண்மையான பக்தியுடன் வாழ்ந்த மாணிக்க வாசகரைப் போன்று பக்தியின் வடிவமாக விளங்கிய வேதவிரதன் தொடர்ந்து சிவபூஜை புரிந்து வந்தான். அசுரனது கொடுமைக் கரங்களிலிருந்து விடுபட எண்ணிய பிராம்மணர்கள் பலரும் உஜ்ஜயினி நகரை அடைந்து வேத விரதனுடன் சேர்ந்து மகாகாளேஸ்வரரை வழிபட்டு வந்தனர். செய்தி அறிந்த அசுரன் உஜ்ஜயினியை அடைந்தான். வேத விரதனும் மற்ற அந்தணர்களும் சிவபூஜையில் மூழ்கியிருந்ததைக் கண்டு அவர்களைத் தாக்கத் தொடங்கினான்.

வாழினும் சாவினும் வருந்தினும் போய் வீழினும்
உன் கழல் விடுவேன் அல்லேன் (சம்பந்தர்)

என வாழ்ந்தாலும், இறந்தாலும், வருத்தம் அடைந்து துன்பம் உற்றாலும், நரகத்தில் போய் விழுந்தாலும் நன்றே. ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் சிவபூஜையைக் கைவிடமாட்டோம் சிவபக்தி மாறாது என்று உறுதியுடன் மெய்யான பக்தியுடன் சிவநாமம் ஓதி சிவ நினைவில் திளைத்து இருந்த பக்தர்களைக் காப்பதற்காக புவனேஸ்வரன் மாகாளர் என்ற சிவகணத்தை அனுப்பினார். தூஷணன் மாண்டு போனான். மாகாளர்

மகாகாளேஸ்வரரை வழிபட்டுப் பூஜை செய்தபின் சிவலோகம் சேர்ந்தார். பரமன் மாகாளர்க்கு வரம் அருளியதை மிக்கவரம் நந்தி மாகாளர்க்கு அருளியும் என்று கோபப்பிரசாதம் என்ற திருப்பதிகத்தில் நக்கீரர் போற்றுகின்றார். இவ்வாறு மாகாளர் வழிபட்டதாலும் இத்தலம் மாகாளம் என்று அழைக்கப்பட்டது. காலனைத் தடுத்து பக்தர்களின் மரணத்தை நீக்குவதாலும் மகாகாளேஸ்வரர் என்று பெயர் உண்டாயிற்று.

கார்த்த வீர்யார்ஜுனனின் புதல்வர்கள் அரசாண்ட காலத்தில் உஜ்ஜயினி நகரம் மிக்க புகழ் பெற்று விளங்கியது. புகழ்பெற்ற மன்னன் விக்கிரமாதித்தனின் தலைநகரமான உஜ்ஜயினி சிறந்து இருந்தது.

மகாகாளேஸ்வரரை வழிபட்டு இறையருள் பெற்றவர்கள் பலர். சப்தரிஷிகள், அனுமான், கண்ணன், நவக்கிரகங்கள், அருந்ததி, நரசிம்மர், சித்தர்கள், பல்லவமன்னர் ஐயடிகள் காடவர்கோமான், திருநாவுக்கரசர் ஆகியோர் மகாகாளேஸ்வரரை வணங்கி அருள் பெற்றுள்ளனர். ஏழு ரிஷிகளும் ஒன்பது கிரகங்களும் பிரதிட்டை செய்து பூஜை புரிந்த லிங்கங்கள் தனித்தனியே உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள வைதீஸ்வரன் கோயிலில் செவ்வாய் சிவபூஜை புரிந்து வாழ்வு பெற்றது போல் உஜ்ஜயினியிலும் மகாகாளேஸ்வரரை வழிபட்டு நலம் பெற்றான். மங்களம் எனப்படும் செவ்வாய்க்கு அருள்புரிந்த மகாகாளேஸ்வரருக்கு மங்களநாதர் மங்கள லிங்கம் என்று பெயர். செவ்வாய்க்கு அருளிய மங்கள நாதருக்குத் தனியே கோயில் உள்ளது. கலியுகம் முப்பதைந்தாம் (கி.பி.4) நூற்றாண்டில் தமிழ்நாட்டை ஆண்ட பல்லவ மன்னரான ஐயடிகள் காடவர்கோமான் என்பவர் உஜ்ஜயினி சென்று மகாகாளேஸ்வரரை வழிபட்டுத் திருத்தொண்டுகள் புரிந்தார். அரச பதவியைத் துறந்து எளிமையான அடியார் கோலத்துடன் தலம் தோறும் சென்று தரிசித்து பாடல்கள் பாடி அடியார்களுடன் கூடியிருந்து கோயில் திருப்பணிகள் செய்து வாழ்ந்த ஐயடிகள் க்ஷேத்திரத் திருவெண்பா என்ற பதிகத்தில் உஞ்சேனை மாகாளம் என்று உஜ்ஜயினி மகாகாளேஸ்வரத்தைப் போற்றுகின்றார்.

கும்பகோணம் திருத்தலம் போன்று உஜ்ஜயினி மகாகாளேஸ்வரமும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பத் திருவிழா நடக்கும் திருத்தலமாகும். அமிர்த குடத்திலிருந்த அமுதம் சிந்திய திருத்தலங்களில் உஜ்ஜயினியும் ஒன்று.

மகாகாளேஸ்வரர் திருக்கோயில் பழங்காலத்தில் இருந்த பெரும்பாலான சிவாலயங்களைப் போன்று தங்க விக்கிரகங்களையும் தங்கப் பூஜைப் பொருட்களையும் கொண்டு பொற்கோயிலாக, மணிக்கோயிலாக விளங்கியது.

பாய் ஓங்கு பாம்பணை மேலானும் பைந்தாமரையானும்
போய் ஓங்கிக் காண்கிலார் புறம் நின்று ஓரார்
போற்று ஓவார் தீயோங்கு மறையாளர் திகழும்
செல்வத் தலைச்சங்கைச் சேய் ஓங்கு கோயிலே
கோயிலாகச் சேர்ந்தீரே (சம்பந்தர்)

என்று பெருங்கோயிலாகவும் பொற்கோயிலாகவும் விளங்கிய மகாகாளேஸ்வரர் திருக்கோயிலுக்குள் புஷ்கரணி என்ற புனித தீர்த்தம் உள்ளது. எப்போதும் நீர் நிறைந்துள்ள இந்தக் குளமே அல்லாமல் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் பாயும் சிப்ரா என்ற நதியும் இத்திருக்கோயிலின் புண்ணிய தீர்த்தமாகத் திகழ்கின்றது.

ஆன் அஞ்சும் ஆட்டுகந்தானை (சுந்தரர்)
மெய் சேர பால் வெண்ணீறு ஆடி போற்றி
நீறு ஏறு மேனி உடையாய் போற்றி (அப்பர்)

என உஜ்ஜயினி மாகாளேஸ்வரர் திருக்கோயிலில் தென்னாட்டுக் கோயில்கள் போன்று பரம்பொருளுக்கு விபூதி அபிஷேகம் செய்யப்பட்டு விபூதிக் காப்பும் சார்த்தி அலங்காரம் செய்யப்படுகின்றது. பஞ்ச கவ்வியம் எனப்படும் ஐந்து அபிஷேகப் பொருட்களான பால் தயிர் வெண்ணெய், நெய், திருநீறு ஆகியவற்றில் விபூதியபிஷேகமும் விபூதிக் காப்பும் இங்கு மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

உஜ்ஜயினி மாநகரம் பற்றிப் பலதரப்பட்ட இலக்கியங்களும் பேசுகின்றன. பலப்பல புராண நூல்கள், சிவலீலாம்ருதம், போன்ற தெய்வ இலக்கியங்கள் மட்டுமன்று கதா சரித்திர சாகரம், மேக சந்தேசம், மிருச்சகடிகம், காதம்பரி என பழம்பெரும் காவியம், உரைநடை, நாவல் நூல்களும் உஜ்ஜயினியின் புகழ் பாடுகின்றன. ஆகமேஸ்வரனைத் தோழனாகப் பெற்று வாழ்ந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளால் போற்றப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான பல்லவமன்னர் ஐயடிகள் காடவர் கோமான் உஜ்ஜயினியைத் தரிசனம் செய்து ஒரு வெண்பா பாடியுள்ளார்.

காலந்தோறும் பலப்பல மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டு செல்வக் களஞ்சியமாக விளங்கிய மகாகாளேஸ்வரர் அருட்கோயிலை கலியுகம் 44 ஆம் நூற்றாண்டில் (கி.பி.13) உஜ்ஜயினி மீது படையெடுத்து வந்த தில்லி சுல்தான் இடித்துத் தரைமட்டமாக்கினான். லிங்கப் பரம்பொருளைப் பெயர்த்து எடுத்துக் குளத்திலே வீசினான். ஐநூறு ஆண்டுகளுக்குப் பிறகு ரானோஜி சிந்தியா என்ற மன்னர் உஜ்ஜயினியை ஆண்டபோது குளத்திலிருந்து லிங்கப் பரம்பொருளைக் கண்டு எடுத்தார். பழைய ஆலயம் இருந்த இடத்தையும் தேடிக் கண்டு பிடித்துப் புதிய கோயிலைக் கட்டி வழிபட்டார்.

அழகிய கோபுரமாக உயர்ந்த விமானத்தையும் அகலமான மண்டபங்களையும் தாழ்வாரங்களையும் கொண்டு விளங்கும் உஜ்ஜயினி பெருங்கோயிலில் பன்னிரண்டு ஜோதிலிங்க சந்நிதியும் காணப்படுகின்றது. பெரிய லிங்கத்தையும் ஆவுடையாரையும் கொண்டு விளங்கும் மகாகாளேஸ்வரரை வழிபடுகின்றவர்களுக்கு வாழ்வில் அமைதியும் பக்தியும் பெருகுகின்றன. மரணபயமும் துன்பங்களும் விலகிப் போகின்றன.

உஜ்ஜயினி மாகாளத்தில் வாழ்ந்த வேத விரதனைப் போன்று தமிழ்நாட்டு அம்பர் மாகாளத்தில் வாழ்ந்த சிறந்த சிவனடியார் சோமாசிமாறர். அடியார்களை வரவேற்றுப் போற்றி உணவிடுவதை நியமமாகக்


கொண்டு பலப்பல வேள்விகள் புரிந்து வாழ்ந்த சோமாசி மாறர் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் நண்பராக விளங்கினார். விருந்தோம்பலாலும், அன்னதானத்தாலும், வேள்விகள் புரிந்தும் சமுதாயத்திற்கு நலம் பயப்பதால் அம்பர் ஊருக்கே ஒரு பெருமையாக வாழ்ந்த சோமாசி மாறரை அம்பரான் சோமாசிமாறன் என்று சுந்தரர் போற்றினார். தேவாரப் பாடல்பெற்ற அம்பர் மாகாளத்திற்கு பெருமை சேர்க்கும்படி வாழ்ந்த சோமாசி மாறர் சுந்தரர் போற்றிய அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். உஜ்ஜயினி மீது பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கள் கிடைக்கவில்லை. பாடப்பட்ட தேவாரத் திருமுறைகளில் மூன்று சதவிகிதம் மட்டுமே கிடைத்துள்ளன. மற்றவைகள் பகைவர்களால் அழிக்கப்பட்டன. இதனால் உஜ்ஜயினி பற்றிய திருப்பதிகங்கள் கிடைக்கவில்லை.

வேதவித்தாய் வெள்ளை நீறு பூசி வினையாயின
கோதுவித்தாய் நீறு எழக் கொடிமா மதிலாயின
ஏதவித்தாயின தீர்க்கும் இடம் இரும்பைதனுள்
மாதவத்தோர் மறையோர் தொழ நின்ற மாகாளமே

(சம்பந்தர்)



5. ஸ்ரீ ஓங்காரேஸ்வரர்



ஓங்காரம் பூஜை செய்த அமலேஸ்வரர்

சீர்கொள் மாமலரானும் செங்கண்மால் என்று இவர் ஏத்த
ஏர்கொள் வெவ்வழலாகி எங்கும் உற நிமிர்ந்தாரும்
பார்கொள் விண் அழல் கால் நீர்ப் பண்பினர் பால்மொழி யோடும்
கூர்கொள் வேல் வலன் ஏந்திக் கொச்சை வயம் அமர்ந்தாரே
(சம்பந்தர்)

ஓங்காரேஸ்வரம் என்ற இந்த ஜோதிலிங்கத் திருத்தலம் சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ளது. இந்தூர் என்ற ஊரிலிருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன. ஓங்காரேஸ்வரத் தலம் நர்மதையும் காவிரியும்

கலக்கும் சங்கமத் துறையில் அமைந்துள்ளது. காவிரி என்று பெயருடைய ஆறுகள் மூன்று இருந்தன. மத்தியப் பிரதேசத்தில் நர்மதையோடு கலக்கும் காவிரி ஒன்று. கர்நாடகத்தில் உற்பத்தியாகித் தமிழ்நாட்டில் பாயும் காவிரி நதி இரண்டு. இலங்கைக்கு அப்பாற்பட்டு இருந்த வேதங்களும் ஆகமங்களும் தோன்றிய திருத்தலமான மகேந்திரமலை என்ற புனிதத் தலத்தில் பாய்ந்த காவிரியாறு மூன்றாவது. கன்னி, குமரி, காவிரி போன்ற ஒன்பது ஆறுகள் பாய்ந்த வளம் மிக்க மகேந்திரமலை என்ற புண்ணியத் தலம் பின்னர் கடலில் மூழ்கிவிட்டது. திருமந்திர ஆகம நூலும் திருவாசகமும் தோன்றிய காலத்தில் இத்தலம் சிறப்புடன் விளங்கியது என்பதை அந்தப் புனித நூல்கள் தெரிவிக்கின்றன.

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்தம் மிக்கு உள்ள வெற்பு ஏழுள்
பேறான வேத ஆகமமே பிறத்தலால்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே (திருமந்திரம்)

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும் (திருவாசகம்)

என்று வேத ஆகமங்களைத் தோற்றுவித்த மகேந்திர மலை என்ற திருத்தலத்தைப் பற்றித் திருமூலரும் மாணிக்கவாசகப் பெருமானும் கூறியுள்ளனர். இந்த இரண்டு நூல்களும் மிகப் பழைமையான தெய்வ நூல்கள் என்பதை எடுத்துக்காட்டும் சான்றுகளாகவும் இந்த வரிகள் உள்ளன.

நடராஜப் பெருமானின் உடுக்கையிலிருந்து தோன்றிய ஓங்கார ஒலியானது நர்மதையும் காவிரியும் சங்கமமாகும் இடத்தில் வெளிப்பட்டு இருந்த சுயம்பு லிங்கப் பரம்பொருளைச் சுற்றி சதாசர்வகாலமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. பிரணவப் பொருளாகிய ஓங்காரம் இங்கு ஓங்கார வடிவமான லிங்கப் பரம்பொருளை எப்பொழுதும் வழிபட்டுக் கொண்டிருப்பதால் இத்தலம் ஓங்காரேஸ்வரம் என்று

அழைக்கப்பட்டது. வேதங்கள் சிவபூஜை செய்யும் வேதாரண்யம் (திருமறைக்காடு) போன்று ஓங்காரம் சிவபூஜை செய்யும் தலமே ஓங்காரேஸ்வரம். ஓங்காரத்திற்கு இறைவனான சிவபெருமானுக்கு ஓங்காரேஸ்வரர், அமலேஸ்வரர் என்று திருப்பெயர்கள். இதனால் ஓங்கார சுயம்பு லிங்கம் எழுந்தருளியுள்ள திருக்கோயிலுக்கு அமலேஸ்வரம் மமலேஸ்வரம் என்ற பெயரும் உண்டு. "ஓங்காரம் மமலேஸ்வரம்" என்று ஓங்காரத்தலத்தில் உள்ள மமலேஸ்வரம் என ஜோதிலிங்க சுலோகம் மமலேஸ்வரர் திருக்கோயிலைத் தெரியப்படுத்துகின்றது.

பக்தி, ஆன்மீகம், தெய்வீகம் இறையுணர்வு ஆகியவற்றுக்கெல்லாம் முக்கியமாக இருப்பது ஓம் என்ற ஒலி. அ உ ம் என்ற மூன்று ஒலிகள் சேர்வதால் உண்டாகும் ஓங்கார ஒலியின் வடிவமே லிங்கம். லிங்கப் பரம்பொருளின் தூண் பகுதி அகரத்தைக் குறிக்கின்றது. வட்டமான நடுப்பகுதியான ஆவுடையார் உகரமாக உள்ளது. அடிப்பகுதியாகிய பீடம் மகரமாகும்.

இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற்கண்ட நிறையும் அகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்க மகார நிறை விந்து நாதமே

என்று ஓங்கார வடிவமாக லிங்கம் விளங்குவதைத் திருமூலர் விளக்கியுள்ளார். பிரம்மனும் விஷ்ணுவும் அடிமுடி காண முடியாதவாறு நின்ற ஜோதிலிங்கமே ஓங்கார வடிவம் என்பதை

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும் பாய்ந்து ஏறி நொடியுங்கால்
இன்னது என அறியா ஈங்கோயே ஓங்காரம்அன்னது என நின்றான் மலை (திருஈங்கோய்மலை எழுபது)

என்று நக்கீரர் போற்றியுள்ளார். பரமன் ஓங்கார வடிவமாக விளங்குவதை

ஓங்காரமாய் நின்ற மெய்யா விமலா விடைப்பாகா
(திருவாசகம்)

என்று பிரணவப் பொருள் உணர்ந்த மணிவாசகப் பெருமான் போற்றுகின்றார். தெய்வங்களும் உணர முடியாத பிரணவப் பொருளை அறிந்து கொள்ளும் பாக்கியம் பெற்றவர் மாணிக்க வாசகர் மட்டுமே. பரமசிவம் பரமகுருவான தட்சிணாமூர்த்தி வடிவைக் காட்டி மாணிக்கவாசகருக்கு ஓங்காரப் பொருளை ஒரு நொடியில் உபதேசித்து அருளினார்.

புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதி பிரம்மம் வெளிப்படுத்த
ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு
ஆர் பெறுவார்!
நோக்கி நுண்ணிய நொடியன சொற் செய்து
ஆக்கி தன் அடியரில் கூட்டிய அதிசயம் (திருவாசகம்)

என்று ஆளுடையடிகள் இந்த மாபெரும் அதிசய அற்புதப் பேரின்பத்தை வியந்து போற்றுகின்றார். ஓங்கார ஒலியானது இயக்கத்திற்கும் ஓசையொலிக்கும் மூலாதாரமான இயக்க நாதன் நாராஜப் பெருமானின் உடுக்கையிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது. ஓங்கார ஒலியைத் தோற்றுவித்ததால் தியாகேசருக்கு ஓங்கார ஒலியன், ஓங்காரநாதன் ஓசையொலிப் பெருமான் என்று திருப்பெயர்கள் உண்டாயின.

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே

என்று திருநாவுக்கரசரின் தேவாரம் போற்றுகின்றது. தமிழ்நாட்டிலுள்ள சீர்காழிக்கு அருகே திருக்கோலக்கா என்ற திருத்தலத்தில் பரமேஸ்வரன் ஓசை கொடுத்த நாதர், ஓசையொலிப்பெருமான் என்று திருநாமங்களுடன் எழுந்தருளியுள்ளார். இந்தத் திருத்தலத்தில் மூன்று வயது மழலை திருஞான சம்பந்தப் பெருமான் தன் பிஞ்சுக் கரங்களால் தாளமிட்டு செந்தமிழ்ப் பதிகங்கள் பாடிய போது பராபரன் நமசிவாய என்ற மகாமந்திரம் பொறிக்கப்பட்ட தங்கத் தாளங்களை அருளிச் செய்தார். ஒலிகொள்சம்பந்தன் என்று சம்பந்தப் பெருமான் இதைப் போற்றுகின்றார்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு
உலகவர் முன் தாளம் ஈந்து

என்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஈசன் கருணையை வியக்கின்றார். ஓங்காரத்தைத் தோற்றுவித்து, ஓங்கார உருவாகி நின்று, ஓங்காரப் பொருளை உபதேசித்து, ஓங்காரத்தால் வழிபடப்படுகின்ற ஓங்காரேஸ்வரனை மறுப்பவர்கள்கூட, பூஜை செய்யாதவர்கள்கூட அந்த ஓங்கார ஒலியைத் தங்களது தெய்வத்தின் பெயர் முன்பு தவறாமல் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு ஓங்காரேஸ்வரன் எல்லா தெய்வ வழிபாடுகளுக்கும் ஆதாரமாகி எல்லா தெய்வப் பெயர்களின் முன்பும் வீற்றிருந்து எல்லோருக்கும் அருள் புரிகின்றார்.

ஓங்காரேஸ்வரம் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஓங்காரேஸ்வரருக்கு அமலேஸ்வரர் மமலேஸ்வரர் என்ற திருநாமங்களும் உள்ளன. மலம் என்றால் மாசு அழுக்கு என்று பொருள். அமலன் மமலன் என்றால் அழுக்கில்லாதவன் மாசில்லாதவன் என்று பொருள். கடவுள், ஆத்மா, ஆணவ மலம் என்ற மூன்றுமே தோற்றமும் முடிவும் இல்லாமல் எப்போதும் உள்ள பொருட்களாகும். இவற்றுள் கடவுள் என்பது ஒன்றே ஒன்று. அது ஆணவ மலத்தால் பற்றப்படாமல் எப்போதும் தூய்மையான சுத்தமான செம்பொருளாக இருப்பது. ஆத்மா என்பது பலப்பல. கணக்கில்லாமல் உள்ளன. ஆணவமலம் என்பது நான் எனது என்ற உணர்வாகிய இருள். நான் எனது என்ற ஆணவ மலத்தால் ஆத்மாக்கள் பற்றப்படுகின்றன. இதனால் அவற்றுக்கு இன்ப துன்பங்கள் உண்டாகின்றன. இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்காகப் பலப்பல பிறவிகள் ஏற்படுகின்றன. ஆணவமலம், இன்பதுன்பங்களாகிய கர்ம மலம், பிறவிகளாகிய மாயமலம் ஆகியவை உள்ளவை ஜீவராசிகளாகும். ஆணவமலம் கர்மமலம், மாயமலம் ஆகிய மூன்று மலங்களாலும் தீண்ட முடியாமல் பற்ற முடியாமல் தூய்மையான செம்பொருளாக இருப்பதாலேயே கடவுளுக்கு சிவம், சதாசிவம் என்று பெயர். மலங்களால் நெருங்க முடியாமல் தூய பொருளாக இருப்பதால் பரமசிவனுக்கு அமலன், மமலன், நிமலன், விமலன், நிர்மலன், மாசிலாமணி, மாசிலா ஈசர் என்றெல்லாம் திருப்பெயர்கள் அமைந்தன.

அத்தா போற்றி அமலா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி (திருவாசகம்)

என்று அமலேஸ்வரனைத் திருவாசகம் போற்றுகின்றது. திருவாவடுதுறையிலும் சென்னையை அடுத்த திருமுல்லைவாயில் என்ற திருத்தலத்திலும் மாசிலாமணி, மாசிலாமணீசர் என்ற திருநாமங்களுடன் இறைவன் எழுந்தருளியுள்ளார்.

தோற்றம் அவதாரம் பிறப்பு போன்ற மாசு மலங்களால் தீண்டமுடியாத அமலேஸ்வரனைப் பூஜை செய்து வழிபடுகின்றவர்கள் மும்மலங்களும் நீங்கித் தூய்மையடைந்து பிறவாத பேரின்பம் பெற்றுச் சிவத்துடன் கலந்து சிவமாகின்றனர்.

திரிமலம் செத்தார் சிவமாயினாரே (திருமந்திரம்)

என்பது திருமூலர் வாக்கு.

மன்னன் மந்தாதா என்பவனும் விந்திய மலையும் அமலேஸ்வரரின் அருள் பெற்ற அன்பர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். மந்தாதா மன்னன் அமலேஸ்வரருக்குக் கோயில் கட்டிப் பல திருப்பணிகள் செய்தான். அமலேஸ்வரர் கோயில் நர்மதை நதியின் கரையிலுள்ள சிறு குன்றின் மீது உள்ளது. படிகள் ஏறிச் சென்றால் கோயிலை அடைந்து விடலாம். படிகள் ஏற முடியாத வயதானவர்களைத் தூக்கிக் கொண்டு செல்வதற்கான வசதிகள் உள்ளன. கண்ணனும் பாண்டவர்களும் வந்து அமலேஸ்வரரை வழிபட்டு நலம் பெற்றுள்ளனர். ஆதி சங்கராச்சாரியார் ஓங்காரேஸ்வரத்திற்கு வந்து ஓங்கார நாதனை வழிபட்டுத் தங்கியிருந்த காலத்தில் இங்குள்ள குகை ஒன்றிலே தனது குருவைக் கண்டார். குருவிடமிருந்து பிரம்ம சூத்திரங்களுக்கு விளக்கவுரை எழுதும் ஞானம் பெற்றார். பழம்பெரும் கோயிலான அமலேஸ்வரம் ராணி அகல்யாபாயின் ஆட்சிக்காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் சரிவரப் பராமரிக்கப் படாததால் கோயில் மிகவும் பழைமையானதாக சற்று பழுது அடைந்தும் உள்ளது.

அமலேஸ்வரம் திருத்தலத்திற்கு நர்மதை நதியே புனிதத் தீர்த்தமாக உள்ளது. ஒரு நதியில் நீராடுவதைவிட இரண்டு நதிகள் இணையும் சங்கமத்தில் நீராடுவது சிறப்பு வாய்ந்தது. ஓங்காரேஸ்வரம் காவிரியும் நர்மதையும் கலக்கும் சங்கமத்தில் அமைந்துள்ளதால் அமலேஸ்வரம் திருக்கோயிலுக்கு வரும் அன்பர்கள் நதியில் நீராடாமல் போவது இல்லை.

பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கு ஒளி சேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறு ஆகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடு

என்று மாணிக்கவாசகப் பெருமான் திருவெம்பாவைப் பதிகத்தில் அறிவுறுத்தியவாறு நீராடும்போது பரமன் பெயர் சொல்லி நீராடித் துதிக்கின்றனர். நர்மதை நதியிலிருந்து பாண லிங்கங்களையும் கொண்டு செல்கின்றனர்.

அமலேஸ்வரர் திருக்கோயிலுக்கு எதிரே நர்மதையாற்றின் மறுகரையில் நதிக்கரையை ஒட்டி ஓங்காரேஸ்வரர் திருக்கோயில் என்று மற்றொரு கோயில் உள்ளது. தற்காலத்தில் பெரும்பாலோர் இந்தக் கோயிலையே ஜோதிலிங்கக் கோயில் என்று தவறாகக் கருதி குன்றின் மீது உள்ள மமலேஸ்வரம் ஜோதி லிங்கத்தைத் தரிசனம் செய்யாமலேயே வந்து விடுகின்றனர். குன்றின் மீது உள்ள மமலேஸ்வரம் கோயிலே பழைமையான ஜோதிலிங்கத் திருக்கோயில் என்பதை ஓங்காரேஸ்வரம் மமலேஸ்வரம் என்று சோதிலிங்க சுலோகம் உரைக்கின்றது.

ஓங்காரா ஒலியைப் பயன்படுத்தாத பக்தர்கள் கிடையாது.

எல்லா தெய்வப் பெயர்களுக்கும் முன்பு உள்ள ஓங்காரேஸ்வரர் எல்லோராலும் தொழப்படும் கடவுளாக உள்ளார்.

எல்லோரும் தொழும் ஈசரே (சம்பந்தர்)

என்று ஞானக்குழந்தை போற்றுகின்றார். ஆறுவகைச் சமயத்தார்க்கும் ஓங்காரேஸ்வரன் இறைவனாக விளங்குவதை

அறுசமயத் தலைவன் கண்டாய் (அப்பர்)

அறுவகை சமயங்களும் விரும்பி அரன் ர அடி பேணி

(சம்பந்தர்)

என்று தேவாரத் திருமுறைகள் தெரிவிக்கின்றன. ஆறுவகை சமயத்தவர்கள் வழிபடுகின்ற ஆறுதெய்வங்களின் உலகங்கள் எல்லாம் சிறு புழு போன்று இருக்குமாறு எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு உயர்ந்து உள்ள பரமேஸ்வரன் எல்லாத் தெய்வங்களுக்கும் இறைவனாக விளங்குவதை

அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும்
வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன் (திருவாசகம்)

கிடம் - புழு

என்று ஆளுடையடிகள் போற்றுகின்றார்.

ஓங்கார ஒலி பரம்பொருளைப் பூஜை செய்த மற்றொரு தலம் ஓமாம்புலியூர். இது தமிழ்நாட்டில் உள்ளது. வெளிநாட்டில் உள்ள ஓமன் என்ற திருத்தலமும் ஓங்கார ஒலி வழிபட்ட ஓங்காரேஸ்வரன் எழுந்தருளியிருந்த திருத்தலமாகும்.

திருச்சியில் உள்ள உய்யக்கொண்டான் மலை (கற்குடி) என்ற திருக்கோயிலில் உள்ள பிரகாரம் ஓம் வடிவில் அமைந்துள்ளது.

நாற்றமிகு மாமலரின்மேல் அயனும் நாரணனும் நாடி
ஆற்றல் அதனால் மிக அளப்பரிய வண்ணம் எரியாகி
ஊற்றமிகு கீழுலகும் மேலுலகும் ஓங்கி எழு தன்மைத்
தோற்ற மிக நாளும் அரியான் உறைவு தோணிபுரமே

(சம்பந்தர்)

6. ஸ்ரீ கேதாரேஸ்வரர்



உமாதேவி வழிபட்ட கேதாரேஸ்வரர்

காமனை ஈடழித்தவன் காதலி சென்று இரப்பச்
சேமமே உன்றனக்கு என்று அருள் செய்தவன் தேவர் பிரான்
சாம வெண்டாமரை மேல் அயனும் தரணி அளந்த
வாமனனும் அறியா வகையான் இடம் வக்கரையே
(சம்பந்தர்)

கேதாரத் திருத்தலம் உத்தரப் பிரதேசத்திலிருந்து பிரித்து அமைக்கப்பட்ட உத்தராஞ்சல் என்ற மாநிலத்தில் உள்ளது. கங்கை நதி பாயும் பனி படர்ந்த இமய மலைமீது அமைந்துள்ள இந்தத் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பது சுயம்பு லிங்கமாகும். கேதாரம் கண்ட பின்பு கல்லெல்லாம்

சிவலிங்கம் என்று கூறும் வண்ணம் ஒரு பாறையாக லிங்கப் பரம்பொருள் விளங்குகின்றது. கேதாரம் என்றால் கவலை நீக்குதல் என்று பொருள்.

தொழுத கை துன்பம் துடைப்பாய் போற்றி
இன்பமே வரும் துன்பமே துடைத்து (திருவாசகம்)

என வழிபடுகின்றவர்களின் கவலைகளையெல்லாம் துன்பங்களையெல்லாம் நீக்கியருள்புரியும் பரமேஸ்வரனுக்குக் கேதாரேஸ்வரர், கேதார நாதர் என்று திருப்பெயர்கள். பார்வதி, பரசுராமர், கௌதம முனிவர் நர நாராயணர், கண்ணன், பாண்டவர்கள் எனப் பலப்பலர் கேதார கிரீசனை வழிபட்டு வருத்தம் நீங்கி வாழ்வும் வளமும் பெற்றுள்ளனர். திருக்கோயிலின் அருகே பாயும் கங்கை நதியும் மலையடிவாரத்தில் உள்ள கௌரி குண்டமும் புனிதத் திர்த்தங்களாக உள்ளன. இந்த மலைக்கோயிலுக்கு கௌரி குண்டம் என்ற இடம் வரையிலும் வண்டி வாகனங்கள் செல்கின்றன. போக்குவரத்து வசதி உள்ளது. அதன் பிறகு சுமார் பதிமூன்று கிலோ மீட்டர் தூரம் மலைமேல் பயணம் செய்ய வேண்டும். நடந்தோ, குதிரை, பல்லக்கு, கூடை, ஆகியவற்றிலோ பக்தர்கள் பயணம் செய்கின்றனர். மூன்று வயதிலேயே பாலைவனத்தைப் பசுஞ்சோலையாக்கிய மழலை திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட அரிய தலம் திருக்கேதாரம்.

மிகப் புனிதமான மலையாகவும் மலைகளின் அரசனாகவும் விளங்கும் இமயமலையான இமவானுக்கு மகளாகத் தோன்றி வளர்ந்து வந்த பராசக்தி இமயமலைப் பகுதியில்இருந்த சுயம்பு லிங்கத்தைக் கண்டு பூஜை புரிந்து வாழ்ந்தாள். மலையடிவாரத்தில் சிவ வழிபாட்டிற்காக நீர் நிலை ஒன்றை உருவாக்கினாள். கௌரி உண்டாக்கிய இந்தக் குளத்திற்கு கௌரி குண்டம் என்று பெயர். பிற்காலத்தில் இது வெந்நீர் ஊற்றாகியது. பரப்பிரும்மத்தைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற வைராக்கியத்துடன் பார்வதி விரதம் இருந்து கேதாரநாதரைப் பூஜை செய்த முறையே கேதார கௌரி விரதம் எனப்படுகின்றது.

சூடுவேன் பூங்கொன்றைச் சூடிச்
சிவன் திரள்தோள் கூடுவேன்
கூடி முயங்கி மயங்கி நின்று ஊடுவேன்
செவ்வாய்க்கு உருகுவேன்
உள்ளுருகித் தேடுவேன் தேடிச்
சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன்
அனலேந்தி ஆடுவான் சேவடியே பாடுதும் காண்
அம்மானாய் (திருவாசகம்)

எனக் கடவுளைக் கணவனாக அடைய வேண்டும் என்ற உறுதியுடன் பார்வதி புரிந்த தவத்தையும் பக்தியையும் சோதனை செய்த பராபரன் உமையைத் திருமணம் செய்துகொண்டு அவளது கவலையைப் போக்கியருளிப் பேரின்பப் பெருவாழ்வு அருளினார்.

இருபத்தோரு தலைமுறைகளாக அரசர்களின் அகங்காரங்களையெல்லாம் அழித்து நாட்டில் போர், பகை என்பதே இல்லாமல் செய்த பரசுராமர் இமயமலையை அடைந்தார். கேதாரேஸ்வரரை வழிபட்டுப் பூஜை செய்து அங்கு தங்கித் தவம் புரிந்தார்.

ஜலந்திரனின் மனைவி பிருந்தையுடன் உறவு கொள்ள விரும்பிய விஷ்ணு ஜலந்திரனது வடிவத்தை மேற்கொண்டு சென்றது போன்றே கௌதம முனிவரின் பத்தினி அகல்யையுடன் உறவாட விரும்பிய இந்திரன் கௌதமரின் வடிவம் கொண்டு அகல்யையிடம் சென்றான். வந்திருப்பவன் இந்திரன் என்று தெரிந்த பின்னரும் அகல்யை அவனுடன் உறவு கொண்டாள். நடந்ததை அறிந்த கௌதம முனிவர் இந்திரனுக்குக் கடுமையாக சாபம் கொடுத்த பின்னர் அகல்யையிடம் நான் இமயமலைக்குச் செல்கின்றேன். விஸ்வாமித்திர முனிவர் இங்கு வரும் வரையிலும் நீ காற்றையே உணவாகக் கொண்டு யார் கண்ணிலும் படாமல் மறைந்து இருந்து அஞ்ஞாத வாசம் செய்வாயாக. விஸ்வாமித்திரர் இராம லட்சுமணர்களுடன் வரும்நாளில்

அவர்களை வரவேற்று உபசரிக்கும்போது நான் மீண்டும் வந்து உன்னோடு வாழ்கிறேன் என்று கூறிவிட்டு இமயமலைக்குச் சென்றார். அங்கு கேதாரேஸ்வரரை வழிபட்ட பின் சிவ நினைவில் மூழ்கித் தவத்தில் ஆழ்ந்தார்.

நர நாராயணர் என்ற இரண்டு சகோதரர்கள் சிறந்த சிவனடியார்களாக விளங்கினார்கள். மன்னர்களான இந்த இருவரும் செம்மையான ஜீவகாருண்ய ஆட்சி புரிந்தனர். மனுநீதிச் சோழன், பறவை மிருகங்களின் மொழியெல்லாம் அறிந்த சேரமான் பெருமாள் நாயனார் ஆகியவர்களின் ஆட்சியைப் போன்று நரநாராயணர்களின் ஆட்சியில் பறவை மிருகங்களும் அச்சமின்றி துன்பமின்றி நிம்மதியாக வாழ்ந்தன.

பொய்ம்மொழி கேட்டு மறம் அறிவார்
பகை மன்னி நின்றாரே (திருமந்திரம்)

எனத் தங்களைப் பொய்யாகப் புகழ்ந்து பாடும் சுயநலப் புலவர்களின் வீண் புகழ்ச்சியால் மயங்கித் தங்களுக்குள் ஒற்றுமையின்றிப் போரிட்டுப் பகை கொண்டு நின்ற சேர சோழ பாண்டியர்களைப் போன்று மண்ணாசையும் புகழ்வெறியும் கொண்ட அரசன் ஒருவன் நர நாராயணர்களின் மீது படையெடுத்து வந்தான். பலப்பல நல்லுயிர்கள் இறப்பதற்குக் காரணமான கொடிய போரை நரநாராயணர்கள் தடுக்க விரும்பினர்.

வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான்
மதித்தும் இரேன் (திருவாசகம்)

என்று மண்ணாள்வதை ஒரு பெருமையாகக் கருதாமல் மாணிக்கவாசகர், ஐயடிகள் காடவர்கோமான் போன்று அடியவராக இருந்து திருப்பணிகள் செய்து வாழ்வதையே விரும்பிய நர நாராயணர்கள் நாட்டை அந்த மன்னனிடமே ஒப்படைத்து விட்டுப் புனித யாத்திரை மேற்கொண்டனர். பல தலங்களையும் தரிசனம் செய்து வழிபட்ட சகோதரர்கள் திருக்கேதாரத்தை அடைந்தனர். அங்கு கேதாரேஸ்வரரைத் தொழுது வழிபட்டபின் நமசிவாய நாமம் ஓதித் தவம்

புரிந்தனர். வானலோகத்தைக் கைப்பற்றுவதற்காகவே தவம் செய்கின்றார்களோ என்று வருத்தம் அடைந்த இந்திரன் நரநாராயணர்களின் தவத்தைக் கலைப்பதற்காக தேவலோக கன்னியை அனுப்பினான். அந்த தேவமாது வந்து தவத்தைக் கலைப்பதற்கு முற்பட்டபோது காமதகனனின் நாமம் ஓதும் நரநாராயணர்கள் தங்கள் தொடையிலிருந்து அந்த தேவமாதுவைவிட அழகிய பெண்ணை உற்பத்தி செய்தனர். தொடையிலிருந்து தோன்றியதால் அந்தப் பெண்ணிற்கு ஊர்வசி என்று பெயராயிற்று. மயக்க வந்த தேவமாதுவிற்கு நல்லுரை கூறிய நர நாராயணர்கள் ஊர்வசியையும் அந்தப் பெண்ணோடு இந்திர சபைக்கு அனுப்பி வைத்தனர். நமசிவாய நாமம் ஓதி நெற்றியில் நீறு பூசி நெஞ்சில் சிவநினைவோடு சிவநாமம் பாடி வாழும் சிவனடியார்களை எந்த சக்தியாலும் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த தேவமாது நரநாராயணர்களைப் பணிந்து வணங்கி ஊர்வசியுடன் தேவலோகம் சேர்ந்தாள். தூய சிந்தனையும் உறுதியான சிவபக்தியும் கொண்ட நர நாராயணர்கள் முக்தி பெற்று சிவத்துடன் கலந்து சிவமாகி எண்குண நிலையடைந்தனர்.

மகாபாரதப் போருக்குப் பிறகு மன நிம்மதியில்லாமல் திரிந்த கண்ணன் கேதாரத்தை அடைந்தான். கேதாரேஸ்வரரை வழிபட்டுப் பூசை புரிந்தான். அங்கு தவம் செய்து கொண்டிருந்த உபமன்னியு முனிவரிடம் சிவதீட்சை பெற்றான். நாள்தோறும் நீராடி நெற்றியில் நீறுபூசி நியமத்துடன் சிவநாமம் ஓதி கடவுளை வழிபட்டு வந்தான். இதன் பலனாக தெய்வமாக வணங்கப்பெறும் பெரிய பலனை அடைந்தான்.

மகாபாரதப் போரின் முடிவினால் பாண்டவர்கள் மனம் மிகவும் கலங்கியிருந்தனர். தெய்வமாகப் போற்றப்பட வேண்டிய குரு, உடன் பிறந்தார்கள், உறவினர்கள், பெற்ற பிள்ளைகள், நண்பர்கள் என எல்லோரையும் பறிகொடுத்துவிட்டுப் பாலைவனம் போன்று நின்ற பாண்டவர்கள் பெரிதும் மனம் வருந்தினர். அர்ஜுனனுடைய பேரன் பரீட்சித்திற்கு முடிசூட்டியபிறகு தீர்த்த யாத்திரை மேற்கொண்டனர்.

தேசமெங்கும் உள்ள பலப்பலத் திருக்கோயில்களையும் தரிசித்து வழிபட்ட பாண்டவர்கள் திருக்கேதாரத்தை அடைந்தனர்.

அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு (சம்பந்தர்)

என அவலங்களைப் போக்கி வருத்தத்தை நீக்கி வானலோகத்து இன்ப வாழ்வை வழங்குகின்ற திருநீற்றை நமசிவாய நாமம் ஓதி நெற்றியில் இட்டுக்கொண்டு கேதாரேஸ்வரரை வழிபட்டுப் பூஜை செய்தனர்.

பிரமனும் திருமாலும் கைதொழப் பேரழலாய் எம்பெருமான்
அரவம் சேர்சடை அந்தணன் அணங்கினோடு அமரும் இடம்
கரவில் வண் கையினார்கள் வாழ் கலிக்கச்சி மாநகருள்
மரவம் சூழ் பொழில் ஏகம்பம் தொழ வல்வினை மாய்ந்தறுமே (சம்பந்தர்)

எனப் புனித நீராடிப் பரமனைத் தொழுது வல்வினையெல்லாம் நீங்கி மன நிம்மதி பெற்ற பாண்டவர்கள் கேதாரத்திலிருந்து வானலோகம் சென்றனர். முனிவர்கள் பலரும் வந்து வணங்கித் தவம் செய்த திருக்கேதாரம் கோயில் கருங்கல்லால் ஆனது. சந்நிதியில் பெரிய பாறை போன்று சுயம்புலிங்கம் உள்ளது. காலைவேளையில் மக்கள் அபிஷேகம் அர்ச்சனை செய்து வழிபடலாம். மாலையில் அலங்காரம் செய்யப்படுகின்றது. குளிர் நாட்களில் கோயில் மூடப்பட்டு இருக்கும். அந்த நாட்களில் தேவர்கள் வந்து கேதாரேஸ்வரரை வழிபடுகின்றனர். மூன்று வயதிலேயே மூன்று காலமும் உணர்ந்து மக்களின் பசி, பிணி, துன்பம் எல்லாவற்றையும் தீர்த்து வைத்த தெய்வ மழலை திருஞானசம்பந்தர் குதிரை முகத்து வானவர்களும் தேவர்களும் வந்து கேதாரத்தை வழிபடுவதைப் போற்றியுள்ளார். கடவுளைத் தாக்கிப் பழித்துக் கோயில்களுக்குத் தீமை செய்யும் பொல்லாத மதவாதிகளால் அடைய முடியாத புனித மலை என்று

கேதாரத்தை ஞானக் குழந்தை போற்றுகின்றார். பச்சைப் பசேல் என்ற மலைகளும் மலைகளிலிருந்து விழும் அருவிகளும் வெள்ளிப் பனி மூடிய வெள்ளைவெளேர் என்ற சிகரங்களும் வழிநெடுகிலும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும் இயற்கை எழிலை சம்பந்தர் தேவாரம் அருமையாக வர்ணிக்கின்றது. கடவுள் பக்தி இல்லாதவர்கூட இயற்கையை ரசிக்கும் இதயம் உள்ளவர்களாக இருந்தால் கண்டிப்பாகச் சென்று வரவேண்டிய அருமையான திருத்தலம் கேதாரம்.

துர்வாச முனிவரின் சாபத்திற்கு உள்ளான விஷ்ணு பூமிக்கு வந்து ஒரு மலையில் அமர்ந்து ஆதிபகவனான கேதாரநாதரை நினைந்து தவம் புரிந்தார். மகாலட்சுமி அவருக்குத் துணையாகப் பத்ராட்சை மரமாக நின்று நிழல் தந்து காவல் இருந்தாள். இதனால் அந்த இடத்திற்கு பத்ரிநாதம் என்று பெயர் உண்டானது. தவம் முடிந்த விஷ்ணு லிங்கப் பரம்பொருளை வழிபட்டுப் பூசை செய்தார். இந்தப் பரபிரும்மத்திற்கு ஆதி கேதாரேஸ்வரர் என்று பெயர். தவமும் சிவபூஜையும் செய்த மகாவிஷ்ணு இங்கு பத்ரிநாதர் என்ற பெயரில் கோயில் கொண்டுள்ளார். பத்ரிநாதர் கோயிலுக்கு முன்பாக ஆதி கேதாரேஸ்வரர் கோயில் உள்ளது. பத்ரிநாதர் வழிபட்டுப் பூசை செய்த இந்த ஆதிகேதாரேஸ்வரர் கோயிலுக்கு அருகேயும் வெந்நீர்க் குளம் உள்ளது. தற்போது இந்தக் கோயில் ஒரு சந்நிதி போன்று மிகச் சிறியதாக உள்ளது. கேதாரேஸ்வரரை வழிபடுகின்றவர்களுக்குத் திருமணம் நடைபெறுகின்றது. ஒழுக்கமான வாழ்வு உண்டாகின்றது. மனக்கவலைகள் நீங்குகின்றன.

ஆழ்ந்து காணார் உயர்ந்து எய்தகில்லார் அலமந்தவர்
தாழ்ந்த தம்தம் முடி சாய நின்றார்க்கு இடம் என்பதால்
வீழ்ந்து செற்று நிழற்கு இறங்கும் வேழத்தின் வெண்
மருப்பினைக்
கீழ்ந்து சிங்கம் குருகு உண்ண முத்து உதிரும் கேதாரமே
(சம்பந்தர்)

7. ஸ்ரீ கிராணேஸ்வரர்



பராசக்தி பூஜை செய்த கிராணேஸ்வரர்

கண்ணன் கடிக்கமல மலர்மேல் இனிது உறையும்
அண்ணற்கு அளப்ப அரிதாய் நின்று அங்கு அடியார்மேல்
எண்ணில் வினை களைவான் எழில் ஆப்பனூரைப்
பண்ணில் இசை பகர்வார் வினை பற்று அறுப்பாரே
(சம்பந்தர்)

கிராணேஸ்வரம் என்ற ஜோதிலிங்கத்தலம் மகாராஷ்ற்றத்தில் எல்லோராவிற்கு அருகே அமைந்துள்ளது. ஔராங்காபாத் என்ற நகரத்திலிருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன. இத்திருத்தலம் குஷ்மேஸ்வரம், பரத்வாஜஸ்வரம், கிருஷ்ணேஸ்வரம் என்றும்

அழைக்கப்படுகின்றது. கிராணம், குஷ்மம் என்றால் நறுமணம் என்று பொருள். பராசக்தி நறுமணம் உள்ள சிவந்த குங்குமப் பூவால் லிங்கப் பரம்பொருளை அர்ச்சனை செய்து பூஜித்ததால் இத்தலம் கிராணேஸ்வரம், குஷ்மேஸ்வரம் என்று பெயர் பெற்றது. பராசக்திக்கு அருள்புரிந்த பரப்பிரும்மத்திற்கு கிராணேஸ்வரர் குஷ்மேஸ்வரர் குங்குமேஸ்வரர் என்று திருப்பெயர்கள் . குஷ்மா என்ற பெண்ணடியவருக்கு அருள்புரிந்த காரணத்தாலும் குஷ்மேஸ்வரர் என்று திருநாமம் அமைந்தது. பரத்வாஜ முனிவர் வழிபட்டதால் பரத்வாஜஸ்தலம் என்று பெயர் உண்டாயிற்று. மன நிம்மதியில்லாமல் அலைந்து திரிந்த கண்ணபிரான் இங்கு வந்து சிவபூஜை செய்து வணங்கிய போது அவனுக்கு மன அமைதியை அளித்ததால் பரம்பொருளுக்குக் கிருஷ்ணேஸ்வரர் என்று பெயர். தலம் கிருஷ்ணேஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது.

குஷ்மேஸ்வரத் திருக்கோயில் தஞ்சைப் பெரிய கோயில் விமானம் போன்று கலையழகு மிகுந்து விளங்குகின்றது. இத்திருக்கோயிலின் புனித தீர்த்தம் பராசக்தியால் உண்டாக்கப்பட்ட புஷ்கரணி என்ற திருக்குளமாகும். கிராணேஷ்வரர் திருக்கோயிலில் நந்தியை அடுத்து ஆமை உள்ளது. சலவைக்கல்லால் ஆன ஆமை சந்நிதிக்கு முன்பாகத் தரையில் படுத்துள்ளதைப் பெரும்பாலான மகாராட்டிரக் கோயில்களில் காணலாம். தென்னாட்டுக் கோயில்களில் நந்தியை அடுத்து பலிபீடம் இருப்பது போல் மகாராஷ்ற்றக் கோயில்களில் ஆமை உள்ளது.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி
நாயினேன் கண்இணை நின் திருப்பாதப்போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி
வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி
அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ (திருவாசகம்)

என்று நந்திதேவரின் அவதாரமாக மாணிக்கவாசகப் பெருமான் வாழ்ந்தது போல் கோயிலுக்கு வரும் அன்பர்கள் தங்களது உண்மையான உடைமைகளான சிந்தனை, சொல், செயல், பார்வை, மெய், வாய், கண், மூக்கு, செவி போன்றவற்றை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து வணங்க வேண்டும் என்பதை பலி பீடம் எடுத்துக் கூறுகின்றது. இவ்வாறே இறைவன் முன்னிலையில் ஆமை போன்று ஐம்புலன்களையும் ஒடுக்கி சிவநினைவில் மூழ்கித் திளைத்து இருக்க வேண்டும் என்பதை சந்நிதியின் முன் உள்ள ஆமை எடுத்துக் காட்டுகின்றது.

ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து

என்று திருவள்ளுவ நாயனார் இதைக் கூறியுள்ளார்.

ஸ்ரீ கிராணேஸ்வரர்

சிவபெருமான் அவதாரம் பிறப்பு போன்ற மாசு மலங்கள் இல்லாத தூய செம்பொருளாக இருப்பவர். அவர் எல்லாவற்றையும் கடந்துள்ள பரப்பிரும்மம். பரமேஸ்வரனுக்குக் குறிப்பிட்ட ஒரு திருமேனி, பெயர், ஊர், எதுவும் இல்லை. தோற்றம், வளர்ப்பு, முடிவு இல்லாமல் எப்போதும் சதாசர்வகாலமும் நிலைத்து இருக்கும் மெய்ப்பொருளே சிவம். இயல் இது அன்றே என்னலாகா இறை (திருக்கோவையார்)

என இன்னது என்று சுட்டிக் குறிக்க முடியாமல் எங்கும் நிறைந்து மறைந்து உள்ள பரமசிவம் பக்தர்களுக்கு வெளிப்பட்டுக் காட்சி கொடுக்கும்போது ஆண்வடிவிலும் பெண் வடிவிலும் இருபாலாகவும் பால் வேறுபாடற்ற லிங்கமாகவும் காட்சி தருகின்றார். பரமசிவன் என்பது ஆண்பால் வடிவம், தாயுமானவன் என்பது பெண்வடிவம். அர்தநாரீஸ்வரர் என்பது இருபால் வடிவம். லிங்கம் என்பது மெய்ப் பொருள் வடிவம். இவ்வாறு உருவம் இல்லாத பரப்பிரும்மமான

பரமசிவம் பரமசிவனாகவும் பரம்பொருளாகவும் பரஞ்சோதியாகவும் பரமகுரு தட்சிணாமூர்த்தியாகவும் பராபரனாகவும் தாயுமானவனாகவும் பெண்ணொருபாகனாகவும் பலப்பல திருமேனிகளோடு காட்சி கொடுப்பதை

அருவமும் உருவமும் ஆயபிரான்
திருமேனி ஒன்று அல்லன்
பெண்டிர் ஆண் அலி என்று அறியொண்கிலை
பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க (திருவாசகம்)

என்று பரப்பிரும்மத்தை நேரில் கண்டு பாடிய முதல் அருட் புலவரான மாணிக்கவாசகப் பெருமான் போற்றியுள்ளார். சிவனடியார்கள் திருஞானசம்பந்தரும் மாணிக்கவாசகரும் பராபரனின் அர்தநாரீஸ்வரத் திருக்கோலத்தைக் காணும் பேறு பெற்றவர்கள். காஞ்சிபுரத்தில் மாணிக்கவாசகருக்கு ஏகாம்பரேஸ்வரர் இருபால் வடிவத்துடன் காட்சி தந்தருளினார்.

ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி

என்று ஆண்பாதி பெண்பாதியான அர்தநாரீஸ்வர இருபால் வடிவை ஆளுடையடிகள் போற்றுகின்றார்.

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதி சூடி
தோலும் துகிலும் காட்டித் தொண்டு ஆண்டீர்
பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்
பால் நல்வாய் ஒரு பாலன்

என்று சீர்காழியிலே பரப்பிரும்மம் குழையும் தோடும் தோலும் துகிலும் நிலவும் அணிந்த பெண்ணொருபாகனாக வந்து பொற்கிண்ணத்தில்

பால்சோறு அளித்துச் சென்றதைத் திருஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார். காவிரிக் கரையிலுள்ள பெரும்பாலான திருத்தலங்களில் லிங்கோற்பவரைப் போன்று கருவறைப் பின் சுவற்றிலோ துர்கை போன்றுபக்கச் சுவற்றிலோ பெண்ணொருபாகன் எழுந்தருளியுள்ளார். திருநள்ளாறு வேதாரண்யம் (திருமறைக்காடு) போன்ற தலங்களிலே மாதுபாகனின் உற்சவ மூர்த்தி வடிவம் அமைந்துள்ளது.

மெய்ப்பொருள் பரமசிவம் ஏகபாத மூர்த்தியாகி வலப்புறத்திலிருந்து பிரம்மதேவனையும் இடப்பாகத்திலிருந்து விஷ்ணுவையும் படைத்தார். இருபால் வடிவமான அர்தநாரீஸ்வர மூர்த்தியாகி இடப்பாகத்திலிருந்து பராசக்தியைத் தோற்றுவித்தார். ஈசனது இடப்பாகத்திலிருந்து விஷ்ணுவும் சக்தியும் பிறந்து வந்ததாலேயே அவர்கள் இருவரும் அண்ணன் தங்கை ஆயினர். மகாவிஷ்ணு பராசக்தி இருவருக்குமே அவதாரம் பிறப்பு உள்ளன. இருவருமே தவம் புரிந்து ஈசனது இடப்பாகத்தில் மீண்டும் இடம்பெற்றுக் கலந்தனர். விஷ்ணுவும் சக்தியும் ஒன்று என்பதை

அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே

என்று அப்பர் தேவாரமும் மிக அருமையாகக் காட்டியுள்ளது.

பரமேஸ்வரனிடமிருந்து பிறந்து வந்த பராசக்தி அந்தக் கடவுளையே மணவாளனாக அடைய விரும்பினாள். சக்தியை உற்பத்தி செய்த காரணத்தால் சர்வேஸ்வரன் பராசக்திக்குத் தந்தையாகின்றார். இதனால் வேண்டுவார் வேண்டுவதே வழங்குகின்ற கருணைக் கடலான முக்கண்ணன் பிரம்மதேவனின் மகன் தட்சனுக்கு மகளாகப் பராசக்தியைப் பிறக்கச் செய்தார். தட்சன் மகள் தாட்சாயிணியாக வளர்ந்த பராசக்தி தவமும் பூஜையும் புரிந்து அகிலாண்டேஸ்வரனையே மணவாளனாகப் பெறும் பாக்கியம் அடைந்தாள். அத்தகைய பெறுதற்கரிய பேறு பெற்ற பின்னும் உறவுபகையில்லாத, வேண்டுதல் வேண்டுமையில்லாத பற்றற்ற பரமனின் மகிமையைப் புரிந்து கொள்ள முடியாத காரணத்தால்

பந்த பாசங்களில் சிக்குண்டாள். நான் எனது என்ற உணர்வான ஆணவமலம் மேலோங்கி நின்றதால், தூய்மையான பரம்பொருளை விட்டுப் பிரிய நேர்ந்தது.

என் குறிப்பே குறிசெய்து நின் குறிப்பில்
விதுவிதுப்பேனை
நின்னையே அறியேன் நின்னையே அறியும் அறிவு
அறியேன்
புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து
இங்கு ஓர் பொய்ந் நெறிக்கே விலங்குகின்றேனை
(திருவாசகம்)

எனப் புலன்களால் மயக்கண்டு பரப்பிரும்மத்தின் திருக்குறிப்பிற்கு விரோதமாகச் சென்றாள். சிவநிந்தனை புரிந்த தட்சன் ா காரணமாகப் பெற்ற உடல் மீது வெறுப்பு கொண்ட தாட்சாயிணி அந்த உடல் இனி வேண்டாம் என்று யாக குண்டத்தில் விழுந்து எரிந்து சாம்பலாகி உடலை மாய்த்தாள்.

பரமசிவம் மாபெரும் கருணையுடன் பராசக்தியை மீண்டும் இமவானுக்கு மகளாகப் பிறக்கச் செய்தார். மன்மதனை எரித்து அழித்த பரமகுரு தட்சிணாமூர்த்தி கல்யாண சுந்தரராகச் சென்றார். பூஜையும் தவமும் புரிந்து வாழ்ந்த பார்வதியைத் திருமணம் செய்து கொண்டருளினார். பார்வதி சதாசர்வகாலமும் ஈசனுடன் இணைந்திருக்க விரும்பினாள். அர்தநாரீஸ்வரனின் பெண்பாகமாக இருப்பதற்கு ஆசைப்பட்டாள். இதனால் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து வழிபட்டாள். அபிஷேகத்திற்காக குளம் ஒன்று தோண்டினாள். இந்தத் திருக்குளத்திற்குப் புஷ்கரணி என்று பெயர். நமசிவாய நாமம் ஓதி நெற்றியிலே திருநீறு அணிந்து நாள்தோறும் குங்குமப் பூவால் குவலய நாதனை அர்ச்சனை செய்தாள். பூவின் மணம் போன்று பாரெங்கும் உள்ளும் புறமும் நிறைந்துள்ள பரமனை நறுமணமுள்ள மலர்களால் அர்ச்சனை செய்து வழிபட்டதால் இந்தத் திருத்தலம் குஷ்மேஸ்வரம் என்று அழைக்கப்பட்டது. ஈசனது இடப்பாகம் வேண்டிப்

பராசக்தி பூஜை செய்த பலப்பலத் திருத்தலங்களில் குஷ்மேஸ்வரமும் ஒன்று. பூஜை செய்து வழிபட்ட பராசக்திக்கு அருள்புரிந்த பெண்ணொருபாகன் பார்வதியைத் தன் இடப்பாகத்தில் ஏற்றுக்கொண்டு உமையொருபாகன் ஆனார். பெண்ணொருபாகன் (அர்தநாரீஸ்வரன்), உமைபாகன் (அர்தசக்தீஸ்வரன்) என்ற இரண்டு வடிவங்களையும் வேதங்களும் ஆகமங்களும் திருமுறைகளும் போற்றுகின்றன.

பாகம் பெண்ணுரு ஆனாய்
உமைபாகம் அதாய் (திருவாசகம்)

என்று மாணிக்கவாசகப் பெருமான் மாதுபாகனையும் உமைபாகனையும் போற்றியுள்ளார். இந்த இரண்டு திருக்கோலங்களுக்கும் வேறுபாடு தெரியாதவர்கள் இரண்டும் ஒன்று என்று தவறாகக் கருதுகின்றனர். நாரி என்பது மனித ஜாதியில் பெண்ணைக் குறிக்கும் சொல்லாகும். நரன் என்பதன் பெண்பால் சொல்லே நாரி. அர்தநாரி என்றால் பாதிப்பெண் என்று பொருள். அர்தநாரீஸ்வரன் என்பது ஆண்பாதி பெண்பாதியாக விளங்கும் ஈசன் வடிவம். ஆனால் உமைபாகன் என்பது பராசக்தியைப் பாதியில் கொண்டு விளங்கும் அர்தசக்தீஸ்வர வடிவம். இறைவனது இடப்பாகத்தைப் பெற வேண்டி நறுமணமுள்ள குங்குமப் பூவால் அர்ச்சனை செய்து வழிபட்ட பராசக்திக்கு அருள் புரிந்த மெய்ப்பொருளுக்கு குஷ்மேஸ்வரர், கிராணேஸ்வரர், குங்குமேஸ்வரர் என்று பெயர்கள் உண்டாயின.

ஸ்ரீ குஷ்மேஸ்வரர்

கிராணேஸ்வரத்தில் ஒரு அடியார் குடும்பம் வசித்து வந்தது. சுதர்மன் சுஷ்மா என்ற அந்த பிராம்மணத் தம்பதியர் சிறந்த சிவனடியார்களாக வாழ்ந்தனர். கிராணேஸ்வரரின் திருவருளால் எல்லாவிதமான வளங்களும் வசதிகளும் பெற்று பெரிய செல்வந்தர்களாக விளங்கினர்.

அருமறையோடு ஐவேள்வி தங்கினார் (சம்பந்தர்)

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்

என்று ஆங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (குறள்)

என தமிழ்வேதங்களின் சாரமான திருக்குறளும் தேவாரமும் தெரிவிப்பதற்கு ஏற்ப இறந்த முன்னோர்களுக்கு திவசம் செய்தல், தெய்வங்களை வழிபடுதல், விருந்தினரை உபசரித்தல், உறவினர்களைப் பாதுகாத்தல், தன் குடும்பத்தைப் பாதுகாத்தல் எனப்படும் ஐந்து வகை வேள்விகள் ஆகிய ஐந்து கடமைகளையும் புரியும் சிறந்த இல்லறவாசிகளாக விளங்கினர்.

ஆறங்கம் ஐவேள்வி நால்வேதம் மூன்று எரி

இரண்டு பிறப்பு என ஒருமையால் உணரும்
குணங்களும்

அவற்றின் சொள்பொருள் குற்றம் அற்றவை

உற்றதும் எல்லாம் உணர்ந்தவர் (சம்பந்தர்)

என உயர்ந்த குணங்களும் எது ஒன்றையும் குற்றமில்லாமல் முழுமையாகத் தெளிவாக உணர்ந்து கொள்ளும் நல்லுணர்வும் கொண்டு நான்கு வேதங்களிலும் ஆறு அங்கங்களிலும் சிறந்து விளங்கினர். அகில், சந்தனம், நெய் மற்றும் பிற நறுமணப் பொருட்களையும் சமித்துகளையும் நெருப்பில் இடுவதால் உண்டாகும் நறுமணப் புகையாலும் இனிய வேத மந்திர ஒலிகளாலும் காற்று, நீர், நிலம், வானம் என சுற்றுப்புறச் சூழல் எல்லாவற்றையும் தூய்மையாக்குகின்ற வேள்விகளும் நாள்தோறும் மூன்று வேளையும் செய்யும் ஹோமங்களும் புரிந்து வாழ்ந்தனர். உலக நன்மைக்காக செய்யப்படும் இந்த வேள்விகளையும் யாகங்களையும் புரிந்து மூன்று வேளையும் நெருப்பு வளர்த்து ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்சோதியை வழிபட்டனர்.

தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி

இன்று எனக்கு ஆரமுது ஆனாய் போற்றி (திருவாசகம்)

என்று கடவுள் நினைவுடன் காலையில் எழுந்து நீராடித் தூய்மையுடன் அரிசி மாவால் கோலம் போட்டு ஈ எறும்புகளுக்கு உணவிடுதல், உலகிற்கு ஒளிவழங்கும் பரமேஸ்வரனின் மூன்று கண்களில் ஒரு கண்ணாக விளங்கும் சூரியனை வணங்குதல், காக்கைக்குச் சோறிடுதல், நாள் முழுவதும் வீடு தேடி வரும் பிச்சைக்காரர்களுக்கு அரிசி அல்லது சோறு போடுதல், வீட்டுத் திண்ணையில் தங்கி இளைப்பாறிச் செல்லும் வழிப்போக்கர்களுக்கு உதவுதல், இரவில் பிச்சைக்காரர்களுக்கு உணவளித்தல் என காலைமுதல் இரவு வரை ஜீவகாருண்யம், தானதர்மம், பரோபகாரம் என அறவாழ்வே அன்றாட வாழ்க்கையாக விளங்கும் பிராம்மண குலத்திற்கு ஏற்ப சுதர்மனும் குஷ்மாவும் தானதர்மங்களையெல்லாம் செய்து வாழும் புண்ணிய ஆத்மாக்களாக வாழ்ந்தனர். நாள்தோறும் புஷ்கரணிக் குளத்தில் முழுகி கிராணேஸ்வரரை வழிபட்டு வந்தனர். அடியார் பணியும் ஆண்டவன் பணியும் மக்கள் பணியும் மகேசன் பணியும் புரிந்து வாழ்ந்தனர்.

தொலையாச் செல்வரின் திருவருளால் எல்லா செல்வங்களையும் பெற்ற குஷ்மா அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். சுதர்மனும் குஷ்மாவும் குழந்தையைச் சிராட்டிப் பாராட்டி வளர்த்தனர்.

ஒருநாள் ஊருக்குள் புகுந்த புலி ஒன்று தொட்டிலில் இருந்த குழந்தையை கவ்வி இழுத்துச் சென்றுவிட்டது. குழந்தையைக் காணாத தம்பதியர் கலங்கினர். எங்கு தேடியும் குழந்தை கிடைக்கவில்லை. சொல்லொணாத துயரம் அடைந்த குஷ்மா கிராணேஸ்வரர் கோயிலை அடைந்தாள். குழந்தை மீண்டும் உயிரோடு வரவேண்டும் என்று பிரார்த்தனை செய்து கிராணேஸ்வரரைப் பூஜை செய்து வழிபட்டாள். ஏழு நாட்கள் கோயிலிலேயே தாயுமானப் பெருமானை நினைந்து தவம் இருந்தாள்.

தொழுத கை துன்பம் துடைப்பாய் (திருவாசகம்)

என அன்பர்களின் துன்பங்களையெல்லாம் அழிக்கின்ற அம்மையப்பன் குஷ்மாவிற்கு அருள்புரிந்தார். ஏழாம் நாளன்று இரவுப்பொழுதில்

புலியானது கிராணேஸ்வரரின் சந்நிதிக்கு முன்பு குழந்தையை உயிரோடு கொண்டு வந்து விட்டு கிராணேஸ்வரரை வணங்கிச் சென்றது.

உரைப்பார் உரை உகந்து உள்க வல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடு அரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையை பிள்ளை தரச் சொல்லு
காலனையே (தேவாரம்)

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேண்டிப்பாடியபோது அவிநாசித் திருத்தலத்தில் முதலை விழுங்கிய பிள்ளையை அவிநாசியப்பரின் திருவருளால் முதலை மீண்டும் உயிரோடு கரையில் கொண்டு வந்து சேர்த்தது போன்று குங்குமேஸ்வரத்தில் புலி கவ்விச் சென்ற குழந்தையை கிராணேஸ்வரரின் திருவருளால் புலி மீண்டும் கொண்டு வந்து சேர்த்தது. புலித்தோல் அணிந்து புலிக்கால் முனிவருக்கு அருள்புரிந்த பரமனின் எல்லையில்லாத கருணைக்கு குஷ்மா மனம் நெகிழ்ந்தாள். இறந்த பிள்ளையை மீண்டும் உயிரோடு பெற்ற மனுநீதிச் சோழன், சிறுத்தொண்ட நாயனார், அப்பூதியடிகள், சிவநேசர் போன்று காணாமல் போன குழந்தையை மீண்டும் உயிரோடு பெற்ற குஷ்மா ஆனந்தக் கண்ணீர் வடித்து ஆடிப்பாடித் துதித்தாள். இவ்வாறு குஷ்மாவிற்கு அருள்புரிந்ததாலும் குஷ்மேஸ்வரர் என்ற திருப்பெயர் அமைந்தது.

புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
(திருவாசகம்)

(புல்வாய் - மான்கன்று)

என சுந்தரேசரின் திருவிளையாடலால் மதுரையில் புலியானது மான் குட்டிக்குப் பாலூட்டிப் பாதுகாத்தது போன்று கிராணேஸ்வரத்தில் குஷ்மேஸ்வரரின் திருவிளையாடலால் புலி குழந்தையை மீண்டும் உயிரோடு கொண்டு வந்து சேர்த்தது.

பாம்பும் மதியும் புனலுள் தம்மில் பகைதீர்த்து உடன் வைத்த பண்பா (அப்பர்)

எனப் பாம்பும் நிலவும் கொண்ட பகையினை நீக்கி இரண்டையும் திருச்சடையில் ஒன்றாக உறவாட வைத்த பண்பேஸ்வரனது கருணையினால் புலி போன்ற கொடிய மிருகங்களும் தம் கொடிய குணத்தை விடுத்து உறவாடி நன்மை செய்கின்றன.

இன்றும் குஷ்மேஸ்வரம் திருக்கோயில் பகுதியில் நாள்தோறும் நள்ளிரவில் புலியின் உறுமல் கேட்கின்றது. புலி ஒன்று வந்து ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாமல் இறைவனை வழிபட்டுச் செல்கின்றது. இது கலியுகத்திலும் மக்கள் கண்கூடாகக் காணும் அதிசயமாகும். அமர நாதம் குகைக் கோயிலில் வெளிப்பட்டுக் காட்சி தரும் பனியாலான சுயம்பு லிங்கம் போன்று கிராணேஸ்வரமும் கலியுக அதிசயங்களில் ஒன்றாகும். முழுமுதற்பொருளின் திருவருளால் பிள்ளையை மீண்டும் உயிரோடு பெற்ற சுதர்மனும் குஷ்மாவும் கோயிலுக்குப் பலப்பலத் திருப்பணிகள் செய்து புதுப்பித்து மகிழ்ந்தனர்.

ஸ்ரீ கிருஷ்ணேஸ்வரர்


மகாபாரதப் போரில் அர்ஜுனனுக்குத் தேரோட்டியாகப் பணி புரிந்த கிருஷ்ணன் கௌரவ சேனைத் தலைவர்களெல்லாம் தன் திட்டப்படி உயிர்துறக்கச் செய்ததற்காகப் பெரிதும் மன வருத்தம் அடைந்தான். மன நிம்மதி அடைவதற்காகப் பலப்பல தலங்களுக்கும் சென்று வழிபட்டான். குஷ்மேஸ்வரம் வந்து கிராணேஸ்வரரை வழிபட்டு அங்கு சில நாட்கள் தங்கினான். கோயிலில் திருத்தொண்டுகள் செய்து வாழ்ந்தான். கொடூரமான புலியின் குணத்தையும் மாற்றி சாந்தம் ஆக்கிய குஷ்மேஸ்வரர் கிருஷ்ணனுக்கும் அருள்புரிந்தார். ஈசனது எல்லையில்லாத கருணையினால் கண்ணனின் மனம் சாந்தியடைந்தது. இவ்வாறு கண்ணனது வழிபாட்டிற்கு இரங்கி அவனுக்கு அருள்புரிந்து நிம்மதியளித்ததால் கிருஷ்ணேஸ்வரர் என்ற திருப்பெயர் உண்டாயிற்று.

அந்நியர்களால் பலமுறை இடிக்கப்பட்டு பக்தர்களால் மீண்டும் மீண்டும் கட்டப்பட்ட பெரும்பாலான வடநாட்டுக் கோயில்களில் குஷ்மேஸ்வரமும் ஒன்று. திரேதாயுகத்திலிருந்து லட்சக்கணக்கான மன்னர்களால் புதுப்பித்துப் பராமரிக்கப்பட்டு வந்த கிராணேஸ்வரம் திருக்கோயிலைக் கலியுகத்தில் ராஷ்ற்றகூட மன்னர்களும் குறுநிலமன்னர்களும் புதுப்பித்தனர். பின்னர் கலியுகம் 49-ஆம் நூற்றாண்டில் (கி.பி.18) மாதவராவ் ஹோல்கர் என்பவரின் மனைவி கௌதமிபாய் என்பவர் தற்போது உள்ள அழகு மிக்க கோயிலைக் கட்டினார். விமான கோபுரத்தையும் மண்டபங்களையும் கொண்ட அழகிய கோயில் காண்பவரைக் கொள்ள்ள கொண்டு கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

கிராணேஸ்வரம் திருக்கோயிலுக்குச் சென்று லிங்கப் பரம்பொருளைப் பூஜை செய்து வழிபடுவர்களுக்கு வாழ்வில் எண்ணிய எண்ணம் ஈடேறுகின்றது. தோற்றமும் அழிவும் இல்லாத சர்வேஸ்வரனை வழிபடுகின்றவர்களுக்குத் துன்பங்கள் தீர்கின்றன. மரணபயம் நீங்கி ஆயுள் கூடுகின்றது. மனக்கவலைகள் நீங்கி மனசாந்தி ஏற்படுகின்றது.

நன்மையான் நாரணனும் நான்முகனும் காண்ப அரிய
தொன்மையான் தோற்றம் கேடு இல்லாதான் தொல்கோயில்
இன்மையால் சென்று இரந்தார்க்கு இல்லையென்னாது
ஈத்து உவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே
நெடியமால் பிரமனும் நீண்டு மண்ணிடந்து இன்னம்
நேடிக் காணாப்
படியனார் பவளம் போல் உருவானார் பனிவளர்
மலையாள் பாக
வடிவனார் மதி பொதி சடையனார் மணியணி கண்டத்து
எண்டோள் அடிகள் ஆரூர் தொழுது உய்யலாம்
மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே (சம்பந்தர்)

8. ஸ்ரீ மல்லிகார்ஜுனர்



திருமகள் தொழுத ஸ்ரீசைல நாதர்

பெரியவன் பெண்ணினோடு ஆணும் ஆனான்
வரிஅரவு அணை மறிகடல் துயின்ற
கரியவன் அலரவன் காண்ப அரிய
எரியவன் வளநகர் இடை மருதே

மல்லிகார்ஜுனம் என்ற ஜோதிலிங்கத் திருக்கோயில் ஆந்திரப் பிரதேசத்தில் கிருஷ்ணா நதி பாய்கின்ற ஸ்ரீசைலம் என்ற திருத்தலத்தில் அமைந்துள்ளது. மலைமேலுள்ள மல்லிகார்ஜுனர் திருக்கோயிலுக்குச் செல்வதற்கு விஜயவாடா, ஓங்கோல், ஐதராபாத், குண்டூர், திருப்பதி போன்ற பல ஊர்களிலிருந்து போக்குவரத்து

வசதிகள் உள்ளன. மல்லிகார்ஜுனம் தோன்றிய காலத்தில் ஆந்திரப் பிரதேசத்திலும் தமிழ்மொழிதான் பேசப்பட்டு வந்தது. உலகம் முழுவதுமே சமஸ்கிருதம், தமிழ் என்ற இரண்டே இரண்டு மொழி மட்டுமே இருந்தன. பாரதத்தில் வடபகுதி முழுவதும் ஆரியம் எனப்படும் சமஸ்கிருதமும் தென்பகுதி முழுவதும் தமிழும் பேசப்பட்டு வந்தன. இதனாலேயே இந்த மொழிகளுக்கு முறையே வடமொழி தென்மொழி என்றே பெயர் உண்டாயிற்று. ஆதலால் தமிழ் நூல்கள் பலவற்றிலும் ஸ்ரீசைலம் போற்றப்பட்டுள்ளது. ஸ்ரீசைலத்திற்குத் தமிழில் திருப்பருப்பதம் (ஸ்ரீபர்வதம்), ஸ்ரீபர்ப்பதம் என்று பெயர்கள். மாண்டு போனவர்களையும் மீண்டும் உயிரோடு எழுப்பித் தந்து வாழவைத்த அருள்வள்ளல்களாகிய அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவர் அருளிச் செய்த தேவாரத் திருமுறைப் பதிகங்கள் இத்தலத்திற்கு அமைந்துள்ளன. பலப்பல புராண இலக்கியங்கள் காலந்தோறும் போற்றிப் புகழும் இத்திருத்தலத்தைப் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், காஞ்சி சிதம்பர முனிவர் அருளிய க்ஷேத்திரக் கோவை போன்றவையும் போற்றியுள்ளன.

ஸ்ரீதேவி எனப்படும் திருமகள் லிங்கப்பரம் பொருளைப் பிரதிட்டை செய்து பூஜை செய்து தவம் புரிந்து வரம் பெற்றதால் இத்தலம் ஸ்ரீசைலம் எனப்பட்டது. அர்ஜுனம் என்றால் மருதமரம் என்று பொருள். மருத மரங்களும் மல்லிகைச் செடிகளும் நிறைந்து காணப்பட்ட திருத்தலம் இது. ஆதலால் மல்லிகார்ஜுனம் எனப்பட்டது. தமிழ்நாட்டில் திருவிடை மருதூர் போன்று ஆந்திரத்தில் மல்லிகார்ஜுனம் என்று இத்தலம் உள்ளது. மகாலட்சுமிக்கு அருள் புரிந்த பரப்பிரும்மத்திற்கு ஸ்ரீசைல நாதர், திருப்பருப்பத நாதர், மல்லிகார்ஜுனர் என்று திருப்பெயர்கள்.

ஸ்ரீசைல நாதரைப் பார்வதி, முருகன், நந்தி, சந்திரவதி, இராமன், அர்ஜுனன் போன்ற பலப்பல பக்தர்கள் வழிபட்டுத் தங்களுக்கு வேண்டிய வாழ்வும் வரமும் பெற்றுள்ளனர். கயிலைமலையில் தவம் செய்து

பரமேஸ்வரனிடமிருந்து அஷ்ட மகா சித்திகளைப் பெற்ற திருமூல முனிவர் அகத்தியரைக் காண்பதற்குத் தெற்கு நோக்கி வந்தபோது வழியில் ஸ்ரீ சைலத்தைப் பணிந்து போற்றித் தொழுதார். காரைக்கால் அம்மையார் பேயுருவு பெற்ற பின்னர் கயிலைமலைப் பயணம் செய்தார். காரி நாயனார் மனித உடலுடன் கயிலைமலை சென்று மீண்டார். அதன் பிறகு திருநாவுக்கரசர் கயிலை மலைப் பயணம் மேற்கொண்டார். வழியில் ஸ்ரீசைலம் சென்று மல்லிகார்ஜுனரை தரிசனம் செய்து வணங்கிப் பதிகம் பாடித் துதித்து வழிபட்டுச் சென்றார். உஜ்ஜயினி மாகாளம் வரை சென்ற பல்லவ மன்னர் ஐயடிகள் காடவர் கோமானும் ஸ்ரீசைலநாதரைப் பணிந்து போற்றிப் பாடியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீசைல நாதர்

துர்வாச முனிவர் தனது தவ வலிமையால் வைகுண்டத்திற்குச் சென்றார். அப்போது காக்கும் தெய்வமான மகா விஷ்ணு துர்வாச முனிவரைக் கண்டும் காணாதது போன்று இருந்தார். விருந்தினரை வரவேற்கும் பண்பாடு அறியாமல் மகாமுனிவரும் சிறந்த சிவனடியாரும் தவசீலருமான துர்வாச முனிவரை அலட்சியப்படுத்தியதற்காக மகாவிஷ்ணு துர்வாசரின் சாபத்திற்கு உள்ளானார். வைகுண்ட வாழ்வைத் துறந்து பலப்பல பிறவிகள் எடுத்து உழல வேண்டும் என்று துர்வாச முனிவர் விஷ்ணுவுக்குச் சாபம் கொடுத்தார். விஷ்ணுவின் நிலைகண்டு கலக்கம் அடைந்த திருமகள் எல்லோருக்கும் இறைவனான, பிறப்புக்கு அப்பாற்பட்ட முழுமுதற் பொருளான மகாதேவனை வழிபட்டுச் சாப விமோசனம் பெறுவதற்காகப் பூவுலகுக்கு வந்தாள். மல்லிகைச் செடிகளும் மருதமரங்களும் நிறைந்த மலைப்பகுதியில் ஒரு மருத மரத்தடியில் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்தாள். தங்களுக்கு வைகுண்ட வாழ்வை அருளிச் செய்த ஈசனை கிருஷ்ணா நதியில் நீராடி நமசிவாய நாமம் ஓதி நாள்தோறும் மல்லிகைப் பூக்களால் அர்ச்சனையும் ஆராதனையும்

புரிந்தாள். சிவநினைவில் முழுகித் தவம் இருந்தாள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைந்து இருத்தல், வெளிப்பட்டுக் காட்சி தந்து முக்தி அருளல் என்னும் ஐந்து தொழில் புரியும் ஆதியந்தம் இல்லாத பராபரன், கணவனுக்காகத் தவமும் பூஜையும் புரியும் மகாலட்சுமிக்கு அருள்புரிந்தார். கூறுவோர் குறை தீர்க்கும் கங்காதரன் மகாவிஷ்ணுவிற்கு உண்டான எண்ணற்ற பிறவிகளைப் பத்து பிறவிகளாக ஆக்கினார். அந்தப் பத்துப் பிறவியும் தொடர்ச்சியாக இல்லாமல் ஒவ்வொரு பிறவியின் முடிவிலும் மகாவிஷ்ணுவை வெளிக்கொணர்ந்து வைகுண்ட வாழ்வை அருளிச் செய்வதாக வரம் அருளினார்.

இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர் அறுத்துச் சோதியாய் அன்பு அமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடையே சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து (திருவாசகம்)

என்று துன்பம் போக்கி இன்பம் அருளிய முக்கண்ணனின் மாப்பெருங்கருணைக்கு மனம் நெகிழ்ந்த மகாலட்சுமி தமிழ்நாட்டிலுள்ள திருநின்றியூர் என்ற தலத்தில் நன்றிப் பெருக்கோடு சிவபூஜை செய்த பின் வைகுண்டம் மீண்டாள். இவ்வாறு ஸ்ரீதேவி சிவபூஜையும் தவமும் புரிந்து கடவுளை வழிபட்டதால் இந்த மலை ஸ்ரீசைலம் என்று பெயர் பெற்றது. மருத மரத்தடியில் லிங்கப்பரம்பொருளை எழுந்தருளுவித்து மல்லிகைப் பூக்களால் அர்ச்சனை செய்ததால் இத்தலம் மல்லிகார்ஜுனம் எனப்பட்டது. மகாலட்சுமிக்கு வரம் தந்த மகாலட்சுமீஸ்வரருக்கு ஸ்ரீசைலநாதர், மல்லிகார்ஜுனர், திருப்பருப்பதேஸ்வரர் என்று திருப்பெயர்கள் உண்டாயின. மல்லிகார்ஜுனரை மல்லையா என்றும் வழங்குகின்றனர். துர்வாசரின் சாபத்தினால் கலங்கிய விஷ்ணுவும் ஸ்ரீசைலம் வந்து வழிபட்டு ஐந்து தொழில் புரியும் அகிலாண்டேஸ்வரரின் கருணையை வேண்டினார்.

ஸ்ரீ மல்லிகார்ஜுனர்

வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்
மனம் நின்பால் தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
தமை எல்லாம் தொழவேண்டி (திருவாசகம்)

எனத் தான் நிலையில் உயரவேண்டும், பெரிய பதவியை அடைய வேண்டும், எல்லோரும் தன்னை வந்து வணங்க வேண்டும் என்பதற்காகவே வானவர்களும் பிறரும் சிவபூஜை செய்து பரப்பிரும்மத்தை வழிபடுகின்றனர். இதற்குப் பராசக்தியும் விதி விலக்கு அல்ல. சிவபூஜை புரிந்து இறைவனது தேவி என்னும் பெரிய ஸ்தானத்தைப் பெற்ற பராசக்தியை நான் எனது என்ற ஆணவமலம் பற்றியது. பிருங்கி முனிவர் தன்னை வழிபடவில்லை என்பதற்காக ஒரு தவறும் செய்யாத பிருங்கி முனிவரை எலும்பாகப் போகுமாறு சாபம் கொடுத்தாள். மாபெரும் முனிவரும் தன்னலமற்ற சிறந்த சிவனடியாருமான பிருங்கி முனிவருக்குச் செய்த இந்த கொடிய வல்வினையின் பலனாகப் பராசக்தி சிவலோகத்தை விடுத்து இந்த மண்ணுலகில் மலைவாழ் மக்களிடையே வாழ நேர்ந்தது. பராசக்தி மல்லிகா என்ற பெயருடன் ஸ்ரீசைலத்தில் மலைவாழ் மக்களுடன் சேர்ந்து மலைப்பெண்ணாக வாழ்ந்தாள்.

மருவிய வல்வினை நோய் அவலம் வந்து அடையாமல்
திருவுரு அமர்ந்தானும் திசைமுகம் உடையானும்
இருவரும் அறியாமை எழுந்ததோர் எரிநடுவே
பருவரை உற நிமிர்ந்தான் பருப்பதம் பரவுதுமே
(சம்பந்தர்)

என்று செய்த தீவினை நீங்குவதற்காக மல்லிகா நாள்தோறும் மல்லிகார்ஜுனரை வழிபட்டுப் பூஜையும் ஆராதனையும் புரிந்தாள். எல்லாவிதமான பாவங்களையும் குற்றங்களையும் கவலைகளையும் போக்கி இன்பம் அளிக்கின்ற கிரீசன், அர்ஜுனன் என்ற பெயருடன் மலைவாசியாக வந்து மல்லிகாவைத் திருமணம் செய்து

கொண்டருளினார். மல்லிகா பிரமராம்பிகை என்ற பெயருடன் ஸ்ரீ சைலநாதருடன் சேர்ந்தாள். பிரமரம் என்றால் வண்டு என்று பொருள். வண்டாக இருந்த பிருங்கி முனிவரின் காரணமாக பராசக்தி ஸ்ரீசைலத்திற்கு வந்த காரணத்தால் இங்கு பிரமராம்பிகை என்று பெயர் பெற்றாள்.

ஸ்ரீ நந்திவாகனர்

ஸ்ரீசைலத்தில் சிலாத முனிவர் என்பவர் மகப்பேறு வேண்டி சிவபூஜை செய்து மல்லிகார்ஜுனரை வழிபட்டுத் தவம் இருந்தார். பரபிரும்மத்தின் திருவருளால் காளை வாகனமான தருமதேவரை மகனாகப் பெற்றார். பிள்ளைக்கு சிவநாமமாகிய நந்தி என்று பெயரிட்டு வளர்த்தார். நந்தி சிறுவயதிலிருந்தே சிவ நினைவில் முழுகித் திளைத்துத் தவம் புரியலானார்.

எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் என் கண் மற்றொன்றும் காணற்க (திருவாசகம்)

என சதா சர்வ காலமும் பரப்பிரும்மத்தை தரிசனம் செய்து கொண்டு பரம்பொருளுக்கு மட்டுமே திருப்பணி செய்து வாழும் தொண்டர் வாழ்வு அமைய வேண்டும் என்று தவம் செய்தார்.

வேண்ட முழுதும் தருவோய் நீ (திருவாசகம்)

என வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் முழுமையாக அருளிச் செய்கின்ற மகேஸ்வரன் நந்தியை வாகனமாக்கிக் கொண்டு அருள் புரிந்தார். குறிப்பிட்ட வடிவமும் குறிப்பிட்ட பெயரும் இல்லாத பரமேஸ்வரன் கொண்ட பல வடிவங்களில் ஒரு வடிவமான மானும் மழுவும் தாங்கிய நான்கு கர உருவத்தை நந்திக்கு அருளிச் செய்தார். முழு முதலின் உருவைப் பெற்று சாரூபத்தோடு சிவலோகம் சேர்ந்த நந்தி காளை வாகனமானார். நந்தி தவம் செய்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றதால் நந்திமலை, நந்தியால் என்று பெயர் கொண்ட இடங்கள் ஸ்ரீ சைலத்தைச் சுற்றியுள்ளன. நந்தியை வாகனமாகக்

கொண்டருளிய நஞ்சுண்ட நாயகனுக்கு நந்திவாகனன், நந்திஸ்வரர் என்று பெயர்கள் உண்டாயின. இராமாயண காவியம் புகழ் பெற்ற பிறகு இராம என்ற சிவநாமம் அப்பெயர் கொண்டு தசரத மைந்தனைப் பொதுவாகக் குறிக்கலாயிற்று. அதே போன்று நந்தி நாமம் நமச்சிவாயவே என நந்தி என்ற சிவநாமமும் சிலாத முனிவரின் மகனாகப் பிறந்து அப்பெயர் கொண்டு சிவவாகனமாகும் பேறு பெற்ற ரிஷப தேவரைக் குறிக்கலாயிற்று.

ஆண்டியாகத் தவக்கோலம் கொண்ட ஆறுமுகன் வடக்கே கயிலைமலையை விட்டு நீங்கித் தெற்கு நோக்கிப் புறப்பட்டான். வழியில் ஸ்ரீசைலத் திருத்தலத்தை அடைந்தான். அங்கு அமாவாசை முதல் பௌர்ணமி முடிய பதினைந்து நாட்கள் மல்லிகார்ஜுனரை வழிபட்டுப் பூஜை செய்து மன அமைதியடைந்தான். மைந்தனின் பூஜை கண்ட மாதவர் நாயகன் முருகனுக்கு வெளிப்பட்டுக் காட்சி தந்தார். ஓங்காரப் பொருளை விழுந்து வணங்கிய முருகனுக்கு கிரீசன் மலைகளையெல்லாம் அருளிச் செய்தார். பழநி மலையில் குடிகொண்ட முருகன் மலைத்தெய்வமாக குறிஞ்சி நிலத்தின் குல தெய்வமாகவே போற்றப்படலானான்.

சேயோன் மேய மை வரை உலகம் என்று தொல்காப்பியர் இதனைப் போற்றுகின்றார். அமாவாசையிலும் பௌர்ணமியிலும் மல்லிகார்ஜுனரை வழிபடுவது மிகவும் சிறப்பாகவுள்ளது.

கிருஷ்ணா நதி பாயும் பிரதேசத்தை சந்திரகுப்தன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு சந்திரவதி என்று ஒரு பெண் குழந்தை இருந்தாள். போருக்குச் சென்ற வேந்தன் திரும்பி வருவதற்குப் பல்லாண்டுகள் ஆயின. மன்னன் மீண்டு வரும்போது பூஞ்சோலையில் இருந்த சந்திரவதியைக் கண்டான். அவள் தன்னுடைய மகள் என்று தெரியாமல் அவளை அடைய ஆசைப்பட்டான். தான் யார் என்பதை சந்திரவதி எடுத்துரைத்த போதும் மன்னன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தந்தையிடமிருந்து தப்பி ஓடிய சந்திரவதி ஸ்ரீசைலத்தை அடைந்தாள். அங்கு சண்டீசரைப் போன்று உலகத்தாயான பசுமாடுகளின் பெருமையும்

புனிதமும் உணர்ந்து பசுமாடுகளைப் பாதுகாத்து வாழலானாள். பலமாடுகளில் ஒரு மாடு மட்டும் சரியாகப் பால் கறக்காததைக் கவனித்தாள். பசுமாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் சென்ற போது ஒருநாள் அந்தப் பசுவைப் பின் தொடர்ந்து சென்றாள். அந்தப் பசு மருத மரத்தடியில் இருந்த ஸ்ரீசைலலிங்கத்தின் மீது பால் பொழிவதைக் கண்டாள். உலகத்திற்கு எல்லாம் தந்தை தாயான மல்லிகார்ஜுனரைக் கண்ட சந்திரவதி அன்று முதல் நாள்தோறும் நியமத்துடன் அபிஷேகம் ஆராதனை அர்ச்சனை செய்து ஸ்ரீசைலேஸ்வரரைப் பூஜை செய்தாள். நால்வகை பூஜை நெறிகளிலே திருவுருவ வழிபாடாகிய கிரியை வழிபாட்டை நாள்தோறும் புரிந்து புனித வாழ்க்கை வாழ்ந்து வந்த சந்திரவதி பிறவி மலம் நீங்கி முக்தி பெற்று சிவலோகம் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றாள்.

இராமன் ஸ்ரீ சைலத்தில் மல்லிகார்ஜுனரை வழிபட்டு சகஸ்ரலிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்தான். அர்ஜுனன், ஸ்ரீசைலத்திற்கு வந்து ஸ்ரீசைலநாதரை வணங்கித் தவம் புரிந்து பாசுபதாஸ்திரத்தைப் பெற்றான்.


ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் திருக்கோயில் கருங்கல்லால் ஆன பெருங்கோயில், தென்னாட்டுக் கோயில் ஆதலால் ராஜ கோபுரங்கள் உள்ளன. பலப்பல மன்னர்களால் காலந்தோறும் தொடர்ந்து திருப்பணிகள் செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டு வந்த இந்தப் பெருங்கோயிலின் வடக்கு ராஜகோபுரம் மகாராட்டிர மன்னன் சத்திரபதி சிவாஜியால் கட்டப்பட்டதாகும். தென்னாட்டுக் கோயிலின் அமைப்பிற்கு ஏற்ப இக்கோயிலில் லிங்கப் பரம்பொருளோடு நடராஜர், தட்சிணாமூர்த்தி, அர்தநாரீஸ்வரர் எனப் பிற சிவமூர்த்தங்களும் உள்ளன. அர்தநாரீஸ்வரர் அமர்ந்த கோலத்தில் தனிச் சந்நிதி கொண்டுள்ளார். இவையேயல்லாமல் பஞ்சபூத லிங்கங்கள், வீரபத்திரர், சப்தமாதர்கள் சகஸ்ரலிங்கம், பிள்ளையார், முருகன் எனப் பலப்பல சந்நிதிகள் உள்ளன. அம்பாளுக்குத் தனிக்கோயில் போன்று மிகப் பெரிய சந்நிதி உள்ளது. மண்டபங்கள்ளையும் பிரகாரங்களையும் கொண்டு

விளங்கும் இந்தத் திருக்கோயிலில் அர்ஜுனன் தவம், பார்வதி கல்யாணம், மார்கண்டேயர், காலசம்கார மூர்த்தி, தட்சயாகம் போன்றவை சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் பலப்பல கல்வெட்டுகள் உள்ளன. இத்திருக்கோயிலின் தலமரம் மருதமரம். புண்ணிய தீர்த்தம் கிருஷ்ணாநதி.

ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர் கோயில் ஆகமங்கள் பிறந்த தென்னாட்டுக் கோயிலாக இருந்தாலும் பெரும்பாலான வடநாட்டுக் கோயில்கள் போன்று ஆகமவிதிப்படியில்லாமல் வேதவிதிப்படி மட்டுமே பிரதிட்டை செய்யப்பட்டுள்ள காரணத்தால் கர்பக்கிரகத்திற்குள் எல்லோரும் நுழைந்து வலம் வந்து வழிபடலாம். பக்தியுடன் மல்லிகார்ஜுனரை வழிபடுகின்றவர்களுக்குப் பாவம் போகும். பிறவி நோய் நீங்கும், மன அமைதி உண்டாகும், வாழ்வில் வெற்றி கிடைக்கும், எடுத்த காரியங்கள் இனிதே நிறைவேறும்.

சேற்றினார் பொய்கை தாமரையானும் செங்கண்மால்
இருவர் கூறாத்
தோற்றினார் தோற்றத் தொன்மையை அறியார் துணைமையும்
பெருமையும்
சாற்றினார் சாற்றி ஆற்றலோம் என்னச் சரண் கொடுத்து
அவர் செய்த பாவம்
பாற்றினார் போலும் பந்தணை நல்லூர் நின்ற எம்
பசுபதியாரே

(சம்பந்தர்)



9. ஸ்ரீ நாகேஸ்வரர்



நாகதெய்வம் வழிபட்ட நாகேஸ்வரர்

தழல் தாமரையான் வையம் தாவியவனும்
கழல்தான் முடி காணிய நாண் ஒளிரும் அழல்தான்
அடியார்க்கு அருளாய்ப் பயக்கும் நிழல்தான்
நெல்லிக்காவுள் நிலாயவனே (சம்பந்தர்)


நாகேஸ்வரம் என்ற இத்திருத்தலம் மகாராஷ்ற்ற மாநிலத்தில் உள்ள ஔண்டா என்ற இடத்தில் இருக்கின்றது. திருத்தலம் ஔண்டா நாகநாதம் என்று அழைக்கப்படுகின்றது. இது இந்தி மற்றும் ஆங்கில உச்சரிப்புப்படி ஔண்டா நாகநாத் என்று வழங்கப்படுகின்றது. ஔரங்காபாத் நகரத்திலிருந்தும் பரலி வைஜயநாதம் என்ற மற்றொரு சோதிலிங்கத் தலத்திலிருந்தும் நாகேஸ்வரத்திற்குப் போக்குவரத்து

வசதிகள் உள்ளன. பாற்கடலைக் கடைவதற்காகக் கயிறாக இருந்து உதவிய வாசுகி என்ற நாக தெய்வம் தாருகா வனத்தில் லிங்கப் பரம்பொருளை பிரதிட்டை செய்து பூஜை புரிந்தது. இதனால் பரம்பொருளுக்கு நாகலிங்கம் என்றும் பரமேஸ்வரனுக்கு நாகேஸ்வரர் நாகநாதர் வாசுகிஸ்வரர் என்றும் பெயர்கள் உண்டாயின.

வியாக்கிரபாத முனிவரின் மைந்தரான உபமன்னியு முனிவர் ஒரு கிண்ணம் பாலுக்காக அழுதபோது முழுமுதல் பரமன் பாற்கடலையே படைத்து அனுப்பினார். எல்லையில்லாத கருணைக்கடலாய் விளங்கும் ஈசனின் இணையில்லாத அருளை

அருந்த அப்பாலன் வேண்டலும்
செல் என்று பாற்கடல் கூவினான் (அப்பர்)
பாலகனார்க்கு அன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே (திருவாசகம்)

என்று தெய்வத் திருமுறைகள் போற்றுகின்றன. தேவர்கள் அந்தப் பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற விரும்பினார்கள். தங்கள் சகோதரர்களான அசுரர்களையும் துணைக்கு அழைத்தனர். மேரு மலை மத்தானது. வாசுகி என்ற நாகம் கயிறாயிற்று. பாற்கடலைக் கடைந்தபோது கடலிலிருந்து நஞ்சு வெளிப்பட்டது. வாசுகியின் உடல் எல்லாம் புண்ணாகி வலி தாங்க முடியாமல் விஷத்தைக் கக்கியது. கடலிலிருந்து எழுந்த விஷமும் வாசுகிப் பாம்பின் விஷமும் சேர்ந்து உலகங்களை அழிக்கக்கூடிய ஆலகால விஷமாயிற்று. பொன்னிறமாக இருந்த விஷ்ணுவின் உடல் முழுவதும் விஷத்தின் காற்றுப்பட்டுக் கருமையாகி விட்டது. காத்தல் தொழிலுக்கு அதிபதியான திருமால் உள்ளிட்ட தேவர்கள் எல்லோரும் பயந்து ஓடினர். திருமாலோடு தேவர்கள் எல்லோரும் பூமியில் உள்ள புனிதமலையான கயிலைமலைத் தலத்தை அடைந்து தங்களைக் காத்தருளுமாறு ஈசனை நினைந்து வேண்டித் தொழுது துதி செய்தனர். பரமசிவம் சுந்தரர் என்ற சிவகணத்தை அனுப்பி ஆலகால நஞ்சினை உருண்டையாகத் திரட்டிக் கொண்டு வரச் சொன்னார். எல்லா உலகங்களுக்கும் அப்பாற்பட்ட கைலாயம் எனப்படும் சிவலோகத்தில் வாழும் சுந்தரரும் ஈசனை வணங்கிச் சென்று



எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் விஷத்தை உருண்டையாக்கிக் கொண்டு வந்தார். சுந்தரர் ஆலகால விஷத்தைக் கொண்டு வந்ததால் அவர் ஆலால சுந்தரர் என்று பெயர் பெற்றார். விஷத்தினால் மேனி கருத்த விஷ்ணு போன்றவர்களின் தெய்வப் பதவிகளையெல்லாம் விட வல்லமை மிக்க உயர்ந்த சிவகணப் பதவியின் தெய்வீகத்தையும் ஆற்றலையும் கண்டு மும்மூர்த்திகளும் தேவர்களும் வியந்தனர். பராபரன் நஞ்சினை உட்கொண்டு அருளி தெய்வங்களையும் தேவர்களையும் அண்ட சராசரங்களையும் காத்தருளினார்.

ஒளி திகழ் மேனி கருகினார் எல்லாம்
கை தொழுது ஏத்தக் கடலுள் நஞ்சு
அமுதமா வாங்கிப் பருகினார் (சம்பந்தர்)

என்று தமிழ்காத்த திருஞான சம்பந்தர் உலகங்களையெல்லாம் காத்த ஊழி முதல்வனின் அளவற்ற கருணையைப் போற்றுகின்றார்.

விஷத்திலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியடைந்த தேவர்கள் பரம்பொருளைப் போற்றித் தொழுது தங்களைக் காத்தருளிய கோலத்தை காட்டியருளுமாறு வேண்டினர். உருவம் இல்லாத பரமசிவம் சிவந்த நிறந்துச் சிவனாக வெளிப்பட்டுக் காட்சி தந்து நீலநிற விஷத்தை உருண்டையான மணி போன்று கழுத்திலே நிறுத்திக் காட்டினார். சிவந்த மேனியிலே திகழும் அழகிய மணிகண்டத்தைப் பராசக்தி தீண்டியபோது விஷத்தின் வேகத்தால் சக்தியின் உடல் கருமையாகப் போனது. தனது நிலை கண்டு மனம் வருந்திய பராசக்தி பரமனைத் தொழுது தனக்குப் பழைய நிறத்தைத் தந்தருளுமாறு வேண்டினாள். பராசக்தியின் கரிய நிறத்திலிருந்து காளிகாம்பாள் என்ற கருமையான தேவியைப் பொன்னார் மேனியன் படைதருளினார். பழைய நிறம் பெற்ற பராசக்தி பரப்பிரும்மத்தை பணிந்து போற்றினாள். கொடிய ஆலகால நஞ்சினை உட்கொண்டு எந்த விதமான மாறுதலும் இல்லாமல் வெண்மையாக, அழகாக, இயல்பாக இருந்த பராபரனுக்கு நீலகண்டன், மணிகண்டன், மணிமிடற்று அந்தணன், நஞ்சுண்டன், காரியுண்டிக் கடவுள் என்றெல்லாம் திருப்பெயர்கள் உண்டாயின.

நீலம் உண்டதும் வெள்ளை நிறமாமே (சம்பந்தர்)
மாறிலா மேனி உடையார்
மா விடத்தை எரியாமல் உண்ட அவன்
ஆலம் உண்டு அழகாயதோர் ஆனையார் (அப்பர்)
நஞ்சம் அமுதம் ஆக்கினை (சங்கப்புலவர் நக்கீரர்)
அஞ்சுவரு கடும் திறல் காரியுண்டிக் கடவுளது
இயற்கையும்

என்று எந்தவிதமான மாறுதலும் இல்லாத சிவபெருமானின் எல்லாம் கடந்த கடவுள் தன்மையைக் காலம்தோறும் பக்தர்கள் போற்றுகின்றனர். ஆலம் உண்டு ஞாலம் காத்த ஐந்தொழில் நாயகன் தெய்வங்களுக்கும் தேவர்களுக்கும் நீலகண்டனாகக் காட்சி கொடுத்த திருத்தலமே ஆலங்குடி என்று வழங்கப்படுகின்ற திரு இரும்பூளை.

விண்ணும் மண்ணும் எல்லாம் கலங்க
முந்நீர் நஞ்சு அமுது செய்தாய் கருணாகரனே
காப்போன்காக்கும் கடவுள் (திருவாசகம்)

எனக் கலங்கி நின்ற விண்ணுலகம் மண்ணுலகம் என எல்லா உலகங்களையும் மட்டுமன்று காக்கும் தெய்வமான விஷ்ணுதேவனையும் காத்து அருள்புரிந்த கடவுளின் மாபெரும் கருணையை வியந்து போற்றிப் பாடி வணங்கி வழிபட்ட தேவர்கள் மீண்டும் பாற்கடலைக் கடைந்தனர். பலப்பல அற்புதப் பொருட்களோடு சாவா மருந்தாகிய அமுதம் நிறைந்த கலசத்தையும் பெற்றனர். பாற்கடலைக் கடைந்ததனால் தேவர்களுக்கு அமுதம் கிடைத்தது. அசுரர்களுக்கு ஏமாற்றம் கிடைத்தது. கயிறாகப் பயன்பட்ட வாசுகியோ உடம்பெல்லாம் ரணமாகிக் காயங்களுடன் வலி தாங்க முடியாமல் துடிதுடித்தது. நாகராஜனான வாசுகி நலமடைவதற்காக தாருகா வனத்தை அடைந்தான். உலகங்களுக்கெல்லாம் மாபெரும் மருத்துவனான வைதீஸ்வரனை வழிபடலானான். ஔண்டா என்ற இடத்தில் லிங்கப் பொருளைப் பிரதிட்டை செய்து அபிஷேகம் அர்ச்சனை, ஆராதனை செய்து வழிபட்டான். உடல் வேதனையைப் போக்கிப் பழைய அழகையும் ஆரோக்கியத்தையும் அருளிச் செய்யுமாறு வேண்டித் தொழுது பூஜையும் தவமும் புரிந்தான். அடியவர்களின் துன்பத்தை நீக்கி இன்பம் அருள்கின்ற பரமசிவம் முன்னைவிட அழகான மேனியையும் உடல் வலிமையையும் வாசுகிக்கு அருள்புரிந்தார். ஐம்பூதம், ஐம்பொறி ஐம்புலன் முதலிய 36 பொருட்களுக்கும் அப்பாற்பட்டு ஒரு மேனியும் இல்லாத அருள்மேனி கொண்ட சுந்தரேசரின் திருவருளால் உடல் சுந்தரமான வாசுகி மிகுந்த மகிழ்ச்சியடைந்து,

கோலம் முடி நெடுமாலொடு கொய் தாமரையானும்
சீலம் அறிய அரிதாய் ஒளி திகழ்வாய் நெய்த்தானம்
காலம் பெற மலர் நீர் தூவித் தொழுது ஏத்தும்
ஞாலம் புகழ் அடியார் உடல் உறுநோய் நலியாவே(சம்பந்தர்)

என்று பரப்பிரும்மத்தின் பேரருளைத் துதி செய்து நாகலோகம் சென்றான்.

நாகலிங்கத்தின் அருள்பெற்ற அடியவர்கள் பலப்பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவன் சுப்பிரியன் என்ற வணிகன். சிறந்த சிவனடியாராக விளங்கிய சுப்பிரியன் தாருகாவனம் வழியே பயணம் செய்து கொண்டிருந்தான். பெருஞ் செல்வத்தோடு சென்று கொண்டிருந்த சுப்பிரியன் நாகேஸ்வரரைத் தரிசனம் செய்து அர்ச்சனை ஆராதனை புரிந்து வழிபட்டான். இரவுப் பொழுது நெருங்கி

விட்டபடியால் அங்கேயே தங்கினான். இரவிலே வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் சுப்பிரியனைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களிடமிருந்து தப்பியோடிய சுப்பிரியன் நாகநாதரிடம் தஞ்சம் புகுந்தான். கம்பையாற்றின் வெள்ளம் கண்டு அஞ்சி ஓடிய காமாட்சியம்மன் ஏகாம்பரேஸ்வரரைக் கட்டிப் பிடித்துக் கொண்டது போல் சுப்பிரியன் நாகேஸ்வரரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நமசிவாய நாமம் ஓதினான். துரத்தி வந்த கொள்ளைக்காரர்களும் ஓடி வந்தனர். கொள்ளைக்காரர்கள் சுப்பிரியனை நெருங்க வந்தபோது நாகலிங்கத்திலிருந்து பாம்பு ஒன்று சீறி வந்தது. கொள்ளைக்காரர்கள் அஞ்சி ஓடிவிட்டனர். திருமுருகன் பூண்டி என்ற திருத்தலத்தில் வழிப்பறிக் கொள்ளைக்கார வேடுவர்களிடம் செல்வங்களைப் பறிகொடுத்த சுந்தர மூர்த்தி சுவாமிகள் முறையிட்டுப் பாடியபோது சிவகணங்களை அனுப்பிச் செல்வத்தை மீட்டுத் தந்த தொலையாச் செல்வனார் சுப்பிரியனுக்காகப் பாம்பினை அனுப்பிப் பொருளையும் உயிரையும் பாதுகாத்து அருளினார்.

கடிபடு கமலத்து அயனொடு மாலும் காதலோடு
அடிமுடி தேடச்
செடிபடு வினைகள் தீர்த்து அருள் செய்யும் தீவணர்
எம்முடைச்செல்வர்
முடியுடை அமரர் முனிகணத்தவர்கள் முறைமுறை
அடிபணிந்து ஏத்தப்
படியதுவாகப் பாவையும் தானும் பாம்புர நன்னகராரே

(சம்பந்தர்)

என்று வாசுகீஸ்வரரின் பெருங் கருணைக்கு மனம் நெகிழ்ந்து போற்றித் துதித்த சுப்பிரியன் நாகலிங்கத்திற்குக் கோயில் கட்டிப் பல்வேறு திருப்பணிகள் செய்து வாழ்ந்தான்.

ஔண்டா நாகநாதம் கருங்கல்லால் ஆன கோயிலாகும். நாகேஸ்வரர் சந்நிதி பாதாளத்தில் உள்ளது. மண்டபங்களைக் கடந்து சென்று கிணற்றில் இறங்குவது போன்று குறுகிய படிகள் வழியே கீழே இறங்கிச் சென்று நாகலிங்கத்தை தரிசனம் செய்ய வேண்டும். தென்னாட்டுக் கோயில்கள் போன்று மண்டபங்களும் தூண்களும் வாயில்களும் சிற்ப வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன.

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லான்
அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப (திருவாசகம்)

எனக் குறிப்பிட்ட ஒரு பெயர், குறிப்பிட்ட ஒரு திருமேனி போன்ற எதுவும் இல்லாத அருள்மேனிப் பரமசிவம் அன்பர்களுக்காகப் புரிந்த அருட் செயல்களினால் உண்டான பெயர்கள் கோடானு கோடி. அத்தகைய கோடிக்கணக்கான திருநாமங்களிலே ஒன்று நாகேஸ்வரர். நாகங்கள் வழிபட்டதால் நாகேஸ்வரர் என்ற திருப்பெயருடன் பரப்பிரும்மம் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் பலப்பல. பாம்புகள் பூஜை செய்து வாழ்வும், வளமும் பெற்ற திருத்தலங்கள் உலகம் எங்கும், பாரத திருநாடு முழுவதும் பல உள்ளன.

குஜராத் மாநிலத்தில் துவாரகைக்கு அருகேயும் நாகேஸ்வரர் கோயில் உள்ளது. இதுவும் ஜோதி லிங்கத்தலம் என்று கூறப்படுகின்றது. பன்னிரண்டு ஜோதிலிங்கங்கத்தலம் தொகுக்கப்பட்ட இராமாயண காலத்துக்குப் பிறகு தோன்றிய தலமாகும். ஓரிஸ்ஸாவிலும், நாகேஸ்வரர் கோயில் உள்ளது. தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் திருநாகேஸ்வரம், நாகேஸ்வரசுவாமி கோயில் என்று இரண்டு நாகநாதர் கோயில்கள் உள்ளன. இவற்றில் திருநாகேஸ்வரம் என்பது ஐந்து தலை கொண்ட ராகு வழிபட்டுப் பூஜை செய்து நவக்கிரகங்களில் ஒன்றாகும் பேறு பெற்ற தலமாகும். சூரியனும் சந்திரனும் வந்து சிறப்பான முறையில் வழிபாடுகள் செய்து சென்ற பின்னர் இராகு வந்து திருப்பணிகள் செய்வதையும் அவனது வழிபாடுகளை நாகேஸ்வரர் ஏற்றுக் கொண்டு அருள்புரிவதையும்

சந்திரர் சூரியர் வந்து சீர் வழிபாடுகள் செய்த பின்
ஐந்தலை அரவின் பணி கொண்டு அருளும் நாகேச்சுரம்


என்று திருநாவுக்கரசர் தேவாரம் சிறப்பாகப் போற்றியுள்ளது. சிவ பக்தனான இராகுவிற்கு இத்தலத்தில் தனியே சந்நிதி உள்ளது. நாகேஸ்வர சுவாமி கோயில் என்பது கும்பேஸ்வரர் கோயிலுக்கு அருகே உள்ளது. இத்திருக்கோயில் தேவாரத் திருப்பதிகங்களில் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்று

போற்றப்பட்டுள்ளது. இக்கோயிலில் தனிக்கோயில் போன்று நடராஜர் சந்நிதி அமைந்திருப்பதைத் திருநாவுக்கரசர் சிறப்பாகப் போற்றியுள்ளார். கீழ்ப்பெரும்பள்ளம் என்பது கேது சிவபூஜை செய்து நவக்கிரகமாகும் பேறு பெற்ற தலமாகும். இதனால் சிவபக்தனான கேதுவிற்கு இங்கு தனிச் சந்நிதி உள்ளது. சீர்காழி, திருக்காளத்தி போன்ற வேறு பலப்பல தலங்களிலும் இராகுவும் கேதுவும் சிவபூஜை செய்து துயரம் தீர்ந்து நல்வாழ்வு பெற்றள்ளனர். சப்த விடங்கஸ்தலங்களில் ஒன்றான நாகப்பட்டினம் எனப்படும் நாகைக் காரோணேஸ்வரர் திருக்கோயிலும் பாம்புரம் திருக்கோயிலும் நாகங்கள் சிவபூஜை செய்து நலம் பெற்ற தலங்களாகும்.

நாகேஸ்வரம் ஜோதிலிங்கத் தலத்தை மட்டுமன்று எந்த ஊரில் இருந்தாலும் நாகங்கள் வழிபட்டுப் போற்றிய நாகேஸ்வரரை வழிபடுகின்றவர்களுக்கு, நாகலிங்கத்தை அர்ச்சனை செய்கின்றவர்களுக்கு எந்தவிதமான நாகதோஷமும் உண்டாவது இல்லை. எல்லாவிதமான நாக தோஷங்களும் நீங்கி விடுகின்றன. பாம்புகளினால் எந்தவிதமான ஆபத்தும் உண்டாவது இல்லை.

மாயனும் மலரானும் கை தொழ
ஆய அந்தணன் ஆடானை
தூய மா்மலர் தூவிக் கை தொழ
தீய வல்வினை தீருமே
காளமேக நிறக் காலனோடு அந்தகன் கருடனும்
நீளமாய் நின்று எய்த காமனும் பட்டன நினைவுறின்
நாளுநாதன் அமா்கின்ற நாகேச்சரம் நண்ணுவார்
கோளு நாளும் தீயவேனும் நல்லவாம் குறிக்கொள்மினே

(சம்பந்தர்)



10. ஸ்ரீ வைஜயநாதர்



மூன்று தேவியர்களுக்கு வெற்றி அருளிய வைஜயநாதர்

அயனொடு எழில் அமர் மலர்மகள் மகிழ்கணன் அளவிடல் ஒழிய ஓர்
பயம் உறு வகை தழல் நிகழ்வதோர் படியுருவது வர வரன் முறை
சயசய என மிகு துதி செய வெளியுருவிய அவன் உறைபதி
செய நிலவிய மதில் மதியது தவழ் தர உயர் திரு மிழலையே

வைஜயநாதம் என்ற ஜோதிலிங்கத் திருத்தலம் பரலி என்ற ஊரில் உள்ளது. பரல்யாம் வைஜயநாதம் என்று ஜோதிலிங்கத் தலங்களைப் பற்றிய சுலோகமும் இதை எடுத்துரைக்கின்றது. வைஜயநாதம் திருக்கோயில் உள்ள

ஊரும் பரலி வைஜயநாதம் என்றே அழைக்கப் படுகின்றது. வைதிஸ்வரன் கோயில், காளையார் கோயில் ஆவுடையார் கோயில் போன்று திருக்கோயிலின் பெயரே ஊருக்கும் பெயராக உள்ளது. வைஜயநாதர் திருக்கோயில் பரலி வைஜயநாத் என்ற தொடர்வண்டி நிலையத்திற்கு அருகே உள்ளது. ஔரங்காபாத் தொடர்வண்டி நிலையத்தில் இருந்து மன்மாடு என்ற இடத்திற்குத் தொடர்வண்டி உள்ளது. மன்மாடு தொடர் வண்டி நிலையத்திலிருந்து பரலி வைஜயநாதத்திற்குத் தொடர் வண்டி உள்ளது. நாகேஸ்வரம் ஜோதிலிங்கத் தலத்திலிருந்தும் பரலி வைஜயநாதத்திற்குப் போக்குவரத்து வசதிகள் உள்ளன. சுமார் மூன்று மணிநேரப் பயண இடைவெளியில் இரண்டு ஜோதிலிங்கத் தலங்களும் உள்ளன.

ஜயம் என்றால் வெற்றி என்று பொருள். விஜயம், வைஜயம் என்றால் வெல்ல முடியாதது என்று பொருள். பராசக்தி, லட்சுமி, சரஸ்வதி என்ற மூன்று மங்கையரும் அசுரனுடன் செய்ய இருந்த போரில் வெற்றி பெறுவதற்காக லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து வழிபட்டுப் பூஜை புரிந்தனர். இதனால் இத்தலம் வைஜயநாதம் எனப்படுகின்றது. மூன்று தேவிகளுக்கும் வெற்றி வரம் அருளிச் செய்த பரமனுக்கு வைஜயநாதர், விஜயநாதர் என்று திருப்பெயர்கள். விஜயன் என்று பெயர் கொண்ட அர்ஜுனன் சிவபூஜை செய்து பலப்பல வரங்கள் பெற்றதாலும் வைஜயநாதர் என்று திருநாமம் ஆயிற்று.

மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார் (திருவாசகம்)

இன்ன தன்மையன் என்று அறிய ஒண்ணா எம்மானை
(சுந்தரர்)

இன்னவாறு என்றும் எய்தலாகாததோர் இயல்பினை
உடையார் (சம்பந்தர்)

என இன்ன தன்மையன் என்று சுட்டிக் கூறமுடியாமல் எல்லாமாகவும் எல்லாவற்றுடனும் எல்லாவற்றைக் கடந்தும் உள்ள பரமசிவன் ஊழிக்காலத் துவக்கத்தில் சிருஷ்டியை ஆரம்பித்த நேரத்தில் ஆண்பாதி பெண்பாதியான அர்த்தநாரீஸ்வரனாக வெளிப்பட்டார். அம்மையப்பன் தன் இடது பாகத்திலிருந்து பராசக்தியைத் தோற்றுவித்தார். தாயுமான சுவாமியாகி லட்சுமியையும் சரஸ்வதியையும் படைத்தார். சக்தியை வீரத்திற்கு அதிதேவதையாகவும்

லட்சுமியை செல்வத்திற்கு அதிபதியாகவும் சரஸ்வதியைக் கல்விக்கு நாயகியாகவும் நியமித்தார். பரமேஸ்வரனை வழிபட்டுத் தங்கள் தங்கள் பதவியை மேற்கொண்ட மூவரும் திருமணம் செய்து கொள்ள விரும்பினர். பராசக்தி எல்லாம் கடந்த கடவுளையே கணவனாகப் பெற விரும்பினாள். மூன்று தேவியர்களையும் படைத்ததால் முக்கண்ணன் அவர்களுக்குத் தந்தையாகின்றார், எனவே வேண்டுவார் வேண்டுவதே வழங்கும் அருள் வள்ளலான சர்வேஸ்வரன் இமவானுக்கு மகளாகப் பராசக்தியைப் பிறக்கச் செய்து கயிலைமலைநாதனாக வந்து மலைமகளை மணம் புரிந்து கொண்டார். விஷ்ணுவைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு தேவி மகாலட்சுமி விரும்பினாள். மகாவிஷ்ணுவையும் மகாலட்சுமியையும் ஈசன் படைத்த காரணத்தால் இருவரும் அண்ணன் தங்கை ஆகின்றனர். எனவே விஸ்வேஸ்வரன் லட்சுமி தேவியை சமுத்திர ராஜனுக்குப் புதல்வியாகப் பிறக்கச் செய்தார். பாற்கடல் கடையப்பட்டபோது பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட லட்சுமி விஷ்ணுவைத் திருமணம் செய்து கொண்டாள். சரஸ்வதி தேவி பிரம்மனை மணக்க விரும்பினாள். பிரம்மனைப் படைத்த ஐந்தொழில் புரியும் ஆதிபகவனே சரஸ்வதியையும் தோற்றுவித்த காரணத்தால் பிரம்மனும் சரஸ்வதியும் அண்ணன் தங்கை ஆகின்றனர். எனவே பிரம்மனை விஷ்ணுவின் உந்தியிலிருந்து உலகநாயகன் தோன்றச் செய்தார். நாமகள் நான்முகனைக் கல்யாணம் செய்து கொண்டாள். அம்மையப்பனின் திருவருளால் அம்பிகைகள் மூவரும் தங்கள் தங்கள் தொழிலைத் திறம்பட நடத்தி வந்தனர். தாருகன் என்ற ஒரு அசுரன் திருமணமான பெண்களால் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் வரக் கூடாது என்று வரம் பெற்று இருந்தான். பிரம்மனிடமிருந்து பெற்ற வரத்தினால் தேவ லோகங்களையெல்லாம் தாக்கித் தேவர்களைத் துன்புறுத்தினான். தேவர்கள் சிவபூஜை செய்து தங்களைக் காத்தருளுமாறு பரம்பொருளைப் போற்றி வேண்டினர். பரமேஸ்வரன் தேவியர்கள் மூவரையும் அசுரனோடு போர் புரிய அனுப்பினார். போரில் வெற்றி பெறுவதற்காக தேவியர்கள் மூவரும் பூவுலகிற்கு வந்து மகாராஷ்ற்ற மாநிலத்தில் உள்ள பரலி என்ற இடத்தில் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து கடவுளை வழிபட்டுப் பூஜை செய்தனர்.

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்

போதார் புனை முடியும் எல்லாம் பொருள் முடிவே

(திருவாசகம்)

என்று போற்றித் துதித்த மூன்று தேவியர்களுக்கும் மும்மூர்த்தி நாயகன் அருள் புரிந்தார். எல்லோருக்கும் அப்பாற்பட்டு எல்லாவற்றுக்கும் மூலாதாரமாக உள்ள முக்கண்ணனின் திருவருளைப் பெற்ற மூவரும் மூன்று நாட்கள் தனித்தனியாக அசுரனுடன் போரிட்டனர். இறுதியாகப் பத்தாம் நாள் மூன்று மங்கையரும் ஒன்று சேர்ந்து எதிர்த்த போது எருமை வடிவில் இருந்த அந்த அசுரன் மாண்டு போனான். வெற்றியைத் தந்த அந்த பத்தாம் நாள் விஜயதசமி (வெற்றிப் பத்து) என்று பெயர் பெற்றது. வெற்றி பெற்ற மங்கையர்கள் மூன்று பேரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தமிழ்நாட்டில் உள்ள ஒரு தலத்தில் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து பரமனைப் பூஜை செய்து நன்றி தெரிவித்தனர்

உரிமையுடைய அடியார்கள் உள்ளுற வல்லார்கட்கு

அருமையுடையன காட்டி அருள் செயும் ஆதி முதல்வர்

கருமையுடை நெடுமாலும் கடிமலர் அண்ணலும் காணாப்

பெருமையுடைப் பெருமானார் பெரும்புலியூர்ப் பிரியாரே

(சம்பந்தர்)

என்று வெற்றிபெற்ற மங்கையர்கள் மூவரும் பரப்பிரும்மத்தைப் போற்றித் தொழுது பூஜை செய்த காரணத்தால் இத்தலம் விசயமங்கை என்று பெயர் பெற்றது. விஜய மங்கையுள் எழுந்தருளியுள்ள அறவாழி அந்தணனை

விசயமங்கையுள் வேதியன் காண்மினே

என்று தமிழர்த் திருநெறியை செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர் போற்றுகின்றார்.

பலப்பல திருத்தலங்களுக்கும் சென்று சிவபூஜை செய்து வேண்டும் வரங்கள் எல்லாம் பெற்றுச் சிறப்படைந்த விஜயன் என்னும் அர்ஜுனன் திருப்பணிகள் செய்து வழிபட்டு வணங்கிய திருத்தலங்களில் பரலி வைஜயநாதமும் தமிழ்நாட்டு விசயமங்கையும் அடங்கும்.

பாண்டுவின் மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டும் நல் வரம் கொள் விசய மங்கை

என்று அப்பர் தேவாரம் போற்றுகின்றது. பரலி வைஜயநாதரை வழிபடுகின்றவர்களுக்குக் காரியங்கள் எல்லாம் வெற்றிகரமாக முடிகின்றன.

பரலியில் உள்ள வைஜயநாதமே பன்னிரண்டு சோதிலிங்கத் தலங்களில் ஒன்று என்பதை பரல்யாம் வைஜயநாதம் என்ற ஜோதிலிங்க சுலோகத் தொடர் கூறுகின்றது. அப்படியிருந்தும் சிலர் பீகாரிலிருந்து பிரித்து அமைக்கப்பட்ட ஜார்க்கண்டு என்ற மாநிலத்தில் உள்ள தேவகர் என்ற இடத்தில் இருக்கும் வைத்யநாதர் கோயிலை 12 ஜோதிலிங்கத் தலங்களில் ஒன்று என்று தவறாகக் கூறுகின்றனர். இதுமட்டுமின்றி இராவணன் இலங்கைக்கு எடுத்துச் செல்ல விரும்பிய ஆத்மலிங்கப் பரம்பொருள் வழியில் நின்றுவிட்ட திருத்தலமே தேவகர் வைத்யநாதர் கோயில் என்று இக்கோயிலின் தோற்றத்திற்கான காரணத்தையும் தவறாகவே கூறுகின்றனர். கயிலைமலையிலிருந்து இராவணன் எடுத்துச் செல்ல முயன்ற ஆத்மலிங்கம் நிலைபெற்றுவிட்ட திருத்தலம் தெற்கேயுள்ள கோகர்ணம் ஆகும். பூமியில் வைக்கப்பட்ட லிங்கப் பரம்பொருள் மீண்டும் எடுக்க வராமல் போன போது இராவணன் மிகவும் வருந்தினான். இறைவனது அருள் தனக்கு இல்லையே என்று துன்புற்றான். தனது பக்தியில் குறைவு உள்ளதோ என்று கலங்கினான். அப்போது கூறுவோர் குறை நீக்கும் கருணை வள்ளல் இராவணனுக்கு அருள் புரிந்தார். லிங்கப் பரம்பொருள் குழைந்து பசுவின் காது போன்று வளைந்து செவி செய்த்தது. லிங்கோற்பவரின் கருணை கண்டு மனம் மிகவும் நிம்மதி அடைந்த இராவணன் அப்பரம்பொருளை அங்கேயே வழிபட்டுவிட்டு இலங்கை திரும்பினான். லிங்கப் பரம்பொருள் கோமாதாவின் காது போன்று வளைந்து இருப்பதால் இத்திருத்தலம் கோகர்ணம் (பசுவின் காது) என்று பெயர் பெற்றது. மேலும் வைத்யநாதர் என்றால் மருத்துவத்திற்கு இறைவன், மருத்துவர்களுக்கு இறைவன் என்று பொருள். எனவே

இப்பெயரும் ஜார்கண்டு தலத்திற்கும் இராவணனுக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பதையும் புலப்படுத்தும். தேவகர் வைத்யநாதர் கோயிலுக்கு ஜோதிலிங்கத்தோடும் தொடர்பு இல்லை. இராவணனோடும் தொடர்பு இல்லை. அப்படியிருந்தும் சிந்திக்காததாலும் தெய்வீக இலக்கியங்களில் சிறந்த பயிற்சி இல்லாததாலும் சமஸ்கிருதச் சொற்களின் பொருளை உணராததாலும் அவரவர்கள் தங்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு கோயிலையும் கோயில் வரலாற்றையும் மாற்றியமைத்துச் சொல்கின்றனர்.

எந்த ஊரில் எந்தக் கோயிலில் எந்தப் பெயரில் முழுமுதல் எழுந்தருளியிருந்தாலும் வழிபடும் அன்பர்களுக்கு அவன் காட்டும் அருள் ஒன்றே. அந்தக் கருணைக் கடலின் அருளில் எந்தவிதமான வேறுபாடும் வித்தியாசமும் இருப்பது இல்லை.

பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்
நின் நாமங்கள் பேசுவோர்க்கு
இணக்கு இலாததோர் இன்பமே வரும் (திருவாசகம்)

என ஈஸ்வரனின் நாமங்களைச் சொல்லி வழிபடுகின்றவர்களுக்கு எப்போதும் இன்பமே வரும் ஆதலால் எந்தக் கோயிலுக்குச் சென்று ஈசனை எங்கு வழிபட்டாலும் பக்தியும் பலனும் ஒன்றுதான். தேவார ஆசிரியர்கள் இந்தத் தலம் அந்தத் தலம் என்று இல்லாமல் பரப்பிரும்மம் எழுந்தருளியுள்ள எல்லாத் தலங்களுக்கும் சென்று வணங்கித் தொண்டு செய்து வாழ்ந்துள்ளனர். எல்லோருடைய துன்பங்களையும் கவலைகளையும் பரம்பொருளின் திருவருளால் போக்கியுள்ளனர். பெரிய கோயில் என்று இல்லாமல் மரத்தடியில் உள்ள லிங்கப் பரம்பொருளை வழிபட்டால் கூட மகத்தான பலன்கள் கிடைக்கும், அந்த மகாதேவனின் திருக்காட்சி கிடைக்கும் என்பதற்குக் கண்ணப்பர் வரலாறும் சண்டீசர் வரலாறும் சிறந்த எடுத்துக் காட்டாகும். எனவே அது ஜோதிலிங்கத் தலமாக இல்லையே இது ஜோதிலிங்கத் தலமாக இல்லையே என்று மனதை வருத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

11. ஸ்ரீ பீமசங்கரர்



கும்பகர்ணனின் மகன் பீமனுக்குக் கருணை காட்டிய பீமசங்கரர்

தார்உறு தாமரைமேல் அயனும் தரணி அளந்தானும்
தேர்வு அறியாவகையால் இகலித் திகைத்துத் திரிந்து ஏத்தப்
பேர்வு அறியாவகையால் நிமிர்ந்த பெருமான் இடம் போலும்
வாருறு சோலை மணம் கமழும் வலம்புர நன்னகரே

(சம்பந்தர்)

மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இந்த ஜோதி லிங்கத் திருத்தலம் டாகனி என்ற இடத்தில் இருக்கின்ற குன்றின் மீது உள்ள சிறு மலைக்கோயிலாகும். பூனாவிலிருந்து போக்குவரத்து வசதிகள் உள்ளன.

பீமசங்கரர் என்றால் பீமனுக்கு நன்மை செய்பவர் என்று பொருள். கும்பகர்ணனின் மகன் பீமன் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்து கோயில் கட்டி நல்வாழ்வு பெற்றதால் இத்தலம் பீமசங்கரம் என்று பெயர் பெற்றது. பீமனுக்குத் தாய்தந்தையாக இருந்து அருள்புரிந்த பரமேஸ்வரனுக்கு பீமசங்கரர் பீமேஸ்வரர் என்று திருப்பெயர்கள்.

பீமன் என்ற சிவநாமத்தைக் கொண்டு புகழ் பெற்றவர்கள் இரண்டு பேர். ஒருவன் திரேதாயுகத்தில் வாழ்ந்த அசுர குலத்தைச் சேர்ந்த கும்பகர்ணனின் மகன் பீமன், மற்றொருவன் துவாபர யுகத்தில் வாழ்ந்த பஞ்சபாண்டவர்களில் ஒருவனான வாயுபுத்திரன் பீமன். இவன் தேவகுலத்து வாயு பகவானுக்கும் மனித குலத்து குந்திக்கும் பிறந்தவன். சிவபக்தர்களான இருவரும் சிவபூஜையினால் பெரும்புகழ் பெற்றார்கள்.

தேசப்பற்றும் தமையன் இராவணனிடம் நேசமும் நன்றிக்கடனும் கொண்டவன் கும்பகர்ணன். சுகபோகமாக வாழ்ந்த நாட்களில் மட்டுமன்று துன்பம் வந்த காலத்திலும் இறுதிவரை அண்ணனுக்கு உறுதுணையாக இருந்தவன். கும்பகர்ணனின் பல பிள்ளைகளில் ஒருவன் பீமன் என்பவன். அசுரகுலத்தில் பிறந்தாலும் மகாபலிச் சக்கரவர்த்தியைப் போன்று நல்ல பண்புகளுடன் சிறந்த சிவபக்தனாக வாழ்ந்தான். நாள்தோறும் நியமத்துடன் சிவபூஜை புரிந்து வந்தான். தந்தையில்லாமல் தாயிடம் வளர்ந்து வந்த பீமன் வானுலகம் ஏழு, மண்ணுலகம் ஏழு, பாதாள உலகம் ஏழு என்று இருபத்தோரு உலகங்களுக்கும் தாய்தந்தையான தாயுமானப் பெருமானைத் தனக்கும் தந்தைதாயாகக் கொண்டு தாயேஸ்வரனை வழிபட்டு வந்தான்.

தந்தை தாய் யாவர்க்கும்
தாதாய் மூவேழ் உலகினுக்கும் தாயே (திருவாச்கம்)
தாயு நீயே தந்தை நீயே சங்கரனே
அடியேன் ஆயுநின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது
உள்ளம் (சம்பந்தர்)

என்று உலகங்களின் தாய் தந்தையான சங்கரனைத் தந்தையாகவும் தாயாகவும் கொண்டு உள்ளன்போடு வழிபட்டு வந்த பீமன் தான் வாழ்ந்த காட்டுப் பகுதியில் இருந்த மலைமீது லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்தான். குளம் ஒன்று உண்டாக்கி அர்ச்சனை ஆராதனை புரிந்து கிரீசனை வழிபட்டுத் துதித்தான்.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே (திருவாசகம்)

நோற்றலாரேனும் வேட்டலாரேனும் நுகர் புகர் சாந்தமோடு
ஏந்திய மாலைக்

கூற்றலாரேனும் இன்னவாறு என்றும் எய்தலாகாதோர்
இயல்பினை உடையார்

தோற்றலார் மாலும் நான்முகம் உடைய தோன்றலும்
அடியொடு முடியுறத் தங்கள்

ஆற்றலால் காணாராய எம் அடிகள் அச்சிறுபாக்கம் அது
ஆட்சி கொண்டாரே (சம்பந்தர்)

என எல்லோருக்கும் அன்னையாகவும் அப்பனாகவும் விளங்கும் அம்மையப்பன் பீமனுக்கு ஜோதியாய்க் காட்சி தந்து அவனுக்குத் தந்தை தாயாய் இருந்து அருள்புரிந்து காத்தார்.

அப்பனும் நீ அம்மையும் நீ (அப்பர்)

என்று வாழ்ந்த பீமனுக்கு அம்மையப்பனாக இருந்து அருள் புரிந்ததால் ஒப்பிலாமணீசருக்கு பீமசங்கரர் என்று திருப்பெயர் உண்டாயிற்று.

பீமனுக்கு கிரீசன் தந்தை தாயாய் இருந்து அருள்புரிந்ததால் பீமன் பிரதிட்டை செய்த லிங்கப் பரம்பொருள் அர்தநாரீஸ்வரர் போன்று இரண்டு பாகங்களைக் கொண்டு விளங்குகின்றது. பீமன் உண்டாக்கிய குளம் கோயிலின் புனிதத் தீர்த்தமாக உள்ளது. மலைமேல் உள்ள இந்தச் சிறிய கோயிலுக்கு மலைமேல் பயணம் செய்த பின்னர் படியிறங்கிக் கீழே

செல்ல வேண்டும். மிகவும் நீளமான அகலமான படிகள் ஆதலால் இறங்கி ஏறுவது மிகச் சுலபம். மலைப்பகுதியானதால் மிகவும் அமைதியான சூழல். பீமசங்கரம் திருக்கோயில் காலந்தோறும் பல மன்னர்களால் புதுப்பிக்கப்பட்டுத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

சங்கரம் என்றால் நன்மை செய்தல் என்று பொருள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில் புரிந்து சதா சர்வ காலமும் எல்லோருக்கும் நன்மை செய்வதாலேயே பரமேஸ்வரனுக்கு சங்கரன் என்று திருப்பெயர். சங்காரம் (சம்ஹாரம்) என்றால் அழித்தல் என்று பொருள். இந்த இரண்டு சொற்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு தெரியாதவர்கள் பீமசங்கரம் என்பதை பீம சங்காரம் என்று கருதி பீமனை அழித்தவர் என்று பொருள்பட கூறுகின்றனர். பீமசங்கரம் என்ற தலப்பெயரும் இரண்டு பாகமாகக் காட்சி தரும் பீமலிங்கமும் பீமசங்கரர் என்ற பரப்பிரும்மத்தின் பெயரும் பீமன் பற்றிய உண்மைகளை உணர்த்துகின்றன. பீமசங்கரரை வழிபடுகின்றவர்களுக்கு வாழ்வில் எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகின்றன.

உழுது மாநிலத்து ஏனமாகி மால்
தொழுது மலரோனும் காண்கிலார்
கழுதினான் கருவூருள் ஆனிலை
முழுதுமாகிய மூர்த்தி பாதமே (சம்பந்தர்)



16. ஸ்ரீ இராமேஸ்வரர்



இராமன் பூஜை செய்து வணங்கிய இராமேஸ்வரர்

அணையலை சூழ்கடல் அன்று அடைத்து வழிசெய்தவன்
பணையிலங்கும் முடி பத்து இறுத்த பழி போக்கிய
இணையிலி என்றும் இருந்த கோயில் இராமேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதம் ஏத்தத் துயர் நீங்குமே

(சம்பந்தர்)

இந்த ஜோதிலிங்கத் திருத்தலம் தமிழ்நாட்டில் கடல் நடுவேயுள்ள இராமேஸ்வரத் தீவில் உள்ளது. கோயிலின் பெயரே ஊருக்கும் பெயராக விளங்குகின்றது. மண்டபம் என்ற தொடர்வண்டி நிலையத்திலிருந்து இராமேஸ்வரத்திற்குத் தொடர்வண்டி

செல்கின்றது. கடற்கரைத் தலமான இராமேஸ்வரத்திற்குக் கடல் கடந்துதான் செல்ல வேண்டும். நதிகளின் மீதுள்ள பாலங்கள் மீது தொடர்வண்டி ஓடுவது சர்வ சாதாரணம். இங்கு கடல்மீது கட்டப்பட்ட பாலத்தின் மீது தொடர்வண்டி ஓடுவது காண்பதற்கு அரிய காட்சியாகும்.

இராமேஸ்வரத்திற்கும் தமிழ்நாட்டின் பிறபகுதிகளுக்கும் இடையே கடல் இருந்ததாக எந்தப் புராணத்திலும் எந்த இலக்கியங்களிலும் எந்த நூலிலும் கூறப்படவில்லை. இராமேஸ்வரத்திற்கும் தமிழகத்தின் (பாண்டிநாட்டின்) பிற பகுதிகளுக்கும் இடையே இருந்த நாடுகள் தேவார காலத்திற்குப் பிறகே கடலில் மூழ்கிவிட்டன என்பது தெரிகின்றது.

தற்போது தமிழ்நாட்டின் பிறபகுதிகளுக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே கடல் உள்ளது. இராமன் காலத்தில் இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையேதான் கடல் இருந்தது. அதற்கும் முந்தைய சூரபதுமன் காலத்தில் இலங்கை வரையிலும் கடல் கிடையாது. இலங்கையும் தமிழகத்தைச் சேர்ந்த பகுதியாக இருந்தது. இலங்கைக்கு அப்பாற்பட்டுதான் கடல் இருந்தது. இலங்கைக்கு அப்பாற்பட்டு இருந்த மகேந்திரம் என்ற இடமே சூரபதுமனின் ஊராக விளங்கியது. இலங்கையில் உள்ள ஹேமகூடம் என்ற மலைமீது ஏறி வீரவாகு கடலைக் கடந்து மகேந்திரபுரியை அடைந்தான். இலங்கைக்கு அப்பாற்பட்டு இருந்த இந்த மகேந்திரமலை என்ற இடத்தில்தான் வேதங்களும் ஆகமங்களும் உண்டாகி வளர்ந்திருந்தன.

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்தம் மிக்கு உள்ள வெற்பு ஏழுள்
பேறான வேத ஆகமமே பிறத்தலால்
மாறாத தென்திசை வையகம் சுத்தமே (திருமந்திரம்)

என்று திருமூலமுனிவர் போற்றுகின்றார். கன்னி, குமரி, காவிரி போன்ற ஒன்பது ஆறுகளையும் ஏழு

மலைகளையும் கொண்டிருந்த இந்தப் புனிதமான வேத ஆகமத்தலம் மகேந்திர மலை என்று பெயர் பெற்று இருந்ததை

மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
மகேந்திரத்து இருந்து உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும்
(திருவாசகம்)

என்று திருவாசகம் போற்றுகின்றது. இந்த மகேந்திர மலை போன்ற நாடுகள் பின்னர் கடலில் முழுகிவிட்டன. எண்ணற்ற ஆகமங்களிலே பெரும்பாலானவை அழிந்து போய்விட்டன. இருபத்தெட்டு ஆகமங்களே எஞ்சி நின்றன. இந்த இருபத்தெட்டு ஆகமங்கள் ஆரியம் எனப்படும் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கப்பட்டன என்று திருமந்திரம் விளக்கமாகக் கூறுகின்றது. பின்னர் இலங்கைக்கும் பாண்டி நாட்டின் பிறபகுதிகளுக்கும் இடையே இருந்த நாடுகள் கடலில் முழுகிவிட்டன. இதனால் இராவணன் காலத்தில் இலங்கை செல்வதற்கு கடல் கடக்க வேண்டியிருந்தது. உந்து திரைக் கடலைக் கடந்து அன்று ஓங்கு மதில் இலங்கை அதனில் என்று திருவாசகம் கூறுகின்றது. இராமன் காலத்தில் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை செல்வதற்குக் கடலில் பாலம் கட்டப்பட்டது. பிறகு இராமேஸ்வரத்திற்கும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கும் நடுவே இருந்த ஊர்கள் கடலில் முழுகிவிட்டன. அதனால் இப்போது இராமேஸ்வரம் செல்வதற்கே கடலைக் கடக்க வேண்டியுள்ளது.

இராமன் லிங்கப் பரம்பொருளைப் பூஜை செய்து சிவபெருமானை வழிபட்டதால் இத்தலம் இராமேஸ்வரம் என்று பெயர் பெற்றது. லிங்கப் பரம்பொருளுக்கு இராமலிங்கம் என்று பெயர். இராமனது பாவத்தையும் பழியையும் போக்கி அருள் புரிந்த பரப்பிரும்மத்திற்கு இராமேஸ்வரர், இராமநாதர் என்று திருநாமங்கள். இராமேஸ்வரர் என்றால் இராமனுக்கு இறைவன் என்று

பொருள். இராமேஸ்வரம் பழங்காலத்தில் சேதுக்கரை என்று அழைக்கப்பட்டதை சங்கப்புலவர் கபிலர் அருளிச் செய்த சிவபெருமான் திருவந்தாதி கூறுகின்றது. பின்னர் கோயிலின் பெயரே ஊருக்கும் பெயராயிற்று.

பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களிலே இராமன், சீதை, லட்சுமணன், ஆஞ்சநேயன், விபீஷணன் என ஒரே சமயத்தில் பலரால் பூஜை செய்யப்பட்டு வழிபடப்பட்ட தலம் இராமேஸ்வரம் மட்டுமே. பல்வேறு தெய்வங்களும் தேவர்களும் வானலோக வாசிகளும் வந்து தங்கள் தங்கள் பெயரால் ஒரு நீர்நிலையை உண்டாக்கி இராமநாதரை வழிபட்டு வாழ்வு பெற்றுள்ளனர். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இராமேஸ்வரரை வழிபட்டுத் திருப்பதிகங்களால் போற்றியுள்ளனர். சுந்தரர் அருளிய பதிகம் கிடைக்கவில்லை.

படைக்கும் தெய்வம் பிரம்மனின் புதல்வர் புலஸ்த்தியர். இவருடைய மகன் விசிரவசு. கேகசி என்ற அரக்கி விசிரவசுவை விரும்பினாள். விசிரவசுக்கும் கேகசிக்கும் பிறந்த நான்கு பிள்ளைகளில் மூத்தவன் இராவணன். இரவு போன்ற கரிய நிறம் கொண்டிருந்ததால் இராவணன் என்று பெயர் பெற்றான் என்று மூன்று காலமும் உணர்ந்த சம்பந்தரின் தேவாரம் தெரியப்படுத்துகின்றது. பத்துத் தலைகளும் இருபது கைகளும் கொண்டதால் தசானனன் என்று அழைக்கப்பட்டான். தந்தை பிராம்மணராதலால் பூஜை, தவம், பக்தி, வேதம், இசை, நடனம் மற்றும் பிற கலைகளில் எல்லாம் வல்லவனாக விளங்கினான். தாய் கொடிய அரக்கியானதால் கொடூரமான பண்புகளும் குடி கொண்டிருந்தன.

வண்டமரோதி மடந்தை பேணின (சம்பந்தர்)

இலங்கை அதனில் பந்தணை மெல் விரலாட்கு அருளும்
பரிசு (திருவாசகம்)

என்று ஈசன் அருள் பெற்ற சிறந்த சிவபக்தையும் மயனுடைய புதல்வியுமான வண்டோதரி இவனுடைய மனைவியாவாள். வண்டுகள் தங்கும் கூந்தலையுடையவள்

என்று பொருள்படும் வண்டோதரி, இராவணன் ஆகிய தமிழ்ப் பெயர்கள் வடமொழியில் வால்மீகி முனிவர் இராமாயணம் எழுதியபோது மண்டோதரி, ராவணன் என்று மாற்றப்பட்டன.

இலங்கையில் பிறந்து மிதிலையில் வளர்ந்து அயோத்தியில் குடிபுகுந்து ஆரண்யத்தில் வாழ்ந்து வந்த சீதையை இராவணன் சிறைப்படுத்தியதால் இராமன் போருக்கு வந்தான். நான்கு விதமான படைகளும் இல்லாதபோதும் விபீஷணன் என்ற ஐந்தாம் படையின் உதவியுடன் இராமன் இராவணனைக் கொன்றான். பசு, குழந்தை, பெண்கள், பிராம்மணர்கள், பச்சைத் தாவரங்கள் ஆகியவற்றைக் கொல்வது பஞ்சமகாபாவங்களாகும். இராவணனைக் கொன்றதால் பிரம்மஹத்தி தோஷம் இராமனைப் பற்றிக் கொண்டு துன்புறுத்தியது.

நிறைவிரி சடைமுடி நெல்வெணெய் மேவி அன்று
இருவரை இடர்கள் செய்தீரே
இருவரை இடர்கள் செய்தீர் உமை இசைவொடு
பரவ வல்லார் பழியிலரே (சம்பந்தர்)

என்று குற்றம் நீக்கும் சிவபூஜையின் மகிமையறிந்த இராமன் கடவுளை வழிபட்டுப் பழிபாவம் நீங்கி நிம்மதியடைய விரும்பினன். காசியிலிருந்து ஒரு லிங்கப்பரம்பொருளைக் கொண்டு வருமாறு அனுமனை அனுப்பினான். சிவபூஜைக்காக சீதையும் இராமனும் லட்சுமணனும் நீர் நிலையைத் தோண்டினார்கள். இவர்கள் உருவாக்கிய நீர்நிலைகள் சீதா தீர்த்தம், ராம தீர்த்தம், லட்சுமண தீர்த்தம் என்று வழங்கப்படுகின்றன. பூஜைக்கான முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருந்த போதும் அனுமான் திரும்பி வரவில்லை. அதனால் மூவரும் நீராடி நெற்றியில் திருநீறு அணிந்து நமசிவாய நாமம் ஓதி மணலிலே லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனையெல்லாம் செய்து வழிபட்டனர்.

காசியிலிருந்து லிங்கப் பரம்பொருளுடன் வந்த அனுமான் பூஜை முற்றுப்பெற்று விட்டதைக் கண்டான். குறித்த நேரத்திற்குத் திரும்பி வரமுடியாததற்காக மனம் வருந்திய அனுமான் இராமலிங்கத்தை வணங்கி வழிபட்டபின் தான் கொண்டு வந்த லிங்கத்தையும் பிரதிட்டை செய்து வழிபட்டான். சீதா இராமலட்சுமணர்களும் ஹனுமந்த லிங்கத்தைப் பூஜை செய்தனர்.

இராமேஸ்வரம் திருக்கோயில் தோன்றிய வரலாற்றை உலக அதிசயமான தெய்வ மழலை திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்கள் அருமையாக விளக்கியுரைக்கின்றன. இந்த வரலாற்றை ஒரு பதிகம் முழுவதும் சம்பந்தர் போற்றியுள்ளார். இராமேஸ்வரத் திருத்தலத்திற்கு சம்பந்தர் பதிகங்கள் இரண்டும் திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றும் உள்ளன.

பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்குவதற்கு மட்டுமன்றி இராவணனை வெற்றி கொள்வதற்காகவும் இராமன் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து பூஜை புரிந்தான் என்று இராமாயணம் கூறுகின்றது. கடலைக் கடப்பதற்கு முன்பு இராமன் கடலில் கட்டப்படும் பாலம் சிறப்பாக அமைவதற்காகவும் இராவணனைப் போரில் வெல்வதற்காகவும் பரப்பிரும்மத்தை வழிபட்டான் என்று இராமாயணக் காவியம் சிவபூஜையை விளக்குகின்றது. இந்த இராமலிங்கமும் இராமநாதர் கோயிலில் உள்ளது.

அண்ணனுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்த துரோகத்தை நினைந்து வருந்திய விபீஷணனும் மன நிம்மதி பெற வேண்டி இராமநாதரைப் பூஜை செய்து ஒரு நீர்நிலையை உண்டாக்கி வழிபட்டான். இராவணனிடம் அடிமையாக இருந்த சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன், எமன், வாயு, சனி, குபேரன் போன்ற எல்லோரும் இராமேஸ்வரரைப் பூஜை செய்து மகிழ்ச்சியோடு தங்கள் தங்கள் பதவியை மீண்டும் அடைந்தனர்.

பார்வதி கயிலைமலையிலிருந்து பலப்பல தலங்களையும் பூஜை செய்து வழிபட்டு இராமேஸ்வரத்தை அடைந்தாள். இராமநாதரைப் பூஜை செய்து

போற்றினாள். அம்மன் இங்கு பர்வத வர்தனி என்ற பெயருடன் விளங்குகின்றாள். பிரம்மன், விஷ்ணு, லட்சுமி, சரஸ்வதி, காயத்திரி போன்ற தெய்வங்களும் தேவர்களும் எண்ணற்ற முனிவர்களும் சித்தர்களும் யோகிகளும், நளன், பாண்டவர்கள் போன்றவர்களும் மற்றும் பலப்பல பக்தர்களும் நாயன்மார்களும் ஆதிசங்கரரும் அருளாளர்களும் காலந்தோறும் இராமேஸ்வரரை வழிபட்டு முழுமுதலின் திருவருளால் வளம் பெற்றுள்ளனர்.

இராமனால் உண்டாக்கப்பட்ட இராமேஸ்வரம் கோயில் கருங்கல்லால் ஆன பெரிய கோயிலாகும். கிழக்கு மேற்கு ராஜகோபுரங்கள் உள்ளன. இத்திருத்தலம் காலந்தோறும் பலப்பல மன்னர்களால் திருப்பணி செய்து புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. மகாராட்டிர மன்னர்களும் பலப்பல திருப்பணிகள் செய்துள்ளனர். இராமேஸ்வரம் கோயிலில் எண்ணற்ற புனித நீர்நிலைகள் உள்ளன. பாரதத் திருநாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் இறை வழிபாடு என்பது சமுதாயத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றது. கடவுள் எழுந்தருளியிருக்கும் கோயில்கள் சமுதாயத்தின் மையமாக நடுநாயகமாக மிக முக்கியமானதாக உள்ளன. சமுதாயத்தின் அத்தனைத் துறைகளும் அத்தனைத் தேவைகளும் கோயில்களில் உள்ளன. இம்முறையில் அமைந்த ஒன்றே நீர்நிலை. இறை வழிபாடு செய்கின்றவர்கள் சுயநலத்திற்காக மட்டுமன்றி ஒரு நீர்நிலையை உண்டாக்கி, பூஞ்சோலை அமைத்து, தலமரம் நட்டுப் பொதுச் சேவையும் செய்கின்றனர். இம்முறையில் இராமேஸ்வரத்தின் உள்ளும் புறமும் எண்ணற்ற புனித நீர் நிலைகள் உள்ளன. இவற்றில் அக்கினி தீர்த்தம் என்பது கடல். தனுஷ்கோடி தீர்த்தமும் கடலாகும். கோயிலுக்கு உள்ளே சென்றால் பலப்பல தீர்த்தங்களுக்கும் அழைத்துச் சென்று நீராட்டுவதற்கு ஆட்கள் உள்ளனர். மகாலட்சுமி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், காயத்திரி தீர்த்தம், சேதுமாதவ தீர்த்தம், கந்தமாதன தீர்த்தம், சுவாட்ச தீர்த்தம், கவப தீர்த்தம், நள தீர்த்தம், நீலதீர்த்தம் சங்கு

தீர்த்தம், சக்கர தீர்த்தம், பிரம்ம ஹத்தி விமோச்சன தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கங்கா தீர்த்தம், யமுனா தீர்த்தம், சத்திய அமிர்த தீர்த்தம், சர்வ தீர்த்தம், கோடி தீர்த்தம், இராம தீர்த்தம், சீதா தீர்த்தம், லட்சுமண தீர்த்தம், ஹனுமந்த தீர்த்தம், சுக்கிரீவ தீர்த்தம், விபீஷண தீர்த்தம், பிரம்ம குண்டம், அமிர்த வாபி, மங்கள தீர்த்தம், வேதாள தீர்த்தம், கபால தீர்த்தம், மானச தீர்த்தம், க்ஷீர குண்டம், கபி குண்டம், ரிண மோச்சன குண்டம், (கடன் தீர்க்கும் குளம்), பாண்டவ தீர்த்தம், தேவ தீர்த்தம், உபவீதாந்தர தீர்த்தம், அகஸ்த்திய தீர்த்தம் என்று இராமேஸ்வரத்தை வழிபட்ட பலப்பல பக்தர்களாலும் தோற்றுவிக்கப்பட்ட ஏராளமான கிணறுகளையும் குளங்களையும் கொண்டு மாபெரும் புண்ணியத் தலமாக இராமேஸ்வரம் விளங்குகின்றது.

தென்னாட்டுச் சிவாலய அமைப்பிற்கு ஏற்ப இராமேஸ்வரம் திருக்கோயிலிலும் பராசக்தி, பிரம்மன், விஷ்ணு, லட்சுமி, விசாலாட்சி, சூரியன், சந்திரர், வீரபத்திரர், ஆஞ்சநேயர் எனப் பலப்பல தெய்வங்களுக்கும் சந்நிதியுள்ளன. இக்கோயிலில் பள்ளி கொண்ட பெருமாள், சேதுமாதவர் என்ற பெயரில் மகாவிஷ்ணுவிற்குச் சந்நிதிகள் உள்ளன. பிரம்ம விஷ்ணு முதலாக எல்லா தெய்வங்களுமே கடவுளை வழிபடுகின்ற சிவபக்தர்கள் ஆதலால் சிவாலயங்களில் எல்லோருக்கும் இடம் உள்ளது. இராமனையும் சீதையையும் மட்டுமன்று ஆஞ்சநேயனையும் சிவ பக்தனாகவே இராமாயணம் காட்டுகின்றது.

இராமேஸ்வரம் திருக்கோயிலின் பிரகாரம் உலகப்புகழ் பெற்றது. ராமநாதர் சந்நிதிக்கு முன்பு சுதையாலான மிகப்பெரிய நந்தி உள்ளது.

இராமாயணத்திலும் பலப்பல புராணங்களிலும் போற்றப்படும் இராமேஸ்வரம் காசியைப் போன்று பெயரும் புகழும் புனிதமும் கொண்டு உலகப் புகழ் பெற்று விளங்கும் திருத்தலம். லட்சக்கணக்கான ஆண்டுகளாகப் பாரதத் திருநாடு முழுவதையும் ஒன்றாக்கி பாரத மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தும் திருத்தலங்கள் காசியும் இராமேஸ்வரமும் ஆகும்.

தென்னாட்டவர்கள் காசியாத்திரை மேற்கொள்வது போன்று வடநாட்டவர்களின் வாழ்க்கையில் இராமேஸ்வரப் புனிதப் பயணம் மிக முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. கங்கையில் நமசிவாய நாமம் ஓதி நீராடி காசி விஸ்வநாதரை வழிபட்டு கங்கை நீரைக் கொண்டு வந்து இராமநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட்ட பின் தனுஷ்கோடியிலிருந்து மணலை எடுத்துச் சென்று கங்கைக் கரையில் லிங்கப் பரம்பொருளைப் பிரதிட்டை செய்து வழிபடும் போது காசி இராமேஸ்வர யாத்திரை முற்றுப் பெறுகின்றது. அரசியலால் வேறுபட்டு மன்னர்கள் ஒருவரோடு ஒருவர் போரிட்டுப் பகை கொண்டு நின்ற காலத்திலும் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி பாரதத் திருநாட்டை ஒன்றாக்கி அன்புடனும் அமைதியுடனும் இன்பமாக வாழ வைத்தவை வேதம் ஆகமம் புராணம் போன்ற தெய்வ நூல்களும் தெய்வீகத் திருத்தலங்களுமே. சமூகத்தின் எல்லாத் துறைகளுக்கும், மனித வாழ்க்கையில் எல்லாவற்றுக்கும் அஸ்திவாரமாக உள்ள ஆன்மீகம், தெய்வீகம், இறைமைதான் பாரதத் திருநாட்டின் உயிராக விளங்குகின்றது. கோடிக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வரும் சிவவழிபாட்டின் உண்மைக்கும் பாரதத் திருநாட்டின் தெய்வீகத்திற்கும் வடகோடி முதல் தென்கோடி வரை ஒரே நாடாக விளங்கிய தேசிய உணர்விற்கும் எடுத்துக் காட்டாக இருப்பவை காசி இராமேஸ்வரம்.

அந்தம் ஆதி அயனும் மாலும் ஆர்க்கும் அறிய அரியான்
சிந்தையுள்ளும் நாவின் மேலும் சென்னியும் மன்னினான்
வந்து என் உள்ளம் புகுந்து மாலை காலை ஆடுவான்
கந்தம் மல்கு கானூர் மேய எந்தை பெருமானே
மானாய் உலகம் கொண்ட மாலும் மலரோனும்
காணாவண்ணம் எரியாய் நிமிர்ந்தான் கலிக்காழிப்
பூணார் முலையாள் பங்கத்தானைப் புகழ்ந்து ஏத்திக்
கோணா நெஞ்சம் உடையார்க்கு இல்லை குற்றமே.

(சம்பந்தர்)

உ

சர்வம் சிவமயம் ***சிவசிவ*** ***சர்வம் சிவமயம்***

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
எல்லாம் சிவன்என்ன நின்றாய் போற்றி
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும் தங்கும் சிவனருள்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
ஆழ்க தீயதுஎல்லாம் அரன்நாமமே சூழ்க வையகமும் துயர்
தீர்கவே

அரிஅயன் அம்மன் முதலாய்ப் புல்வரை படைப்பதும்
முடிப்பதும் நமசிவாயம்
அன்பே சிவமாய் அருளே வடிவாய்க் கருணை பொழிவது
நமசிவாயம்
ஆதியுமின்றி அந்தமுமின்றி அனைத்துமானது நமசிவாயம்
ஆலம் உண்டு ஞாலம் காத்த நீலகண்டம் நமசிவாயம்
இகபர சுகமே யாவையும் தருமே இமையவர் போற்றும்
நமசிவாயம்
இன்னல்கள் நீக்கி இன்பங்கள் தந்து இசையினில் இனிக்கும்
நமசிவாயம்
ஈசனாய் இருந்து நேசரைக்காக்கும் பேரருள் கொண்டது
நமசிவாயம்
ஈரேழுலகிற்கும் தந்தையாயிருந்து தாயுமானது நமசிவாயம்
உற்றார் உறவினர் ஒருவரின்றி ஒளிமயமானது நமசிவாயம்
உருவம் அருவம் எதுவுமின்றி அருவுருவானது நமசிவாயம்
ஊழ்வினை விலக்கி வாழ்வினை அருளி உயிர்களைக்
காப்பது நமசிவாயம்
ஊழிமுதல்வனாய் முடிவினில் ஒருவனாய் ஆழியான்
போற்றும் நமசிவாயம்

எங்கும் இருப்பது பொங்கும் கங்கையும் பிறையும் புனைந்தது
நமசிவாயம்
எவரெவர் விரும்பினும் அப்பொருள்வடிவில் அவர்முன்
வருவது நமசிவாயம்
ஏவரும் மூவரும் யாவரும் அறியாத் திருமலர்ப்பாதம்
நமசிவாயம்
ஏழையின் நாயகன் என்றே சொல்லும் எளிமையின்கோலம்
நமசிவாயம்
ஐங்கரன் அறுமுகன் ஐயப்பன்வடிவாய் அவரவர் காண்பது
நமசிவாயம்
[1]ஐந்தொழில் புரிந்து [2]ஆன்ஐந்து ஆடும் ஐம்முகசோதி
நமசிவாயம்
ஒளிநீர் வளியாய் விண்மண் பெண்ணாய் அலியாய் நிற்பது
நமசிவாயம்
ஒருவனே உலகில் பலவடிவானான் என்பதை உணர்த்தும்
நமசிவாயம்
ஓதியும் உணரா வேதமும் காணா ஆதிவடிவே நமசிவாயம்
ஓடியும் உருகியும் பாடியும் வந்தால் நாடியே வருவது
நமசிவாயம்
ஔஷதம் போன்று அனைவரின் பிணியைத் தீர்க்கும்
பொருளே நமசிவாயம்
ஔவையின் குருவாம் அறுமுகன் தன்னை அன்புடன்
ஈன்றது நமசிவாயம்!

---

[1] ஐந்தொழில் - படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல்.

[2] ஆன் ஐந்து (பஞ்ச கவ்வியம்) - பசுவிலிருந்து கிடைக்கும் பால், தயிர், வெண்ணெய், நெய், திருநீறு ஆகிய ஐந்து அபிஷேகப் பொருட்கள், மெய்சேரப் பால் வெண்ணீறு ஆடி போற்றி என்று அப்பர் தேவாரம் பஞ்ச கவ்வியத்தைக் குறிக்கின்றது.

பகுதி 3

பயணக் குறிப்புகள்

I. ஸ்ரீ திரியம்பகேஸ்வரர்

சென்னை → மும்பை 1279 கி.மி. 26 மணி நேர பயணம்
Chennai Mumbai CST

தொடர்வண்டிகள்:
சென்னை மும்பை மெயில்
சென்னை மும்பை விரைவு வண்டி
Chennai Central Mumbai CST Mail / Express

மும்பை → நாசிக் ரோடு 188 கி.மி. 4 மணி நேர பயணம்
Mumbai CST Nasik Road

தொடர்வண்டிகள்:
மும்பை நான்டெட் விரைவு வண்டி
Mumbai Nanded Express
மும்பை மான்மாட் விரைவு வண்டி
Mumbai Manmad Express
மும்பை நிசாம்பாத் விரைவு வண்டி
Mumbai Nizambad Express

நாசிக்கிலிருந்து மோக்ஹடா என்ற ஊருக்கு செல்லும் சாலை வழியில் சுமார் 60 கி.மி. தொலைவில் திரியம்பகேஸ்வர ஜோதிலிங்கத் தலம் அமைந்துள்ளது.

2. ஸ்ரீ விஸ்வேஸ்வரர்

சென்னை → வாரணாசி 1977 கி.மி. 39 மணி நேர பயணம்
Chennai Central Varanasi

தொடர்வண்டி:

சென்னை வாரணாசி கங்கை காவேரி விரைவு வண்டி
Chennai Varanasi Ganga Cauvery Express

3. ஸ்ரீ சோமேஸ்வரர்

சென்னை → அகமதாபாத் 1899 கி.மி. 35 மணி நேர பயணம்
Chennai Central Ahemadabad

தொடர்வண்டிகள்:

சென்னை அகமதாபாத் நவஜீவன் விரைவு வண்டி
Chennai Ahemadabad Navjeevan Express

மற்றும் ஜோத்பூர் விரைவு வண்டி
Chennai Egmore Jodpur Express

அகமதாபாத் → வீராவலி 456 கி.மி. 9 மணி நேர பயணம்
Ahamedabad Veraval

தொடர்வண்டிகள்:

அகமதாபாத் வீராவலி விரைவு வண்டி
Ahemadabad Veraval Express

ஜபல்புர் வீராவலி விரைவு வண்டி
Japalpur Veraval Express

வீராவலி → சோம்நாத் - தொடர்வண்டி நிலையத்தில் இருந்து சாலை வழியாக 4 கி. மி. தொலைவில் ஸ்ரீ சோமேஸ்வரர் தலம் அமைந்துள்ளது.
Veraval → Somnath

4. ஸ்ரீ மகாகாளேஸ்வரர்

சென்னை → உஜ்ஜயினி 1677 கி.மி. 28 மணி நேர பயணம்
Chennai → Ujjain

தொடர்வண்டி:

சென்னை ஜெய்பூர் விரைவு வண்டி

Chennai Jaipur Express

(அல்லது)

சென்னை → போபால் 1483 கி.மி. 25 மணி நேர பயணம்
Chennai → Bhopal

தொடர்வண்டிகள்:

சென்னை டில்லி செல்லும் தொடர்வண்டிகள்.

போபால் → உஜ்ஜயினி 184 கி.மி. 4 மணி நேர பயணம்
Bhopal → Ujjain

தொடர்வண்டிகள்:

ஜம்முதாவி இந்தூர் விரைவு வண்டி

Jammutawi Indore Express

பிலாஸ்பூர் இந்தூர் விரைவு வண்டி

Bilaspur Indore Narmada Express

5. ஸ்ரீ ஓங்காரேஸ்வரர்

சென்னை Chennai	→	உஜ்ஜயினி Ujjain	1677 கி.மி. 28 மணி நேர பயணம்
			தொடர்வண்டிகள்: ஸ்ரீ மாகாளேஸ்வரர் அட்டவணையின்படி
உஜ்ஜயினி Chennai	→	இந்தூர் Indore	55 கி.மி. 2½ மணி நேர பயணம்
இந்தூர் Indore		ஓங்காரேஸ்வரம் Ongaraseswaram	25 கி.மி. தூரத்தை சாலை வழியில் குஜ்ரி (KUJRI) கடந்து சுமார் 1 மணி நேரத்தில் ஜோதிலிங்கத் தலத்தை அடையலாம்.

6. ஸ்ரீ கேதாரேஸ்வரர்

சென்னை Chennai	→	டில்லி New Delhi	2194 கி.மி. 37 மணி நேர பயணம்
			தொடர்வண்டிகள்: சென்னை புதுதில்லி விரைவு வண்டி Chennai NewDelhi Grand Trunk Express, Tamil Nadu Express etc.
டில்லி Delhi	→	கேதர்நாத் Kedarnath	460 கி.மி. சுமார் 12 மணி நேர சாலை வழி பயணம். ரிஷிகேஷ் வழியாக ருத்ரபிரயாத் கடந்து கேதர்நாத் அடையலாம்.

7. ஸ்ரீ கிராணேஸ்வரர்

சென்னை → மும்பை
Chennai Mumbai CST

தொடர்வண்டிகள்:

ஸ்ரீ திரியம்பகேஸ்வரர் அட்டவணைபடி

மும்பை → அவுரங்கபாத் 374 கி.மி. 7½ மணி நேர பயணம்
Mumbai Aurangabad

தொடர்வண்டிகள்:

நாசிக் செல்லும் அதே தொடர்வண்டிகள்.

அவுரங்காபாத்திலிருந்து 30 கி. மி. தூரத்தில் எல்லோரா நகரை சாலை வழியே அடையலாம்.

8. ஸ்ரீ மல்லிகார்ஜுனர்

சென்னை → குண்டக்கல் 446 கி.மி. 9 மணி நேர பயணம்
Chennai Guntakkal

தொடர்வண்டிகள்:

சென்னை புது தில்லி செல்லும் தொடர்வண்டிகள்

குண்டக்கல் → நந்தியால் 145 கி.மி. 5 மணி நேர பயணம்
Guntakkal Nandiyal

தொடர்வண்டிகள்:

பெங்களூர் விசாகப்பட்டினம் விரைவு வண்டி
Bangalore Vizac Express

ஹீப்ளி விஜயவாடா விரைவு வண்டி
Hubli Vijayawada Express

நந்தியாலிலிருந்து சாலை வழிப் பயணமாக 108 கி.மி. தூரத்தை கடந்தால் ஸ்ரீசைலத்தை அடையலாம்.குண்டகல்லில் இருந்தே சாலை வழிப்பயணமாகவும் மேற்கொள்ளலாம்.

9. ஸ்ரீ நாகேஸ்வரர்

சென்னை → செகந்திராபாத் 782 கி.மி. 14 மணி நேர பயணம்
Chennai Secunderabad

தொடர்வண்டிகள்:

சென்னை ஹைதராபாத் விரைவு வண்டி

Chennai Hyderabad
Charminar Express

செகந்திராபாத் → பார்பாணி 252 கி.மி. 9 மணி நேர பயணம்
Secunderabad Parbani

பார்பாணியிலிருந்து சாலை வழியாக 48 கி. மி. தூரத்தை கடந்தால் ஔண்டா நாகநாத்தை அடையலாம்.

சுமார் 240 கி.மி தூரத்திலுள்ள ஸ்ரீ கிராணேஸ்வரர் தலத்திலிருந்தும் நாகநாத்திற்கு பயணமாகலாம்.

10. ஸ்ரீ வைஜயநாதர்

சென்னை → பார்பாணி
Chennai Parbani

தொடர்வண்டிகள்:

ஸ்ரீ நாகேஸ்வரர்
அட்டவணையின் படி.

பார்பணயிலிருந்து சாலை வழியாக 50 கி.மி. தொலைவில் உள்ள பரலி தலத்தை சேரலாம்.

சுமார் 100 கி.மி. தூரத்திலுள்ள ஸ்ரீ நாகேஸ்வரர் தலத்திலிருந்தும் பயணமாகலாம்.

11. ஸ்ரீ பீமசங்கரர்

சென்னை → பூனா 1088 கி.மி. 22 மணி நேர பயணம்
Chennai Pune

தொடர்வண்டிகள்:

சென்னை மும்பை செல்லும் தொடர்வண்டிகள்

ஸ்ரீ திரியம்பகேஸ்வரர் அட்டவணையின் படி.

பூனா → டாகனி - ராஜ்குருநகர் (Khed) வழியாக சுமார் 95 கி.மி. தூரத்தை சாலை வழியாக கடந்தால் குன்றின் மீதுள்ளகோயிலை அடையலாம்.
Pune Takani

12. ஸ்ரீ ராமேஸ்வரர்

சென்னை → இராமேஸ்வரம் 656 கி.மி. 17 மணி நேர பயணம்
Chennai Rameswaram

தொடர்வண்டிகள்:

சென்னை இராமேஸ்வரம் விரைவு வண்டி மற்றும்
சேது விரைவு வண்டி

Chennai Rameswaram Express,
Chennai Sethu Express.

தொடர்வண்டி நிலையத்திற்கு அருகே இந்த கடற்கரைத்தலம் அமைந்துள்ளது.

பிரேமா பிரசுர வெளயீடுகள்

புராண நூல் வரிசை	ரூ.	பை.
ஸ்ரீ விநாயகர் புராணம் *(Demmy size-Hard Bound)*	175	00
ஸ்ரீ விநாயகர் புராணம் *(Crown size-Paper Back)*	100	00
ஸ்ரீ கந்த புராணம் *இரண்டு பாகங்கள்*	220	00
ஸ்ரீ தேவி பாகவதம் *மூன்று பாகங்கள்*	280	00
ஸ்ரீ தேவி பாகவதம் *மூன்று பாகங்கள் இணைந்த ஒரே நூல்(Hard Bound) =*	350	00
ஸ்ரீ சிவமஹா புராணம் *3 பாகங்கள்,3 நூல்கள்=*	260	00
ஸ்ரீ சிவமஹா புராணம் *மூன்று பாகங்கள் இணைந்த ஒரே நூல்(Hard Bound) =*	320	00
ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள் *(Demmy size-Hard Bound)*180	00	
ஸ்ரீ அறுபத்து மூவர்கதைகள் *(Crown size-Paper Back)*	120	00
ஸ்ரீ விஷ்ணு புராணம்	115	00
ஸ்ரீ கருட புராணம் *(Demmy size-Hard Bound)*	50	00
ஸ்ரீ கருட புராணம் *(Crown size-Paper Back)*	40	00
ஸ்ரீ குருவாயூரப்பன்	30	00
ஸ்ரீ வன்னிய புராணம்	32	00
ஸ்ரீ வசவ புராணம்	50	00
ஸ்ரீ பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்	35	00
ஸ்ரீ ஆதிசங்கரா	25	00
ஸ்ரீ ராமானுஜர்	30	00
ஸ்ரீ சுவாமியே சரணம் ஐயப்பா	25	00
ஸ்ரீ நாரதர் புராணம்	50	00
ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம்	32	00
திருமலை திருப்பதி புராணம்	40	00
கணபதி ஹோமம்	18	00
பிரதோஷம்	20	00
சுந்தர காண்டம்	50	00
கம்ப ராமாயணம் *(முழு உரைநடை H.Bound)*	300	00
மகாபாரதம் *(வசன வடிவில்-H.Bound)*	140	00
ஸ்ரீமத் பாண்டுரங்க பக்த விஜயம் *(H.Bound)*	170	00
பன்னிரு ஜோதிலிங்கத் தலப் புராணம்	40	00
பஞ்ச பூதலிங்கத் தல புராணம்	40	00
அபிராமி அந்தாதி	10	00
திருக்கயிலாயம் மானசரோவர் தரிசனம்	45	00
திருப்புகழ் பாமாலை	30	00
திருஅருட்பா பாமாலை	30	00
திருஅருட்பிரகாசவள்ளலார் சரிதம்	125	00
வள்ளலாரின் திருஅருட்பா 6ம் திருமுறை	230	00
திருமந்திரம் (மூலம் மட்டும்)*(Crown size-Hard Bound)*	120	00
ஸ்ரீமத் பகவத் கீதை	35	00
ஸ்ரீ ரமண மகரிஷி *(Crown size-Hard Bound)*	115	00
சித்தர் பாடல்கள்	140	00

கதைகள்

விக்கிரமாதித்தன் கதைகள் *(Demmy size-Hard Bound)*	180	00
விக்கிரமாதித்தன் கதைகள் *(Crown size-Paper Back)*	100	00
மதனகாமராஜன் கதைகள்	85	00
மரியாதைராமன் கதைகள்	15	00
வேதாளம் சொன்ன கதைகள்	20	00
திராவிட நாட்டுக் கதைகள்	100	00
கதைக்கடல்	110	00
தெனாலிராமன் கதைகள்	15	00
இராயர் அப்பாஜி கதைகள்	15	00
பீர்பால் கதைகள்	15	00
ஈசாப் கதைகள்	25	00
பாட்டி சொன்ன கதைகள்	100	00
போதிசத்துவர் கதைகள்	120	00
சிந்தைக்கு விருந்தாகும் குட்டிக் கதைகள்	33	00
ஹாத்திம்தாய்	95	00
அவந்தி சுந்தரி கதைகள்	30	00
குரங்கு மாமுனிவர் கதைகள்	60	00
பைபிள் கதைகள்	110	00
உமார் கயாம்	78	00
மங்கம்மா சத்திரத்து மனமோகன கதைகள்	125	00
குரு சிஷ்யக் கதைகள்	35	00
தமிழ்ப் புலவர் ஔவையார்	23	00
தமிழ்ப் புலவர் கவி காளமேகம்	25	00
தமிழ்ப் புலவர் புகழேந்தி	25	00

பொன்மொழிகள்

விவேக சிந்தாமணி பொன்மொழிகள்	9	00
ஔவையார் பொன்மொழிகள்	18	00
பஞ்சதந்திரம் பொன்மொழிகள்	10	00
புத்தர் பொன்மொழிகள்	12	00
சங்கரர் பொன்மொழிகள்	10	00
மகாகவி பாரதியார் பொன்மொழிகள்	28	00
மகாத்மா காந்தி பொன்மொழிகள்	35	00
இக்பால் பொன்மொழிகள்	10	00
குர் ஆன் பொன்மொழிகள்	9	00
அதிவீரராம பாண்டியன் பொன்மொழிகள்	15	00
பைபிள் பொன்மொழிகள்	13	00
பாரதிதாசன் பொன்மொழிகள்	20	00

மற்றும் சிந்தனையாளர் நூல்கள், ஜோதிட நூல் வரிசை, சிறுவர் கதை பெட்டகம், மர்ம நாவல்கள், சமூக, சரித்திர நாவல்கள் ஆகிய விவரங்கள் கொண்ட இலவச விலைப்பட்டியலுக்குத் தொடர்பு கொள்க.

பிரேமா பிரசுரம், 59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை –24. தொலைபேசி : 24800325, 24833180, 24811755


ஸ்ரீ கிராணேஸ்வரர்
ஸ்ரீ இராமேஸ்வரர்
ஸ்ரீ மல்லிகார்ஜுனர்
ஸ்ரீ பீமசங்கரர்
ஸ்ரீ நாகேஸ்வரர்
ஸ்ரீ வைஜயநாதர்